வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 56 | சுடர்: 28 | கதிர்: 223 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 23, ஞாயிறு 07.07.2013



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.
30°C 28°C

# திருமலை மாணவர் கொலை விசாரணை இலங்கை அரசின் வெறும் கண்துடைப்பு

### சர்வதேச விசாரணையே தேவை என்கிறார் கொலையான மாணவனின் தந்தை

லண்டன், ஜூலை 7
ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் இலங்கைக்கு வரவுள்ளமையாலும், உலக நாடுகளின் அழுத்தங்கள் காரணமாகவுமே திருகோணமலை மாணவர் படுகொலை தொடர்பில் 12 பேரை எட்டு வருடங்களின் பின்னர் பொலிஸார் கைது செய்துள்ளனர். இது வெறும் கண்துடைப்பு - பம்மாத்து நடவடிக்கையே.
இலங்கை அரசு நீதி வழங்கும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. இந்தப் படுகொலைகள் தொடர்பாகச் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். இவ்வாறு படுகொலையான மாணவர்களில் ஒருவரான ரஜிகரனின் தந்தை மருத்துவர் மனோகரன் தெரிவித்துள்ளார்.
2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திருகோணமலை காந்தி சிலையடியில் சுட்டுக்கொல்லப்பட்ட 5 அப்பாவித் தமிழ் மாணவர்களின் கொலை தொடர்பில் 12 சிறப்பு அதிரடிப் படையினர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் 8 ஆண்டுகளின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி: பக்கம் 21

## முன்னாள் போராளிகள் கடன் பெறுவதில் சிக்கல்

### அமைச்சர் கஜதீரவிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 7
புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்குத் தொழில் நிமித்தம் கடன் வழங்கப்படும் என்று அமைச்சு அறிவித்த போதும் வங்கிகள் கடன் வழங்க மறுப்பதனால் தொழில் முயற்சியின்றி தாம் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்று முன்னாள் போராளிகள் சிறைச்சாலைகள் அமைச்சரிடம் நேற்றுத் தெரிவித்தனர்.
சிறைச்சாலைகள் மற்றும் நலன்புரி அமைச்சர் சந்திரசிறி கஜதீர, முன்னாள் போராளிகளில் ஒரு பகுதியினரை யாழ். கூட்டுறவு மண்டபத்தில் நேற்று முற்பகல் சந்தித்துக் கலந்துரையாடினார்.
இதன்போதே முன்னாள் போரா

தொடர்ச்சி: பக்கம் 21

செய்தி



பக். 02
வன்செயல்களால் பாதிக்கப்பட்ட 591 பயனாளிகளுக்கு நட்டஈடு

விளையாட்டு



பக். 22
ஹோக்லி அதிரடி; வென்றது இந்தியா



பக். 23
வென்றது யாழ்.மத்திய கல்லூரி

# இந்திய அரசு கடும் பிடி தலையசைத்தார் பஸில்

## '13' நிலைப்பாட்டை இடித்துரைத்தது டில்லி

புதுடில்லி, ஜூலை 7
காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் '13'ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அதற்கு அப்பால் சென்று, அதிகாரங்களைப் பகிர வேண்டும் என்ற இந்திய அரசின் இறுக்கமான நிலைப்பாட்டை, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ விடம் இறுக்கமாகத் தெரிவித்திருக்கிறது இந்தியா. அதனை தலையசைத்து ஏற்றுக்கொண்டார் எனப் புதுடில்லி செய்திகள் தெரிவித்தன.
இந்திய அரசின் அழைப்பின் பேரில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கடந்த 4 ஆம் திகதி இந்தியாவுக்குப் பயணமானார்.
அவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரஞ்சன் மாத்தாய்




ஆகியோருடன் நீண்ட நேரம் பேச்சு நடத்தினர்.
இதன்போது '13'ஆவது திருத்தம், அதிகாரப் பகிர்வு, வடக்கு மாகாணத் தேர்தல் என்பன தொடர்பில் இந்திய அரசின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெளிவாக விளக்கினார்.
''வடக்குத் தேர்தல் அறிவிப்பை இந்தியா வரவேற்

தொடர்ச்சி: பக்கம் 21

## வடக்கில் கூட்டமைப்பு பிரபலமாகி வருகிறது

### நேபாள முன்னாள் பிரதமர்



யாழ்ப்பாணம், ஜூலை 7
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சக்திமிக்க கட்சியாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. மக்கள் மத்தியிலும் அது சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறு தெரிவித்தார் நேபாள நாட்டு முன்னாள் பிரதமரும் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான மாதேவ்குமார் நேபாள்.
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 70ஆவது ஆண்டு விழா யாழ். கூட்டுறவு மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்று

தொடர்ச்சி: பக்கம் 21

## மன்மோகனைச் சந்திக்கும் பஸிலின் முயற்சி தோல்வி

புதுடில்லி, ஜூலை 7
இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோரைச் சந்திப்பதற்குப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. இதனால் அவர் ஏமாற்றத்துடன் நேற்று மதியம் நாடு திரும்பினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்திய அரசின் அழைப்பின் பேரில் அங்கு சென்ற பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இலங்கை அரசின் '13' ஆவது திருத்த ஒழிப்

தொடர்ச்சி: பக்கம் 21

## இளம் குடும்பப் பெண் புத்தூரில் கொலை

யாழ்ப்பாணம்,ஜூலை 07
புத்தூரில் இளம் குடும்பப் பெண் ஒருவர் ஆள்களற்ற வீடு ஒன்றில் இருந்து நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார்.
இந்தச் சம்பவத்தை அடுத்துப் பெண்ணின் கணவர் பெண்ணின் உறவினர்களால் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியை அண்மித்துள்ள வீட்டில் குறித்த பெண் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டார். அதே யிடத்தைச் சேர்ந்த நிசாந்தன் நிலானி (வயது-28) என்ற இரண்டு பிள்ளைக

தொடர்ச்சி: பக்கம் 21

## படையினர் அச்சுறுத்தினால் உடனடியாக அறிவியுங்கள்

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7
தேர்தல் காலங்களில் இராணுவத்தினரால் ஏதாவது இடையூறுகள் - அச்சுறுத்தல்கள் ஏற்படுத்தப்படுமாக இருந்தால் அது தொடர்பில் உடனடியாகவே எழுத்து மூலமாகத் தனக்கு அறிவிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.
மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட நிலையில், அரசியல் கட்சிகளைத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்றுக் காலை தேர்தல்கள் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்புத் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது:
தேர்தல்கள் ஆணையாளரிடம் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் வடக்கில் இராணுவத்தினர் முகாம்களுக்குள் முடங்க வேண்டும் என்ற முக்கிய கோரிக்கையை முன்வைத்தோம். அதற்கு அவர், தேர்தல் காலங்களில் இராணுவத்தினரால் ஏதாவது அச்சுறுத்தல்கள் - இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டால் அது தொடர்பாக உடனடியாகவே எழுத்து மூலமாகத் தனக்கு அறிவிக்குமாறு கோரியுள்ளார். சார்க் நாடுகளினதும், பொது நலவாய நாடுகளினதும்

தொடர்ச்சி: பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



இலங்கைக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் வஹீட், நேற்று சனிக்கிழமை காலை அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தார். இலங்கைக்கு வருகை தந்துள்ள மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் வஹீட், இங்குள்ள வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் அமைச்சர்களைச் சந்தித்து இரு நாட்டு உறவுபற்றி ஆராய வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## ரயில் ஊழியர் 48 மணி நேரம் வேலை நிறுத்தம்

கொழும்பு,ஜூலை 07

ரயில்வே தொழிற் சங்கம் 48 மணிநேர வேலை நிறுத்த போராட்டத்தில் குதிப்பதற்குத் தீர்மானித்துள்ளது. சம்பள முரண்பாடுகளுக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்தியே இந்த வேலைநிறுத்தப் போரட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக ரயில்வே தொழில் சார் தொழிற்சங்க முன்னணி அறிவித்துள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு ஆரம்பமாகும் வேலை நிறுத்த போராட்டம் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் என்றும் அந்த முன்னணி அறிவித்துள்ளது.(த)

# வன்செயல்களால் பாதிக்கப்பட்ட 591 பயனாளிகளுக்கு நட்டஈடு

## ஜனாதிபதி மஹிந்த வழங்குவார்

யாழ்ப்பாணம்,ஜூலை 7

கடந்த கால வன்செயல்களால் யாழ்.மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 591 பயனாளிகளுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.



கடும் பாதிப்புற்றோருக்கான கொடுப்பனவுகள் 343 பயனாளிகளுக்கும், சொத்தழிவு நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் 189 பயனாளிகளுக்கும், அரச ஊழியர் நட்ட ஈட்டுக் கொடுப்பனவுகள் 49 பயனாளிகளுக்கும், சேதமடைந்த ஆலயங்களுக்கான நட்ட ஈட்டுக் கொடுப்பனவு 10 ஆலயங்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

நட்ட ஈட்டுக் கொடுப்பனவுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்கள் தனித்தனியே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 10ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 4.30 மணிக்கு முன்னதாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் இரவு உணவு, குடி தண்ணீர், பயண ஒழுங்குகளுடன் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

போக்குவரத்து வசதிகள், தங்குமிட வசதிகள் என்பன புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (5)

# ஆஸி.தடுப்பு முகாமில் வாடும் இலங்கைத் தமிழ் பெண் வழக்கு

கான்பரா,ஜூலை 07

தம்மை நீண்ட காலமாகத் தடுத்து வைத்திருப்பதாகத் தெரிவித்து இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் ஆஸ்திரேலிய உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். ரஞ்சினி என்ற பெண்ணே இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாகக் குறித்த பெண் மிக நீண்ட காலமாக முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவின் உத்தரவுக்கு அமையவே இவ்வாறு குறித்த பெண் கால வரையறையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மெல்பேர்னில் வசித்து வரும் ரஞ்சினி என்ற கர்ப்பிணிக்கு முன்னதாக புகலிடக் கோரிக்கை அனுமதிக்கப்பட்டது.

எனினும்,'ஆசியோ'வின் பாதுகாப்பு அச்சுறுத்தல் எச்சரிக்கை காரணமாக ரஞ்சினியும் அவரது 9, 7 வயது மகன்களும் வில்லாவுட் தடுப்பு முகாமில் 14 மாதங்களுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டனர்.

ரஞ்சினி உயிரிழந்த விடுதலைப் புலித் தலைவர் ஒருவரின் மனைவி எனவும், இள வயதில் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், 'ஆசியோ'வின் பாதுகாப்பு அச்சுறுத்தல் எதற்காக விடுக்கப்பட்டது என்பது புரியவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தான் சட்டத்தை மீறிச் செயற்படவில்லை எனவும் ரஞ்சினி தெரிவித்துள்ளார். (த)



# தயா மாஸ்ரருக்கு மட்டுமே வாய்ப்பு?

கொழும்பு,ஜூலை 07

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடத் தயா மாஸ்ரருக்கு மட்டுமே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அனுமதி வழங்கியுள்ளதாகக் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மூன்று மாகாண சபைகளுக்கும், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலில், போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பணிகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீவிரப்படுத்தியுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான கட்சியான, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் வடக்கு மாகாண சபைத் தேர்தலில், போட்டியிடவுள்ள வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான முதலாவது கட்ட நேர்முகத் தேர்வு ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளது.



முதற்கட்ட நேர்முகத் தேர்வில், விடுதலைப் புலிகளின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்ரரும் பங்கேற்றிருந்தார்.

இந்த நிலையில், அண்மையில் விடுதலை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, கே.பி போன்றோரும் ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிட விண்ணப்பித்துள்ளதாக அரச வட்டாரங்கள்தகவல் வெளியிட்டிருந்தன எனினும், இந்தத் தேர்தலில் தயா மாஸ்ரருக்கு மட்டுமே போட்டியிட வாய்ப்பளிக்கப்படவுள்ளதாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் ஆங்கில ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளன. (த)

## இந்தியாவுக்கு அஞ்சுகிறார் மஹிந்த

### ஜே.வி.பி குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 07

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு அஞ்சுவதாகவும் இந்தியா கேட்பதெல்லாம் வழங்குவதாகவும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி குறிப்பிட்டுள்ளார்.

ஜே.வி.பியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் இந்தியாவின் தலையீடு பற்றிக் கலந்துரையாடப்பட்டது. அங்கு பேசிய ஹந்துன்நெத்தி, இறுதியில் இந்தியாவுக்குத் தேவையானதே நடக்கும். இதன் காரணமாகவே பஸில் இந்தியா சென்றார்.

ராஜபக்ஷ இந்தியாவுக்கு அஞ்சுகிறார். இந்தியா கேட்கும் சகலத்தையும் கொடுக்கின்றனர். சம்பூரைக் கொடுத்தனர். திருகோணமலையில் சிறப்பு பொருளாதார வலயம் வழங்கப்பட்டது. இம்முறை என்னவெல்லாம் கொடுப்பார்களோ தெரியவில்லை என்று குறிப்பிட்டார். (த)

# டெங்குப் பரிசோதகர்களை அச்சுறுத்தியவர் மறியலில்

கொழும்பு,ஜூலை 07

டெங்குப் பரிசோதகர்கள் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களை அச்சுறுத்திய வர்த்தகர் ஒருவரை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஆனமடு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

நவகத்தேகம பிரதேச வியாபாரி ஒருவருக்கே நேற்று முன்தினம் மாலை இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:- டெங்கு ஒழிப்பு வாரத்தையொட்டி கடந்த புதன்கிழமை நவகத்தேகம நகரில் டெங்குப் பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, மேற்படி நபரின் வர்த்தக நிலையத்திலும் டெங்குப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பரிசோதனையின்போது குறித்த நபரின் வர்த்தக நிலையம் டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏற்ற வகையில் காணப்பட்டதால் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும்டெங்குதடுப்புவேலைத் திட்ட அதிகாரிகள் குறித்த நபரை எச்சரித்துள்ளனர்.

இதனையடுத்து மேற்படி நபர் பொதுச் சுகாதாரப் பரிசோதகரையும் ஏனைய அரச உத்தியோகத்தர்களையும் எச்சரித்துள்ளதுடன்,அவரது பெயர் விவரங்களையும் அதிகாரிகளுக்கு வழங்க மறுத்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நவகத்தேகம பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டு ஆனமடு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே அவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (த)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகளை அறிய வசதி

கொழும்பு,ஜூலை 07

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தும் தேசிய திட்டத்தின் அதிகாரபூர்வ இணையத்தளம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் செயற்பாடுகளை http://www.llrcaction.gov.lk/ என்ற இணையத்தள முகவரியினூடாகப் பார்வையிட முடியும். ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடந்த வைபவத்தில், இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டது என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தப்படும் விதம், அதன் முன்னேற்றங்கள் பற்றி இந்த இணையத்தின் வழியாக விரைவாக அறிந்து கொள்ள முடியும் என்றும் இக்காலத்தின் தேவை எனவும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்தார். (த)

## கெஹலியவின் மகன் தொடர்பான விசாரணை அறிக்கை அடுத்த வாரம்

கொழும்பு,ஜூலை 07

வானில் 35,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த பிரிட்டிஷ் எயார்வேஸ் விமானத்தின் கதவைத் திறக்க முயற்சித்த சம்பவம் தொடர்பாக இலங்கை 'ஏ' அணியின் கிரிக்கெட் வீரர், ரமித் ரம்புக்வெல குறித்து இலங்கை கிரிக்கெட் நிறுவனம் நடத்தும் விசாரணை அறிக்கை எதிர்வரும் 10 ஆம் திகதிக்குப் பின்னர் வெளியிடப்படவுள்ளது.

இந்த ஒழுக்க விசாரணையின் அறிக்கையின் படி ரமித் ரம்புக்வெல்லவுக்கு எதிராக எடுக்கப் போகும் தீர்மானம் பற்றி கிரிக்கெட் நிறுவனம் அறிவிக்க உள்ளது.




இந்தச் சம்பவம் தொடர்பில், இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் ஊழல் எதிர்ப்பு மற்றும் பாதுகாப்புக்குப் பொறுப்பான முகாமையாளரான ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி லக்ஸ்மன் டி சில்வா விசாரணை நடத்தி வருகிறார்.

கடந்த 3ஆம் திகதி அவர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு 7 தினங்களுக்குள் அறிக்கையைச் சமர்ப்பிக்கவுள்ளது.

இதனைத் தவிர இலங்கை 'ஏ' அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த போது, முகாமையாளராகச் சென்றவரிடமும் அறிக்கை கோரப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவகத்துக்கு 'சீல்'



வலி. வடக்கு, ஜூலை 7

சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் ஒன்று நீதிமன்றத்தின் பணிப்புரைக்கு அமைவாக முழங்காவில் பகுதியில் சுகாதாரப் பகுதியினரால் சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட உணவு மருந்துப் பரிசோதனை சுகாதார பரிசோதகர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார். ஏற்கனவே குறிப்பிட்ட உணவகத்தின் சுகாதாரச் சீர் கேட்டைக் கண்டு பிடித்த சுகாதாரத் திணைக் களத்தினர் அதனை மூன்று மாத காலத்தில் சீர்செய்யும் படி தவணை கொடுத்து இருந்தனர்.

இந்நிலையிலும் குறிப்பிட்ட உணவகத்தின உரிமையாளர் அதில் கவனம் எடுக்காததை அடுத்து சுகாதாரத் திணைக் களத்தினர் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட 14 நாள்கள் கால அவகாசத்திலும் உணவக உரிமையாளர் சுகாதார நட வடிக்கையை மேற்கொள்ளாத நிலையில் உணவகம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை சீல் வைக்கப்பட்டுள்ளது. (த-86)

# விசேட திருத்தச் சட்டம் ஊடாக 7,089 பேரே இதுவரை விண்ணப்பம்

## தேர்தல் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 7


வடக்கு-கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்தோரை வாக்காளர்களாகப் பதிவு செய்யும் விசேட திருத்தச் சட்டத்தின் ஊடாக, இதுவரையில் 7 ஆயிரத்து 89 பேரே விண்ணப்பிப்பதாக தேர்தல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களிலிருந்து 1983 ஆம் ஆண்டுக்கும் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதிக்கும் இடையில் வெளியேற்றப்பட்டவர்கள், வேறு மாவட்டங்களில் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்யாமலிருப்பின் அவர்களை வடக்கு-கிழக்கு மாகாணங்களிலேயே பதிவு செய்யும் வகையில் விசேட திருத்தச் சட்டவரைவு அரசால் கொண்டு வரப்பட்டது.

இதற்கமைய கடந்த மாதம் 21 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை வாக்காளர்களாகப் பதிவதற்குரிய விண்ணப்பங்களை, தாம் வசிக்கும் மாவட்டங்களில் உள்ள தேர்தல்கள் அலுவலகத்திலேயே சமர்ப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் மேன்முறையீட்டுக்காக ஒருவார கால அவகாசம் கடந்த வெள்ளிக்கிழமை வரை வழங்கப்பட்டிருந்தது.

இதுவரையான இந்தக் காலப் பகுதிக்குள் வடக்கு-கிழக்கில் தம்மை வாக்காளர்களாகப் பதியுமாறு 7 ஆயிரத்து 89 பேர் வரையே விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 3 ஆயிரத்து 506 பேர் தகுதியானவர்கள். எஞ்சியோரில் 2 ஆயிரத்து 752 பேர் தொடர்பில் நாளை மறுதினம் முடிவு செய்யப்படும். ஏனையோர் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமையே இறுதிப் பட்டியல் தயார் செய்யப்படும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் கூறின. (த-5)

> வடக்கு-கிழக்கு மாகாணங்களிலேயே பதிவு செய்யும் வகையில் விசேட திருத்தச் சட்டவரைவு அரசால் கொண்டு வரப்பட்டது.

## வலி.தெற்கு நடமாடும் சேவையில் 3000 க்கும் மேற்பட்டோர் பயன்

வலி. வடக்கு, ஜூலை 7

உடுவில் பிரதேச செயலகத்தில் கடந்த இரண்டு நாள்களாக இடம்பெற்ற நடமாடும் சேவையில் சுமார் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் நன்மை அடைந்துள்ளார்கள்.

'பவ்ரல்' அமைப்பும் இலங்கைக்கான ஒபர் அமைப்பும் வழங்கிய ஆதரவுடன் உடுவில் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் இந்த நடமாடும் சேவை கடந்த வியாழன், வெள்ளி ஆகிய இரண்டு நாள்களும் காலை 8.30 மணியில் இருந்து இரவு 7.30 மணி வரை இடம் பெற்றன.

இந்த நடமாடும் சேவையில் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் வழங்குதல், திருமண அத்தாட்சிப்பத்திரம் வழங்குதல், உத்தேச வயது சான்றிதழ் வழங்குதல், தேசிய அடையாள அட்டை மாற்றம், புதியவற்றுக்கு விண்ணப்பித்தல் மற்றும்தொலைந்த அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல் எனப் பல்வேறு சேவைகளும் பிரதேச செயலாளரின் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்றன.

இந்த நடமாடும் சேவையில் பிரதேச செயலக ஊழியர்கள் அனைவரும் தமது முழுமையான பங்களிப்பை வழங்கியதுடன் பொது மக்களுடைய தேவைகளைக் கேட்டறிந்து உரிய வழிகாட்டல்களையும் மேற் கொண்டனர். (த-86)



வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 26ஆவது வருடாந்த மாநாடு கனடாவின் நிகழ்த்து கலைகளுக்கான சொனி கலையரங்கில் நேற்று முன்தினம் ஆரம்பமாகி மூன்று தினங்கள் நடைபெறுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்புரையாற்றுகிறார். அண்மையில் அமெரிக்க அதிபர் மாளிகையான வெள்ளை மாளிகையால் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படும், எதிர்காலத்துக்கு வழிகாட்டியவர்களுக்கான உயர் விருதைப் பெற்றவரான பேராசிரியர் சிவலிங்கம் சிவநாதனும் இந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார். மாநாட்டு மண்டபத்திலே அவரைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தனது வாழ்த்துக்களைப் பேராசிரியருக்குத் தெரிவித்துக் கொண்டார்.

## ஆலயத்தில் திருடுவதற்கு வெள்ளை வானில் வந்த கும்பல்

வலி. வடக்கு, ஜூலை 7

ஆலயத்தில் திருடுவதற்காக வெள்ளை வானில் உருமறைப்பு செய்து வந்த கும்பல் இளைஞர்கள் விழப்படைந்ததைத் தொடர்ந்து தப்பி ஓடியுள்ளது.

இந்தச் சம்பவம் இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது.

ஆலயத்தில் திருத்தப்பணிகள் இடம்பெறுவதைத் தொடர்ந்து ஆலயக் கதவுகள் கழற்றப்பட்டுள்ளன. அத்துடன் சுவர்களும் இடிக்கப்பட்டு பாதுகாப்பற்ற நிலையில் ஆலயம் தற்போது காணப்படுகின்றது.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி வெள்ளை வானை கறுப்புத்துணியால் மூடிக்கட்டிய நிலையில் வந்தவர்கள் தம்மையும் கறுப்புத் துணியால் உருமறைப்புச் செய்தவாறு ஆலயத்தில் இறங்கியுள்ளனர்.

இந்த நேரத்தில் இரவு ஆலயக் காவலுக்காக அருகில் உள்ள மண்டபத்தில் படுத்திருந்த இளைஞர்கள் உஷார் அடைந்ததைத் தொடர்ந்து வானில் வந்தவர்கள் தப்பியோடி விட்டனர். (த-86)

## தபாலகத்தில் திருட்டு

யாழ்.நகரை அண்டிய வண்ணார்பண்ணை உப தபாலகத்தில் திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு தபாலகத்தின் பின்பக்கக் கதவை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கு சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தியுள்ளனர். தபாலகத்தில் பணம் மற்றும் முத்திரைகள் இரும்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டதால் திருடர்களின் முயற்சி பயனளிக்கவில்லை. தபாலகத்தில் இருந்த காகிதாதிகள் மற்றும் ஆவணங்கள் என்பன கண்டபடி வீசி எறியப்பட்ட நிலையில் கிடந்தன.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-17)

## நஞ்சூட்டப்பட்டு நாய்கள் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 7

நாய்களுக்கு நஞ்சூட்டப்பட்டமையால் ஏழு நாய்கள் இறந்த சம்பவம் ஏழாலை மேற்கில் சில தினங்களுக்கு முன்னர் இடம் பெற்றுள்ளது.

ஏழாலை மேற்கு அண்ணமகேஸ்வரர் ஆலயச் சுற்றாடலில் உள்ள நாய்களே நஞ்சூட்டப்பட்டு இறந்துள்ளன.

நாய்கள் இவ்வாறு இறந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை இந்த ஆலய மூலஸ்தானத்தின் கலசம் இனம் தெரியாதவர்களினால் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் [illegible] யத்தில் முறை[illegible].

இதே வேளை:-

நாய்களுக்கு நஞ்சூட்டப்பட்ட சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிஸில் முறையிடச் சென்றவர்களின் முறைப்பாட்டை ஏற்கப் பொலிஸார் மறுத்ததுடன் நாய்களைத் தூக்கி மேசையில் வையுங்கள் நாங்கள் வந்து பிரேதப் பரிசோதனை மேற்கொள்கின்றோம் எனத் திருப்பி அனுப்பியுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.


தாம் பொலிஸார் கூறியதை நம்பி காலையில் இருந்து நாய்களைப் புதைக்காது இறந்த இடத்திலேயே பிற்பகல் வரை விட்டதாகவும் பொலிஸார் வராத நிலையில் குறிப்பிட்ட நாய்களை புதைத்ததாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (த-68)

## யாழ்ப்பாணத்தில் நேற்று கூட்டுறவுத் தின விழா

யாழ்ப்பாணம், ஜூலை 7

சர்வதேச கூட்டுறவாளர் தின விழா நேற்று சனிக்கிழமை யாழ்.குடாநாட்டில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை விழாவை முன்னிட்டு யாழ்.வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக கூட்டுறவுக் கொடியை ஏற்றி வைத்தது.



அதேவேளை சங்கங்கள் அனைத்தும் தமது சங்கக் கட்டடங்களுக்கு முன்பாகக் கூட்டுறவுக் கொடியை ஏற்றுமாறு அறிவிக்கப்பட்ட போதும் பெரும்பாலான சங்கங்கள் அதனைச் செய்யவில்லை எனத் தெரி விக்கப்படுகிறது. இதேவேளை வன்னி பிரதேசத்தில் கூட்டுறவாளர் தினம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. கொத்தணி மற்றும் வலய மட்டங்களாக இந்தக் கூட்டுறவுத் தின நிகழ்வுகள் அங்கு இடம்பெற்று வருகின்றன. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## '13' ஒழிக்கப்பட்டால் மஹிந்த அரசு கவிழும்

### அமைச்சர் ராஜித கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 7
'13' ஆவது திருத்தத்தை ரத்துச்செய்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் ரத்துச் செய்தால் இந்த மஹிந்த அரசு தனது ஆட்சியைத் தொடர முடியாது கவிழும் என்று தெரிவித்தார் அமைச்சர் ராஜித சேனாரத்ன.
இது குறித்து அமைச்சர் ராஜித மேலும் தெரிவித்ததாவது:
இன சமூகங்களுக்கு இடையில் நிலவிவரும் புரிந்துணர்வின்மையைக் களைய



வேண்டுமாயின் அரசியல் ரீதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.
'13' ஆவது திருத்தத்தின் ஊடாக அதிகாரங்களைப் பகிர்வதே தற்போதைய நிலையில் மிகவும் சிறந்த தீர்வுத் திட்டம்.
ஐக்கிய இலங்கைக்குள் இந்தத் தீர்வுத் திட்டத்தை வழங்க முடியும்.
வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்பாக '13' ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்யக் கூடிய சாத்தியங்கள் இல்லை.
'13' ஆவது திருத்தத்தை ரத்துச்செய்வதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது. ஆனால் ரத்துச்செய்தால் அதுவே இந்த அரசின் முடிவு காலமாக அமையும் -என்றார். (த-5)

## ஊர்காவற்றுறையில் இலவச கண்சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜூலை 7
ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கண்ணில் 'கற்றாக்' பார்வைக் குறைபாடு உடையவர்களுக்கு சிகிச்சைகள் வழங்கி உதவ வெளிநாடு ஒன்றில் வசிக்கும் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் முன் வந்துள்ளார்.
எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பார்வைக் குறைபாடு உடையவர்களை இனங்கண்டு சிகிச்சை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கண் சிகிச்சையைப் பெற விரும்புபவர்களுக்கு இலவச சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளதால் தமது பெயர் விவரங்களை ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அல்லது பொதுச் சுகாதார பரிசோதகரிடம் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (ஜ-7)

## தெய்வேந்திரமுனையில் ஆரம்பித்த நடை பயணக்குழு சாவகச்சேரியில்



தென்மராட்சி, ஜூலை 7
வடபகுதியில் புற்றுநோயினால் பாதிக்கப்படுவோருக்கான சேவையை அதிகரிக்க நடைபயணம் மேற்கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை சாவகச்சேரியை வந்தடைந்தனர். இவர்களை சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர், படை அதிகாரிகள், பொலிஸார், பொதுமக்கள் உட்பட பலர் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் வைத்து வரவேற்றனர். தெற்கு தெய்வேந்திரமுனையிலிருந்து வடக்கு பருத்திமுனை வரை நடை பயணம் மேற்கொள்ளப்பட்டது.
கிளிநொச்சியிலிருந்து புறப்பட்ட குழு பூநகரி, கேரதீவு, தனங்களப்பு ஊடாக சாவகச்சேரியை வந்தடைந்து அங்கிருந்து நேற்று சனிக்கிழமை காலை நடை பயணத்தை ஆரம்பித்தனர்.
நடைபயணத்தை ஆரம்பித்த தென்னிலங்கையைச் சேர்ந்த றுவான் ரணதுங்கவுடன் நண்பர்கள், உறவினர்கள் கலந்து கொண்டனர். இந்த நடைபவனியில் கிடைக்கும் நிதியில் 50 வீதத்தை தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கும், 50 வீதத்தினை மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கும் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

### தேர்தல் வருகுது; 'நல்ல காலம்' பிறக்குது

## அரச வேலை வழங்குவதில் ஏட்டிக்குப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 7
அரசால் வழங்கப்பட்டு வரும் நியமனங்களை உரிமை கோருவதில் ஆளுங்கட்சியின் பங்காளிக் கட்சிகளிடையே முரண்பாடுகள் வலுப்பெற்றுள்ளன.
வடமாகாண சபைக்கான தேர்தல் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ள நிலையில் அரச நியமனங்கள் வழங்கப்படுகின்றன. இந்த நியமனங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்யாழ்.மாவட்ட அமைப்பாளரின் வேண்டுகோளுக்கிணங்க வழங்கப்பட்டதாக அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவிக்கும் அதேவேளையில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதற்கு அமைவாக தன்னாலேயே நியமனம் வழங்கப்படுவதாக மறுபுறம் ஈ.பி.டி.பி.யின் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.
வடபகுதியிலுள்ள உயர்தேசிய டிப்ளோமா பட்டதாரிகளையும், பட்டதாரிப் பயிலுநர்களாக இணைத்துக்கொள்ளும் பொருட்டு அவர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றன.
ஜனாதிபதியுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது மேற்படி பட்டதாரிகளுக்கு அரச நியனமங்கள் வழங்க வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா கோரிக்கை விடுத்ததற்கு அமைவாகவே இந்த நேர்முகத் தேர்வு இடம்பெறுவதாக அமைச்சரது கட்சிப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.
மறுபுறம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன் வெளியிட்டுள்ள ஊடகக் குறிப்பில், தனது ஏற்பாட்டில் கடந்த ஜூன் மாதம் 2ஆம் திகதி இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரப் பட்டதாரிகள் சங்க மாநாட்டில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக அவரால் அமைச்சரவைக்கு பரிந்துரை செய்யப்பட்டமைக்கு அமைவாக உயர்தேசிய டிப்ளோமா பட்டதாரிகளுக்கு அரச நியனம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.
அரசின் பட்டதாரிகள் நியமனத் திட்டத்தின் கீழ் இது வரை 50 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் அரச சேவைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். 20 ஆயிரம் பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் சம்பந்தப்பட்ட சகல பிரதேச செயலகங்களுக்கும் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ளது.
பட்டதாரிகளுக்கு அந்தந்த பிரதேசத்திலேயே நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
தத்தமது அரசியல் நலனுக்காக அரச நியமனங்களை இருதரப்பினரும் மாறி மாறி உரிமை கோருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேபோன்று அண்மையில் வழங்கப்பட்ட சமுர்த்தி, வடமாகாண சிற்றூழியர், தொண்டர் ஆசிரியர் நியமனங்களின் போதும் ஆளுங்கட்சியினர் மாறிமாறி உரிமை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)

## குற்றம் நிரூபிக்கப்படாமையால் விடுதலை செய்யப்பட்டார் எதிரி

யாழ்ப்பாணம், ஜூலை 7
குடும்பஸ்தரைப் பொல்லால் அடித்துக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டவர், விசாரணையின் போது குற்றம் நிரூபிக்கப்படாதமையால் யாழ். மேல் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டார்.
இந்த வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் ஆணையாளர் எஸ்.பரமராஜா முன்னிலையில் தீர்ப்புக்காக நேற்று முன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டது.
வட்டுக்கோட்டை தெற்கு, கண்ணகை அம்மன் கோயிலை அண்மித்து 2009 மே 12 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் செல்வராஜா (வயது-46) என்பவரே பொல்லால் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.
அருகில் உள்ள கிணற்றிலிருந்து மறுநாள் அவர் சடலமாக மீட்கப்பட்டார். அடி காயங்களால் ஏற்பட்ட இரத்தக் கசிவே அவர் உயிரிழக்கக் காரணம் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிய வந்தது.
சந்தேக நபராக சுழிபுரம் தெற்கு, சுழிபுரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் குணசீலன் என்பவர் கைதானார்.
அவருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தது. விசாரணையின் போது சந்தேக நபருக்கு எதிரானகுற்றச்சாட்டுக்குபோதியளவு சாட்சியம் இல்லாதமையால் குற்றம் நிரூபிக்கப்படாத நிலையில் அவரை விடுதலை செய்தது மேல்நீதிமன்றம்.(த-4)

## கொள்ளை கும்பல் சிக்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 7
பளைப் பிரதேசத்தில் அடிக்கடி இடம்பெற்றுவந்த திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் மூவரை தாம் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
பளைப் பிரதேசத்தில் இடம்பெற்ற சைக்கிள், மின்சார மோட்டர் மற்றும் பல வீடுகளில் புகுந்து பொருள்களைத் திருடிய சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் இவர்களிடமிருந்து களவாடப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
பளை வண்ணான்கேணிப் பகுதியில் வீடொன்றில் திருடப்பட்ட தங்க நகையை விற்க முயன்ற நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணை நடத்தியபோதே ஏனைய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களால் திருடப்பட்ட மின்சார மோட்டார் மாசாரியிலும், சைக்கிள் கரந்தாயிலும் மீட்கப்பட்டன. இந்தத் திருடர்கள் பருத்தித்துறை மற்றும் மன்னார் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-9)

## போக்குவரத்து விதி குறித்து விழிப்புணர்வுக் குறும் படம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் குறித்து விழிப்புணர்வூட்டும் முகமாக பாடசாலைகள் மற்றும் வீதிச் சந்திகளில் விழிப்புணர்வு குறும் படம் காண்பிக்கப்பட்டு வருகிறது.
இதன் பின்னர் வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக உடனடியாகவே வழக்குப் பதிவு செய்யப்படும். எவரும் தப்ப முடியாது என்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஏக்கநாயக்க தெரிவித்தார்.
யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ். குடாநாட்டில் பலர் இன்னும் போக்குவரத்து விதிமுறைகளை உரியமுறையில் பின்பற்றுகிறார்களில்லை. ஏனோதானோ என்று செல்கிறார்கள்.
குறிப்பாக வீதிச் சந்திகளில் ஒரு புறத்திலிருந்து மாறும் போதும், சிறுவீதிகள் ஒழுங்கைகளிலிருந்து பிரதான வீதிக்குச் செல்லும்போதும், முன்னே சென்றுகொண்டிருப்பவர்களை முந்திச் செல்லும்போதும், வீதி வளைவுகளிலும் அதிகளவில் தவறிழைக்கிறார்கள்.
இது தவிர ஒளிச் சமிக்ஞைகளை பிரயோகிக்கத் தவறுகின்றனர். அல்லது அது தொடர்பில் அக்கறையில்லாமல் இருந்து வருகின்றனர். இவை தொடர்பில் விழிப்புணர்வூட்டும் குறுந்திரைப்படம் பாடசாலைகள், வீதிச் சந்திகள் தோறும் காண்பிக்கப்படவுள்ளது.
தற்போது சில பாடசாலைகளில் இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பகுதிகளுக்கும் இது விரிவாக்கம் செய்யப்படும். அனைவரும் [illegible] போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றுங்கள்-என்றார். (த-4)

## மீண்டும் மீண்டும் நேர்முகத் தேர்வு உயர் தேசிய பட்டதாரிகள் கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 7
கடந்த வருடம் ஏனைய பட்டதாரிகளுக்கு நேர்முகத் தேர்வு நடத்தப்படும் பொழுது எமக்கும் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. இப்போது மீளவும் ஏன் நேர்முகத் தேர்வை நடத்துகிறீர்கள் என உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் கேள்வியெழுப்பியுள்ளனர்.
கடந்த வருடம் ஏப்ரல், மே மாதங்களில் பட்டதாரிகளை அரச சேவைக்குள் உள்வாங்கும் பொருட்டு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. இதன்போது உயர்தேசிய டிப்ளோமா பட்டதாரிகளும் தோற்றி இருந்தனர்.
பின்னர் ஜூலை மாதம் பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்படும்போது உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவில்லை.
ஏனைய மாவட்டங்களில் உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தில் உள்வாங்கப்பட்ட போதும் யாழ்.மற்றும் வன்னியைச் சேர்ந்தவர்கள் உள்வாங்கப்படவில்லை.
இந்த நடவடிக்கையை எதிர்த்து உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகளால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். அந்த வழக்கு இன்னமும் நிலுவையில் உள்ள நிலையில், திடீரென மீண்டும் அவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.
கடந்த ஆண்டு நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியிருந்தவர்களை மீண்டும் அழைத்தது, அவர்களது ஆவணங்களைப் பரீசிலிப்பதற்கே என்றும், இதன் பிரகாரம் உயர் தேசிய டிப்ளோமா கணக்கியல் பட்டதாரிகளுக்கே பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் யாழ்.மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

> **ஏனைய மாவட்டங்களில் உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தில் உள்வாங்கப்பட்ட போதும் யாழ். மற்றும் வன்னியைச் சேர்ந்தவர்கள் உள்வாங்கப்படவில்லை.**

வடமாகாண தேர்தல் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ள நிலையில், இந்த திடீர் நேர்முகத் தேர்வு ஏன் நடத்தப்பட்டது என்பது தொடர்பாக அறிய யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை தொடர்பு கொண்ட போதும் அவரது தொலைபேசியில் இருந்து பதில் கிடைக்கவில்லை. (ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## சின்னையா தவரெட்ணம் J.P



யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் பணிப்பாளரும், வடமாகாண கடற்றொழில் அமைப்புத் தலைவரும், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன முன்னாள் தலைவருமாகிய

**அமரர் சி.தவரெட்ணம்**

அவர்களின் மறைவால் துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது அனுதாபங்களைத் தெரிவித்து
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

**தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை**

(A/10280) (6.3.11)

# கற்றல் ஊக்குவிப்பு உதவி

அச்சுவேலி, ஜூலை 7
வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 67 சிறுவர்களுக்கு 'ஏசியா ஹப்பிற்றல்' நிறுவனம் கற்றலுக்கான ஊக்குவிப்பு உதவிகளை வழங்கி வருகின்றது.

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவு சிறுவர் உரிமை மேம்பாட்டு பிரிவின் ஊடாக போர் காரணமாக தாய் அல்லது தந்தையரை அல்லது இருவரையும் இழந்த 6 வயதுக்கும் 12 வயதுக்கும் உட்பட்ட சிறுவர்களுக்கே கற்றல் உபகரணத் தொகுதியையும் மாந்தம் 500 ரூபா உதவு தொகையையும் குறித்த நிறுவனம் வழங்கி வருகின்றது.

இதேவேளை பாதிக்கப்பட்ட சிறுவர்கள் யாராவது இதுவரை பதிவுசெய்யவில்லையாயின் தத்தமது கிராம அலுவலர் ஊடாக சிறுவர் உரிமை மேம்பாட்டலுவலர் திருமதி தி. சுரேஷ்குமாருடன் தொடர்புகொள்ளுமாறு வலி.கிழக்கு பிரதேசசெயலர் எம்.பிரதீபன் கேட்டுள்ளார். (ஐ-11)

## உயர்தர மாணவர்களுக்கு கருத்தரங்கு

வவுனியா,ஜூலை 7
ஜி.சி.ஈ.உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்கு (2013) ஒன்றை வவுனியா 'டயலொக்' நிறுவனத்தினர் எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரை வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கு காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை நடைபெறவுள்ளது. பொருளியல், பௌதிகவியல் பாடங்களுக்கான கருத்தரங்காக அமையவுள்ளது. ஆர்வமுள்ள மாணவர்களை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-402)

## இன்று பரிசளிப்பு

வல்வெட்டித்துறை ஜூலை 7
வல்வை மகளிர் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் செல்வி இ.சுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஓ-34)

# கண்ணீர் அஞ்சலி

## கணபதி மெய்யழகன்



யாழ்ப்பாணம் மாட்டக் கூட்டுறவுச் சபையின் உபதலைவரும், வடமாகாண பனைதென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வலிகாமம் ப.தெ.வ.அ.கூட்டுறவுச் சங்க கொத்தணி, சுன்னாகம் ப.தெ.வ.அ. கூ. சங்கம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும், சிறந்த கூட்டுறவாளருமாகிய **க. மெய்யழகன்** அவர்களின் மறைவால் துயரடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்
யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை.**

# மரண அறிவித்தல்

## பிலுப்பையா அன்ரனி

(முன்னாள் உரிமையாளர் - உயிலங்குளம் மன்னார் S.M.P மோட்டோர்ஸ் டிராக்டர் கராஜ்)



அச்சுவேலி, தென்மூலையைச் சேர்ந்த பிலுப்பையா அன்ரனி 05.07.2013 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலுப்பையா (தெருவடித் தம்பி)-மரியமாதம்பதியரின் அன்பு மகனும், மேரி மெற்றில்டா பற்றிமாவின் (ஜெயம்) அன்புக் கணவரும், அமலன் (கொலன்ட்), மேறா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருசாந்தன், கிரு சாந்தி ஆகியோரின் அன்பு மாமனும், KALLEV, JENNIFER, JEROEN, STACY ஆகியோரின் அன்புப் பாட்டனும், காலஞ்சென்ற இம்மானுவல் (தம்பிராசா) மற்றும் தயிரியநாதர் (கனடா), மரியதாஸ் மேரிதிரேசா, காலஞ்சென்ற லீனாட் ஜெயராஜா மற்றும் அருட்பிரகாசம் (சமாதான நீதிவான்) ஜெக நாதன் (லண்டன்), நவநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோ தரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (08.07.2013) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பங்குச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
பிலிப் ஜெகநாதன்
அருட்பிரகாசம் : 0776183160
மேரிதிரேசா: 0772563296
மரியதாஸ்: 0773277412
அன்டர்சன் (சனா) : 0777569815

தென்மூலை,
அச்சுவேலி.

(38992) (10,6)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற அதிபர், கோக்குவில் நாமகள் வித்தியாலயம்)



சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு (04.07.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா -அன்னம் தம்பதியரின் அன்பு மருமகனும், சாந்தகுமாரியின் அன்புக் கணவரும், Dr.வித்தியாவின் (ஆஸ்திரேலியா) அருமைத் தந்தையும், இளவேந்தனின் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா) அன்பு மாமனும், காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் நவரட்ணம், பூமாதேவி, பொன்னம்பலம், இராஜலக்ஷ்மி (நியூசிலாந்து), சந்திராதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், விஜயலக்ஸ்மி, சிவாஈஸ்வரி, இராசையா, சாந்தி, காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் யோகேஸ்வரன் (லண்டன்), காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் ஜெயக்குமார்(ஆஸ்திரேலியா), பிரேமகுமாரி (ஜேர்மனி), உதயகுமாரி, தேவகுமாரி (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), சாம்பவி, யசோதா (கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கஜானனின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2013) ஞாயிற்றுக்கிழமை கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக மு.ப 10.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"குமாரோதயம்"
புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (சி/38946) (3.6.11)

தகவல்:
குடும்பத்தினர்.

# இருபதாவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
05.02.1956

உதிர்வு
02.07.1993

திதி: 07.07.2013

திருமதி
## இந்துமதி சிவகுருநாதன்

எம் அருமை சகோதரியே
இரு தசாப்தங்கள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
எம்மை விட்டு அகலா
கண்ணீருடன் உங்களை
நினைவு கூரும் சகோதரிகள்

திருமதி நாகரட்ணம் பரமசோதி
சுதுமலை மேற்கு, மானிப்பாய்.
0779481822

(38993)(10.6.3)

# நினைவலைகள்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10.02.1953 — மறைவு 18.06.2012



அமரர்
## புவனேஸ்வரி பரராசசிங்கம்

ஆண்டொன்று ஆன தம்மா
அதிர்ச்சியும் ஆறாத்துயரமும் ஆறவில்லையம்மா
அன்போடும் பண்போடும் எம்மை வளர்த்தீர்- எதற்கு
பாரினிலே பரிதவிக்க விடுவதற்கா
உறவுகள் பல இருந்தென்ன பயன் - அம்மா
என உமை அழைக்காது உறக்கமின்றி ஊமையாய்
போனதம்மா எம் வாழ்வு
கண்ணிற்கு இனிய காட்சி ஒன்றை கண்டு வந்தோம்
என்றோ ஒரு நாள் காண மறந்துவிட்டோம்
அன்றுதான் நீர் எமை விட்டுப் பிரிந்துவிட்டீர்

பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 21.07.1973 — மறைவு 31.12.2008



## பரராசசிங்கம் சந்திரபோஸ்

அன்போடும் பண்போடும் எமை
தூக்கிவளர்த்த எம் அண்ணா
பிரிவு எனும் துயரத்தை ஏன் எமக்கு
தந்தீர்கள்
பிரிந்தது நீர் மட்டுமல்ல அம்மாவும் கூட
5 ஆண்டுகள் சென்றாலும் உம்
அன்பும் உருவமும் எமை விட்டு
விலகவில்லை அண்ணா

பிரிவால் துயருறும்:
தந்தை, சகோதரர்கள்,
மனைவி, பிள்ளைகள்.

நவாலி வடக்கு, மானிப்பாய்.

(30651)(10,16,14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்தர்களின் எதிர்ப்பால் மூடப்பட்டது பள்ளிவாசல்

கொழும்பு, ஜூலை 7

கொழும்பு, கிராண்ட்பாஸ்- ஸ்ரீசுவர்ணசைத்தியில் சட்டபூர்வமாக அமைக்கப்பட்டு கடந்த வியாழக்கிழமை திறக்கப்பட்ட மொகைதீன் தாருல் இஸ்லாம் பள்ளிவாசல் பௌத்தர்களின் ஆர்ப்பாட்டத்தை அடுத்து அன்றைய தினமே மூடப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

ஸ்ரீசுவர்ணசைத்திரிப் பகுதியில் 40 வருடம் பழைமை வாய்ந்த பள்ளி வாசல் ஏற்கனவே அமையப் பெற்றிருந்தது. இந்த நிலையில் ரம்ழான் நோன்பினை முன்னிட்டு தொழுகைக்கான போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் அந்தப் பள்ளிவாசல் மூடப்பட்டு இடவசதியுடன் கூடிய மொகைதீன் தாருல் இஸ்லாம் பள்ளி திறக்கப் பட்டது. புதிய பள்ளிவாசல் கட்டடத்தொகுதிக்கு அண்மையில் பன்சல, அரச மரம் போன்றவை அமைந்துள்ள காரணத்தினால் பள்ளி வாசலை மூடும்படி பௌத்தர்கள் ஆர்ப் பாட் டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனையடுத்து பள்ளிவாசல் தற்காலிகமாக மூடப்பட்டது. பள்ளிவாசல் மூடப்பட்டமை குறித்து சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவிக்கையில்;

அரசின் அனுமதியுடன் திறக்கப்பட்ட பள்ளிவாசலை மூடும்படி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவது கண்டனத்துக்கு உரியது. தற்போது பள்ளிவாசலைத் திறப்பதற்கான பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றது- என்றார்.

இந்தச் சம்பவம் குறித்து முஸ்லிம் கவுன்ஸில் தலைவர் என்.எம். அமீன் கூறுகையில்; ஆர்ப்பாட்டத்தின் பின் பள்ளிவாசல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. கிராண்ட்பாஸ் பொலிஸில் இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து பேச்சு நடந்து வருகிறது. (த-10)

# ஆனைக்கோட்டையில் ஆலய உண்டியல் உடைத்துத் திருட்டு

நவாலி, ஜூலை 7

ஆனைக்கோட்டை ஸ்ரீகாசி விஸ்வநாத விசாலாட்சி அம்பாள் ஆலயத்தின் உண்டியல் சில தினங்களுக்கு முன்னர் விஷமிகளால் உடைக்கப்பட்டு அதற்குள் இருந்த பணம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. உடைக்கப்பட்ட உண்டியல் ஆலய பிற்பகுதியில் இருந்து மீட்கப் பட்டது. மேலும் ஆலயத்தின தெற்கு வாசல் கதவையும் உடைத்து திறப்பதற்கு எடுத்த முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.(ஒ-100)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி



## சின்னையா தவரெட்ணம்

(முன்னாள் தலைவர், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுசங்க சமாசங்களின் சம்மேளனம், யாழ். மாவட்ட கூட்டுறவுசபை பணிப்பாளர்சபை உறுப்பினர், வடமாகாண கடற்றொழில் அமைப்பு தலைவர்)

போனதோ உன்னுயிர் ஐயா!
போன இடம் தெரியவில்லை
காலனே உனக்கு
கண்கொஞ்சம் குருடுதானோ
ஞாலத்தில் எங்களுக்கு
நற்றுணையாய் இருந்தவரை
பாதியிலே பறித்து விட்டாய்

ஏற்குமோ எங்கள் மனம்
மன்றுகள் பல ஏறி
சிந்தனைகள் சொன்ன தவம்
கன்றுகளைக் கதறவிட்டு
காற்றோடு கலந்ததேனோ
ஒன்றல்ல ஒருநூறு
உங்களால் நாம் பெற்றபயன்
சான்றுகள் பகருதையா
சா விலும் உயர்ந்தீரையா....

ஈசன்பாதமதில் இனிதே
நீர் வாழ பிரார்த்திக்கின்றோம்.

அமரத்துவம் அடைந்த சி.தவரெட்ணம் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்து அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாகத்தினர், கடற்றொழிலாளர்கள்,
அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.
வெடியரசன் வீதி, காரைநகர்.

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 03 1977



உதிர்வு 22 06 2009

யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் பிறந்தவரும் அவுஸ்ரேலியா சிட்னியில் வாழ்ந்தவருமான எங்கள் தவப்புதல்வன் வைத்திய கலாநிதி (குழந்தை வைத்திய நிபுணர்)

## DR.நாகரூபன் ஆறுமுகம்

திதி 07.07.2013

எமது அன்புச் செல்வமே எமது மாயக்கண்ணனே ஆயர் பாடி
மாளிகையில் தாய்மடியில் கன்றினைப்போல் மாயக்கண்ணன்
தூங்கி விட்டான் தாலேலோ-அவன் வாய்நிறைய
மண்ணையுண்டு மண்டலத்தை கட்டியபின் ஓய்வெடுத்து
தூங்குகின்றான் தாலேலோ ஓய்வெடுத்து
தூங்குகின்றான் ஆராரோ
கண்ணன் அவன் தூங்கிவிட்டால்
காசினியே தூங்கிவிடும் அன்னையரே துயிலெலுப்ப
வாரீரோ அவன் பொன்னழகை பார்ப்பதற்குப் போதைமுத்தம்
பெறுவதற்கும் கன்னியரே கோபியரே வாரீரோ
கன்னியரே கோபியரே வாரீரோ

(c10698)

என்றும் உன் அன்பான: மனைவி, அப்பா, அம்மா, சகோதரர், சகோதரிகள் மற்றும் உறவினர், நண்பர்கள்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 07.06.2013 அன்று இறைபதமடைந்த
எங்கள் அன்புத் தெய்வம் அவர்களின்
அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.07.2013)
ஞாயிற்றுக்கிழமை அதிகாலை
5.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.
அதனைத் தொடர்ந்து இடம்பெறும் சபிண்டீகரண
நிகழ்விலும் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர்
**ஆறுமுகம் சிவகுரு**

தோற்றம் 22.05.1927 மறைவு 07.06.2013

மனைவி பார்வதி

கரணவாய் மேற்கு, கரவெட்டி. [illegible]

## கண்ணீர் அஞ்சலி



## பரமலிங்கம் ஜெகதாம்பிகை

(இறைபணிச் செம்மல்)

நயினாதீவு மலையிற்புலம் ஸ்ரீ மலையின் ஐயனார் ஆலய ஆரம்ப கால உறுப்பினரும், பொருளாளரும், சமய சமூக சேவகியும், இறைபணிச் செம்மலுமாகிய திருமதி பரமலிங்கம் ஜெகதாம்பிகை அவர்களின் திடீர் மறைவினால் மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது கணவர், பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆலய நிர்வாகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா ஐயப்பனின் பாதக் கமலங்களில் சரணடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
ஸ்ரீமலையின் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர்.

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## 66 ஆவது பிறந்த நாளும் 6 ஆம் மாத நினைவஞ்சலியும்



திருமதி
**சரஸ்வதி நாகராசா**

மண்ணில் 07.07.1947
விண்ணில் 03.01.2013

கருவறையிலிருந்து - நீ
பூமிக்கு வந்து 66 ஆண்டுகள் - என
சந்தோஷப்படுவதா இல்லை
பூமியிலிருந்து கல்லறைக்குச் சென்று
6 மாதங்கள் எனக் கலங்கி நிற்பதா ...?
குடும்பத்தின் ஒளி விளக்காய்த் தோன்றிய - நீ
இன்று உன் குடும்பத்தை இருளில்
உனைத் தேட விட்டு விட்டாயே.....!
என்றென்றும் உன் பாச நினைவுகளுடன்
உன் விழுதுகள்.....!!!

ஆச்சாரி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
தாவடி.
T.P. 021 222 3626

(38949)(2.6.3)

அன்புக் கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை
மணமகள் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG bride என ரைப் செய்து 77000 இலக்கத்திற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

## மணமகன் தேவை
மணமகன் தேவையா? ஒரு sms இனூடான உங்களின் பதிவினை மேற்கொண்டு காத்திருங்கள். உங்களின் டயலொக் மொபைலில் (Dialog) REG groom என ரைப் செய்து 77000 இலக்கத்திற்கு sms பண்ணவும். மேலதிக தகவலிற்கு www.realmatrimony.com Call : 011 4380900 0114344230

## sms ஊடாக வரன் தேடல்
sms இனூடாக Realmatrimony இல் பதிவதாயின், உங்களின் மொபைலில் <உங்களின் பெயர்>, <பிறந்த திகதி>, ரைப் செய்து 0777 111 786 என்ற இலக்கத்திற்கு sms பண்ணுங்கள். அதே நாள் இலவச சேவையினையும் பெறலாம். மேலதிக தகவலுக்கு அழையுங்கள் www.realmatrimony.com
Call : 011 4380900 0114344230 (C/10088)(3.6.5)


'அரச வேலை இருக்கு வாங்கோ' எனக் கூறி

# வீடு வீடாக ஏறி இளம்பெண்களை ஓட்டோவில் ஏற்றித்திரிந்த ஆசாமி

## 'உபசாரம்' வழங்கினர் வட்டு இளைஞர்

வலி.வடக்கு, ஜூலை 7

வேலைவாய்ப்பின்றி வீடுகளில் இருக்கும் பிள்ளைகளுக்கு அரச உத்தியோகம் பெற்றுத் தருவதாகக் கூறி, ஏமாற்றி வந்த நபர் ஒருவர் நேற்று இளைஞர்களினால் பிடிக்கப்பட்டு நல்ல கவனிப்பின் பின்னர் வட்டுக் கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

வட்டுக்கோட்டை, அராலி, கோட்டைக்காட்டுப் பகுதிகளில் வேலை ஏதும் இன்றி வீடுகளில் தங்கியிருக்கும் பிள்ளைகளுக்கு அரச உத்தியோகம் பெற்றுத் தருவதாகக் கூறி அவ்வாறான வீடுகளுக்குச் சென்று பழகி வந்துள்ளார் குறித்த நபர்.

குறித்த ஆசாமி "நேற்று முன்தினம் வட்டுக்கோட்டையில் உள்ள ஒரு வீட்டுக்கு ஓட்டோவில் சென்று உடனடியாக வேலை வழங்கப்படவுள்ளது. பிள்ளையை அனுப்புங்கள்" என பெற்றோரிடம் கூறி ஓட்டோவில் அழைத்துச் சென்றுள்ளார். பகல் முழுவதும் குறித்த இளம் பெண்ணை அங்கும் இங்குமாக ஓட்டோவில் கொண்டு சென்று அலைந்து திரிந்து விட்டு மாலைப் பொழுதில் சித்தன்கேணிச் சந்தியில் இறக்கி விட்டு விட்டு அந்த நபர் தலைமறைவாகி விட்டார். பிள்ளை வீடு திரும்பியபோதுதான் சம்பவம் பெற்றோருக்கு தெரியவந்தது.

நேற்றையதினமும் காலை வேறொரு ஓட்டோவில் கோட்டைக்காட்டுப் பகுதியில் உள்ள வீட்டுக்குச் சென்று மற்றொரு பெண்பிள்ளையை அழைத்துச் செல்ல முற்பட்டுள்ளார்.

ஏற்கனவே வெள்ளிக்கிழமை நடைபெற்ற சம்பவத்தை அறிந்திருந்த அந்தப் பகுதி இளைஞர்கள் அந்த ஆசாமியை பிடித்து முறையாகக் கவனித்து விட்டு வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். குறித்த நபர் மிருசுவிலைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ-86)

# முகாவில் ஆலயத்தில் அம்மனின் நகைகள் சூறையாடல்

பளை இயக்கச்சி, முகாவிலில் உள்ள திரியாய் அம்மன் ஆலயம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகி உள்ளார். ஆலயத்தினுள் உள்நுழைந்த திருடர்கள் அம்மனின் கழுத்தில் காணப் பட்ட தங்கச்சங்கிலி, தாலி ஆகியவற்றையும் மூல விக்கிரகத்தை அப்புறப் படுத்தி அங்கிருந்த தங்கத் தகட்டையும் அபகரித்துச் சென்றுள்ளனர். அத்துடன் பூசகரால் ஆலய மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த கைப்பையையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

திருட்டுச் சம்பவம் தொடர்பாக பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஒ-௯)


உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## வீடு விற்பனைக்கு
கோப்பாய் பருத்தித்துறை வீதிக்கு அருகில் தனிப்பாதையுடன் கூடிய வீடு விற்பனைக்கு.
077 0219804, 077 4696744, 0777 323954

## வேலையாள்கள் உடன் தேவை
சாவகச்சேரியில் உள்ள பாற்பண்ணை ஒன்றில் வேலை செய்வதற்கு ஆண்/பெண் வேலையாள்கள் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 764 4799, 021 205 0400
(38964)(3.6.11)

Japan இன் தயாரிப்பில் உலகின் முதற்தரம் வாய்ந்த
## Koyo
Value & Technology MADE IN JAPAN (C/10085)(3.6.5)
KOYO என்றால் BEARING
BEARING என்றால் KOYO
எப்பொழுதும் நாம் உங்களுடன்
ZERENDIB MOTOR ENTERPRISE (PVT) LTD
60 - B ,SRI SANGARAJA MAWATHA,COLOMBO - 10
TEL:011-4378307 , 011-2341580 - 81 FAX:011-2454608 E-mail:zme@slt.lk

## புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
பேசியல்
கெயர் ஸ்ரைல்
மேக்கப்
ஐசிங் கேக்
ஐசிங் சுகர் பிளவர்
சாறி வேர்க்
கான்ட் வேர்க்
இந்த வகுப்புக்கள் சாவகச்சேரி, நுணாவிலிலும் நடைபெறும்.
(ஓடர்களும் செய்து தரப்படும்)

Aki Beauty Carer
55/35, Sivagurnathar Lane, Kasthuriyar Road, Jaffna. Tel: 077 155 9113

## விற்பனைக்கு

எமது விற்பனை நிலையத்தில் கணினிகள், மடிக்கணினி கள் விற்பனைக்குண்டு. அத்துடன் மடிக்கணினிகள், கணினிகள் திருத்திக் கொடுக்கப்படும். Toshiba,Hp,Sony, Compaq, Samsung, Acer போன்ற அனைத்துவகை மடிக்கணினிகளுக்கான உதிரிப்பாகங்கள் மாற்றித்தரப்படும்.
நாட வேண்டிய இடம்: iBuy Computers
75/10,பலாலிவீதி,திருநெல்வேலி.
தொ.பே.:077 707 2092/021 320 2411
(38982)(3.5.6)

# DOCTORS MIGRATION
# DENMARK - NORWAY SWEDEN
DOCTORREC LIMITED EUROPE
01.MEDICAL DOCTORS
- Age upto 48 with MBBS or MD
Minimum One year Work Experience / Private GPs
02.TRAINEE DOCTORS
(NON WORKING MEDICAL GRADUATES)
(Sri Lanka / Russia/ Latvia / Ukraine / Belarus / China etc.)
- Age upto 35 Without Work Experience
SLMC Registration Not Required
Special Low Consultation Fees for Non Working Medical Graduates
Contact Romesh for Appointments : 0777700659, 0777700281


★ Doctors Can Earn an Average Monthly Salary Approx.Rs.1,000,000/= or above ★
DOCTORREC Consultant for Asia,
Dr. Prabath C. Ukkwatte
Dr. of Education (USA), Dr. of Business Administration (USA) MBA (USA), MABE (UK)
★Free Education for Children
★Free Consultancy for Employment
Assessment and Interviews:
July 12th Friday & 13th Saturday
10.00 a.m. to 4.00 p.m.
Call over with Bio Data and Rs.2000/- will be charged for information and assessment before the personal interview.
★ Approval within 4-6 Months
★ Good English (No IELTS)
DOCTORREC Partner in Sri Lanka,
OXFORD COLLEGE FOR INTERNATIONAL CAREERS (PVT) LTD.
360, Oxford Building, Old Kottawa Road, Udahamulla, Nugegoda.
Tel: 011-5 644895
(C/10080)(3.6.5)

## ஆண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு
# மலேசியா
மலேசியாவில் உள்ள பிரபல்யமான நிறுவனத்தில்
GENERAL WORKERS (Cleaners)
மாதாந்த சம்பளம் RM 900
இலங்கைப் பெறுமதிக்கு ரூபா. 37,000
- மெடிக்கல் (Medical) - இலவசம்
- இன்சூரன்ஸ் (Insurance) - இலவசம்
- தங்குமிடவசதி (Accommodation) - இலவசம்
- ஒப்பந்த முடிவில் இலவச விமான டிக்கட் (Air Ticket)
- 3 வருட கால ஒப்பந்தம் (3 Years Contract)
8 மணிநேர வேலை + Over Time
வாரத்தில் 6 நாள்கள் வேலை
அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டணம்
Labour Licence No. 2598
Asma Enterprise Travels & Tours
111-1/1, Sri Sumanatissa Mawatha, Colombo - 12.
Tel : 011-3091521 Hotline : 077-3179592 (C/10301)(3.6.5)

## வீடு வாடகைக்குத் தேவை
உரும்பிராயிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவரும் பிரதான வீதியில் வீடு வாடகைக்குத் தேவை. (38950)(6.2.3)
தொடர்பு:- 077 6343568

## கார் விற்பனைக்கு
KF -xxxx இலக்கமுடைய Nissan Sunny Ex Saloon (Autogear) FB 15 (petrol) வெள்ளை நிறக் கார் விற்பனைக்கு உண்டு. (38983)(6.2.3)
தொடர்பு:- 077 112 7341

## யாழில் வீடு, காணி விற்பனைக்கு
1 1/2 பரப்பு காணி இரண்டு மாடி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
367 A, [illegible] தரை லேன், [illegible], யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 072 4117491

## French Spoken Class
France நாட்டுக்குச் செல்வோருக்கும் Franchகற்க விரும்புவோருக்குமான அரிய சந்தர்ப்பம். தமிழ் மொழி மூலம் Franch படிக்க தனிப்பட்ட வகுப்புக்கள். யாழ்,கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு.
மேலதிக விவரங்களுக்கு:
077 655 2129 (37471)(3.5.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய கல்லூரியின் உயர்தர மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 7
யாழ்.மத்திய கல்லூரியின் இவ்வருட ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பு பரீட்சார்த்திகள் அனைவரும் அனுமதி அட்டைகளைச் சரிபார்த்துப் பரிசீலிப்பதற்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 இற்குப் பாடசாலைக்குச் சீருடையுடனும், தேசிய அடையாள அட்டையுடனும் சமுகம் தருமாறு அதிபர் அறிவித்துள்ளார். (ஒ)

**சேவைகளைப் பெற அழையுங்கள்**
- இந்தியா, மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர் மற்றும் நாடுகளுக்கான சுற்றுலா /Visa/ தங்குமிட ஒழுங்குகள் மற்றும் உலகளாவிய பயண ச் சீட்டுகளைப் பெறவும்
- Embassy Forms நிரப்புவதுடன், வங்கி மீதி வசதிகள்
- 3G/4G Dongles, ரூபா 2491/=இலிருந்து
- Mobile Phone ரூபா1990/=இலிருந்து
- Dish இணைப்புகளுக்கான கட்டணங்களை மேற்கொள்ள
- Worldwide Courier/Parcel Services

தொடர்பு:077 380 2613/077 380 8944
(c/10096)(3.6.11)



உங்கள் வியாபார முறைமைக்கு ஏற்ற கணினி மென்பொருள்
(38891)(6.5)
கொடுப்பனவுக் காலம் இரண்டு வருடம் மட்டுமே
Rs. 4500/-
குறைந்த மாதாந்த வாடகை முறையில் பெற்றுக்கொள்ள
தொலைபேசி-0714-600300 மின் அஞ்சல்-www.es-pos.com

சொப்ட்லொஜிக் கொமினிகேஷன் (தனியார்) நிறுவனம் NOKIA

**NOKIA விநியோகஸ்தர்கள்**

வட மாகாண மார்க்க மூலம் விநியோக வலையமைப்பு

" ஒரேயொரு தேசிய விநியோகஸ்தர்களாக சொப்ட்லொஜிக் கொமினிகேஷனுக்கு அதிகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. மிக விரைவாக முன்னேறி வரும் சூழலில் வட மாகாணத்தில் விநியோகத்தர்களாக இருப்பதற்கு மிக பொருத்தமான நிறுவனம் இதுவாகும் "

1. தேவையான வங்கி கட்டளைகளை பெற்றுக் கொள்ளும் இயலுமைகள்
   யாழ்ப்பாணம் : ரூபா 02 மில்லியன்
   வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் : ரூபா 1.5 மில்லியன்
2. தேவையான அளவிற்கு விநியோகப்படுத்துவதற்கு வாகன வசதிகள் இருப்பதோடு, 720 பரப்படிக் கொண்ட களஞ்சிய வசதிகளும் இருக்க வேண்டும்.
3. அர்ப்பணிப்போடு செயலாற்றக்கூடிய தொழிற்முயற்சியாளர் கொண்ட தமது வியாபாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக தங்களது சுயமான செயற்பாடுகளை செய்யப்படுத்தக்கூடிய இயலுமைகள்
4. தொழிற் முயற்சியாளர்களின் சுயமான விருப்பத்தின் பேரில் முன்னேற்றத்தையும் செயல்பாடுகளையும் அதிகரித்துக் கொள்வதற்கான இயலுமைகள்
5. அதிஉயர்ந்த வாடிக்கையாளர்களின் சேவைகளுக்காக அர்ப்பணிப்போடு செயல்படுகின்ற தொழிற்முயற்சியாளர்கள்.
6. தொழிற்முயற்சியாளர்கள் இந்த விநியோகிப்பின் போது தொலைதொடர்பு உபகரணங்கள் மற்றும் கணனி உதிரிகளில் உள்ள பயிற்சிகளில் அதிக அனுகூலங்களுக்கு ஆட்பட்டுள்ளனர்.

நலன்கள்
1. உள்ளத்தை கவரும் கொமிஷன் முறைகள்
2. தங்களுடைய செயல்பாட்டு தன்மைகளில் திருப்திப்படுத்தலுக்கேற்ப முன்செல்லல்
3. செயற்பாட்டு குழுவிற்கு தொழிற்பயிற்சி

இதுசம்பந்தமாக கவனம் செலுத்தும் விண்ணப்பதாரிகள் கீழே குறிப்பிடப்படுகின்ற ஆவணங்களோடு விண்ணப்பிக்கவும்.

1. விண்ணப்ப கடிதம், இங்கு தெளிவாக பெயரும், விருப்பமான பிரதேசம் ∴ வலயம், செயற்பாட்டு முதலீடு, வங்கி கட்டளையின் அளவு தெரிவிக்கப்பட வேண்டும்.
2. வியாபார பதிவுச்சான்றிதழ், தற்பொழுது செய்கின்ற வியாபாரம், மாதாந்த வருமானம்
3. தற்பொழுது செய்யப்படுகின்ற வியாபாரத்திற்கான மத்தியஸ்தர்கள்

சகல விண்ணப்பங்களினதும் கடித உறையை முத்திரையிட்டு கீழே குறிப்பிடப்படுகின்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.
07 நாட்களுக்குள் அனுப்ப வேண்டுமென்பதோடு, ஈமெயில் பண்ணவும் முடியும்.

(சி/10086)(6.2)

softlogic
E mail : cynthia.pereira@softlogic.lk
தபால்: சிந்தியா பெரேரா,
14, டி பொன்சேகா பிளேஸ், கொழும்பு-05

தகவல் தொழில்நுட்பம், உடற்கல்வி டிப்ளோமாதாரர்களை

## ஆசிரிய சேவையில் இணைப்பதற்கான நேர்முகப் பரீட்சை செவ்வாயன்று

யாழ்ப்பாணம், ஜூலை 7
தகவல் தொழில்நுட்பம் மற்றும் உடற்கல்வி டிப்ளோமாதாரர்களை இலங்கை ஆசிரியர் சேவை-3 தரம்-II இற்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூரிலுள்ள வடமாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.
வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் வெளி யிடப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைவாக, தெரிவு செய்யப்பட்ட தகவல் தொழில் நுட்ப பாடவிதானத்துக்கான 95 விண்ணப்பதாரிகளுக்கும் உடற்கல்வி டிப்ளோமாதாரர்கள் 74 விண்ணப்பதாரிகளுக்கும் ஆசிரியர் நியமனம் வழங்குவதன் பொருட்டு தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக இந்த நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.
நேர்முகப் பரீட்சைக்கு கல்விச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் மூலப்பிரதிகள் மற்றும் போட்டோ பிரதிகள் என்பவற்றுடன் கலந்துகொள்ளுமாறு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.
நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விவரப் பட்டியலை 'உதயன்' அலுவலகத்தில் பார்வையிடலாம். (ஒ-5)

## தொழில்நுட்ப துறைக்கு மாணவர் அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை7
யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் புதிதாக அறிமுகப்படுத்திய தொழில் நுட்பத்துறை எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. பயில விரும்பும் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் (2012) சித்தியெய்திய மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
இந்தப் பிரிவில் புதிதாக இணைந்து கொள்ள விரும் பும் மாணவர்கள் உரிய ஆவணங்களுடன் வருகை தந்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறி விக்கப்பட்டுள்ளது. (ஒ)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை7
ஏ.கே.கீர்த்திராஜனின் ஜி.சீ.ஈ. உயர்தர மாணவருக்கான செய்யுள் தொகுப்பு நூல் வெளியீடும் புலமை மிகு மாணவர் கௌரவிப்பும் இன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பிறவுண் வீதி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ-10)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை7
நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் சி.தர்மரத்தினம் தலைமையில் பாடசாலை அரங்கில் இடம்பெறவுள்ளது.
பிரதம விருந் தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்வார். (ஒ-5)

## வன்செயலால் பாதிக்கப்பட்ட மாணவருக்கு சைக்கிள்கள்

அச்சுவேலி, ஜூலை 7
கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட ஆச்சிரமத்தினால் அஞ்சலி அறக்கட்டளையின் அனுசரணையுடன் வன்செயலில் தாய், தந்தையரை இழந்த மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.
வன்னியில் வன்செயலினால் தாய் அல்லது தந்தையை இழந்த அல்லது இருவரையும் இழந்த மாணவ மாணவியருக்கே கல்வி ஊக்குவிப்பு உதவியாக சைக்கிள்கள் வழங்கப்பட்டன.
முழங்காவில் கிருஷ்ணர் கோயிலில் நடைபெற்ற நிகழ்வில் ஹவாய் தொண்டுநாத சுவாமிகள் மற்றும் கோப்பாய் சுப்பிரமணிய கோட்டத்தின் கண்காணிப்பாளர் திருமதி எஸ்.கனகரத்தினம் ஆகி யோர் கலந்து கொண்டு சைக்கிள்களை மாணவர்களுக்கு வழங்கினர். (ஒ-11)

## சமய சந்நிதிகளில்

அல்வாய் கிழக்கு மாலிசந்தி ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் 17 ஆம் திகதி புதன்கிழமை தீர்த் தத் திருவிழாவும் நடைபெறும் (ந-8)

★ ★ ★

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினார் ஆலயத் தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும். தீர்த்த உற்சவம் நாளை திங்கட்கிழமை மு.ப 10.30 மணிக்கு இடம் பெறும். (ந-100)

★ ★ ★

நெடுந்தீவு மத்தி பெருக் கடி சித்திவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும். திருவிழாவில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை பூங்காவன உற்சவமும் இடம்பெறும்.(ந-7)

★ ★ ★

வவுனியா கரம்பைக்காடு ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த வெள்ளிக் கிழமை 108 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற்று வருகின்றது. (ந-402)

**லொறி விற்பனைக்கு**
WPLK. 7xxx தொடரிலக்கமுடைய TATA 407 அலுமினிய பொடி லொறி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 87, பலாலி வீதி, திருநெல்வேலி
தொ.பே. 077 377 0455

**தேவை**
மானிப்பாயில் இயங்கிவரும் உதிரிப்பாக விற்பனை நிறுவனத்திற்கு கணினியில் இருப்பை பேணுவதற்கு கணினி அனுபவமுள்ள பெண்பிள்ளை தேவை. மானிப்பாய் அண்டிய பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 076 4353

**வீடு காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள கல்வீடு மற்றும் கிணறுடன் கூடிய 1¾ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
காலை 8 மணிக்குப் பின்னர் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 077 949 8889, 077 774 1750

Jaffna College Institute of Technology BIT
Bachelor's of Information Technology
(External Degree School of Computing , University of Colombo)
கொழும்பு பல்கலைக் கழக வெளிவாரி பட்டப்படிப்பினால் நடத்தப்படும் Bachelor's of Information Technology (BIT)
கற்கை நெறிக்கு 30.07.2013 ற்கு முன் பதிவு செய்து கற்கை நெறியை தொடங்கவும்.
குறைந்த கட்டணத்தில் கற்கை நெறியை தொடருங்கள்
Apply Immediately
Craft Certificate Courses Six Months full time Tamil Medium
சுய தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெறுவதற்குமான பாடநெறிகள்.
Domestic Electrician /Wiring — மின் இணைப்பும் நிர்மாணமும்
Radio,TV& Serving Practice — இலத்திரனியல் சாதனங்கள் திருத்துதல்
Air Condition & Refrigeration — குளிரூட்டுதல் பயிற்சி நெ
Machine Shop Practice — லேத் வெல்டிங் பிற்றிங் பயிற்சிநெறி
Facilities: Easy Installment ,More Practical hours, Modern Lab, Auditorium, Hostel, library & Sports, etc.
A training Institute registered with the (TVEC) Under P25/0014
More Information :Director, Jaffna College Institute of Technology, Vaddukoddai.
T.P No.021 321 3139 / 021 225 0975 E-Mail ejcit@sltnet.lk www.jcit.lk
(சி/10258)(6.2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 123

# புதிதாய்ப் பிறந்த குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய தோல் நோய்கள்

## மஞ்சள் நிறமடைதல் (Neonatal Junudice)

## ஒரு மஞ்சள் எச்சரிக்கை (yellow Alert)



Dr. ந.ஸ்ரீசரவணபவானந்தன்,
குழந்தை வைத்திய நிபுணர்,
குழந்தைகள் பராமரிப்பு பிரிவு, யாழ்.போதனா வைத்தியசாலை.

புதிதாய்ப் பிறந்த குழந்தையானது, பொதுவாக இளஞ்சிவப்பு நிறமாகக் காணப்படும். ஆனால் சில காரணங்களால் அவர்களின் தோல் சாதாரண இளஞ்சிவப்பு நிறத்தைவிட வேறு நிறங்களாக மாற்றமடையலாம்.

1.அதிகளவு மெலனின் (Melanin) எனப்படும் நிறப்பொருள் தோலில் இயற்கையாகவே காணப்படின் (உ+ம் ஆபிரிக்க குழந்தைகள்) அவர்கள் கடுநிறம் (Dark complexion) உள்ளவர்களாக இருப்பர்.

2.தோலில் பிளிறூபின் (Bilirubin) எனப்படும் மஞ்சள் பதார்த்தம் படியுமானால் தோல் மஞ்சள் நிறமடையும். இந்த நிலையைப் பற்றி கீழ்வரும் பந்திகளில் விளக்கப்பட்டுள்ளது.

3.குருதியில் ஈமோகுளோபின் (Haemoglobin) எனப்படும். சிவப்பு நிறத்துக்கான காரணி குறைவடைந்தால், தோல் வெளிறிக் காணப்படும். இதை நாம் குருதிச் சோகை (Anaemia) எனக் கூறுவோம்.

4.அதேபோல் குருதியில் ஈமோகுளோபினால் கொண்டு செல்லப்படும் ஒட்சிசனின் அளவு குறைவடைந்தால், தோல், வாய், உதடு என்பன நீல நிறமடைந்து (Cyanosis) காணப்படும்.

5.சிலவேளைகளில் குருதியிலுள்ள செங்குருதிக் கலங்களின் (Red Blood Cells) எண்ணிக்கை சாதாரண அளவைவிட அதிகரிப்பின், தோல் கடுஞ்சிவப்பு (Plethoric) நிறமடையலாம்.

மேற்கூறியவற்றில் கடைசி 4 நிலைகளும், பச்சிளம் பாலகர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்த கூடியவை. எனவே இந்த மாற்றங்களைப் பெற்றோர் அவதானிப்பின் உடனடியாக குழந்தையை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

இனி தலைப்பில் மஞ்சள் எச்சரிக்கையென ஏன் குறிப்பிடப்பட்டது என்பதைப் பார்ப்போம். எல்லோருக்கும் சிவப்பு நிறம் ஆபத்தைக் குறிக்கும் என தெரியும் (Red Alert) அதே போல், பிறந்த குழந்தைகளை எடுத்துக் கொண்டால் தோல் மஞ்சள் நிறமாவதும் ஆபத்தானதே (Yellow Alert). மஞ்சள் நிறத்துக்கான பிளிறூபின் (Bilirubin) எனப்படும் பதார்த்தம் குருதியில் அளவிற்கதிகமாகச் சேர்ந்தால், அது தோல், கண், மூளை மற்றும் உடல் உறுப்புகளில் படியும். முக்கியமாக மூளையில் பிளிறூபின் படியுமானால், கேனிக்ரறஸ்(Kernicterus) எனும் நிலை உருவாகி பிள்ளையின் மூளை பாதிப்படையலாம். அப்படியான சந்தர்ப்பத்தில் குழந்தை சாந்தமடையாது, உரத்த சத்தத்துடன் அழுது கொண்டேயிருக்கும். அதுமட்டுமல்லாது சில சமயங்களில் வலிப்பு ஏற்படுவதோடு, தலையையும், முதுகையும் பின்புறமாக வளைத்த நிலையில் (Opisthotonus) காணப்படலாம். தோல் மஞ்சள் நிறமடைதலை வேளைக்கே கண்டுபிடித்தால் நிச்சயமாக இந்த நிலை ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

பொதுவாக பிறந்த குழந்தைகளில் ஏற்டும் தோல் மஞ்சள் நிறமடைதல் (Neonatal Jaundice) நிலையை, அது ஏற்படும் காலத்தைப் பொறுத்து மூன்று வகையாக வகைப்படுத்தலாம்.

1.பிறந்து 24 மணி நேரத்துக்குள் தோல் மஞ்சள் நிறமடைதல்.

இந்த நிலை எப்போதும் ஆபத்தானது. குழந்தை பிறந்து 24 மணி நேரத்துக்கு மஞ்சள் நிறமாக காணப்படின் உடனடிச் சிகிச்சை தேவை.

2.பிறந்த 24 மணி நேரம் தொடக்கம் 14 நாள்கள் வரை

இந்தக் காலப்பகுதியில் சாதாரணமாக அனைத்து குழந்தைகளுமே சிறிதளவு மஞ்சள் நிறமடைவார்கள். இது சாதாரணமானது (Phynological Jaundice). பிறந்த குழந்தைகளில் அதிகளவில் காணப்படும் செங்குருதிக் கலங்களில் சில அழிவடைவதலே இதற்கு காரணம். இந்த நிலை அதிகளவில் ஏற்படினோ அல்லது வேறு பல காரணங்களாலோ தோல் மஞ்சள் நிறமடைதல் அதிகரிப்பின் அதற்குச் சிகிச்சை தேவைப்படும்.

3.பிறந்த பின் 14 நாள்களின் பின்னரும் தோல் மஞ்சள் நிறமடைந்து காணப்படல். இப்படியான சந்தர்ப்பத்திலும் அதற்கான காரணியை கண்டறிந்து தகுந்த சிகிச்சையளிக்க வேண்டும்.

**தோல் மஞ்சள் நிறமடைவதற்கான காரணங்கள்**

அடிப்படையில் இரு காரணங்களால் பிளிறூபின் எனப்படும் பதார்த்தம் குருதியில் அதிகரிக்கலாம்.

1. அதிகளவில் பிளிறூபின் உருவாக்கப்படல். குருதியிலுள்ள செங்குருதிக் கலங்கள் அதிகளவில் உடைந்து, அதிலுள்ள ஈமோகுளோபின் (Haemaglobin) பிளிறூபினாக மாற்றமடையும். இதற்கான மிகப் பொதுவான காரணம் தாயின் இரத்த வகையும், குழந்தையின் இரத்த வகையும் ஒத்துவராத நிலை. உதாரணமாகRh வகை குருதி வகைப்படுத்தலில் தாய் சய (-) வர்க்கமாகவும், குழந்தை சக (+) வர்க்கமாகவும் காணப்படினும் அல்லதுA,B,O குருதி வகைப்படுத்தலில் தாய் O வர்க்கமாகவும், குழந்தை A அல்லது B வர்க்கமாகவும் காணப்பட்டால் இரத்த ஒற்றுமை ஏற்படாது. குழந்தையில் அதிகளவிற்கு செங்குருதிக் கலங்கள் அழிய வாய்ப்புண்டு.

2.பிளிறூபின் (Bilirubin) பதார்த்தம் உடலிலிருந்து வெளியேற முடியாத சந்தர்ப்பங்கள்.

உடலில் உருவாகும் பிளிறூபின் பதார்த்தம் ஈரலில் மாற்றமடைந்து பித்தமாக குடலினூடாக மலத்துடன் வெளியேறும். எனவே ஈரல் கலங்களிலோ அல்லது பித்தக் குழாய்களிலோ பிரச்சினைகளிருப்பின் பிளிறூபின் வெளியேற்றப்பட முடியாமல் உடலில் தேங்க வாய்ப்பு ஏற்படும். குழந்தை பிறந்தபின் 14 நாள்களின் பின்னரும் தோல் மஞ்சள் நிறமாகவும், மலம் மஞ்சள் நிறங்குறைந்து வெள்ளையாகவும் காணப்படின் இந்த நிலைக்கான பரிசோதனைகள் செய்யப்படும். தகுந்த சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். மேலே குறிப்பிட்ட அடிப்படைக் காரணங்களை விட உடலிலுள்ள தைரொக்சின் (Thyroaine) எனும் ஓமோன் (Hormone) குறைபாட்டினாலும், குழந்தைக்கு கிருமித் தொற்று ஏற்பட்டாலும் தோல் மஞ்சள் நிறமடைதல் ஏற்படும்.

**தோல் மஞ்சளாதற்கான சிகிச்சை முறைகள்**

1.பொதுவாக குருதியிலுள்ள பிளிறூபின் அளவைச் சோதித்து சிகிச்சை தேவைப்படின் நீலநிற ஒளியின் கீழ் குழந்தையை வளர்த்தி, உடலிலுள்ள பிளிறூபின் பதார்த்தத்தை குறைக்க முடியும். இதை ஒளிச் சிகிச்சை (Phototherapy) என்பார்கள்.


2.சில வேளைகளில் பிளிறூபினினளவு மிக அதிகமாயின், குழந்தையினுடைய குருதியை, புதிதாய் பெறப்பட்ட வேறு ஒருவரின் குருதியினால் மாற்ற வேண்டிய தேவை ஏற்படலாம். (Exchange Transfusion) இந்தச் சிகிச்சை முறையை மிக அவதானத்துடன் அதற்கான வசதியுள்ள வைத்தியசாலைகளிலேயே அளிக்க முடியும்.

எனவே தோல் மஞ்சள் நிறமடைதல் என்பதும் ஆபத்தின் அறிகுறியே. இந்த நிலை காணப்படின் உடனடியாக வைத்தியசாலைக்கு குழந்தையைக் கொண்டு சென்று அதற்கான சோதனைகளையும் சிகிச்சையும் பெற்றுக்கொள்ள வேண்டும். பெரும்பாலான, தோல் மஞ்சள் நிறமாவதற்கான காரணிகளிற்கு சிகிச்சை உண்டு. உரிய வேளையில் தாமதமின்றி சிகிச்சையளிப்பின் குழந்தைக்கு மூளையைப் பாதிக்கக் கூடிய ஆபத்திலிருந்து பாதுகாக்க முடியும். எனவே தான் இந்த நிலையை மஞ்சள் எச்சரிக்கை என அழைக்கலாம்.

# ஜம்பு நோய்களுக்கு எதிரான ஓர் அம்பு

பழங்கள் உண்பது ஆரோக்கியத்துக்கு நல்லது என்பது யாவரும் அறிந்ததே. இந்தப் பழங்களின் மகிமையை அறிந்ததாலேயே முருகக் கடவுள் கூட பழம் சம்பந்தமான ஒரு பிரச்சினை காரணமாக கோபம் கொண்டு பழனி மலைவரை போனதாக சொல்லப்படுகிறது.

பழங்கள் ஒவ்வொன்றுக்கும் பற்பல சிறப்பியல்புகள் இருக்கின்றன. ஆனால் மருத்துவச் சிறப்பியல்புகள் அனைத்தையும் ஒருங்கே தன்னகத்தே கொண்ட ஒரு மருத்துவப் பழமாக ஜம்புப் பழமே விளங்குகின்றது.



சுவை மிக்க இந்த பழம் கலோரி பெறுமானம் குறைந்தது. நிறை அதிகரிப்பை ஏற்படுத்த மாட்டாது. நீரிழிவு நோயாளரில் கூட குருதி வெல்லத்தின் அளவை அதிகரிக்க மாட்டாது. அதிகளவு நீர்த்தன்மையும் நார்த்தன்மையும் கொண்டது. தாகம் தணிக்கும். மலச்சிக்கலை தவிர்க்கும். ஊட்டச்சத்துகள் நிறைந்தவை. பசியை போக்கும். குடிப்பதற்கான இயற்கையான ஆரோக்கிய பானம் தயாரிப்பதற்கு இது ஒரு சிறந்த பழமாகும். சிறுவர்களும் சுகதேகிகளும், சகலவிதமான நோயாளர்களும் உண்பதற்கு ஏற்ற ஒரு கனியாக இது விளங்குகிறது. அத்துடன் இது குருதி கொலஸ்ரோலின் அளவை குறைப்பதற்கு உதவுவதாகவும் நம்பப்படுகிறது.

ஜம்பு மரமானது நீண்டகாலம் பயன்தரக் கூடிய ஒரு பசுமையான மரமாகும். இது இலகுவில் நோய்த்தாக்கத்துக்கு உட்பட மாட்டாது. இதனால் இதற்கு மருந்தடிக்க வேண்டிய தேவை இல்லை. எமது சூழலில் இலகுவிலே வளரக்கூடிய இந்த மரமானது தான் வளரும் சூழலுக்கு நல்ல குளிர்ச்சியைக் கொடுக்கும். வளர்ந்து 6 மாத காலத்திலேயே பயன்தரத் தொடங்கும். இந்த மரங்களைப் பராமரிப்பது மிகவும் இலகுவானது.

எங்களையும் எமது சந்ததியினரையும் எமது சுற்றாடலையும் பாதுகாக்க இன்றே எமது வீடுகளில் 2 ஜம்பு மரங்களை நடுவோம். உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஜம்பு மரங்களை பரிசாக வழங்குவோம். எமது நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் தோறும் ஜம்பு மரங்களை நட்டு வளர்ப்போம். எதிர்காலத்தில் ஜம்புப் பழங்களை பிற பிரதேசங்களுக்கும் ஏற்றுமதி செய்ய ஆரம்பிப்போம்.

சி.சிவன்சுதன்,
பொது வைத்திய நிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடக நூல்



இலட்சியத்தை அடைதல்
ஐந்து நவீன நாடகங்கள்
ஏழு கட்டுரைகள்
ஒரு சிறு கதை
எல்லாவகை
இலக்கியங்களும் படைத்த
கலாபூஷணம்
அராலியூர்
ந.சுந்தரம்பிள்ளையின்
28 ஆவது நூல், 150 பக்கங்கள்
ரூபா 300/=

## காணி விற்பனைக்கு

யாழ். பிரதான வைத்தியசாலை, பஸ்தரிப்பிடம், பிரபல்ய பாடசாலைகளுக்கு அருகில் கொட்டடி வைரவர் ஒழுங்கையில் 2.50 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. வீடு மற்றும் கிணறும் உண்டு. (38938)(3.6.11)

தொடர்பு: 077 288 7972

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1986 திருவாதிரை, சுவிஸ் நாட்டில் சட்டரீதியாக தொழில் புரியும் P.R இல்லாத மணமகனுக்கு சுவிஸில் P.R உள்ள மணமகள் தேவை.

தொடர்பு:
077 465 4890,078 462 5621

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

பலாலி வீதி உரும்பிராய் வடக்கு பிரதேசசபைக்கு அருகில் கிழக்குப்பக்கமாக செல்லும் பாதையில் 3ஆவது காணியில் 5 அறைகளுடன் நல்ல நிலையில் $5\frac{1}{2}$ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மேலும் இக்காணிக்குள் இன்னும் ஒரு வீடு அமைக்க இடமுண்டு.

தொடர்பு: 021 300 2256

## புனித பத்திரிசியார் கல்லூரி - யாழ்ப்பாணம்
## புதிய அனுமதி - 2014

2014 ஆம் ஆண்டுக்கான தரம் - 01, தரம் - 06 வகுப்புகளுக்கான புதிய அனுமதி விண்ணப்பப் படிவங்களைக் கல்லூரி நாள்களில் காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 2.00 மணிவரை பிரதான அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவம் (பரீட்சை கட்டணம் உட்பட) - ரூபா 600/= ஆகும்.

* தரம் 1 இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2008 இற்கும் 31.01.2009 இற்கும் இடையில் பிறந்திருக்க வேண்டும்.
* தரம் - 6 இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2003 இல் அல்லது இதற்கு பின் பிறந்திருக்க வேண்டும்.
* புதிய அனுமதித் தேர்வு 05.10.2013 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை நேரில் வந்து அலுவலகத்தில் ஒப்படைக்கவும். அவை ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் 25.09.2013. தபால் மூலமாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

* 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் சித்திபெற்று கல்லூரியில் சேரும் மாணவர்களுக்கு விசேட ஊக்குவிப்பு உதவித் திட்டம் உண்டு.

(சி/10175)(6.2.7) - அதிபர்.

## - தபால் மூலம் - ஆறு மாத கால டிப்ளோமா
*தமிழ் மொழி மூலம்*

24

பாடநெறிகள்:

- காரியாலய நிர்வாக டிப்ளோமா - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா - மொன்டிசூரி டிப்ளோமா - உளவியல் டிப்ளோமா
- சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. - தாதியர் நிர்வாக டிப்ளோமா - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
- கல்வி முகாமைத்துவ டிப்ளோமா - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.

(C/10076)

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம். Mobile: 0777 140 844, 071 803 48 48

**ALL INDIA**
Institute of Management Studies
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.alcomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848


MINISTRY OF CONSTRUCTION, ENGINEERING SERVICES, HOUSING & COMMON AMENITIES

## DEPARTMENT OF BUILDINGS

### INVITATION FOR BIDS

**Establishment of Research Facilitation Centre Building of Palmyrah Research Institute for Palmyrah Development Board at Kaithady - Stage 2**

1. **The Chairman, Regional Procurement Committee,** on behalf of the **Department of Buildings** now invites sealed bids from eligible and qualified bidders for **"Establishment of Research Facilitation Centre Building of Palmyrah Research Institute for Palmyrah Development Board at Kaithady - Stage 2"** as described below and estimated to cost **Rs.3.2 million.**

   The construction period is 84 Days.

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for Grade C8 or above with the Institute for Construction Training and Development (ICTAD), valid until the date of closing of the bids. Further the registration should be valid at the date of award.

4. Interested bidders may obtain further information from the **Chief Engineer's Office (North), Department of Buildings, Beach Road, Jaffna,** and inspect the Bidding Documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.**
   Contact numbers are: Phone: 021-2222781, Facsimile: 021-2222781

5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chief Engineer's Office (North), Department of Buildings, Beach Road, Jaffna,** from **08-07-2013** until **19-07-2013** from **9:00hrs to 15:00 hrs** upon payment of a non refundable fee of Rupees One Thousand **(Rs1,000/-).**

6. Bids shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Chief Engineer's Office (North), Department of Buildings, Beach Road, Jaffna** to reach on or before **10.30 hrs on 23-07-2013.** Bids will be opened soon after closing at Chief Engineer's Office (North), Department of Buildings, Beach Road, Jaffna in presence of the bidders' representatives who choose to attend.

7. Bids shall be valid for a period of 63 Days from the last date fixed for receiving of Bids or any extended period.

8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the form included in Section 09 of the bidding document
   - in favour of **Director General of Buildings**
   - for an amount of **Rs.64,000.00**
   - valid up to 25-10-2013
   - issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data

A. Nawas Atham
Actg. Director (ED)
Department of Buildings
2nd Floor,"Sethsiripaya",
Battaramulla.

(சி/10234)(3.5.6)


## வீடு வாடகைக்கு உண்டு

சுழிபுரம் காளுவன் சந்தியில் (மூளாய் வீதி) வீடு உடன் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள்/Tutories விரும்பத்தக்கது. வாடகை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: (38922)(3-6)
077 867 8392, 011 271 3521


## வீடு விற்பனைக்கு

பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக $1\frac{1}{2}$ பரப்புக் காணியுடன் அதி நவீன வசதியுடன் புதிதாக கட்டப்பட்ட 6 அறைகள், 2 Hall, Attach bath room, Kitchen உடன் வீடு முழுவதுமாக Tiles பதிக்கப்பட்ட 04 வாகன தரிப்பிட வசதி யுடன் அமைந்த மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு.
(கச்சேரி, பிரதான வைத்தியசாலை ஆகியன அருகில் அமையப் பெற்ற வசதியான வீடு)

தொடர்பு: 077 694 1112
(38963)(3.6.11)

## அமரர் அதிபர் மணியம் கணபதிப்பிள்ளை
அவர்களின் ஆம் ஆண்டு ஞாபகார்த்தமாக அவர்களிடம் கல்விபயின்ற மாணவர்களால் நடத்தப்படும்

## மாபெரும் துடுப்பாட்டப் பெருவிழா
"பருத்தி நகரின் பெரும் சமர் 2013"




## மின்னொளியில்

வடமராட்சி புகழ் துடுப்பாட்ட ஜாம்பவான்கள்
பருத்திநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் மற்றும்
தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம்
நேருக்கு நேர் சங்காரமிடும் வடமராட்சி ஜாம்பவான்களின் மகாயுத்தம்

"பருத்தி நகரின் பெரும் சமர் 2013"

12-07-2013 வெள்ளிக்கிழமை மாலை 6.31 மணி முதல் தும்பளை கணக்கிலாவத்தை விளையாட்டரங்கில் அமரரின் பழைய மாணவனும், கௌரவ வவுனியா மாவட்ட நீதிபதியுமாகிய உயர்திரு விநாயகமூர்த்தி ராமக்கமலன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கும் பிரமாண்டத் திருவிழா.
இந்நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ வணிக பீட முன்னாள் பீடாதிபதி உயர்திரு மாணிக்கம் நடராஜசுந்தரம் அவர்கள் அமரர் மணியம் கணபதிப்பிள்ளை ஞாபகார்த்த வாழ்நாள் சாதனையாளர் விருது "யாழ். மாவட்டம் கண்ட துடுப்பாட்ட ஜாம்பவான்" வழங்கி அதியுயர் சிறப்புக் கௌரவம் பெறுகின்றார் என்பதைப் பெருமையுடன் அறியத் தருகின்றோம்.
அனைத்துத் துடுப்பாட்ட ரசிகர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணை :- உதயன் (C/10243)(2.6.3) "விழா அழைப்புக்குழு"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் ACCA தகைமை பெற மாணவர்களுக்கு K-AIMS உதவுகிறது




ACCA கற்கை நெறிக்கான ரியூஷன் வழங்குநராக 2009 ஆம் ஆண்டில் கூட்டிணைக் கப்பட்டு,பரிசுகளை வென்றெடுத்த பலரை உருவாக்கியதன் மூலம் ACCA மாணவர்களுக்கு உறுதியான அடித்தளமிட்டு வருவது குறித்து நன்மதிப்பை பெற்றுள்ள K-AIMS வட பிராந்தியத்தில் உள்ள மாணவர்களின் நலன் கருதி தற்போது யாழ்ப்பாணத்தில் கிளை ஒன்றை திறந்துள்ளது.

ACCA நிறுவகமே யாழ்ப்பாணத்தில் கிளையைக் கொண்டிராத நிலையில், gold அங்கீகாரத்தைப் பெற்ற ACCA ரியூஷன் வழங்குநரான K-AIMS அங்கு ACCA கற்கைநெறியை கற்கும் அனைவரும் கொழும்பில் கற்பவர்களுக்கு கிடைக்கும் அதே தரத்தைப் பெற்றுக் கொள்வார்கள் என்றும் பலமான தொழில்வள வாய்ப்புக்களுடன் தேவையான கல்வி மற்றும் தொழில்சார் வாய்ப்புக்களும் அவர்களுக்கு வழங்கப்படும் என்றும் உறுதி கூறுகிறது.

யாழ்ப்பாணக் கிளையில் நவீன வசதிகளுடன் விசாலமான குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள், தனித்தனி யான கற்கைப் பகுதிகள், நூலகம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. வார இறுதி நாள்களில் வசதியான நேரங் களில் சிறு வகுப்புக்களை நடத்துவதிலும் K-AIMS அக்கறை காண்பித்து வருகிறது. எங்கள் மாணவர்களுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்துவதுடன் கற்பித்தலிலும் கற்றலிலும் மாற்றமடையும் தேவைகளுக்கும், எதிர்பார்ப்புக்களுக்கும் ஏற்ப புதுமைகளைப் புகுத்தி வருகிறோம். மாறிவரும் உலக சந்தைக்கு ஏற்ற வகையில் புதிய வழிகளை உருவாக்குவதற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறோம். இந்தப் பிராந்திய மாணவர்கள் நிதித் துறையில் அவர்களது தொழில்வள அபிலாஷைகளை அடைவதற்கு உதவி வருகிறோம்.

நாட்டின் சகல பிராந்தியங்களிலும் உள்ள மாணவர்களுக்கு நன்மை பயப்பதற்காகவும், தொழில் துறையினதும் தொழில் தருநர்களினதும் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ள ACCA வில் கல்வி கற்று தகைமை பெற்றுக் கொள்ள வாய்ப்பு அளிப்பதற்காகவும் தனது ஆற்றல் எல்லையை விஸ்தரிப்பதற்கான பல திட்டங்களைக் கொண்டுள்ள ACCA வின் நோக்கங்களை அடிப்படையாக வைத்தே எமது முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் கணக்குத்துறை, மூலதன சந்தைகள், முதலீட்டு வங்கியியல் அல்லது நீதி ஆலோசக துறை ஆகிய எதிலாயினும் அவர்களது திறமையைக் காண்பிப்பதற்கு பல வாய்ப்புக்களைக் கொடுப்பதாக இந்த முயற்சிகள் அமையும்.

இல.3 ½, சிராம்பியடி லேன் (ஸ்ரான்லி வீதி வழியாக)யாழ்ப்பாணம்.




ஜோன் கீல்ஸ் நிறுவனமும் 'கேற்வே' நெல்லியடி கிளையும் இணைந்து நடத்திய இளையோருக்கான பிரத்தியேக ஆங்கிலப் பயிற்சிநெறி வகுப்பில் கற்று சித்தியடைந்த மாணவர்கள் 'கேற்வே' நெல்லியடி கிளை முகாமையாளர் சு.நிமல்சன் மற்றும் ஆங்கில விரிவுரையாளர்களுடன் காணப்படுகின்றனர். (த-34)




பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 63 மாணவர்களைப் பாராட்டி பரிசில்களை வழங்கியது. அந்த நிகழ்வில் வங்கிக் கிளை முகாமையாளர் எஸ்.பகீரதன் மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் பிராந்திய முகாமையாளர் பி.அருளானந்தம் நிற்பதையும் காணலாம். (த-8)

# Windows 8 தொழில்நுட்பத்தில் இயங்கும் 'Ascend W1'

நாடளாவிய ரீதியில் ஹுவாவே தயாரிப்புகளை விநியோகிக்கும் சிங்கர் ஸ்ரீலங்கா பிஎல்சி மூலம், ஹுவாவே Ascend W1 எனும் ஸ்மார்ட் போன் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இத்துடன், Ascend G510 மற்றும் Y300 எனும் ஸ்மார்ட் போன்களும் இலங்கை சந்தை களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

பல்வேறு வியப்பூட்டும் உள்ளம்சங்களை கொண்டமைந்த இந்த புதிய Ascend G510 ஸ்மார்ட்போன், 4 அங்குல திரை, 1எஹ் டுவெல் கோர் புறொசெசர், பிளாஷ் உடன் 5 மெகா பிக்சல் AF டுவெல் கமரா, 4GB கொள்ளளவு இடவசதி (32GB வரை விஸ்தரித்துக் கொள்ள முடியும்) போன்றவற்றை கொண்டுள்ளதுடன், இந்த ரக புதிய கையடக்க தொலைபேசி சக்தி வாய்ந்த பற்றரியை கொண்டுள்ளதுடன், 470 மணித்தியாலங்கள் வரை தங்கியிருக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இந்த வகை அனைத்து ஸ்மார்ட்போன்கள் ரகங்களிலும் மிக நீண்ட நேரம் கொண்டமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த புதிய ஸ்மார்ட்போன் வகைகள் அறிமுகம் குறித்து சிங்கர் ஸ்ரீலங்கா பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி அசோக பீரிஸ் கருத்து தெரிவிக்கையில், 'வின்டோஸ் 8 தொழில்நுட்பத்துடன் அறிமுகமாகியுள்ள இந்த புதிய ஸ்மார்ட்போன் வகையானது, பாவனையாளர்கள் பயன்படுத்த இலகுவான முறையில் அமைந்துள்ளது. அத்துடன், பன்முக நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. கவர்ச்சிகரமான விலையில் அழகிய தோற்றத்துடனும், நவீன தொழில்நுட்பத்தில் அமைந்த கையடக்க தொலைபேசிகளை எதிர்பார்க்கும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த தீர்வாக இந்த புதிய Ascend W1 கையடக்க தொலைபேசி அமைந்திருக்கும்' என்றார்.

இந்த புதிய Ascend W1 குறித்து ஹுவாவே டெக்னொலஜிஸ் லங்கா பிரைவேற் லிமிடெட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி டானியல் சன் கருத்து தெரிவிக்கையில், 'புதிய Ascend W1 கையடக்க தொலைபேசியானது நவீன மைக்குரொசொஃப்ட் வின்டோஸ் 8 கட்டமைப்பில் வெளியாகியுள்ளது. வாடிக்கையாளர்களின் நாளாந்த செயற்பாடுகளை உற்பத்தி திறன் வாய்ந்த வகையிலும், சுலபமான முறையில் முன்னெடுப்ப தற்கு உதவியான வகையிலும் இந்த கையடக்க தொலைபேசி அமைந்துள் ளது. கணினியில் உள்ள வின்டோஸ் ஆப்ளிகேஷன்களை இந்த கையடக்க தொலைபேசியிலும் அனுபவிக்கக் கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கணினிகளுக்கு மாற்றீடாக அதே வசதிகளை தமது கரங்களில் அனுபவிக்கும் வகையில் இந்த Ascend W1 அமைந்துள்ளது.




யாழ்.கலாலயா பயிற்சியகத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி நடைபெற்றது. 4 மாத கால கேக் ஐசிங், உணவு தயாரித்தல், முகப்பூச்சு அழகுக்கலை, உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம், தையல் பயிற்சிகளை நிறைவு செய்த மாணவிகள் தமது ஆசிரியைகளுடன் காணப்படுகின்றனர். (த)


# மக்கள் வங்கிகளின் விசேட பரிசில்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

மக்கள் வங்கியின் 52 ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஜூலை மாதம் புதிதாக கணக்குகளை ஆரம்பிப்பவர்களுக்கு விசேட பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



5 ஆயிரம் ரூபாவுக்கு குடை, 10 ஆயிரம் ரூபாவுக்கு சுவர்க்கடிகாரம், 25 ஆயிரம் ரூபாவுக்கு பிளெண்டர், 50 ஆயிரம் ரூபா வுக்கு காஸ் குக்கர் ஆகியவை பரிசில்களாக வழங்கப்படவுள் ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பெற்றோரை இழந்த சிறுவர்களை கௌரவமான பிரசைகளாக்க....

வடக்கில் நடைபெற்ற போர் ஏற்படுத்திய பலவகைப்பட்ட பாதிப்புகள், தாக்கங்கள், இயலாமைகள் எண்ணிலடங்கா. பல்துறை சார்ந்த அந்த பாதிப்புகளை முழுமையாகக் கண்டறிவதிலோ, கணக்கெடுப்பதிலோ, ஆவணப்படுத்தலிலோ உரிய கவனம் எடுக்கப்பட்டதாக இல்லை.

போர் முடிவுற்று நான்கு ஆண்டுகள் கடந்தோடி விட்ட போதிலும், அதனால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிப்புற்றவர்கள் தமக்கான தேவைகளை, உதவிகளைப் பெற முடியாமல் அல்லாடும் நிலை தோன்றியுள்ளது.

வன்செயல்களினால், போரினால் தாய் மற்றும் தந்தையை இழந்த அல்லது பெற்றோர்கள் இருவரையும் பறிகொடுத்த சிறுவர்கள் மற்றும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவிகளை பெறமுடியாத பாதிப்பு அவற்றில் ஒன்றாகும்.

காணாமற் போனோர் மற்றும் இறந்தவர்கள் தொடர்பான விவரங்கள் தெளிவான முறையில் தெரியாது இருக்கின்றன. அதனால் மிகப் பலரின் இறப்புகள் பதிவு செய்யப்படவில்லை. உண்மையான, சரியான தகவல் எதுவும் தெரியாத நிலையில் ஒருவர் இறந்துவிட்டார் என்று பதிவு செய்யின், அதனால் சம்பந்தப்பட்டவரின் உயிருக்கு ஊறு ஏற்படும் என்ற அச்சத்தில் -ஐதீகத்தில்-நம்பிக்கை கொண்ட மிகப் பலரும் காலம் தப்பிய இறப்பு பதிவில் நாட்டம் கொள்ளவில்லை.

இதனால், கணிசமான எண்ணிக்கையான மாணவர்கள், அரச சமூக சேவைப் பகுதியினர், மற்றும் சிறுவர் மேம்பாட்டுப் பிரிவினர், பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு அரச மற்றும் தொண்டு நிறுவனங்களால் வழங்கப்படும் உதவிகளைப் பெற முடியாத நிலையே மேலெழுந்து நிற்கிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் 2419 பிள்ளைகள் தந்தையை அல்லது தாயை அல்லது இருவரையும் போரினால் இழந்த நிலையில் பாதிப்புற்றுள்ளனர். போரினால் அநாதரவற்றவர்களாக மாற்றப்பட்டுள்ளனர். அதேபோன்று வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் தந்தை, தாயை இழந்த சிறுவர்களின் எண்ணிக்கையும் அதிகமானதாகும்.

தந்தை தாயரை இழந்து அநாதை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள சிறுவர் சிறுமிகள், சில சமூக சேவை நிலையங்கள் மற்றும் அநாதைகள் பராமரிப்பு நிலையங்களில் சேர்க்கப்பட்டு கவனிக்கப்படுகிறார்கள், பராமரிக்கப்பட்டு வருகிறார்கள் என்பது வாத்ஸவமே. எனினும் அவற்றில் பலவற்றுக்கு, நிதி மற்றும் அத்தியாவசிய வளங்களின் தேவைகளை முற்று முழுதாக நிறைவேற்ற முடியாத நிலை உண்டு.

அதனால், தந்தை தாயை இழந்த சிறுவர்கள் தமது கல்வியைத் தொடர ஊக்குவிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. அதனைக் கருத்தில் கொண்டு–

பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு பெற்றோரின் இறப்புச் சான்றிதழ் தேவை என்ற விதிக்குப் பதிலாக விசேட ஏற்பாடுகளின் கீழ், மாற்று முறைமைகளின் கீழ் உதவிகளை வழங்குவதற்கு சமூக சேவை அமைச்சு வசதி செய்ய வேண்டும்.

இதேவேளை, கல்விக்கான வாய்ப்புகள், குறித்த காலத்திலேயே, அந்தந்த வயதிலேயே கிடைக்க வசதி செய்யப்படுவது அவசியம். பருவம் தப்பிய கல்வி சிறுவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு பெரும் பின்னடைவை உற்பவிக்கும்.

போரினால் பாதிப்புற்ற சிறுவர்களுக்கு அத்தகைய பின்னடைவை உண்டாக்குவதற்கு அரசாங்கம்– அதன் அங்கங்கள்–, மறைமுகமாகச் செயற்படுகின்றன என்ற நிலை தோற்றுவிக்கப்படக் கூடாது. இன்னொரு வகையில் சொல்வதானால் அரசு தனது மேற்சொன்ன செயல்முறை நிபந்தனைகளைத் தவிர்க்க வேண்டும்; இல்லையேல் தணிக்க வேண்டும்.

போரினால் மிகப் பெரிய அளவில் பாதிப்புற்று, பல வகைகளிலும் தாழ்ந்து போயுள்ள வடக்கின் எதிர்காலச் சந்ததியினரின் கல்வி வளர்ச்சிக்கு குந்தகம் விளைவிக்கும் உள்நோக்கம் கொண்ட திட்டங்களில் ஒன்றாக, மேலே குறிப்பிட்ட பெற்றோரின் இறப்புச் சான்றுப் பத்திரம் தேவை என்ற நிபந்தனை விதிக்கப்படுவது எந்த வகையிலும் பொருத்தமல்ல.

வடக்கில், பெற்றோரை இழந்து அல்லது பெற்றோர்களால் உரிய முறையில் பராமரிக்க இயலாது கைவிடப்பட்ட சிறுவர் சிறுமியர்களின் எண்ணிக்கை அண்ணளவாக இரண்டாயிரத்துக்கும் அதிகமாகும்.

அதேவேளை, பெற்றோரை இழந்து தவிக்கும் சிறுவர்களுக்கு, மாணவர்களுக்கு மாற்றீட்டு வழிமுறைகள், உதவிகள் கிடைப்பதற்கு வகை செய்யப்பட வேண்டும். அவற்றை நாடி உறவினர்களுக்கு விழிப்புணர்வை ஊட்டுவது அத்தியாவசியம்.

மேலும், சிறுவர்களை சிறுவர் இல்லங்களில் அல்லது விடுதிகளில் தங்க வைப்பது பொருத்தமற்றது என்றும், அவர்கள் பெற்றோருடன், நெருங்கிய உறவினர்களுடன் வாழ்வதே மிகப் பொருத்தம் என்றும் கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

பெற்றோரை இழந்த சிறுவர்களைப் பராமரிக்கும் நெருங்கிய உறவினர்களுக்கு உதவுவதன் மூலம், வசதிகளை வழங்குவதன் ஊடாக வளரும் எதிர்காலச் சந்ததியினரை கௌரவமான பிரசைகளாக்குவது இன்றியமையாத பணியாகும்.

# இந்தியாவைச் சீண்டிவிடும் போக்கு இலங்கைக்கு நட்டத்தையே ஏற்படுத்தும்

மன்னார் சிந்தா

13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து இந்தியா மற்றும் சர்வதேசநாடுகளுடன் நாம் ஏற்படுத்திக்கொண்டுள்ள இணக்கப்பாடுகளை அப்படியே நடைமுறைப்படுத்தமுடியாது என்று அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

அதுமாத்திரமல்ல, 13ஆவது திருத்தத்தை இலங்கைமீது திணித்த இந்தியாவே அவ்வொப்பந்தத்தை நிறைவேற்றுவதாக அவ்வொப்பந்தம் மூலம் ஏற்றுக்கொண்டவற்றை நிறைவேற்றாது தவறியிருந்தது. எனவே, அதிலுள்ள இலங்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றவேண்டிய தேவை இலங்கைக்கு இல்லை என்றும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் விமல் வீரவன்ஸ, இக்கூற்றுக்கு ஆதாரமாக இந்தியா புலிகளின் ஆயுதங்களை களையத் தவறியதன் மூலம் இவ்வொப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனையை மீறியது என்றும், எனவே, இலங்கை அந்த ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டதல்ல என்ற கருத்தில் அறிக்கை வெளியிட்டிருந்தார்.

மொத்தத்தில் தன்னிஷ்டத்திற்குத் தான்தோன்றித்தனமாக நடக்க முனையும் இலங்கையரசுதான் தனது அடாவடித்தனமான தமிழர் எதிர்ப்புச் செயற்பாடுகளுக்கு நியாயம் கற்பிக்க இந்தியாவைக் குற்றம்சாட்ட முயல்கிறது.

13+என்றால் 13இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் குறைப்பதும், இல்லாமலாக்குவதும் என்று பிளஸ் என்பதற்குப் புதிய கணித வாய்ப்பாட்டைப் புகுத்த முனைகிறார்கள். இலங்கை அரசுக்கும், அதன் அமைச்சர்களுக்கும் மட்டுமே இது ஓர் தனித்துவமான கணிதத் தத்துவம் என்பதை உலகம் நன்றாகவே புரிந்து வைத்துள்ளது என்பதை இவர்கள் ஏனோ உணரவில்லை. இலங்கை அரசும் அதன் சில அமைச்சர்களும் தாங்கள்தான் அதிமேதாவிகள் என்றும், அண்டைநாடான இந்தியாவும் அமெரிக்கா போன்ற இதர வல்லரசு நாடுகளும் அடிமுட்டாள்கள் என்றும் கருதுகிறார்கள் என்பது அவர்களால் முன்வைக்கப்படும் கருத்துகள் மூலம் உறுதியாகிறது.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும், அவரது சகபாடிகளும் ஒன்றைப் புரிந்துகொள்ளவேண்டும். இரு நாடுகளிடையே அவை விரும்பியோ, விரும்பாமலோ கைச்சாத்திடப்படும் ஒப்பந்தங்கள், சர்வதேச ஒப்பந்த நெறிமுறை நியதிகளுக்குட்பட்டவை. அப்படியான ஒப்பந்தங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் போன்றவற்றைஒப்பந்தத்தில்கையொப்பமிட்ட தரப்புக்களின் ஒருமித்த சம்மதமின்றி கையொப்பமிட்ட ஒரு தரப்பு மட்டும் விலக்கிக்கொள்ளமுடியாது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அப்படித் தன்னிச்சையாக விலகுவது சர்வதேச உடன்படிக்கை நெறிமுறைகளை அல்லது சர்வதேச கட்டமைப்பைச் சிதைத்தல் என்ற [illegible] என்பதை [illegible] புரிந்துகொள்ளவேண்டும்.

இந்து சமுத்திரத்தின் கேந்திர நிலையத்தில் அமைந்துள்ள இலங்கையின் அமைவிடம், சர்வதேசத் தேவைகளுக்கு அவசியமானதென்பதால் சர்வதேசநாடுகள் இலங்கை பேரினவாத அணுகுமுறைகளைக் கடைப்பிடித்தாலும், ஓர் ஜனநாயக நாடு என்ற வகையில், இப்படியான அத்துமீறல்களைஅனுசரித்து செயற்படத் தூண்டப்படுகின்றன. இந்த ஒரே காரணத்திற்காகவே சர்வதேசமும், இந்தியாவும், இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க நினைக்கின்றனவே தவிர, இலங்கையை சர்வதேசம் அனுசரித்துப் போவதற்கு வேறு காரணமில்லை.

இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கை மீது திணித்ததாகக் கூறப்படும் 13 ஆவது திருத்தம் தமிழர்களின் நலன்களை முன்னிறுத்திக் கொண்டுவரப்பட்ட ஒரு தீர்வுத் திட்டம் அல்ல என்பதை முதலில் சிங்களத் தீவிரவாதிகள் புரிந்துகொள்ளவேண்டும். சிங்கள இனத்தின் பூர்வீகம் ஆரியத்தின் வழிவந்த ஹிந்திமொழி மூலப் பரம்பரையாகும். அவ்வினம், திராவிடத்தை எப்போதும் கருவறுக்கும் நோக்குக் கொண்டதாகும். அதே ஆரிய வழிவந்த ஹிந்தி பரம்பரையைச் சேர்ந்த இந்தியப் பிரதமரும் அவ்வழியைப் பின்பற்றித் தனித் தமிழ் ஈழப் போராட்டத்தை நசுக்கி அழித்தொழிக்க முன்வைத்த முன்மொழிவே இலங்கைக்கான மாகாண சபை அரசு முறையாகும். இதனைச் சரியாக உணர்ந்துகொண்டதால்தான் தலைவர் பிரபாகரன் இதை ஏற்கவில்லை. ராஜீவ்காந்தி அவரைச் சிறைப்படுத்தி அச்சுறுத்தல் விடுத்து மடக்கி, இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை அவர்மேல் திணித்தார்.

ஒரு பிராந்திய வல்லரசுத் தலைமையின் அத்துமீறிய ஆக்கிரமிப்பு அடக்குமுறையைத் தவிர்க்கமுடியாத நிலையிலேயே தமிழ் மக்களின் பாதுகாப்புக்கும், எதிர்காலங்களில் இந்தியா பொறுப்பேற்றுள்ளது என்ற அறிக்கையை சுதுமலை மக்கள் திரள் கூட்டத்தில் வெளியிட்டு சுய விருப்பமின்றி அந்த ஒப்பந்தத்துக்குப் பிரபாகரன் ஒப்புதல் வழங்கினார். இவை அனைத்தும் வரலாறு காட்டும் சத்தியமான உண்மை. ஆனால், இந்தியாவும், ராஜீவ் காந்தியும், தமிழர் சார்பில் தாமாக வலிந்து ஏற்றுக்கொண்ட கடப்பாடுகளைப் புறந்தள்ளி, இலங்கை அரசுக்கான தனது கடப்பாடுகளை மட்டும் நிறைவேற்றத்தலைப்பட்டதன்பின்விளைவே குமரப்பா புலேந்திரன் போன்ற பன்னிரண்டு போராளிகளின் இறப்புக்கு அடிப்படையாக அமைந்து, இந்திய இராணுவம் புலிகளுடன் போரைப் பிரகடனப்படுத்திய நிகழ்வின் மூலகாரணியாக அமைந்தது.

இவ்வாறு ஜே.ஆர்.ஜயவர்த்தனா இந்தியாவையும், இந்தியப் பிரதமரையும் முட்டாளாக்க, அவருக்குப்பின் வந்த ஜனாதிபதி பிரேமதாஸ இந்தியாவை மேலும் அவமானப்படுத்தி மூக்குடைக்கும் முயற்சிகளாக புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கி இந்திய இராணுவத்துக்கெதிரான சண்டையில் புலிகளுக்கு கொம்புசீவி உற்சாகப்படுத்தினார். இறுதியில் இந்திய இராணுவத்தை அவமானப்படுத்தி வெளியேற்றியதன் மூலம் உலகின் நான்காவது பெரிய இராணுவமான இந்திய வல்லரசுப் படைக்குத் தீராத அவமானத்தை ஏற்படுத்தினார்.

இந்தியப்படை இலங்கைக்கு வந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியாதவாறு குழப்பமேற்படுத்தி, இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாதபடி இலங்கைதான் இந்தியப் படைகளை வெளியேற்றியது. ஆனால், இப்போது விமல் வீரவன்ஸவும், அவரது கூட்டாளிகளும் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை முதலில் முறித்தது இந்தியாதான் என்று கூறி இந்தியாவைக் குற்றக்கூண்டில் ஏற்றிவிட்டு, அந்தச்சாட்டில் 13ஆம் திருத்தச் சட்டத்தைப் பலவீனமாக்குவதற்கும், அதனைத் தூக்கி எறிவதற்கும், நியாயம் காட்ட முனைகின்றார்கள். இந்தியப்படை ஒப்பந்தப்படி புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையத் தவறியதன் மூலம் இந்தியாவே முதலில் ஒப்பந்தத்தை முறித்தது என்று நாக்கூசாமல் வரலாற்றைத் திரிக்கிறார்கள்.

இலங்கையால் இந்தியப் பேரரசு தனக்கு ஏற்படுத்தப்பட்ட இந்த அவமானங்களையும், இந்தியாவை முட்டாளாக்கி விட்ட நிகழ்வுகளையும், இந்தியா பின்னோக்கிச் சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்குமானால் – இலங்கை சந்திக்கப் போகும் துயரங்களை நினைத்துக் கூடப் பார்க்கமுடியாது. இவற்றையெல்லாம் உணராது இலங்கைத் தலைமையும், சிலஅமைச்சர்களும் தடம்புரண்டு நிற்கிறார்கள்.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் பற்றி இலங்கையரசும், சிலஅமைச்சர்களும் தமக்குள் தாமே செய்துகொண்டுள்ள வியாக்கியானங்களும், வரைவிலக்கணங்களும் இலங்கை, இந்தியாவை ஒருபொருட்டாக மதிக்கவில்லை என்பதையே காட்டுகிறது. இப்படிச் செயற்படும் துணிவு இலங்கைக்கு சீனாவின் அனுசரணை மூலம் கிடைத்திருப்பதாக இலங்கை இறுமாப்புடன் எண்ணி, தொடர்ந்தும் இந்தியாவை அவமதிக்குமானால் அதன் பின்விளைவு மோசமாகவே இருக்கப்போகிறது என்றும், இந்தியப் பேரரசு விஸ்வரூபம் எடுக்குமானால் சீனா இந்தப் பிராந்தியத்தை திரும்பிக்கூடப் பார்க்காது வாலைச் சுருட்டிக்கொண்டு முடங்கிவிடும் என்பதையும் இலங்கை புரிந்துகொள்ளாதிருப்பது அதன் துர்ப்பாக்கியமாகும்.

1987இல் இலங்கையின் இறைமையைச் சற்றும் பொருட்படுத்தாமல் இந்திய அரசு யாழ்ப்பாணத்தில் தன்னிச்சையாக உணவுப்பொட்டலங்களை விமான மூலம் போட்டு இலங்கை விவகாரத்தில் வலிந்து தலையிட்டது. அப்போது உலகம் எதையும் செய்யவில்லை – கண்டித்து ஒருவார்த்தையேனும் கூறவில்லை. மாறாக, குண்டுகளைப் போடுவதற்குப் பதிலாக உணவுப் பொதிகைகளைப் போட்டது எவ்வளவு மேல் என்றுபாராட்டவே செய்தன. இதனை ஒரு பாடமாக எடுத்து இலங்கை இந்தியாவுடனான தனது தொடர்புகளை வகுத்துக்கொள்ள வேண்டும். கெட்டுப்போகிறேன். பந்தயம் பிடி என்றால் யாரும் எதுவும் செய்யமுடியாது. நடப்பதைப் பார்த்துக்கொண்டு இருக்கவேண்டியதுதான். கேட்கச் செவியுள்ளவன் கேட்கக்கடவான் என்ற விவிலிய வாசகங்களை உருப்போட்டுக்கொண்டு நடப்பதைப் பார்ப்போம். இலங்கை எடுத்துள்ள இந்திய எதிர்ப்புணர்வுகளை இந்தியா எப்படி நோக்குகின்றது என்பதையும் பொறுத்திருந்து பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமத நம்பிக்கையை வளர்க்க மலேசிய முருக உபாசகர்- பாலயோக சுவாமிகள்

குகா

மலேசியா திருவாக்கு திருப்பீடம் பாலயோகசுவாமிகள், சுவிற்சர்லாந்து செங்காலன் சென்மார்க்கிரெட்டன் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்துக்கு கடந்த மே 14 ஆம் திகதி வருகை தந்திருந்தார். அன்று மாலை ஆலயத்தில் இடம் பெற்ற முருகனது பூசை வழிபாட்டில் கலந்த பின்னர், விழிக்குத் துணை என்ற கந்தன் பாடலுடன் கூட்டத்தை ஆரம்பித்தார். அடுத்த ஆண்டில் முருகபக்தி மாநாட்டை இங்கு நடத்த முருகனின் உத்தரவு கிடைத்துள்ளதாகவும் அதன் பிரகாரமே தான் இங்கு வந்ததாகவும் கூறினார்.

சுவாமி தனது உரையில்:

மாநாடு என்பது ஞானவேள்வி ஆகும். அதில் எல்லோரது அறிவுக் கண்களையும் திறக்க வைக்கும் விதத்தில் அது ஒரு கலை, கலாசார விழாவாக அமைய வேண்டும்.

முருகனே சிவன், சிவனே முருகன் என்ற அடிப்படைக் கோட்பாட்டுடன் எல்லோரையும் வரவழைத்து எமது சமய ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும். இவ் விழாவினால் சமயத்தின் பெருமை மேலோங்கும். எந்த ஆலயம் முன்னின்று நடத்துகின்றதோ அந்த ஆலயத்தின் பெருமை மேலோங்கும் என கூறிய சுவாமிகள் இந்த மாநாட்டில் கிடைக்கப் பெறும் நிதி தர்மத்துக்காகச் செலவிடப்பட வேண்டும். சுவிற்சர்லாந்தில் வாழ்கின்ற சைவசமய சிறார்களுக்கான முருகன் சம்பந்தமான பரீட்சையை நடத்துதல், ஊடகங்களின் பங்களிப்பை இந்த மாநாட்டில் கூட்டுதல் என்பவை குறித்த கவனம் செலுத்தப்படும் என்று கூறிய பாலயோகி சுவாமிகள் ஆலய வழிபாட்டு முறைகள் பற்றியும் விவரித்தார்.

முருக பக்தியை உலகம் முழுவதும் பரப்புவதே இந்த அமைப்பின் தலையாய கடமையாகும். "இறைவனுக்கு அபிஷேகமாகின்ற அபிஷேக திரவியங்களில் பால் வீணாவதை தவிர்த்தல் வேண்டும். பாலை அடியார்களுக்கு பிரசாதமாக அல்லது ஏழைகளுக்கு பிரயோசனமாகும் வகையில் வழங்குதல் சிறப்பாகும்.

பண்டைய காலங்களில் அன்னச் சத்திரம், மடம், தண்ணீர்பந்தல் என்பன இறைவன் பெயரால் அடியவர்களுக்கும், ஏழைகளுக்கும் உணவளித்து பசிபோக்கின.

ஆலய வழிபாட்டில் அடியவர்களால் செய்யப்படுகின்ற அர்ச்சனை தட்டிலே தேங்காய் இருத்தல் அவசியம். பூசையின் போது தேங்காய் உடைத்தல் மிகமிக முக்கியமானது. ஆனால் வெளிநாடுகளில் இதனைக் கடைப்பிடிப்பதில் சிரமங்கள் உள்ளன.

இன்றைய மக்களின் உடல்நிலை காரணமாக அவர்கள் தேங்காயைப் பயன்படுத்துவது குறைவு.

மாமிச உணவுகளில் தேங்காய் கலப்பது நல்லதல்ல என்றும் அவர்கள் கருதுகின்றார்கள்

மேலும் நீறு, உருத்திராட்சம் சைவ சமயத்தவர்கள் எல்லோரும் அணிய வேண்டுமென கூறியபோது சில அடியவர்கள் வெள்ளி, செவ்வாய் விரத தினங்கள் தவிர்ந்த நாள்களில் மாமிச உணவு உண்பதால் அணிய முடியாதுள்ளது என்று தெரிவித்தனர். அதற்கு சுவாமி, அடையாள சின்னமாக அணிவது வேறு, ஜெபம் செய்வதற்காக பூசையில் வைத்து 108 அல்லது 1008 நாமம் கூறுகின்ற உருத்திராட்சம் வேறு என்றார். அத்துடன் இயன்றளவு மாமிச உணவை தவிர்த்துக் கொள்ளல் உடலுக்கும், உள்ளத்துக்கும் நல்லது எனவும் குறிப்பிட்டார்.

சுவிஸ் நாட்டுப் பிரஜையாக இருந்தும் எமது சமயத்தின் அடிப்படை உண்மைகளை விளங்கி ஒரு முருக பக்தராக மாறி தனது பெயரையும் சுப்பிரமணியம் என மாற்றி ஆலயத்தில் தொண்டாற்றி வரும் பக்தரையும் பாலயோகி சுவாமிகள் பொன்னாடை போர்த்தி கௌரவித்ததோடு அவருக்கு ஆங்கில மொழியிலும் முருகனுடைய பக்தி விளக்கத்தையும் தெளிவுபடுத்தினார். ஆலய பரிபாலனசபைத் தலைவர் வே.கணேசகுமார், பொருளாளர் ச.அற்புதராஜா, செயலாளர் க.கருணாகரன், ஆலய பிரதமகுரு ஜோதிநாதக் குருக்கள், சைவ சித்தாந்த பண்டிதர் வசந்தக் குருக்கள், சிவத்தமிழ் காவலர் சிவநெறிச் செல்வர் ஆறுமுகம் செந்தில்நாதன் ஆகியோருக்கும் ஆசி வழங்கிக் கௌரவித்தார்.

நிறைவாக சுவாமி ஆலயத்தின் அழகை வர்ணித்துப் பாராட்டியதுடன் கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்துக்காக விசேடமாக அழகுமிகு தங்க முலாம் பூசப்பட்ட அங்கியினை ஆலயத்தின் அறங்காவலர்களான வே.கணேசகுமார், அற்புதராசா இவர்களுடன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ஜோதிநாதகுருக்கள் ஆகியோரிடம் ஒப்படைத்தார்.




சுவாமிகளுடனான செவ்வி வருமாறு:

கே:- தமிழகத்தில், மலேசியாவில் முருகபக்தி மாநாடுகளை நடத்தியுள்ளீர்கள். அதன்மூலம் சாதித்தவை என்ன?

ப:- ஞானவேள்வி போன்று நடத்தப்பட்ட இந்த மாநாடுகள் மூலம் எழுச்சி பெற்றுள்ளோம். பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் இந்த மாநாடுகளில் பங்கேற்று ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்து உரையாற்றினர். பலநாட்டவர்கள் குறிப்பாக மேலை நாட்டவர்கள் பங்கு கொண்டு இந்து சமய பக்தி பற்றி கருத்துரைத்தனர்.

முருகனின் வழிபாடுகள், பூசை முறைகள் குறித்து விரிவாக இந்த மாநாடுகளில் ஆராயப்பட்டன. தமிழ் என்றால் முருகன். முருகன் என்றால் தமிழ் என்ற சிந்தனை இந்த மாநாடுகளில் பிரதிபலித்தன.

கே:-தொடராக 2 வருடத்துக்கு ஒரு தடவை நடத்தப்படும் இத்தகைய மாநாட்டை இலங்கையிலும் நடத்தும் உத்தேசம் உள்ளதா?

ப:-உண்டு, கடந்த காலங்களில் நடத்தப்பட்ட மாநாடுகளில் இலங்கையில் இருந்தும் அறிஞர்கள் கலந்து கொண்டனர். பயன்தரு கருத்துக்களை முன்வைத்தனர். ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்து முருகனின் பெருமையை எடுத்துக்கூறினார்.

இலங்கை இந்து கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் மாநாட்டில் பங்கு பற்றி ஆக்கபூர்வமான கருத்துகளை முன்வைத்தார்.

இந்து கலாசாரத் திணைக்களத்துடன் இணைந்து இந்து களஞ்சியம் ஒன்றை வெளியிட நாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

இந்துக்களின் வரலாறு, இந்துமத முக்கிய தினங்கள், இந்துக்களின் செயற்பாடுகள், ஆகியவற்றை, உள்ளடக்கிய அந்தக் களஞ்சியத்தை 140 பேராசிரியர்கள் இணைந்து தயாரித்துள்ளனர். 12 தொகுதிகளைக் கொண்டு 4 ஆயிரம் பக்கங்களில் அந்தக் களஞ்சியம் தயாரிக்கப்பட்டுள்ளது. அக்களஞ்சியம் சிறிய அளவில் அச்சிடப்பட்டுள்ளது.

கே:-உலகில் இந்தியாவுக்கு அடுத்தபடியாக கூடுதல் இந்துக்கள் வாழும் இலங்கையில் இந்துக்கள் வேதனைகளையும் சோதனைகளையும் அனுபவிக்கிறார்கள். அவற்றுக்கு தீர்வுகாண ஏதாவது நடவடிக்கையை உங்கள் அமைப்பு செய்துள்ளதா?

ப:-வேதனைகளையும், சோதனைகளையும் அவர்கள் எதிர்கொண்டாலும் அதன் ஊடாக சாதனைகள் புரிகிறார்கள். முருக வழிபாடு மூலம் அவர்களின் துன்பங்கள் குறைவடைகின்றன. கதிர்காமக் கந்தன் உட்பட நாட்டில் உள்ள முருகக் கடவுள் அவர்களுக்கு துணையாக இருக்கிறார். இறை சிந்தனை அவர்களிடம் விஞ்சி நிற்கின்றது. முருகனை அவர்கள் நெஞ்சில் சுமந்து கொண்டிருக்கிறார்கள். முருகனின் இறையாசி எப்போதும் அவர்களுக்கு உண்டு.

அத்தோடு புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் உதவியுடன் அவர்கள் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது இறைபக்தி அவர்களுக்கு எப்போதும் துணையாக இருக்கும்.

கே:-அடுத்த முருக பக்தி மாநாட்டை சுவிஸ் சென். மார்க்கிரேத்தன் கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் நடத்துவதற்கு முடிவுசெய்தமை பற்றி...?

ப:-இந்த ஆலயச் சூழலில் பக்தி மணம் வீசுகிறது. முருகனின் வாகனமான வெள்ளை மயிலைத் தன்னகத்தே கொண்ட தலம். இந்த மண்ணில் புனிதர்களின் பார்வை வீழ்ந்துள்ளது. முனிவர்கள் முன்பு வாழ்ந்து இருக்கலாம்.

இந்த ஆலயத்தை பரிபாலன சபையினர் பக்திமயமாக வழிப்படுத்துகிறார்கள்.

பக்திமணம்வீசும், புனிதர்களின் பார்வை படும் இந்த ஆலயத்தில் மாநாட்டை நடத்துவது பொருத்தமானது.

"இறைவனுக்கு அபிஷேகமாகின்ற அபிஷேக திரவியங்களில் பால் வீணாவதை தவிர்த்தல் வேண்டும். பாலை அடியார்களுக்கு பிரசாதமாக அல்லது ஏழைகளுக்கு பிரயோசனமாகும் வகையில் வழங்குதல் சிறப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போரில் முற்றாக அழிவுண்டுபோன முல்லைத்தீவு, மூங்கிலாறு பகுதியில் மீண்டும் முளைத்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் விரும்பிய எந்தப் பொருளையும் ஒரே சமயத்தில் பெற்றுக் கொள்ளும் வசதி. (க-6)


கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் தாய்மார் கழகத்தினரால் நடத்தப்பட்ட கண்காட்சியின் போது... (க-6)



ஆனையிறவு, தட்டுவன்கொட்டிக் கிராமத்தில் இடம்பெறும் கண்ணிவெடிகளை அகற்றும் செயற்பாடுகளை அவுஸ்திரேலிய உயரதிகாரிகள் கொண்ட குழுவொன்று பார்வையிடுகின்றது. (க-6)


மூடப்பட்ட நிலையில் பற்றைகளால் சூழப்பட்டுக் காணப்படும் பனங்காமம்பற்று ப.நோ.கூ சங்கத்தின் சிவபுரம் கிளை. (க-6)


வவுனியா இளைஞர் கழக மாவட்ட சம்மேளனத்தின் 25 ஆவது விளையாட்டு விழா நிகழ்வு வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற போது.... (ஓ-402)


ஆனையிறவு, தட்டுவன்கொட்டிக் கிராமத்தில் குடிதண்ணீரை விநியோ கிக்கும் கரைச்சிப் பிரதேச சபைக்குரிய தண்ணீர் பவுசரில் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ள காத்திருக்கும் பெண்மணி. (க-6)


ாந்தை கிழக்கு, பனங்காமம் சிவாலயத்தின் புனரமைப்புப் பணிகள் துரித தியில் இடம்பெற்று வருகின்றன. (க-6)


2011 ஆம் ஆண்டு கற்கள் பரவப்பட்ட போதிலும் புனரமைப்பு வேலைகள் இடம்பெறாது அவல நிலையில் காணப்படும் மாந்தை கிழக்கு அம்பாள் புரத்திலுள்ள சகாய வீதி. (க-6)


அண்மையில் முல்லைத்தீவு-பரந்தன் ஏ-35 வீதியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றின் போது.... (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவின் யூபிலி பெருவிழாவின் திருப்பலியை நிறைவேற்ற வருகை தந்த யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகை ஆகியோரை பங்கு மக்கள் சகிதம் செயலாளர் சொலமன் சூ.சிறில், பொருளாளர் க.யோ.தனசிங்கம், யோசப்ராஜா ஆகியோர் ஆலயத்துக்கு அழைத்து வருகின்றனர். (எ)




யாழ்.சங்கானை மாவடி ஞான வைரவர் கும்பாபிஷேக மற்றும் சங்காபிஷேக நிகழ்வில் ஆலயத்தால் வெளியிடப்பட்ட கும்பாபிஷேக சிறப்பு முதல் மலரை மலர்க்குழுவின் அங்கத்தவர் இ.சச்சிதானந்தம், ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி இ.செல்வநாயகத்துக்கு வழங்குகிறார். (எ-29)



யாழ்.காங்கேசன்துறை சாரணர் மாவட்டத்தின் ஏழாவது சாரணர் ஆணையாளராக நியமிக்கப்பட்ட செ.சற்குணராசாவுக்கு மாவட்ட சாரணர்களினால் வரவேற்பு நிகழ்வு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் சாரணர் மாவட்ட முன்னாள் ஆணையாளர் ந.இரவீந்திரனிடமிருந்து பொறுப்புக்களைப் பெற்றுக் கொண்டார். (எ-9)



மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் இணையும் மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவில் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதி க.சண்முகசுந்தரம் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பாடசாலை அதிபர் ந.ஜெயக்குமார், ஆரம்பப் பிரிவுத் தலைவர் ஆகியோரும் காணப்படுகின்றனர். (ஒ-9)




வீதி அபிவிருத்தி அதிகார சபையால் புனரமைப்புச் செய்யப்பட்டு காப்பெற் இடப்பட்ட யாழ். பஸ்ரியன் முச்சந்தி வீதி உரிய முறையில் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. (ஒ-20)



யாழ்.காரைநகர் புகலி சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் அஸ்வமேத யாகத்தின் நிறைவு நாளில் நடைபெற்ற யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட 108 மாணவிகளின் நடன நிகழ்வு. (எ-250)



மடுமாதா உற்சவத்தையொட்டி நவாலி சென் பீற்றேஸ் தேவாலயத்தில் திருப்பலி பூசை இடம்பெற்று திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மாதா சொரூபத்தை பெண்கள் வடம் பிடித்து வீதி வழியாக இழுத்து வந்த வேளையில்... (ஒ-100)




இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவுப் பிரிவு கிளைத் தலைவர் எ.அருந்தவசீலன் தலைமையில் கடந்த மாத இறுதியில் யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வில்... (ஒ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?



**மேடம்:** புதுமுயற்சிகள் வெற்றியடையும். சொத்துச் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். ஆடம்பரச்செலவுகளைக் குறைப்பீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். கன்னிப் பெண்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள். பணவரவு உண்டு.



**இடபம்:** பண விஷயத்தில் கறாராக இருங்கள். மற்றவர்களைச் சார்ந்து இருக்க வேண்டாம். வியாபாரத்தில் பற்று வரவு சுமார்தான். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. மாலையிலிருந்து தடைகள் நீங்கும்.



**மிதுனம்:** குடும்பத்தினரைப் பற்றிய கவலைகள் வந்து போகும். யாரை யும் பகைத்துக் கொள்ளாதீர்கள். முக் கிய கோப்புகளைக் கையாளும் போது அலட்சியம் வேண்டாம். உறவினர்களுடன் மனத்தாங் கல் வரும்.உத்தியோகத்தில் பொறுப்புகள் கூடும்.



**கடகம்:** குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிள்ளைகளின் பிடிவாதத்தை ரசிப்பீர்கள். விருந்தினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. வெளியூர்ப் பயணங்கள் திருப்திகரமாக அமையும். மாணவ, மாணவிகளின் நினைவுத்திறன் பெறுகும்.



**சிங்கம்:** இன்றையதினம் மனக் குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். உடன்பிறந்தவர்களால் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. பெற்றோரின் உடல் நிலை சீராக இருக்கும்.



**கன்னி:** வெளியூர்ப் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தினருடன் மனம்விட்டுப்பேசுவீர்கள். பிள்ளைகளின் உணர்வுக்கு மதிப்பளிப்பீர்கள். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். வாகனப் பழுது சீராகும். வழக்கிகளிலிருந்த தேக்க நிலைமாறும்.

**நாளை**

ஆனி-24 திங்கட்கிழமை 08.07.2013
திதி: அமாவாசை பி.ப. 12.57 வரை
நட்சத்திரம்: திருவாதிரை மு.ப.08.59 வரை
சுபநேரம்: 11.58 - 01.28 வரை
இராகுகாலம்: 07.28 - 08.58 வரை



**துலாம்:** உறவினர், நண்பர்களால் அன்புத் தொல்லைகள் உண்டு. திட்டமிடாத செலவுகளும், பயணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக்கொள்வீர்கள்.



**விருச்சிகம்:** புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும். எதிலும் முன் யோசனையுடன் செயற்படுங்கள்.



**தனுசு:** பிரியமானவர்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். தந்தையின் உடல் நலம் சீராகும். கையில் காசு பணம் தேவையான அளவு புரளும். சொந்தம் - பந்தங்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள்.



**மகரம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். கையில் காசுபணம் புரளும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரியும். தாய்வழி உறவினர்களால் ஆதாயம் உண்டு.



**கும்பம்:** புது முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பத்தினரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்வீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். வயிற்று வலி, வாயுக்கோளாறு நீங்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள்.



**மீனம்:** காலைப்பொழுதிலிருந்தே மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரச காரியங்களில் வெற்றியுண்டு. நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை முறியடிப்பீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | | | | 2 | 8 |
| | 5 | 3 | 2 | | | | | |
| | 8 | 2 | 4 | 3 | 9 | | | |
| | 4 | 9 | 3 | 6 | 8 | | | |
| 3 | | | 1 | | 2 | | | 9 |
| | | | 9 | 4 | 7 | 6 | 5 | |
| | | | 8 | 2 | 5 | 1 | 3 | |
| | | | | | 3 | 4 | 9 | |
| 6 | 3 | | | | | | | 2 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 6 | 7 | 2 | 9 | 5 | 3 | 8 | 1 |
| 1 | 2 | 8 | 7 | 3 | 4 | 6 | 5 | 9 |
| 3 | 5 | 9 | 6 | 8 | 1 | 7 | 4 | 2 |
| 8 | 4 | 2 | 1 | 6 | 9 | 5 | 3 | 7 |
| 7 | 3 | 6 | 4 | 5 | 2 | 1 | 9 | 8 |
| 9 | 1 | 5 | 8 | 7 | 3 | 4 | 2 | 6 |
| 5 | 8 | 1 | 9 | 4 | 7 | 2 | 6 | 3 |
| 2 | 9 | 4 | 3 | 1 | 6 | 8 | 7 | 5 |
| 6 | 7 | 3 | 5 | 2 | 8 | 9 | 1 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# 10ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

## குமாரவேலு அருளம்பலம்



அன்னை மடியில் - 31★10★1934

ஆண்டவன் அடியில் -29★06★2003

திதி : ஆனி அமாவாசை 07.07.2013

ஆண்டுகள் பத்து பறந்தோடிச் சென்றாலும்
சுடர்விளக்காய் ஒளிரும்-உங்கள்
நினைவுகள் காலமெல்லாம்

நீர்க்குமிழிபோன்றது வாழ்க்கை என்றாலும்- உங்கள்
நினைவலைகள் நெருப்பாய் கனக்கின்றதே!
சடுதியாய் எம்மைவிட்டுப் பிரிந்து-மீளாத்
துயரில் ஆழ்த்தி விட்டீரே!

விண்ணுலகம் சென்ற எமது அப்பாவே!
விரும்பி ஓர் விண்ணப்பம் வேண்டுகிறோம்
இன்னுமோர் பிறவி எமக்குண்டெனில் - உங்களுக்கே
பிள்ளைகளாய் பிறந்திட பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

'மனோன்மணி வாசா'
ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(38901)(3.5.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார நிலையங்களில் சின்னமுத்து தடுப்பு மருந்து



வவுனியா, ஜூலை 7
வவுனியாவில் சின்னமுத்து தடுப்பு மருந்தேற்றல் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.
இதன்படி வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட 28 நிலையங்களிலும், செட்டிகுளப் பகுதியில் 10 நிலையங்களிலும், வவுனியா வடக்கு மற்றும் வவுனியாவில் உள்ள 54 நிலையங்களிலும் தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.
2012 ஆம் ஆண்டு ஜூலை 6 ஆம் திகதிக்கும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்த குழந்தைகளுக்கு கட்டாயமாக சின்ன முத்து தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.
வவுனியா பிராந்திய சுகாதார பிரதிப் பணிப்பாளர், வைத்திய அதிகாரிகள் ஆகியோர் இணைந்து இதனை முன்னெடுத்துள்ளனர்.
வவுனியா, செட்டிகுளம், வவுனியா வடக்கு பிரதேசங்களைச் சார்ந்த பல சிறுவர்களுக்கு இதன் மூலம் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றது. (ஐ-402)

# கனகராயன்குளம் பகுதியிலும் காணிகள் சுவீகரிக்கப்படுமா?

## அச்சத்தில் அந்தப் பிரதேச மக்கள்

மாங்குளம், ஜூலை 7
கனகராயன்குளத்திலும் பொது மக்களுக்குச் சொந்தமான காணிகளை அரசு அபகரிக்கும் நிலை ஏற்படுமா என்ற அச்சத்தில் அப்பகுதி மக்கள் உள்ளதை அவதானிக்க முடிகின்றது-
இங்குள்ள விவசாய அபிவிருத்தி நிலையத்துக்குச் சொந்தமான காணியும், பொதுநோக்கு மண்டபத்துக்குச் சொந்தமான காணியும் பொலிஸாரால் அபகரிக்கப்பட்ட நிலையில் உள்ளன.
இந்த இடத்திலிருந்து வெளியேறி விவசாய அபிவிருத்திக்கு உதவுமாறு மக்கள் பலமுறை பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.
மேலும் இது தொடர்பாக நெடுங்கேணிப் பிரதேச சபை யினரிடமும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தாம் அவ்விடத்தை விட்டு அகல்வதாகப் பொலி ஸார் கூறிப் பல மாதங்கள் கடந்த போதிலும் இதுவரை எதுவுமே இடம்பெற வில்லை.
பொலிஸாருக்கு பெரிய குளப்பகுதியில் காணி ஒதுக்கப்பட்ட போதிலும் அவர்கள் வெளியேறாது தொடர்ந்தும் விவசாய அபிவிருத்தி நிலையத்தையும், பொதுநோக்கு மண்டபத்தையும் தம்வசம் வைத்துக் கொண்டுள்ளனர்.
இந்த நிலையில் இவற்றை அரசு சுவீகரித்து விடுமோ என்ற அச்சத்தில் அப்பகுதி மக்கள் உள்ளனர்.
அண்மையில் பெரிய குளப் பகுதியில் சிறிய புத்தர் கோயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதனை விரிவாக்கம் செய்வதற்கான முயற்சிகளும் இடம்பெற்று வருகின் றன.
புத்தர் கோயில் அமைப்பதற்கு மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்த போதிலும் அதனைத் தடுக்க முடியவில்லை. தமிழர்களின் பூர்வீக நிலங்கள் இராணுவத்தினரின் தேவைகளுக்கும், புத்தர் கோயில்கள் அமைப்பதற்கும் பயன்படுத்தப்படுவதனால் அந்த வரிசையில் பொலிஸாரும் இந்தக் காணிகளைச் சுவீகரித்து விடுவார்களோ என்ற எண்ணம் மக்களிடம் எழுந்துள்ளதைக் காண முடிகின்றது.
எனவே தமது பகுதியிலுள்ள விவசாய அபிவிருத்தி நிலையத்தை உடனடியாகவிடுவித்துத் தருவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அந்தப் பகுதி மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (க-422)

# சிறுபோக நெல் வயல்களில் சிற்றுண்ணிகளின் தாக்கம்

கிளிநொச்சி, ஜூலை 7
கிளிநொச்சி மாவட்ட சிறுபோக நெல் வயல்களில் சிற்றுண்ணித் தாக்கம் பரவலாக அவதானிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பிரதி விவசாயப் பணிப்பாளர் க.செல்வராசா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
முரசுமோட்டை, ஊரியான், பன்னங்கண்டி, சின்னக்காடு, இராமநாதபுரம், வட்டக்கச்சி, கண்டாவளை, உருத்திரபுரம் ஆகிய பிரதேசங்களில் சிற்றுண்ணிகளின் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது. அக்கராயன் குளம், கரியாலை, நாகபடுவான், சின்னபல்லவராயன்கட்டு போன்ற பிரதேசங்களிலும் தாக்கத்தை குறைந்தளவில் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.
தற்போது நிலவுகின்ற கூடிய வெப்ப நிலையும், ஈரப்பதனும் இவற்றின் பெருக்கத்துக்கு சாதகமாக அமைகின்றன. சிற்றுண்ணியின் பாதிப்பினால் நெல் வயல்களில் ஐந்து தொடக் கம் 95 வீதம் வரையான இழப்பு ஏற்படுகின்றது.
சிற்றுண்ணிகள் மிகச் சிறியவையாகையால் வெற்றுக் கண்களால் இவற்றைப் பார்க்க முடியாதுள்ளது. உருப்பெருக்கும் கண்ணாடி மூலம் பார்க்கும்போது முட்டை, குடம்பி, கூட்டுப்புழு என்பவற்றை வெண்ணிறத்தில் காணலாம். நெல் துளிர்களை கைகளால் தட்டும் போது இந்தச் சிற்றுண்ணிகள் ஊர்வதனை உணர முடியும். இதன் மூலம் இவற்றை இல குவாக அடையாளங் காண முடியும்.
இவை இலை மடலுக்குள் இருந்து கொண்டு நெற்தாவரச்சாற்றை உறிஞ்சிக் குடிப்பதுடன் குடலைப் பருவத்தில் கதிர் முளையத்தின் சாற்றையும் உறிஞ்சிக் குடிப்பதனால் விவசாயிகளால் இதனைஇனங்கண்டுகொள்ள முடியாதுள்ளது.
இவற்றின் தாக்கத்தினால் நெற் தாவர இலையின் நுனியும், நுனியிலிருந்து இருபக்க விளிம்புகளும் மஞ்சளாகி பின்னர் கருகுவதை அவதானிக்கலாம்.
இதனைக் கட்டுப்படுத்துவதற்கு புறொபினோ பொஸ் (கல்குறோன், சொல்குறோன், செலிக்குறோன், சுபர்குறோன்) ஆகிய பீடைநாசினிகளை ஏக்கருக்கு 16 லீற்றர் தாங்கிக்கு 30 மில்லி லீற்றர் என்ற அளவில் ஏக்கருக்கு 300 மில்லி லீற்றர் விசிறுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளனர். (க-6)



மாங்குளம் பனிக்கன்குளத்தில் இயங்கிவரும் முன்பள்ளியின் நிலைமையைப் பார்த்தீர்களா...? (க-6)

# பெற்றோர் அக்கறையுடன் இருந்தால் பாடசாலை இடைவிலகல் குறைவடையும்

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 7
சிறுவர்கள் விடயத்தில் ஒவ்வொரு பெற்றோரும் அக்கறையுடையவர்களாக செயற்படும் போதுதான் சிறுவர்கள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகுவதைக் கட்டுப்படுத்த முடியும். இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சி மாவட்டத்தில் பின்தங்கிய குறிப்பிட்ட சில கிராமங்களில் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திய அல்லது இடைவிலகிய மாணவர்களை மீளக் கற்றலில் இணைக்கும் செயற்பாடுகள் மாவட்ட அரச அதிபரின் ஏற்பாட்டில் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பாக மாவட்ட அரச அதிபருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
எமது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இங்குள்ள சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் பாடசாலை செல்லாத அல்லது இடைவிலகிய மாணவர்களின் தொகை மிக மிகக் குறைவாகவே உள்ளது. இருந்த போதிலும் எமது மாவட்டத்தில் இவ்வாறான சிறார்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட உத்தியோகத்தர்கள், நன்னடத்தைத் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள் ஆகியோர் ஒன்றிணைந்து கிராமங்கள் தோறும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். பாடசாலை செல்லாதவர்களை மீளவும் பாடசாலைகளில் இணைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இவ்வாறு இணைக்கப்படும்போது வணிகர் கழகம் போன்ற பல்வேறு அமைப்புக்களின் மூலமாக கற்றல் உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.
இந்த சிறுவர்கள் விடயத்தில் அதிகாரிகள் மட்டும் பொறுப்புடையவர்களாக இருந்தால் போதாது. கிராம மட்ட அமைப்புக்கள், சிறுவர்களின் பெற்றோர் என அனைவரும் அக்கறையுடன் செயற்பட வேண்டும் அப்போதுதான் இவ்வாறான சிறுவர்களின் நலன்களைப் பாதுகாக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-6)



# கிளிநொச்சியில் நடமாடும் சேவை

கிளிநொச்சி, ஜூலை 7
கிளிநொச்சி கரைச்சி பிரதேச மக்களின் நன்மை கருதி ஆள்பதிவுத் திணைக்களமும் தேர்தல் கண்காணிப்பு பணியகமும் இணைந்து நடமாடும் சேவை ஒன்றை ஏற்பாடு செய்துள்ளன.
நாளைமறுதினம் ஆரம்பமாகும் இந்த நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டைகள் மற்றும் பிறப்புச்சான்றிதழ் ஆகியவற்றைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலின்படி 85,000 வாக்காளர்கள் அடையாள அட்டை இன்றி வாக்களித்துள்ளனர். இவர்களுக்கான அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றைப் பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கமாகும் எனத் கபே அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

கட்டுடை எழுமுள்ளி, மெயின் றோட்டில் 5ஆம் நம்பர் கடைக்கு முன்னால் உள்ள நான்கு பரப்புக்காணி விற் பனைக்குண்டு.

தொடர்பு: 077 776 2244, 077 968 3913

## ஹொட்டல் விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு

வெள்ளவத்தையில் காலி வீதிக்கு அருகில் நல்ல நிலையில் வியாபாரம் நடை பெற்றுக் கொண்டிருக்கும் ஹொட்டல் விற்பனைக்கு அல்லது நீண்ட கால குத்தகைக்கு உண்டு. (c/10090)(3.6.11)

தொடர்பு: 077 632 0676

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஹொஸ்டல் வியாபாரி மூலைறோட் சந்தியில் அமைந்த 5 பரப்பு வெற்றுக்காணி உடன் விற்பனைக்குண்டு. Clear Title, No Brokers. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 075 720 6850 - சந்திரன் (c/10089)(3.6.11)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 1980, மகம், 5'8" கிரகபாவம் 20 3/4, Engineer (Peradeniya), M.Sc (UK), UK இல் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.

தொடர்பு: 011 315 9598, 077 220 9927
m.proposals99@gmail.com (c/10091)(3.6.11)

## Education

UK, Netherlands, Switzerland, Canada, New Zealand, Student Visa,
நேரடி அனுமதிகள் மற்றும் நேரடியாக சந்திப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் Visa Refused ஆனவர்களும் reapply செய்ய முடியும்
Professionals: Colombo 077 354 7049, Jaffna 077 744 8623 (c/10093)(3.6.11)

## வீடு வாடகைக்கு

யாழ்.கந்தர்மடம் அம்மன் வீதியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு

தொடர்பு: 072 956 6930 (38967)(3.5.6)
ஞாயிறு மு.ப. 9.00-12.00 வரை

## ஆஸ்திரேலியா விசா தேவையா

Accountant – B.com – IELTS 7,7,7,7, Engineers, Land Surveyor, Urban Planners, Quantity Surveyor, IELTS 6,6,6,6 academic, IT professionals.

தொடர்பு:

*Australian Migration Consultants (Pvt) Ltd*
*41, George R De Silva Mawatha,*
*Colombo – 13*
*TP: 011 2437285, 011 3134642*
*075 7816046, 071 6063840*
*Email: mlucas272@gmail.com*

## உடனடி வேலை வாய்ப்பு

உணவு விடுதி ஒன்றுக்கு ஆண் உதவியாளர்கள் தேவை. ஆரம்பச் சம்பளம் -35,000/=

தொடர்பு: 077 419 3321 (சி/10094)(3.5.6)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு இருபாலை வீதியில் சிவபூமி பாடசாலைக்கும் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலையத்துக்கும் இடையில் உள்ள ஒழுங்கையில் முட்கம்பி வேலிபோட்ட ஒரு பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 188 6243

## தேவை

சிறுவர் கதைகள் புனைபவர்கள் மற்றும் மொழிபெயர்பாள ர்கள் தேவை!
ஓய்வு பெற்றோர்கள், மும்மொழிப் புலமையுடையோர் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 883 5819, 077 321 7259

## கார் விற்பனைக்கு

Chevrolet Aveo 5-2010 Model - 1400 cc புத்தம் புதிய Permit வாகனம் 34000km ஓடியது. Full Option Hatchback Doctor இன் பாவனையிலுள்ளது. பதிவு இல. WPKN XXXX உடன் தொடர்பு: 077 341 7685

பெறுமதி 2.3 million

## வீடு வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி, டிப்போ சந்தியில் இருந்து 300m தூரத்தில் 3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 210 5286 (38927)(5-6)

## வீடு விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் தெற்கில், பலாலி வீதியிலிருந்து இரண்டாவது காணி (5பரப்பு) 1500சதுர அடி விசாலமான இணைந்த குளியறை மற்றும் மாபிள் பதித்த வீடு குறைந்த விலையில் உடன் விற்பனைக்கு

தொடர்பு: 077 7251188 (38862)(17.14.16)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி மகளிர் கல்லூரி வீதியில் பாடசாலைக்கு பின்புறமாக உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (35095)(6.11)

தொடர்பு: 077 470 5137

## Vacancy

Keetha Consulting Pvt Ltd is looking for Programmers, English Graduates, Social Media Writers. For more information visit http://www.keethaconsulting.com (சி/10095)(3.5.6)

## கடை விற்பனைக்கு

மன்னார், சென்ரல் பசார் றோட்டில் (பள்ளி வாசல் றோட்) கடை ஒன்று விற்பனைக்கு உண்டு.

(சி/10237)(5-6) தொடர்பு: 077 923 6682

## உணவகம் வாடகைக்கு

767, மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம் மருத்துவ மனையுடன் இணைந்த அசைவ உணவகம் (கொத்துறொட்டி உட்பட) வாடகைக்கு விடப்படும் இது 45' X 15 = 675 சதுர அடி அளவுடைய சகல தளபாட, குளிர்சாதன வசதிகளைக்கொண்டது. தொடர்பு: நேரில் அல்லது தொலைபேசி எண் 021 222 3175, முன்புநடத்தியவர் வெளிநாடு சென்றுவிட்டார். ஸ்ரோராகவும் பாவிக்க முடியும்

## நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள் வயதுடைய Parvo vaccine ஏற்றப்பட்ட Doberman நாய்க்குட்டிகளும், 1½ வயதுடைய Rott weiller ஆண் நாயும் விற்பனைக்குண்டு. (37634)(3.6.11)

தொடர்பு: 077 818 5543

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள HONDA-CD 125 (நீலம், சில்வர் மக்காட், CD 200, சைலன்சர்) உடனடி விற்பனைக்குண்டு. (37633)(3.6.11)

தொடர்பு: 077 087 2430

## கார் விற்பனைக்கு

**Toyota**- Corolla EE 111(110), 1330cc, Silver with Beige Interior, Manual, A/C, Air bag, Full Option (power steering, power mirror, power shutters), Remote Key, CD-MP3 Player, done 185000 km, Doctor used, Excellent Condition, 301-xxxx, 16/50 (negotiable)

தொடர்பு: 077 821 0007 (Jaffna) (38933)(3.6.11)

## விற்பனைக்கு

NPXI XXXX தொடரிலக்கமுடைய Hero Honda Hunk மோட்டார் சைக்கிள் யாழ். நகரில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 075 208 9129 (38955)(3.6.11)

## டிராக்டர் விற்பனை

240 Massay Furguson GJ-xxxx
தொடர்பு: 077 364 0473/021 320 8598 (38941)(3.5.6)

## கடைத்தொகுதி வாடகைக்கு



அல்லைப்பிட்டி, 2 ஆம் வட்டாரத்தில் சகல வசதிகளுடனும் 5 கடைகளை உள்ளடக்கியதாக கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 021 491 9363, 071 585 4388 (36905)(6.11)

## கடை வாடகைக்கு

யாழ். நகர் மத்தியில் 2 கடைகள் வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 136 2202 (c/10257)(3.6.11)

## காணி விற்பனைக்கு

கொய்யாத்தோட்டம், பழைய பூங்கா வீதியில், 84 ஆம் இலக்க வெற்றுக்காணி (பழைய வீட்டுடன்) விற்பனைக்குண்டு. 1 பரப்பு 7 குழி. தரகர்கள் இல்லை.

தொடர்பு: 077 971 0525 (c/10097)(3.6.11)

## மணமகள் தேவை

யாழ். கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 29 உயரம் 5'8" இலங்கையில் பட்டம் பெற்று வெளிநாட்டில் PR உடன் Soft ware Engineer ஆக தொழில் புரியும் மணமகனுக்கு அழகிய நற்குண முடைய பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு: annshyandrea @ gmail.com 072 910 0296

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்



உமைபாலன் - அயுரதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வன்

### கோகுலன்

தனது முதலாவது பிறந்த நாளை நேற்று (06.07.2013) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். அவர் முறிகண்டிப் பிள்ளையார் அருள்பெற்று சீருடனும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், அண்ணாமார், தம்பி, மைத்துனர்மார், உற்றார், உறவினர்.
தச்சடம்பன், மாங்குளம்.

(37473)(2.6.3)

## TOKYO Ready Mix

எழுதுமட்டுவாழ், யாழ்ப்பாணம்

### பணிவெற்றிடம்

1) Wheel loader operator- 01
2) Truck Mixer Driver- 02
3) Sales promotion officer- 01

மேற்குறிப்பிட்ட பணிவெற்றிடத்துக்கு தகுதியுள்ளோர் நேர்முகப் பரீட்சைக்குத் தகுந்த ஆவணங்களுடன் 10.07.2013 (புதன்கிழமை) 9.30AM தொடக்கம் 11.30 வரை கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

**Tokyo Cement & St.Anthony Hardware Depot**
**507, Stanly Road, Jaffna.**
**தொடர்பு: 077 755 7971**

## வாகனம் விற்பனைக்கு (Jeep)

Toyota rush 2009 Model 27000km ஓடியது.கறுப்பு நிறம், விலை 44 லட்சம்

தொடர்பு: 077 633 7309 (c/10092)(3.6.11)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடன் உள்ள வீட்டில் ஒரு பகுதி வாடகைக்கு விடப்படும்.ஒரு சிறிய குடும்பம் அல்லது தனி நபர் விரும்பத்தக்கது. Nelliady town இல் இருந்து 10 mins Walk

தொடர்பு: (c/10233)(3.6.11)
021 226 4067,077 292 0045

## House For Rent

சகல வசதிகளுடன் 5 அறை வீடு குடும்பத்திற்கு அல்லது நிறுவனங்களுக்கு
NO-35, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தொடர்பு: 071 244 6926
(வைரவர் கோயிலுக்கருகில்) (38919)(3.6.11)

## வாகனம் விற்பனைக்கு

அசோக் லேலண்ட் WPNC xxxx இலக்க 54 ஆசனங்களைக் கொண்ட அரைச் சொகுசு பஸ் திருகோணமலை- யாழ்ப்பாணம் பாதை அனுமதிப் பத்திரத்துடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: (38974(3.5.6)
071 448 7257/ 077 478 3032

## விற்பனைக்கு

1. LG குளிரூட்டிப் பெட்டி (2 கதவு)
2. Sony Audio Set(3CD,2 Cassette, Game)
3. Sony Vedio Cassette Recorder.

தொடர்புகளுக்கு.
8/1, Amman Road, Kantharmadam.
T.P.: 077 987 5796 (38980)(3.5.6)
(திங்கள் காலையிலிருந்து தொடர்பு கொள்ளவும்)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

அனைத்து ஒறிஜினல் உதிரிப்பாகங்களுடன் மிகவும் சிறந்த நிலையில் குறுகியதூரம் ஓடியதும் சிவப்பு நிறமுடையதுமான தனிப்பாவனையிலுள்ள மோட்டார்சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 975 1668, 077 740 4926

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ அரச உயர் பதவியிலுள்ள அழகான பெண்ணிற்கு தகுந்த மணமகன் தேவை.

தொடர்பு: 077 284 4179
suganthant1983 @ gmail.com

*உதயன் விளம்பரத் தொடர்புக்கு-*
advt@uthayan.com
0215671111

## குருக்கள், உதவி ஐயா தேவை

வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்கு குருக்கள், உதவி ஐயா தேவைப்படுகின்றனர். விருப்பமுடையோர் காலை 9 மணி முதல் 12 மணிவரை கீழ்வரும் எமது தேவஸ்தான அலுவலகத்துடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

**வண்ணை வைத்தீஸ்வரன் கோயில்**
**(சிவன் கோயில்) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

## BUILD YOUR CAREER & BE PART OF A GROWING TEAM

Trainee Sales & Marketing Executives (Male/Female)
*Jaffna Branch*

Be an achiever by stepping into a successful career with Pioneer House, Sri Lanka's leading Learning Solution Provider. We are part of a Multinational company with over 21Branches in Asia. With Over 25 years in the business, We are looking for young and competent, result oriented individuals who are willing to take challenges in the fast paced world of Marketing.

**Requirements**

- Age above 20 years up to 35 years only.
- School lewers sound results of GCE O/L & A/L'S
- A Fair Knowledge of English
- Willing to work hard and build a career.
- Positive attitude and a pleasing personality.

**Benifits**

- Unlimited income potential to earn Rs 30,000/- pm
- Comprehensive & Intensive Training
- Basic Salary/Travel Allowances/Commission +
- Incentives
- Overseas Travel / Conferences for achievers
- Motor Bike/Car Allowances ( Scooter allowance for ladies)



*Be an Achiever & light up your future with us!*


(38942)(2.6.3)

**Pioneer House (Pvt) Ltd**
No: 100, 2nd Floor, Manipay Road, Jaffna.
Contact: **Sales Manager Mr.G.ANTHANY**
077 356 6835, 021 567 1130

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## பூநகரி கோட்ட உதவி ஆசிரியர்களின் பாராட்டு



உங்கள் சேவை உயர்ந்திட எங்கள் வாழ்வு மலர்ந்திட பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொண்டர் ஆசிரியர் சேவைக்கு மதிப்பளித்து ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் வழங்குவதற்கும் எங்கள் வாழ்வின் விடியலுக்கும் ஒத்தாசை வழங்கிய மாண்புமிகு கௌரவ அமைச்சர்

**K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவர்

**முருகேசு சந்திரகுமார்**

அவர்களையும், கிளிநொச்சி மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர்

**வைத்திலிங்கம் தவநாதன்**

அவர்களையும், பூநகரி பிரதேசசபை உறுப்பினர்

**வல்லிபுரம் இராசலிங்கம்**

அவர்களையும் பாராட்டுகின்றோம்.

வாழ்க நீடூழி **வாழ்த்துவோர்:**

**பூநகரி கோட்ட ஆசிரிய உதவியாளர் ஒன்றியம்.**



அல்வாய் வேவிலந்தை

## அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

## மகோற்சவ விஞ்ஞாபனம் - 2013

ஆனி மாதம் 24ஆம் நாள் (08.07.2013) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் துவஜாரோகணம் (கொடியேற்றம்) நிகழ திருவருள் கூடியுள்ளது. அன்று முதல் ஆடிப்பூரணை வரை (22.07.2013) உள்ள பதினைந்து தினங்களும் உற்சவம் பக்தி பூர்வமாக நடைபெறும். அடியார்கள் அனைவரும் கொடியேற்ற வைபவத்திலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் உற்சவங்களிலும் கலந்து அம்பிகையைத் தரிசித்து வேண்டும் வரம் அளிக்கும் அன்னையின் அளவிலா ஆனந்தப் பெரும்பேறு பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

### விசேட நிகழ்வுகள்

*08.07.2013 திங்கள் - காலை 9.00 மணி கொடியேற்றம்*
*09.07.2013 செவ்வாய்*
*காலை 8.00 நவசக்தி அர்ச்சனை திரு. ந. வித்தியாதரன்*
*13.07.2013 சனி*
*காலை 6.00 மணி 108 சங்காபிஷேகம், பக்தோற்சவம்*
*14.07.2013 ஞாயிறு*
*காலை 8.00 மணி நவசக்தி அர்ச்சனை மாலை திருவிளக்குப் பூஜை*
*17.07.2013 புதன்*
*காலை 8.00 மணி நவசக்தி அர்ச்சனை*
*18.07.2013 வியாழன்*
*காலை 8.00 மணி சுமங்கலி பூஜை*
*19.07.2013 வெள்ளி*
*வசந்தோற்சவம்*
*20.07.2013 சனி*
*காலை தைலாப்பியங்கம் 108 சங்காபிஷேகம் மாலை வேட்டை சப்பறம்*
*21.07.2013 ஞாயிறு*
*காலை 9.00 மணி இரதோற்சவம் (தேர்)*
*22.07.2013 திங்கள்*
*காலை 6.00 மணி சமுத்திரதீர்த்தம் மாலை 5.00 மணி கொடியிறக்கம்*
*23.07.2013 செவ்வாய்*
*பூங்காவன இளைஞர் விழா*

(C/10268)(10,16,14)

திருவிழாக்காலத்தில் தொடர் சொற்பொழிவு

**தமிழருவி த. சிவகுமாரன் கம்பன் கழகம்.**

"முக்கண்ணியை தொழுவார்க்கு ஒருபோதும் தீங்கில்லையே"

அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் பரிபாலன சபையினர்.


## மதுரா அழகுக்கலை பயிற்சி நிலையம்

(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)



| பயிற்சி விவரம் | பயிற்சிக் கட்டணம் |
|---|---|
| அழகுக் கலை டிப்ளோமா பயிற்சி | 7500.00 |

பயிற்சி நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். பேசியல் (20), சாறி டிரெஸ்ஸிங் (10), மெகந்தி டிசைன், மேக்கப் (4), பிளக் ஸ்பொட் றீட்மெண்ட், கண்கரு வளைய சிகிச்சை, பிறைடல் ரெஸ்ஸிங் (4), ஹென்னாட் றீட்மென்ட், ஸ்பாறீட்மென்ட், வக்சிங், திரெட்டிங், பெடிக் கியூர், மெனிக்கியூர், ஸ்ரெயிட்னிங், பேமிங், அல்ரா சொனிக், பேசியல், கறுப்பு காய்கள் அகற்றுதல், நெயில் ஆட், பிம்பிள் றீட்மெண்ட், அனைத்தும் செயன்முறையுடன் கூடிய விளக்கப் பயிற்சிகள்.

பயிற்சி காலம் - 03 மாதம் பயிற்சி ஆரம்பம் - 10.07.2015 புதன்கிழமை

பயிற்சியில் இணைய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும் (மகளிர் மட்டுமே)

கேக் ஐசிங், சாறி வேர்க், தையல், ஹண்ட் வேர்க் பயிற்சிகளும் நடைபெறுகின்றது.

(39000)(10,16,14)

ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

மதுரா அழகுக்கலை பயிற்சி நிலையம்
பழைய வீதி, கோப்பாய். T.P: 0779362642

## Anti Broken Stickers, X Sim

உங்கள் விலையுயர்ந்த கையடக்கத் தொலைபேசியை கீறல்கள், வெடிப்புகள் என்பவற்றிலிருந்து பாதுகாக்கின்றது.

## "Anti Broken Strickers"

உங்கள் விரல்களுக்கு மென்மைத் தன்மையையும், தொலைபேசியின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துகின்றது மற்றும் Iphone 4s,5 என்பற்றை Unlock செய்வதற்கான X Sim களையும் பெற்றுக்கொள்ளலாம்.

**R&R Telecom**
**127, M.P.C.S. கட்டடம்**
**K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**Tel- 0212221644, 0722441441**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 விசாகம் 2ஆம் பாகம், கிரக பாவம் 25, கனடா (PR) அமெரிக்கா முழுமையான கொம்பியூட்டர் இன்ஜினியருக்கு Network கடமை புரியும் உயரம் 5.7 உடைய மணமகனுக்கு ஓரளவு படித்த அழகிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை. மணமகன் இலங்கை வந்துள்ளார்.

தொடர்புகளுக்கு : 0771479416 (35294) (10,16,14)

## வீடு விற்பனைக்கு

இல.26, பேக்கறிலேன் ஆஸ்பத்திரி வீதியில் வீட்டுடன் 1பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பி.ப 4 மணியிலிருந்து 6 மணிவரை பார்வையிடலாம்.

தொடர்பு- 0777533237

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

YAMAHA-FAZER (பச்சை) உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு.077 500 5285 (38991)(3.5.6)

## வீடு வாடகைக்கு

இல.8/1, அம்மன் வீதி, கந்தர் மடத்தில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (38988)(3.5.6)

தொடர்பு: 077 987 5796

## ENGINEER WANTED

We require a qualified Civil Engineer with minimum Three(03) years of experience in Construction Industry for immediate recruitment in Kilinochchi District.

Apply within seven days of this advertisement

**Promoters Engineering Co.Ltd.**
**33, Nallur Cross Street, Nallur.**
**Tel: 021 222 5780**
**email: pecjff@sltnet.lk** (38993) (3.5.6)


## Individual Classes

i. **Maths** * Grade 6- 11
* O/L மாணவர்களுக்கு துரித மீட்டல் மற்றும் கடந்தகால வினாக்கள்.

ii. **English** * Grade 6- 11 (O/L), A/L
* Past paper questions
* ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கு Spoken English with Grammar

வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்
(புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி)
**தொடர்பு- 0756584630**
**(பிரபல ஆசிரியர்)**

(30653)



## டூ பிளவர் கூரை ஓடுகள்

* உயர் தரத்தில் உருவாக்கப்பட்டது
* ஒரு கூரை ஓட்டின் நிறை 2.7 கிலோ கிராம்
* நவீன தொழில் நுட்பத்தில் தயாரிக்கப்பட்டது
* கூரை ஓட்டை உடைத்து சோதனை செய்தால், 100% சுடப்பட்டிருப்பதை உணரலாம்
* 10 வருடத்திற்கும் மேற்பட்ட உத்தரவாதம்
* வீடுகளுக்கு நேரில் வந்து தரம் குறைந்த கூரை ஓடுகளை விற்பவர்களிடம் ஏமாறாதீர்கள்

**யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பருத்தித்துறை, மன்னார் மற்றும் வடக்கிற்கு நம்பிக்கையான முகவர்கள் தேவை.**

**திந்தரி கூரை ஓடு தொழிற்சாலை**

மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும். தொலைபேசி

**0770503076 / 0773427843 / 0312258747**

*இல.80, கோணாவில வீதி, தங்கொட்டுவ.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## மிக்கோர்சிங்கம் தவப்பிரகாசம்

(தலைவர்- பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், பாஷையூர் புனித அந்தோனியார் கிராமிய கடற்றொழில் அமைப்பு)

பாஷையூரின் பொன்வரியில்
உன்வரியும் ஓர் வரியாக-
பாதைகள் காட்டி
பாசங்கொண்ட
நெஞ்சங்களை
பணியாலே வெற்றிகொண்டு
காலனிடம் தோற்றதென்ன
கலங்குகின்றோம்
உள்ளம் துடிக்க – ஈடேற்றம்
வழங்குகின்றன
இறைவனிடம் உமது
ஆன்ம சாந்திக்கு.

பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்.



## பசுமாட்டுக்கான தீவனம் (பிறிமா)



பிறிமா சிலோன் லிமிட்டெட் உற்பத்தியான 45கிலோ நிறைகொண்ட வெள்ளைப் பைக்கற் மீண்டும் பழைய முகவரியில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

முற்கூட்டிய பதிவுகளுக்கு ராண்ஸ்போட் இலவசம்

S.K.ஏஜென்சி

இல.128, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு- 0212226884, 0750470828


# பாம்பு தீண்டி ஒருவர் சாவு

யாழ்ப்பாணம்,ஜூலை 07

கள்ளுத் தவறையில் பாம்பு தீண்டி மயக்க நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

சம்பவம் சிலாவத்தை, முல்லைத்தீவில் இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த சின்னவட்டர் சிவநாதன் (வயது-50) என்பவரே உயிரிழந்தார்.

கள்ளுத் தவறணையில் அவருக்கு காலில் பாம்பு தீண்டியுள்ளது. அவரை மீட்ட சிலர் மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

இவர் திருமணமாகி ஒரு பிள்ளையின் தந்தை எனவும், குடும்பத் தகராறு காரணமாக மனைவி, பிள்ளை 15 வருடங்களுக்கு முன்னர் பிரிந்து சென்றுவிட்டனர். அவரது சடலத்தை ஏற்க மனைவி மறுத்துவிட்ட நிலையில் தாயார் சடலத்தைப் பொறுப்பேற்றுச் சென்றார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி எம்.உதயசிறி இறப்பு விசாரணை மேற்கொண்டார். (ஐ-4)

# மரண அறிவித்தல்



## கந்தையா ஏகாம்பரம்(பப்பா)

திருநெல்வேலி கிழக்கு செங்குந்தா வீதியை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட திரு.கந்தையா ஏகாம்பரம் 05.07.2013 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற பொன்னையா சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கம்மா அன்புக் கணவரும் ஆவார்.

அன்னார் சண்முகசுந்தரம்(முதலி),காலஞ்சென்ற புனிதசீலி (ராணி),காலஞ்சென்ற சண்முகரத்தினம்(ரத்தினம்),சண்முகராஜா(மாத்தையா- பிரான்ஸ்), சண்முகலிங்கம் (தங்கம் – வீடியோ சண்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னார் மதிவதனா (ரதி), காலஞ்சென்ற பரமேஸ்வரன் (முன்னாள் அதிபர் - யாழ் செங்குந்தா இந்துக்கல்லூரி),மாலினி,சுகுமாரி (ஆசிரியை - ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். சுஜாதா,லாவண்ஜா,சரவணப்பிரியன்,லவன்,குயிலினா,ரமணா, தாட்சாயினி, தீபனா, டிலன், யதார்த்தனி, பதுமிலா, லக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல.389 இராமலிங்கம் வீதியிலுள்ள இல்லத்தில் 09.07.2013 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல் : சண்முகசுந்தரம் (மகன்)
இல. 389 இராமலிங்கம் வீதி , திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0770242108,0773304033

(C/10309)

# குமுதினிப் படகு மீண்டும் சேவை

யாழ்ப்பாணம்,ஜூலை 07

குறிகாட்டுவான் துறைமுகத்தில் இருந்து நெடுந்தீவுக்கு குமுதினிப் படகுச் சேவை கடந்த 5ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜூன் 16ஆம் திகதியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த இந்தப் படகுச் சேவை வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் கடற்படையினர் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

(த)

# கண்ணீர் அஞ்சலி



## சின்னையா தவரெட்ணம் (J.P)

முன்னாள் தலைவர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் சமாசங்களின் சம்மேளனம், யாழ் மாவட்ட கூட்டுறவு சபை பணிப்பாளர் சபை உறுப்பினர், வடமாகாண கடற்றொழில் அமைப்புத் தலைவருமான சின்னையா தவரெட்ணம் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்நத அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புனித சூசையப்பர் கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கம், சூழாவடி, மானிப்பாய். (30659) (10,16,14)



## காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்திக்கு அண்மையில் இராஜா பிளாசாவுக்கு பக்கத்தில் பலாலி வீதியிலிருந்து 12அடி பாதையுடன் 50 மீற்றர் தூரத்தில் 3பரப்பும் 13குளியுடைய (100 X 110 அடி) அகல நீளமுடைய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு- 0777037058

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரை அண்மித்த பகுதியில் தேவை. தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் குடும்பத்தினருக்கு

தொடர்பு- 0778838677


# மரண அறிவித்தல்

## மிக்கோர்சிங்கம் தவப்பிரகாசம்

*(பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்)*



யாழ்ப்பாணம் பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மிக்கோர்சிங்கம் தவப்பிரகாசம் நேற்று (06.07.2013) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான மிக்கோர்சிங்கம் - மரியை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்-பஞ்சவர்ணம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மார்த்தம்மாவின் பாசமிகு கணவரும் பிரகாஸ், மான்றிஸ், ஜெயம் (ஜேர்மனி), கிளாறி (ஜேர்மனி), ஸ்ரெபானி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யஸ்ரின் சுரேந்திரா (கிராம அலுவலர்), மஞ்சுளா (ஜேர்மனி), உதயகுமார் (ஜேர்மனி), றஞ்சித் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் பிரியங்கா, ஸ்பென்சர், றெக்ஸ், ஜொனார்த்தன், மெலினா (ஜேர்மனி), பெனோராஜ், சுவாதி (ஜேர்மனி), பொனிசியோலா, மல்கின், பிலிப் சுரேன் ஆகியோரின் பேரனும் டெறிவ்வின் பூட்டனும் காலஞ்சென்ற முத்து ராசாத்தி, அமிர்தவாசகம் (J.P), பற்றிக் காலஞ்சென்ற சிறில் ஆகியோரின் சகோதரரும் நீற்றா, கிறிஸ்ரீன், ராணி, மைக்கல் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.07.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் வழிபாடு நிறைவேற்றப்பட்டு பின் பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் சங்க பணிமனையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


*06, அன்ரனீஸ் வீதி,*
*பாஷையூர்,*
*யாழ்ப்பாணம்.*

(30668)

தகவல்:
குடும்பத்தினர்.
0776220637

# மரண அறிவித்தல்

## தியாகராசா நாகமுத்து



நாகர்கோயில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வல்லிபுர பரியாரியார் வீதி, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா நாகமுத்து கடந்த (03.07.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா -பொன்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், தனபாலசிங்கம் வள்ளிப்பிள்ளை, பழனியாண்டி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், விநாயகமூர்த்தி, சத்தியமூர்த்தி, தியானமூர்த்தி, தெய்வேந்திரமூர்த்தி, மஞ்சுளா, ஐங்கரன், ஆதிமூலம், நவலட்சுமி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (08.07.2013) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் பருத்தித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அன்னாரது பிறப்பிடமாகிய நாகர்கோயில் கிழக்கில் உள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும் அதனைத்தொடர்ந்து பி.ப.2.00 மணியளவில் நாகர்கோயில் மேற்கு, இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி:-
077 8152019

(சி/10267) 10.16.14)

தகவல்:
குடும்பத்தினர்.
மருமகள் (சத்தியமூர்த்தி-நந்தனி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# படையினர் அச்சுறுத்தினால் உடனடியாக அறிவியுங்கள்

கண்காணிப்பாளர்களைத் தேர்தல் தினத்தில் இருந்து 10 நாள்களுக்கு முன்பிருந்தே கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், வழமை போன்று உள்ளூர் கண்காணிப்பாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவர் என்றும் அவர் தெரிவித்தார் -என்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன். (த-5)

# மன்மோகனைச் சந்திக்கும் பஸிலின் முயற்சி தோல்வி

புத் தொடர்பில் இந்தியத் தலைவர்களுடன் கலந்துரையடத் திட்டமிட்டிருந்தார்.
இந்திய வெளிவிவகார அமைச்சரை அவர் சந்தித்துப் பேசினார். இதன் பின்னர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோரைச் சந்திப்பதற்கு அவர் முயன்ற போதும் இது இறுதிவரை கைகூடவில்லை.
பஸில் ராஜபக்ஷவின் வேண்டுகோளை, இந்தியப் பிரதமர் அலுவலகம் நிராகரித்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் பஸில் ராஜபக்ஷ ஏமாற்றத்துடன் நேற்று மதியம் நாடு திருமபியுள்ளார்.
இதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சர் குர்ஷித், இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த மாத இறுதியில் அவர் இலங்கைக்கு வந்து ஜனாதிபதி மஹிந்தவுடன் பேசுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# இந்திய அரசு கடும் பிடி தலையசைத்தார் பஸில்

கின்றது. இருப்பினும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையை ஒழுங்காக நடைமுறைப்படுத்தவேண்டும். '13' ஆவது திருத்தம் எந்தவிதமான குறைப்புமின்றி முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும். குறிப்பாக காணி, பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப் படக் கூடாது.
தமிழ் மக்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு '13' ஆவது திருத்தத்துக்கும் அப்பாற்பட்ட அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும்'' என்று சல்மான் குர்ஷித் இந்தியாவின் இறுக்கமான நிலைப்பாட்டை அமைச்சர் பஸிலிடம் வெளிப்படுத்தினார்.
காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்கும் இலங்கை அரசின் முயற்சிகளை நியாயப்படுத்தச் சென்ற பஸில் ராஜபக்ஷ இறுதியில் இந்தியாவின் நிலைப்பாட்டை தலையசைத்து ஏற்றுக்கொண்டதாக புதுடில்லி செய்திகள் தெரிவிக்கின்றன. (த-5)

# வடக்கில் கூட்டமைப்பு பிரபலமாகி வருகிறது

கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,
கொழும்பில் இருந்து வடபகுதிக்கு வரும்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் மத்தியில் பெற்றுள்ள முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டேன். அவர்கள் மக்கள் மத்தியில் சக்தி மிக்க கட்சியாக திகழ்கின்றனர். இன்னும் சிறப்பான நிலைக்கு வளர்ந்து கொண்டே இருக்கின்றனர் என்பதை உணரமுடிகின்றது என்றார் மாதேவ்குமார் நேபாள்.
நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் டியூ.குணசேகர,
வடக்கில் தேர்தல் நடைபெறவுள்ளது. உங்கள் வாக்குகளை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் ஏற்கனவே உரிய தலைவர்களை தேர்ந்து வைத்திருக்கின்றீர்கள். எனவே குடிகாரர்களையும், சண்டித்தனம் செய்பவர்களையும், குற்றவாளிகளையும் தெரிவுசெய்து விடாதீர்கள். சாதாரண தமிழ் மக்களோ, சாதாரண சிங்கள மக்களோ இனவாதிகள் அல்லர். நடுத்தர வர்க்கத்தினரே இனவாதம் பேசுகின்றனர் - என்றார். (ஐ-4)

# இளம் குடும்பப் பெண் புத்தூரில் கொலை

ளின் தாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.
இவர் கைதடியில் உள்ள கணவரின் வீட்டில் வசித்து வந்தவர் எனினும் அவரது சடலம் புத்தூரில் உள்ள புதிதாகக் கட்டப்பட்டு வரும் வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. கொலை செய்யப்பட்ட பின்னர் நிலானியின் சடலம் அந்த வீட்டுக்குள் கொண்டு சென்று போடப்பட்டிருக்கலாம் என்று உறவினர்கள் சந்தேகிக்கின்றனர். காலையில் அந்த வீட்டுக்குச் சென்ற பெண்ணின் தந்தையே முதலில் சடலத்தைக் கண்டுள்ளார். பின்னரே பொலிஸாருக்குத் தகவல் தரப்பட்டது.
அறையில் குப்புறக் கிடந்த சடலத்தின் வாய், மூக்குப் பகுதிகளில் இருந்து இரத்தம் பெருக்கெடுத்திருந்தது. சடலம் காணப்பட்ட அறையின் கூரை மரத்தில் கட்டப்பட்ட நிலையில் நீண்ட சேலை கயிறுபோன்று தொங்கியபடி இருந்தது என்றும் உறவினர்கள் கூறினர்.
கைதடியில் உள்ள கணவனின் வீட்டுக்குச் சென்ற பெண்ணின் உறவினர்கள் அவரைப் பிடித்துத் தாக்கி இழுத்துச் சென்று அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
பெண்ணின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரிப் பொலிஸார் சந்தேக நபரான கணவனின் தாயாரையும் விசாரணை செய்துள்ளனர். (த-4-51-288-11)

# முன்னாள் போராளிகள் கடன் பெறுவதில் சிக்கல்

ளிகள் தமது பிரச்சினைகளை அமைச்சர் கஜதீரவிடம் எடுத்துக்கூறினர்.
தமது பிரச்சினைகள் குறித்து அவர்கள் தெரிவிக்கையில்,
புனர்வாழ்வின் பின்னர் விடுதலை செய்யப்பட்ட எமக்கு தொழில் முயற்சியின் நிமித்தம் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் கடன்பெற்றுத் தரப்படும் என்று கூறப்பட்டது. அதன்படி கடனுக்கு விண்ணப்பித்தோம். அனுமதியும் தந்தனர். ஆனால் வங்கிக்குச் சென்று கடன் கேட்கும் போது அது இது என்று சாட்டுப்போக்குச்சொல்லி கடன்தர மறுக்கின்றனர் வங்கியாளர்கள். இதனால் தொழில் செய்யமுடியாது பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றோம். என்றனர். (ஐ-4)

**அக்ஷயா** பயிற்சிக் கட்டணம் ரூ7000/= மட்டுமே

பேசியல், மேக்கப், கெயாஸ்ரைல், தலைமுடி அயன்பன்னுதல், சுருட்டுதல், கேளிங், சாறி பிளவுஸ் கட்டிங், சாறிவேக் மேற்படி பயிற்சிகள் நடைபெறுகின்றன. ✱ ஒட்டிய கன்னங்களை குண்டு கன்னங்களாக மாற்றும் குளிசை, உடல் எடை கூட்டும் குளிசை ✱ உடல் எடை குறைக்கும் பால்மா, குளிசை, கோப்பி ✱ கருவளையம், வயதான தோற்றம், இளநரை, முடிகொட்டுதல் அனைத்துக்குமான குளிசை, தலைமுடி வளரச்செய்யும் ஆயுர்வேத எண்ணெய் ✱ கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நாட்பட்ட பருக்கள் அனைத்தையும் மாற்றும் ஒறியினல் வைத்திங் கிறீம் ✱ எடை குறைக்கும் மெசின் என்பன விற்பனைக்கு உண்டு.

பதிவு இல: 16168 T.P- 0772106155 அக்ஷயா- நாவலர் வீதி, ரிறவுன்றோட் சந்தி அருகில், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



### அப்புக்குட்டி நாகராசா

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புக்குட்டி நாகராசா நேற்று (06.07.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி- இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் பார்வதியின் அன்புக் கணவரும் நிர்மலாதேவியின் அன்புத் தந்தையும் மணிமாறனின் அன்பு மாமனும் நிலுஷன், மதுஷன், லதுஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2013) ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விவேகானந்தா வீதி,
மஞ்சத்தடி,
இணுவில்.

(30872)

தகவல்:
குடும்பத்தினர்.

# திருமலை மாணவர் கொலை விசாரணை இலங்கை அரசின் வெறும் கண்துடைப்பு

இது தொடர்பாக கொல்லப்பட்ட மாணவர்களில் ஒருவரான ரஜிகரனின் தந்தையான மருத்துவர் மனோகரன் பி.பி.சி. செய்தி சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
படுகொலை நடந்து சில காலங்களில் இப்படியாக சில அதிரடிப்படையினரைக் கைது செய்து விசாரித்துவிட்டு அவர்கள் படுகொலை செய்தமைக்கான போதிய ஆதாரங்கள் எதுவும் இல்லை எனக் கூறி விடுவிக்கப்பட்டமையை சுட்டிக்காட்டும் மனோகரன்,
தற்போதைய இந்தக் கைது நடவடிக்கையும் சர்வதேசத்தை ஏமாற்றும் செயல் என்பதைத் திட்டவட்டமாகக் கூறினார்.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இலங்கைக்குச் செல்லவுள்ளதாலும், உலக நாடுகளின் கடுமையான அழுத்தங்கள் காரணமாகவுமே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது எனத் தெரிவித்துள்ள மனோகரன், இது வெறும் கண்துடைப்பு நாடகம் என்றும் சாடியுள்ளார்.
இலங்கையில் நடைபெறும் இப்படிப்பட்ட மோசமான வன்செயல்கள் தொடர்பாக எத்தனையோ ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்ற போதிலும் இதுவரை எந்தவொரு விசாரணைகளுமே பூர்த்தியாகவில்லை. எனவே எமக்கு இலங்கை அரசு நீதி வழங்கும் என்ற நம்பிக்கை இல்லை. சர்வதேச விசாரணையே இடம்பெறவேண்டும் என்று மனோகரன் வலியுறுத்தினார். (த-5)

## மரண அறிவித்தல்



### சிவக்கொழுந்து அன்னம்மா

மட்டக்களப்பு பெரியபோர தீவைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து அன்னம்மா கடந்த (03.07.2013) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, சின்னத்தங்கம் மற்றும் மாரிமுத்து காலஞ்சென்றவர்களான தங்கராசா, பூபாலுபிள்ளை, பீதாம்பரம் ஆகியோரின் சகோதரியும் நாகராசா (கஜேந்திரன் மரக்காலை, கொக்குவில்), பத்மநாதன் (லண்டன்), தயாநாதன் (சுவிஸ்), இளங்கேஸ்வரி (லண்டன்), ஞானகுமார், பாலேந்திரன், சிவகுமார் (பிரசாந் மர அரிவு ஆலை, நீர்வேலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கமலாதேவி, யோகமலர், புவனம், இராசேந்திரம், சகுந்தலாதேவி, புஸ்பகரி, மாலதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கவிதா (ஜெயக்குமார்), லதா (துஸ்யந்தன்), மாலினி, கஜேந்திரன் (குகறஞ்சினி), திருக்குமரன், சிந்து (மயூரன்), சிவனுஜா, வெங்கட், கஜேந்திரன், அபிதா (அகிலன்), ஜெகன், துஜானா, பவித்திரா, பதுசா, நிதுசன், பிரியங்கா, பிரசாந், பிரதீக்கா ஆகியோரின் பேர்த் தியும் சுஜீவன், டர்சான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளி கோயில் வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
0778097789

**கார் விற்பனைக்கு**
64-XXXX இலக்க Nisan
S.B13 டீசல் கார்
தொடர்பு:- 0776237010

**கார் விற்பனைக்கு**
JE-xxxx இலக்கமுடைய White colour
Maruthi 800A/c கார் விற்பனைக்கு உண்டு.
Good Condition, 1st owner.
தொடர்பு- 0778147283

**தேவை**
வடமராட்சி மாலு சந்தியில் மெடிக் கிளினிக்கிற்கு பெண்பிள்ளைகள் தேவை.
தொடர்பு:- 0772094206

**தவறிவிட்டது**
15/8, மலர்மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த நடராஜா டினேஸ் (913432797V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பஸ்ஸில் தவறிவிட்டது.
தொடர்பு:-0777782192

**விற்பனைக்கு உண்டு**
பொமேரியன் நாய்க்குட்டி (36 நாள்கள் கழிந்தது) சன் சைன் வீடியோ
129. பலாலி வீதி, உரும்பிராய்.
தொடர்பு- 0777249212

**மணமகன் தேவை**
வவுனியா இறம்பக்குளத்தைச் சேர்ந்த கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977இல் பிறந்த 2இல் சூரியனும் செவ்வாயும் உள்ள NGO இல் உயர் பதிவி வகிக்கும் அழகிய பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.
தொடர்பு- 0775717784, 0243244427

**வேலையாள்கள் தேவை**
கொழும்பில் புத்தக வெளியீட்டு நிறுவனம் ஒன்றை நிர்வகிப்பதற்கு இருவர் தேவை.
தொடர்பு- 0774752989

**தேவை விற்பனை முகாமையாளர் யாழ்ப்பாணம் மாவட்டம்**
மேற்கூறிய பதவிக்கு விற்பனை அனுபவமும் பட்டப்படிப்பு அல்லது க.பொ.த. உயர்தர சித்தியடைந்தவரும், விளையாட்டில் ஆர்வம் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது அத்துடன் சிங்களம், ஆங்கிலம் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசி தீர்மாணிக்கபடும். நேர்முகப் பரீட்சை உங்கள் மாவட்டத்திலே நடாத்தப்படும்.
கின்தோட்ட பிளைவுட் மெனுபெக்சர்ஸ்
தனியார் நிறுவனம்
இல. 282. C. காலி வீதி கொழும்பு - 03.
FAX : 0112573 163
Email : gintotaplywood@gmail.com

**வீடு விற்பனைக்கு**
சுதுமலை, குருந்தடிப்பிள்ளையார் கோயிலருகில், நன்னீர், சுற்றுமதிலுடனான புதுப்பொலிவுடனான, 4 அறை 2 ஹோல் கொண்ட, கௌரவமான சூழலில் அமைந்த வீடு, விற்பனைக்குண்டு. விடுதி, மருத்துவ நிலையம், கல்வி நிறுவனம், வியாபார களஞ்சியம் போன்றவற்றுக்கும் உகந்தது. தொடர்பு :
0770426936, 0213001692 (30656) (10,16,14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோக்லி அதிரடி; வென்றது இந்தியா



மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்றுவரும் முக்கோணத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள், இந்திய அணிகளுக்கிடையே நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இந்திய அணி 'டக்வேர்த் லூயிஸ்' முறையில் 102 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

குயீன்ஸ் பார்க் ஓவல், போர்ட் ஒஃவ் ஸ்பெய்ன் மைதானத்தில்இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய இந்திய அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 311 ஓட்டங்களைக் குவித்தது. முதலாவது இலக்குக்காக 123 ஓட்டங்களைக் குவித்த அந்த அணி, அதன் பின்னர் இலக்குகளை சடுதியாக இழந்து, 6 இலக்குகளை இழந்து 221 ஓட்டங்களுடன் தடுமாறியது. எனினும் 7 ஆவது இலக்குக்காக இணைந்த விராட் ஹோக்லி, ரவிச்சந் திரன் அஷ்வின் ஆகிய இருவரும் 90 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தனர்.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக விராட் ஹோக்லி 83 பந்துகளில் 102 ஓட்டங்களையும், ஷிகர் தவான் 77 பந்துகளில் 69 ஓட்டங்களையும், ரோகித் சர்மா 78 பந்துகளில் 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக பீனோ பெஸ்ற் 2 இலக்குகளையும், கேமர் றோச், டுவைன் பிராவோ, மார்லன் சாமுவேல்ஸ், கெரான் பொலார்ட் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

312 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கியது மேற்கிந்தியத் தீவுகள் அணி. எனினும் அந்த அணி 10 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது. மழையின் பின்னர் மேற்கிந்தியத் தீவுகள் அணி 39 பந்துப் பரிமாற்றங்களில் 274 ஓட்டங்களைப் பெற வேண்டுமென்றஇலக்குவழங்கப்பட்டது.

இதன்படி துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 34 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 171 ஓட்டங்களை மாத்திரம் பெற்று, 102 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஜோன்சன் சார்ள்ஸ் 39 பந்துகளில் 45 ஓட்டங்களையும், கேமர் றோச் 33 பந்துகளில் 34 ஓட்டங்களையும், சுனில் நரைன் 33 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக புவனேஷ்வர் குமார், உமேஷ் யாதவ் இருவரும் தலா 3 இலக்குகளையும், இஷாந்த் சர்மா, ரவீந்திர ஜடேஜா இருவரும் தலா 2 இலக்குகளையும்கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக இந்திய அணியின் தலைவர் விராட் ஹோக்லி தெரிவானார். (ற)

## ஜொக்கோவிச் அன்டி மரே இறுதியில் மோதுவர்

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான தனிநபர் இறுதியாட்டத்துக்கு உலகின் முதலிரு இடங்களிலும் தரப்படுத்தப்பட்டுள்ள வீரர்களான நொவக் ஜொக்கோவிச், அன்டி மரே ஆகியோர் தகுதிபெற்றுள்ளனர்.

3ஆம் நிலை வீரரான ஆர்ஜென்ரினாவில் ஜுவான் மார்ட்டின் டெல் பொட்ரோவிற்கும், உலகின் முதல் நிலை வீரரான நொவக் ஜொக்கோவிச்சிற்கும் இடையில் முதலாவது அரையிறுதிப் போட்டி இடம்பெற்றது.

மிகுந்த விறுவிறுப்பாக அமைந்த இப்போட்டியில் முதலாவது செற்றை 7:5 என்ற கணக்கில் கைப்பற்றிய நொவக் ஜொக்கோவிச், இரண்டாவது செற்றை 4:6 என்ற கணக்கில் இழந்தார். ஆனால் அடுத்த சுற்றில் போராடி 7:6 என்ற கணக்கில் வெற்றிபெற்ற போதிலும், 4ஆவது செற்றில் அவர் 6:7 என்ற கணக்கில் தோல்வியடைந்தார்.

தீர்மானம் மிக்க 5ஆவது செற்றில் மிகச்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய நொவக் ஜொக்கோவிச், அந்த செற்றை 6:3 என்ற கணக்கில் கைப்பற்றி, போட்டியை 7:5, 4:6, 7:6, 6:7, 6:3 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார்.

உலகின் இரண்டாம் நிலை வீரரான பிரித்தானியாவின் அன்டி மரே, 24ஆவது வீரரான ஜேர்ஸி ஜனோவிக் ஆகியோருக்கிடையில் இரண்டாவது ஆட்டம் இடம்பெற்றிருந்தது.

முதலாவது செற்றை 6:7 என்ற கணக்கில் இழந்த அன்டி மரே, அதன் பின்னர் சுதாகரித்து ஆடி 6:4, 6:4, 6:3 என்ற செற் கணக்கில் இலகுவாக வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றார்.(ற)

## பந்துவீச்சு சிறப்பாக இல்லை

இந்திய அணிக்கெதிராக நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பந்து வீச்சாளர்கள் திறமையை வெளிப்படுத்த தவறியமையே தோல்விக்குக் காரணம் என மேற்கிந்திய தீவுகள் அணியின் சகலதுறைவீரர் டெரன் சமி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் விராட் ஹோக்லி பெற்ற சதத்தின் உதவியுடன் இந்திய அணி 311 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

விராட் ஹோக்லி மற்றும் ஏனைய இந்திய வீரர்கள் விளையாடிய விதம் குறித்து பாராட்ட வேண்டுமெனவும் டெரன் சமி தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டியில் இந்திய அணி வீரர்கள் மிகவும் சிறப்பாக செயற்பட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(ற)

## வெட்டோரி தற்காலிக ஓய்வு

கணுக்கால் காயத்தால் தொடர்ச்சியாக அவதிப்பட்டு வரும் நியூஸிலாந்து கிரிக்கெட் வீரர் டானியல் வெட்டோரி கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்து தற்காலிக ஓய்வு பெறத் தீர்மானித்துள்ளார்.

கணுக்கால் காயம் காரணமாக தொடர் சிகிச்சைகளை மேற்கொண்டு வந்த விக்றோரி, சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் பின்னர் காயத்துக்கு அவர் அறுவை சிகிச்சை செய்து கொண்டார்.

இந்த நிலையில் எதிர்வரும் பருவகாலத்துக்கான நியூஸிலாந்து கிரிக்கெட் சபையின் புதிய ஒப்பந்தத்தை ஏற்க வெட்டோரி திடீரென மறுத்துள்ளார்

இது தொடர்பில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த வெட்டோரி,

''காயத்தில் இருந்து முழுமையாக குணமடைந்து மறுபடியும் எப்போது கிரிக்கெட் விளையாடுவேன் என்பதை என்னால் இப்போது உறுதியாக கூற முடியாதுள்ளது. இத்தகைய சூழலில் ஒப்பந்தத்தை நான் ஏற்றுக் கொள்வது தவறானதாக அமைந்து விடும்.

காயத்தில் இருந்து மீள்வதற்காக, அடுத்த 6 மாத காலத்திற்கு எந்தவித கிரிக்கெட் ஆட்டங்களிலும் பங்கெடுக்காமல் ஓய்வு எடுக்க முடிவு செய்துள்ளேன். இந்த காலக்கட்டத்தில் முழு உடல் தகுதியை எட்டுவதில் கவனம் செலுத்துவேன்.

அதன் பிறகே எனது எதிர்கால கிரிக்கெட் குறித்து முடிவு செய்ய முடியும். கோடைகால பருவகாலத்தில் மீண்டும் கிரிக்கெட் களத்திற்கு திரும்புவதே எனது இலக்காகும்'' என்று தெரிவித்தார். (ற)



# 'பிபா' தரவரிசை: பிரேஸில் அதிரடி முன்னேற்றம்



சர்வதேச உதைபந்து கூட்டமைப்பு 'பிபா', சர்வதேச உதைபந்தாட்ட அணிகளின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

அதன்படி சமீபத்தில் முடிந்த கொன்பெடரேஷன் கிண்ணத் தொடரில் மூன்றாவது முறையாக பட்டம் வென்ற பிரேஸில் அணி, 22ஆவது இடத்தில் இருந்து ஒன்பதாவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

நான்கு இடங்கள் முன்னேறிய கொலம்பியா அணி மூன்றாவது இடத்தைக் கைப்பற்றியது. முதலிரண்டு இடத்தை 'உலக சம்பியன்' ஸ்பெயின், ஜேர்மனி அணிகள் தக்க வைத்துக் கொண்டன.

ஆர்ஜென்ரீனா ஒரு இடம் பின்தங்கி நான்காவது இடத்திலுள்ளது. நெதர்லாந்து அணி ஐந்தாவது இடத்தில் நீடிக்கிறது.

கொன்பெடரேஷன் தொடரில் மூன்றாவது இடம் பிடித்த இத்தாலி அணி, எட்டாவது இடத்தில் இருந்து ஆறாவது இடத்துக்கு முன்னேறியது.

இந்தத் தொடரில் நான்காவது இடம் பிடித்த உருகுவே ஏழு இடங்கள் முன்னேறி 12 ஆவது இடத்தைப் பிடித்தது. ஏழாம், எட்டாம் இடங்களில் முறையே போர்த்துக்கல், குரோஷியா அணிகள் உள்ளன. ஒன்பதாமிடத்தில் பிரேஸில் உள்ளது. பெல்ஜியம் பத்தாவது இடத்துக்கு முன்னேறியது.

இங்கிலாந்து அணி ஒன்பதாவது இடத்தில் இருந்து 15 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது. இப்பட்டியலில் இந்திய அணி 147ஆவது இடத்தில் இருந்து 146வது இடத்துக்கு முன்னேறியது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 7
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழகத்தும் இடையே நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
(ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூலை 7
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றஆட்டங்களில்கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் மற்றும் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்றன.
நக்கீரன் விளையாட்டுக் கழகத்துக்கும் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
சென்.சேவியர் விளையாட்டுக் கழகத்துக்கும் ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் ஞானமுருகன் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)


★★★

யாழ்ப்பாணம், ஜூலை 7
புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் கடந்த புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள்:
புதன்கிழமை
உடுப்பிட்டி இமையாணன் விளையாட்டுக் கழகத்துக்கும் நவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்துக்கும் கொக்குவில்பொற்பதி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில், ஆட்டநேரமுடிவில் இரு அணிகளும் கோல் எதனையும் பெறாத நிலையில், 5 சமனிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதில் பொற்பதி விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
வியாழக்கிழமை
நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் கொற்றாவத்தை பூமகள் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில், ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் தலா 3 கோல்களைப் பெற்றிருந்த நிலையில் 5 சமனிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதில் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
(ற-23)



# வென்றது யாழ்.மத்திய கல்லூரி

குருநகர், ஜூலை 7
அகில இலங்கை துடுப்பாட்ட சங்கத்தால் 15 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையிலான பிரிவு III கிரிக்கெட் சுற்றுத் தொடரின் ஆட்டம் ஒன்றில் யாழ்.மத்திய கல்லூரி அணி 77 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.
மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும், யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையிலான இந்த ஆட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.
முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 48.3 பந்துப் பரிமாற்றங்களின் சகல இலக்குகளையும் இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றது.
அதில் பிரியலக்ஷன், கார்த்தீபன், டினோஜன், நிக்ஸன் ஆகியோர் முறையே 31, 25, 21 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.
பந்துவீச்சில் சுஜீவன், விதுஸன், பி.விதுஸன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், டிசாந்தன், துஷாந்தன், நிரேஜ்குமார் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் மானிப்



பாய் இந்துக் கல்லூரி அணி சார்பாகக் கைப்பற்றினர்.
222 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 43.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 145 ஓட்டங் களை மட்டுமே பெற்று 77 ஓட்டங்களால் தோல்விய டைந்தது.
அதில் நிரோஜ்குமார், நிரோஜன் ஆகியோர் முறையே 66, 27 ஓட்டங்களை அதிக பட்சமாகப் பெற்றனர்.
மத்திய கல்லூரி அணி சார்பாக பந்துவீச்சில், விதுஸன் 6 இலக்குகளையும், செந்தூரன், கார்த்தீபன், அருணன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ற-51)




வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால், பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்று வரும் தடகளப்போட்டிகளில், 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் வட்டு மத்திய கல்லூரி மாணவி கமலினியின் சாத னைப் பாய்ச்சல். இவர் .5.19 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனையைப் பதிவு செய்தார்.(ற -23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறவுள்ளஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 7 மணி
யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ரெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம்.
இரவு 8 மணி
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் எதிர் டைமன்ஸ் விளையாட்டுக் கழகம். (ற-23)

## போட்டிக்கு விண்ணப்பம்

கிளிநொச்சி, ஜூலை 7
பூநகரி மத்திய நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் உதைபந்தாட்ட சுற்றுத் தொடர் நடத்தப்படவுள்ளது.
பங்குபற்ற விரும்பும் அணிகள் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் கழகத்தைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ற-426)

# வடமாகாணத் தடகளப் போட்டி: பல புதிய சாதனைகள் பதிவு

யாழ்ப்பாணம், ஜூலை 7
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் வடமாகாணப்பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் தடகளப் போட்டிகளின் முதல் நாளில்


விதுஸன்

12 க்கும் மேற்பட்ட சாதனைகள் பதியப்பட் டுள்ள நிலையில் இரண்டாம் நாளான நேற்றும் வீர, வீராங்கனைகளால் புதிய பல சாதனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தட்டுஎறிதலில் கடந்த வருடம் பதிவு செய் யப்பட்ட சாதனையான 41.99 மீற்றர் தூரம், இம்முறை யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் விதுஷனால் முறியடிக் கப்பட்டுள்ளது. 44.78 மீற்றர் தூரம் எறிந்து அவர் புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளார்.
17 வயதுப் பிரிவு பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்


மடோன்

போட்டியில் கடந்தவருடம் பதிவு செய்யப்பட்ட சாதனை யான 23.9 என்ற நேரப் பெறுதி, இம்முறை விசுவமடு மகா வித்தியாலய மாணவி பி.தனுஷாவால் முறியடிக் கப்பட்டது. அவர் குறித்த தூரத்தை 27.9 என்ற நேரப் பெறுதியில் ஓடி முடித்துப் புதிய சாதனையைப் பதிவு செய்தார்.
21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் கடந்த வருட சாதனையான 37.29 மீற்றர்தூரத்தை, இம்முறைஉடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலை மாணவன் ஆர். நிமலேந்திரா முறியடித்தார். 38.42 மீற்றர் தூரம் எறிந்து அவர் புதிய சாதனையைப் பதிவு செய்தார்.
21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் கடந்த வருட


தனுஷியா

சாதனையான 24 செக்கன் என்ற நேரப் பெறுதி, இம்முறை சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் மடோன் எல்விஸால் முறியடிக்கப்பட்டது. அவர் குறித்த தூரத்தை 23.8 என்ற நேரப் பெறுதியில் ஓடி முடித்து புதிய சாதனையைப் பதிவு செய்தார். (ற-23-422)


நிமலேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரியாவில் படிக்க உழைக்க சட்ட ஆலோசனை மாதாந்தம் 2½ இலட்சம் சம்பாதிக்கலாம். 2 வாரங்களில் பயணம்

- ★ 4 வருட விசா
- ★ வயது 47இற்குக் கீழ்
- ★ ஆலோசனைக்கு விரைந்து வாருங்கள்

(மூவருக்கு மட்டுமே வாய்ப்பு)
சனி, ஞாயிறு உட்பட
ஏழு நாள்களும் திறந்திருக்கும்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090 (30654)

புதிய சங்கதி
இலங்கையில் மிகக்குறைந்த கட்டணத்தில் கனடா பறந்தோட வாய்ப்பு (10 பேருக்கு மட்டுமே)
தவறவிட்டால் மனம் வருந்துவீர்கள்
படிக்க உழைக்க சட்ட ஆலோசனை
(7 நாள்களும் சனி, ஞாயிறு உட்பட
காலை 8 - இரவு 8 வரை)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 2219016, 0215689090
(38987) (10,8,3)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்... T.P.021 222 8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(நாக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

LONDON METROPOLITAN COLLEGE
சர்வதேச தரத்திலான ஆங்கில கற்கை நெறிகளை நடாத்தும்
யாழ்ப்பாணத்தின் முன்னிலை ஆங்கில கல்வி நிறுவனம்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்

IELTS ACADEMIC & GENERAL
Duration: 48 hrs Week/ Week ends
- ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம்
- முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட கற்பித்தல் வசதி
- IELTS 5.5-6.5 Band பெறுவதற்கான உத்தரவாதம்
- இலவச Tutorial Facilities

City & Guilds A1 A2 B1 B2
Duration: 48 hrs Week/ Week ends
- UK அரசாங்கத்தினால் சிபாரிசு செய்யப்பட்டது.
- இதுவரை நடந்த பரீட்சையில் 100% சித்தி.
- காலவரையறையற்ற சான்றிதழ் பெறமுடியும்.
- ESOL, SESOL பரீட்சைகளை தனித்தனியாக தோற்ற முடியும்.

Certificate in SPOKEN ENGLISH WITH GRAMMAR (Quick learning programme)
Duration: 60 hrs Week/ Week ends
- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

DIPLOMA IN ENGLISH
Duration: 3 Months Week/ Week ends
Writing - 60Hrs Reading - 48Hrs
Listening - 48Hrs Speaking - 48Hrs
Be a power speaker INTENSIVE COMMUNICATION PROGRAM
- தொழில்தேடுவோர், தொழில்புரிவோர், A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்துக்கொள்வதற்கான கற்கைநெறி.
- Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறை மூலம் விரிவாக கற்பிக்கப்படும்.
- மாணவர்கள் தமது தேர்ச்சிக்கேற்ப தொடர்ச்சியாக Advanced Dip. In English இனை பயில மேலதிக வாய்ப்பு.
- O/L எழுதிய மாணவர்களிற்கு தனிப்பட்ட ரீதியில் கற்கைநெறி ஒழுங்கு செய்யப்படும்.

ஒவ்வொரு மாத முதல் வாரத்திலும் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படும். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்
#197, Arasady Road, Jaffna, Sri Lanka | Tel: 021 222 7230 | 021 753 8395
E mail: info@lmcjaffna.edu.lk | Web: www.lmcjaffna.edu.lk

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை நாகராசா

(இளைப்பாறிய அதிபர், மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்)

நுணாவில் மேற்கைப்பிறப்பிடமாகவும் பெருங் குளச்சந்தி, சங்கத்தானை வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகராசா கடந்த (03.07.2013) புதன்கிழமை இரவு காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப் பிள்ளை -சின்னத் தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான காசிப் பிள்ளை-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், நாகேஸ் வரியின் அன் புக் கணவரும், காலஞ் சென்றவர்களான நாகேஸ்வரி, யோகேஸ்வரி மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜ நந்தினி, இராஜினிதேவி, சுகந்தினி, சுகந்தன், அமிர்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், வேலும் மயிலும் (மீசாலை), முத்துக்குமரன் (யாழ்ப்பாணம்), சந்திரசேகரன் (மீசாலை), சுமதி (திருநெல்வேலி), மயிலநாதன் (அராலி) ஆகியோரின் அன்பு மாமனும், செந்தூரன், சிந்துயா, நர்மதன், விதுன், திருன், சரண், அட் சயனி, அபிநயா, சாரங்கன், சிந்துஜன், சாதனா, சஞ்சய், அபிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2013) ஞாயிற்றுக் கிழமை பி.ப.2.00மணிக்கு 353/2, நாவலர் வீதி(கைலாச பிள்ளையார் கோயில் அருகாமை) நல்லூர் எனும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக் காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: இ.முத்துக்குமாரன் (மருமகன்) 071 8054241
நா.சுகந்தன் (மகன்) 0212219151
353/2(595/12), நாவலர்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி10256)

## இளைஞர் சடலமாக மீட்பு

21 வயது இளைஞர் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் புதிய செம்மணி வீதி, ஆனந்தபுரத்தில் இடம்பெற்றது. அதே யிடத்தைச் சேர்ந்த சதீஸ் பிரசாத் என்ப வரே சடலமாக மீட் கப்பட்டவராவார்.

விசாரணை மற்றும் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உற வினர்களிடம் ஒப்ப டைக்கப்பட்டது.(த-4)

பிரத்தியேக குழு வகுப்புகள்
தரம் 10,11, A/L
வரலாறு
தொடர்பு:
021 3207847

கருத்தரங்கு
தமிழ்
ஆரம்பம்:
11.07.2013
வியாழன் (5 நாள்கள்)
இடம்:
யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகில்)
ஆசிரியர்:
திரு. T.S. குகன்
அனுமதிகள், கட்டண விவரங்கள் அலுவலகத்தில்.

# இராணுவ மறுப்பும் உதயனின் பதிலும்

யாழ்ப்பாணம், ஜூலை 7

'உதயன்' பத்திரிகையின் ஜூன் 18ஆம் திகதிய பதிப்பில் வெளி யான, தென்பகுதியில் இருந்து வந்த மீனவர்கள் கட்டைக்காடு மற்றும் தாளையடி கடல் பகு திகளில் டைனமற் பயன்ப டுத்தி மீன் பிடிக்கிறார்கள் என்று வெளியான செய்தி தொடர்பில் இராணுவத்தினர் தமது மறுப்பைத் தெரிவித் துள்ளனர்.

இது தொடர்பில் இலங்கை பத் திரிகை முறைப்பாட்டு ஆணைக் குழுவின் மூலம் அனுப்பப்பட் டுள்ள கடிதத்தில், இராணுவத் தினர் ஒரு மறுப்பை வெளி யிட்டுள்ளனர் என்றும் கூறப் பட்டுள்ளது.

பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் கடிதத்தின் படி 'உதயன்' செய்தியை இரா ணுவம் முற்றாக மறுத்துள் ளது எனக் கூறப்பட்டுள்ளது.

"இந்தச் செய்தி முழுமையாகப் பிழையானது என்பதுடன் வடக்கு மற்றும் தெற்கு பகுதி மீனவர்களுக்கு இடையில் உள்ள நல்லெண்ணத்தை விரும்பாதவர்கள் குழப்ப நிலையை ஏற்படுத்த இராணு வத்தின் மீது பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இல்லாது ஒழிக்க இந்தப் பிழையான செய்தியை வெளி யிட்டு உள்ளனர்" என்று இரா ணுவம் அனுப்பிய மறுப்பு எனக் கூறப்பட்டு பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு அனுப்பியுள்ள இணைப்பில் யாழ். பாதுகாப்புத் தலைமை யக ஊடகப் பிரிவு அதிகாரி மேஜர்மல்லவஆராச்சி தெரிவித் துள்ளார்.

**ஆசிரியர் குறிப்பு:**

இராணுவத்தின் மறுப்பு எனக் கூறி பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு அனுப்பி வைத் துள்ள கடிதத்தில் 'உதயன்' பிரதம ஆசிரியருக்கு என முகவரியிடப்பட்டிருக்கிறது. எனினும் அத்தகைய கடிதம் எதுவும் 'உதயன்' பணிம னைக்கு அனுப்பி வைக்கப்பட் டிருக்கவில்லை. பதிலாக முறைப் பாட்டு ஆணைக்குழுவுக்கு அந்தக் கடிதம் அனுப்பப்பட் டுள்ளது.

தமது மறுப்பை உறுதிப்படுத்து வதற்காக மருதங்கேணி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், தாளையடி வடக்கு கிராமிய கடற்றொழிலாளர் அமைப்பு ஆகியவற்றிடம் இருந்து பெறப்பட்ட கடிதங்கள் இணைக்கப்பட்டுள்ளன. அவற் றில், தமது உறுப்பினர்கள் எவரும் டைனமற் மீன்பிடியில் ஈடுபடுவதில்லை என்று சங் கங்கள் கூறியுள்ளன. அதா வது தெற்கில் இருந்து வந்த வர்கள் அவ்வாறு தொழில் செய்கிறார்கள் என்று 'உதயன்' வெளியிட்ட செய்தியை அவர் கள் மறுக்கவில்லை.

இவை தவிர சென்மேரிஸ் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் கட்டைக்காடு, முள்ளி யான் என்ற பெயரில் கடிதத் தலைப்புக்கூட இல்லாத ஒரு கடிதத்தில் மட்டும் கட்டைக் காட்டில் டைனமற் பயன்படுத்தி மீன்பிடித்தல் நடைபெற வில்லை என்றும் அத்தொழில் செய்ய இராணுவம் அனுமதி அளிக்கவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 'உதயன்' தான் வெளியிட்ட செய்தி சரியானது என மீண்டும் உறுதியாகக் கூறு கின்றான். உதயன் மீண்டும் அந்தப் பகுதி மீனவர்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அங்கு 'டைனமற்' வைத்து தென்பகுதி மீனவர்கள் மீன் பிடியில் ஈடுபடுகின்றனர் என் பதை உறுதிப்படுத்தினர். கட லட்டைகள் அடைக்கப்பட்டு தெற்குக்கு எடுத்துச் செல்லப் படும் பெட்டிகளைச் சோதனை யிட்டால் மேலே கடலட்டைக ளும் கீழே 'டைனமற்' வைத்துப் பிடிக் கப்படும் மீன்க ளும் இருப்ப தைக் காண முடியும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

கட்டைக்காட்டு, தாளையடிப் பகுதியில் 'டைனமற்' வைத்து மீன்பிடிக்கப்படுவதாகத் தமக் கும் முறைப்பாடு தெரிவிக்கப் பட்டுள்ளது என்று கடற்றொ ழில் நீரியல் வளத் திணைக் கள உதவிப் பணிப்பாளர் க.கணேசமூர்த்தி 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்திருந் தார்.

இந்த விடயம் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு வும் தனது விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக, 'உதயன்' செய்தியில் இராணு வத்தின் ஆதரவுடன் சுண்டிக் குளம் கடற்பரப்பில் கடல் அட்டை பிடிப்பில் ஈடுபட்ட தென்னிலங்கை மீனவர்கள் தற்போது கட்டைக்காடு, தாளை யடி கடலில் 'டைனமற்' பயன் படுத்தி மீன்பிடி நடவடிக் கையில் ஈடுபடுகின்றனர் என்றே தெரிவிக்கப்பட்டிருந் தது.

சுண்டிக்குளத்தில் கடலட்டை பிடிக்க வருபவர்களிடம் அனு மதி இருக்கிறதா இல்லையா என்பதைச் சோதிப்பதே இரா ணுவத்தின் கடமை என்று 'உதயன்' பத்திரிகைக்கு ஜூன் மாத ஆரம்பத்தில் அனுப்பி வைத்த மறுப்பில் இராணுவம் ஒத்துக் கொண்டிருந்தது. அங்கு 5 நிறுவனங்கள் (3 நிறுவனங்களுக்கு மட்டுமே கடற்றொழில் அமைச்சு அனு மதி வழங்கியிருந்தது) கட லட்டை பிடிப்பதற்கு அனு மதிக்கப்பட்டுள்ளன என்றும் இராணுவம் அப்போது தெரி வித்திருந்தது. அதனையே 'உதயன்' தனது ஜூன் 18ஆம் திகதிய பதிப்பில் மீண்டும் சுட்டிக்காட்டியிருந்தது.

கருத்தரங்கு
கணக்கீடு
A/L - 2013
முகுந்தன்
BBA {HONS} MBA (FM Spl)
இடம்:- பொருளியற் கல்லூரி
காலம்:- 09.07.2013 } வரை
10.07.2013
குறிப்பு:- வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.

காணி, வீடு விற்பனைக்கு
உடுவில் கிழக்கு, சுன்னாகத்தில் அமைந்துள்ள 2 பரப்பு 5.79 குளி விஸ்தீரணமுடைய காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0752089405 -
(38883)

வாகனம் விற்பனைக்கு
ஆங்கில இலக்கமுடைய ஹயஸ் வாக னம் மற்றும் 25 ஸ்ரீ இலக்க உழவு இயந் திரமும் பெட்டியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0770377724, 0773113465, 0779208683

சாவகச்சேரியில் காணி விற்பனைக்கு
ஐயர் ஒழுங்கை நுணாவிலில் சிறிய வீட் டுடன் இணைந்த 8 பரப்பு காணி (A9 வீதிக்கு அருகில்) விற்பனைக்கு உண்டு. பிரித்தும் விற் கப்படும் பரப்பு - 3 ½ லட்சம்.
தொடர்புகளுக்கு:
0772687252 (38975) (10,8,3)

அதி சொகுசு வாகனங்கள் வாடகைக்கு



NPC Rent A Car
அரச, தனியார் அலுவலகங்கள், வீட்டில் இடம்பெறும் நற்காரியங்களுக்கு அதி நவீன சொகுசு கார்கள், வான்கள், பிக்கப்புகள், 4X4 வாராந்த, மாதாந்த, வருட அடிப்படையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். NPC ENTERPRISES
0718 486 160

சிறு நீரகம் தேவை
B+ குருதிப்பிரிவுடைய 25-38 வயதிற்கு உட்பட்ட ஆண்கள் சிறுநீரகம் தந்துதவ விரும்பினால் எம்மைத் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
077 5904031
38883

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம் 07 07 2013


# ஒரே ஒருநாள் பார்க்கவும் தடை

## மக்காளுக்கு மண்ணைக்கூட காட்ட நாதியில்லாச் சனம்

மயிலிட்டியில் கோயிலுக்குப் பொங்கல் வைக்கவென ஆவலுடன் சென்ற மக்களுக்கு இராணுவம் கடைசி நிமிடத்தில் அனுமதி மறுத்திருக்கிறது. ஒரேயொரு நாள்கூட தங்கள் சொந்த மண்ணை வாஞ்சையுடன் தழுவ தாம் அனுமதிக் கப்படாதமை குறித்து அவர்கள் கொதித்துப் போயிருக்கிறார்கள். ஆக்கிரமித்தவர்களுக்கு மண் மீதான பாசம் என்ன தெரியும் என்று அவர்கள் குமுறி வெடிக்கிறார்கள். கோயிலுக்குச் செல்ல அனுமதி பெறப்பட்டுள்ளதாகக்கூறி ஏமாற்றிய அமைச்சர் டக்ளஸ் மற்றும் அவரது அரசியல்வாதிகள் மீது கோபபப்படுகிறார்கள்

“2011ஆம் ஆண்டிலயும் ஒருக்கா விட்டவங்கள். அப்ப என்னால போக ஏலாமல் போயிட்டுது. இப்ப எனக்கு 79 வயசாச்சு. இனி உங்க போகலாம் எண்டு எனக்கு நம்பிக்கை யில்லை. என்ர சீவன் முகாமிலதான் போகும்போல கிடக்கு. என்ர ஊரில சாக நான் குடுத்துவைக்கேல்ல. இப்ப போய்ப் பாத்தா திரும்பி வர மனம் வராது. அத நினைக்கத்தான் கவலையாக் கிடக்கு. எல்லாருக்கும் ஊருக்குப் போறதெண்டா ச் சந்தோசம். ஆனா எங்களுக்குக் கவல. என்ன செய்ய? அதுதான் எங்களுக்கு விதி.

## தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியே!

பக்கம் 2

## திருமலை மாணவர்கள் படுகொலையில் திரும்பவும் தொடங்கியிருக்கின்றது விசாரணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 07 07 2013 ஞாயிற்றுக்கிழமை



# படுகொலை



## 8 ஆண்டுகளில் கண்ணீர் எழுதிய தீர்ப்பு

**தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்குச் சமமானது.**
-மார்ட்டின் லூதர் கிங், 1963




ஜெரா

2006ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 2ஆம் திகதி, இரவு 7.20 மணி. அந்தக் கடற்கரை வழமைபோன்று ஆரவாரித்துக் கொண்டிருந்தது. ஆனாலும் இருண்டிருந்த அரசியல் மேகம் ஆங்காங்கே பீதியலைகளை எழுப்பிக்கொண்டும் இருந்தது. ஆயுதங்களை அணிந்த தரப்பினர் இனந்தெரிந்தும், இனந்தெரியாமலும் அந்த வெளியெங்கும் வேவுபார்த்து அலைந்தனர்.

இவையெதையும் கவனிக்காத இளைஞர் கூட்டமொன்று அந்தப் பெரிய கடற்கரையின் காந்தி சிலைக்கு அருகில் உள்ள நீண்ட கட்டில் வழமைபோல அமர்ந்திருந்து உரையாடிக் கொண்டிருந்தது. அவர்களின் கதைகளில் சில அழகிகளும், முன்னாள், இன்னாள் காதலிகளும், பாடசாலையின் நாள்களும் இடம்பிடித்திருந்தன. அவர்களில் சிலருக்கு அப்போதுதான் காதலும் முளைத்திருந்தது. ஒருவன் காதலியுடன் தற்காலிக மோதலிலும் ஈடுபட்டிருந்தான்.

அந்தக் கலகலப்பு பொழுதுக்குள் பல்கலைக்கழக நுழைவுக்கான நாள்களும், பகிடிவதைப் பயப் பேச்சுக்களும் தாராளமாக இடம்பிடித்திருந்தன. கடல் அலையை உடைத்துக்கொண்டு மேலெழுந்த அவர்களின் சிரிப்பு வெடிகள் சூழலில் நடப்பவற்றை மறைத்திருந்தன.

### பயங்கரத்தின் நுழைவு

அந்தச் சூழலில் திடீரென ஓர் அசம்பாவித மழை அடித்தது. முச்சக்கர வண்டி ஒன்றில் வந்த இனந்தெரியாதநபர்கள் இந்த இளைஞர்கள் பக்கம் கைக்குண்டை வீசிவிட்டு வேகமாக ஓடி மறைந்தனர். அந்தக் கைக்குண்டு வெடித்ததில் அமர்ந்திருந்த ஐவரில் ஒருவன் காயப்பட்டு வீழ்ந்தான். திருமலை புனித ஜோசப் கல்லூரி மாணவரான யோகராஜா பூங்குழலோன் என அறியப்பட்டவனின் காலை அந்தக் குண்டு பதம்பார்த்திருந்தது. சக நண்பனை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல மிஞ்சியிருந்தவர்கள் முயன்றனர். சாவுப்பயம் அவர்களை முந்திக்கொண்டு பாய்ந்தது. நடுக்கமும், மிரட்சியும் அந்த இடமெங்கும் படர்ந்திருக்கையில் படையினரின் துப்பாக்கிகள் உரத்துப் பேசத் தொடங்கின. 10 நிமிடங்கள் வரையில் அவைகளின் உறுமல் இருந்தது. தாறுமாறான சுடுதலுக்குப் பலர் அப்போதுதான் அறிமுகப்பட்டனர். எல்லா பக்கமும் சிதறியோடினர்.

காயப்பட்ட நண்பனை விட்டு ஏனைய நால்வரும் அகலவில்லை. அவனின் இறுதிக் கணங்களை தாங்கியபடி நின்றிருந்தனர். அவர்களை கவனித்த துப்பாக்கி தாங்கிய இராணுவத்தினர் அவர்களைத் தாக்கி நிலத்தில் வீழ்த்தி, குண்டு வீசியவர் யாரென்று விசாரித்தனர். ''தெரியாது'' என்ற மாணவர்களின் வார்த்தையை கோரமாக எதிர்கொண்டனர். மாணவர்களை கீழே விழுத்தி அவர்களின் நெஞ்சை தமது சப்பாத்துக்கால்களினால் மிதித்தனர். காதுக்கருகில் துப்பாக்கி முனையை வைத்து சுடத் தொடங்கினர். அந்த இடத்திலேயே ஐந்து தமிழ் மாணவர்கள் பலியாகினர். தமிழர் தலைநகரின் சந்தோசம் தொடர்ந்து வந்த காலத்தில் இருண்டுபோனது.

### இராணுவம் சொன்ன பொய்

பலர் முன்னிலையில், போர் செய்வதை கண்காணிக்கும் சாத்தான்கள் முன்னிலையில், நடந்த படுகொலையை இராணுவம் பொய் என்றது. ராணுவத்தை நோக்கி குண்டு வீச வந்தவர்களே செத்தொழிந்தனர் என்றது. ஆனால் அது அனைத்தும் பொய்யென்பதை ஒரு புகைப்படப்போராளி உறுதிப்படுத்தினான்.

சுகிர்தராஜன். 'சுடர் ஒளி' மற்றும் 'உதயன்' பத்திரிகையின் தலைநகரச் செய்தியாளனாக செயற்பட்டவன். இந்த மாணவர்களின் படுகொலையையும் முதன் முதலில் உலகுக்கு ஆதாரப்படுத்தியவன் சுகிர்தராஜன். இராணுவம் சொன்னது பொய்யென்ற அவனது ஆதாரமே, அவனது உயிர் பறிப்புக்கும் பின் நாள்களில் காரணமாகியது. மாணவர்களின் படுகொலை நிகழ்ந்து 21ஆம் நாள் அலுவலகம் சென்று கொண்டிருந்த காலையில் அவன் சுட்டுக்கொல்லப்பட்டான். ஊடக உலகம், அபாயகரமான நாடொன்றில் துணிந்து பணியாற்றும் துணிகரமிக்க பேனாப் போராளியை இழந்தது.

அவனுக்காகவும் தீவிரப்படுத்தப்பட்ட விசாரணைகளும், விசாரணைக் குழுக்களும் சில காலங்களில் காணாமலேபோயின. இதுபோன்ற கட்டுரைகளுக்கு மட்டும் இப்போது சுகிர்தராஜன் ஆதரமாக நிற்கின்றான். ஆனாலும் சாவுக்கு முன் கணங்களில் அவன் உறுதிப்படுத்திய படுகொலை பெரும் நீதியின் சாட்சியாக மாறி [illegible] ஒரு வகையில் நேர்த்திமிகு [illegible] நிறைவேற் றிய திருப்தியில் சுகிர்தராஜன் துயில்வதாகக் கொள்ள முடியும்.

8 ஆண்டுகளுக்குப் பின்னர் அபூர்வமாக இலங்கை அரசிடமிருந்து ஒரு நடவடிக்கை வந்திருக்கின்றது. திருகோணமலையில் 5 மாணவர்களைப் படுகொலைசெய்தமை தொடர்பில் காவல்துறை சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த பன்னிருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இன்னும் சில நாள்களுக்கு விசாரணைகளுக்காக அனுராதபுர சிறையில் தடுத்துவைக்கப்படவுள்ளனர் என்ற செய்தியும் அந்த அபூர்வ தகவலுக்குள் சேர்த்துச் சொல்லபட்டிருக்கின்றது.

இந்தப் படுகொலை நடந்தேறிய காலம் முதல் பல கட்ட அழுத்தங்களையும், அறிக்கைகளையும் இலங்கை சந்தித்திருந்தது. மனித உரிமை அமைப்புகள், போர்க்குற்றக் கண்காணிப்பாளர்கள், எல்லாவற்றையும் வழிநடத்தும் அமெரிக்க அதிகாரிகள் எனப் பலரும் இந்த விசாரணையில் கரிசனை காட்டியிருந்தனர்.

இது தொடர்பில் தீவிரமான அழுத்தத்தை சர்வதேச மன்னிப்புச் சபை தொடர்ந்தும் விடுத்து வந்தது. அதன் உச்சக்கட்ட எச்சரிப்பை இப்படித்தான் குறிப்பிட்டிருந்தது.

''2006இல் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி அதிபர் செயலக விசாரணை ஆணைக்குழுவாலு பின்னர் 2011இல் கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவாலும் திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் விசாரிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்ட போதிலும் இது வரை இது தொடர்பான உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையானது சிறிலங்கா அரசாங்கம் இவ்வாறானதொரு விசாரணையை மேற்கொள்ள முடியாதுள்ளதை அல்லது நாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்பளிப்பதை உறுதிப்படுத்த அரசு விருப்பங் கொண்டிருக்கவில்லை என்பதையே தெளிவாக சுட்டிக்காட்டுகிறது''

இலங்கை மேற்கொண்ட மனித உரிமை மீறல் சம்பவங்களை, சரியான மிரட்டல் ஆயுதமாக பயன்படுத்தும் அமெரிக்காவும் இ[illegible] ஐவரின் படுகொலையைக் கவனித்து வந்தது.


''திருகோணமலைக் கரையோரத்தில் ஐந்து தமிழ் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்த நிலையிலும் சிறிலங்கா அரசாங்கம் இது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனை பாதுகாப்புப் படையினரே மேற்கொண்டதற்கான வலுவான சாட்சியங்கள் காணப்படுகின்ற போதிலும்கூட குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கான எந்தவொரு உரிய நடவடிக்கையையும் இந்தநாட்டு அரசால் முன்னெடுக்கப்படவில்லை.

என்று வெளிப்படையாக போட்டுடைத்தார் அமெரிக்காவின் இலங்கை தொடர்பான வல்லுனர் ஜிம் மக்டொனால்ட் (2013).

இலங்கை அரசு மேற்கொள்ளும் விசாரணைகளும், விசாரணைக்காக அமைக்கப்படும் குழுக்களும் நம்பகத் தன்மையற்றவை. காலங்கடத்தும் கருவிகளாகவே அந்த விசாரணைக்குழுக்கள் காணப்படுகின்றன என்பதையும் மனித உரிமைகள் அமைப்புகள் இந்த படுகொலை விடயத்தை உதாரணப்படுத்தி சுட்டிக்காட்டியிருக்கின்றன. மறக்கப்பட்ட ஜனாதிபதி செயலக விசாரணை ஆணைக்குழு மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் சபை என்பன உள்ளடங்கலான பலவற்றில் திருகோணமலையில் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் முதன்மை இடத்தில் உள்ளதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ள போதிலும் கெட்டவாய்ப்பாக இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

திருகோணமலையில் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் திருகோணமலையில் 17 உதவிப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை போன்ற பிரபமான வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை இனங்கண்டு நீதிமுன் நிறுத்தினால் இலங்கை அரசை நம்புவதில் சிறிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நியாயம் உள்ளது. ஆனால் இது எதுவும் நடக்கவில்லை என்பது கவலை தருகிறது என மனி உரிமைகள் கண்காணிப்பக ஆசிய பசுபிக் இயக்குனர் பிறட் அடம்ஸ் தனது அறிக்கை ஒன்றில் கூறி இருக்கிறார். இலங்கையில் தொடர்ந்தும் நடத்தப்பட்டு வருகின்ற மனித உரிமை மீறல்கள், படுகொலைகள், காணாமல்போதல்கள் தொடர்பில் அதிகம் அக்கறை காட்டாத சர்வதேச சமூகம் இந்த விடயத்தில் மாத்திரம் இவ்வளவு அக்கறை எடுத்திருப்பதற்கு ஒருவரின் கண்ணீர் போராட்டமும் முக்கிய காரணம். படுகொலை செய்யப்பட்ட மாணவர்களில் ஒருவரின் தந்தையான கந்தப்பு மனோகரன் விடாப்பிடியாக செயற்பட்டிருக்கின்றார். அவரின் நீதிகோரல் போராட்டம் காரணமாக இலங்கையில் வாழமுடியாத நிலையையே எதிர்கொண்டிருக்கின்றார். ஆயுதம் தரித்தோரின் உயிரச்சுறுத்தல் காரணமாக புகலிட தஞ்சம் கோரி நாடுகடந்த நிலையிலும் போராடியிருக்கின்றார். அவரின் கண்ணீர் போராட்டம் அமெரிக்க தெருக்களில் மனித உரிமைக் காப்பாளர்களை அணிதிரட்டியிருக்கின்றது. இலங்கையில் நடக்கும் மனிதப் படுகொலையை அம்பலமாக்கும் அணிப் போராட்டங்களுக்கு உதவியிருக்கின்றது.

மார்ச் 15,2013இல் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் வருடாந்த மீளாய்வுக் கூட்டத்தில் கந்தப்பு மனோகரன் நேரடியாகப் பங்குகொண்டார். இலங்கை அரசு நடத்தும் எந்தவிதமான நீதி விசாரணைகளும் அர்த்தமற்றவை என்பதை சர்வதேச அங்கத்தினருக்கு தெளிவாக சொல்லியிருந்தார். அந்தக் கூட்டத்தொடரில் அவரின் கண்ணீரோடு கரைந்தொழுகிய கதைகள் இப்படித்தானிருந்தன.

''திருகோணமலையில் கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் ஐவரில் எனது மகன் ரஜீகனும் ஒருவர். ஐந்து மாணவர்கள் சார்பிலும் நான் நீதி கேட்கிறேன். மாணவர்கள் கொல்லப்பட்டு 7 வருடங்கள் சென்றுவிட்டன. ஆனால் இதுவரை நீதி இல்லை. (அழுகிறார்) சட்ட மா அதிபர், பொலிஸ் மா அதிபருக்கு விசாரணை நடத்தப் பணித்துள்ளதாக கூறப்பட்டது. ஆனால், இதுவரை ஒன்றும் நடக்கவில்லை. நாங்கள் இலங்கையில் இருந்து கட்டாயமாக வெளியேற வேண்டிய சூழ்நிலை உருவானது. மனதின் வலி, அழுத்தங்கள் எங்களை மேலும் வாட்டுகின்றன. இதனால்தான் நீதி கேட்டு மனித உரிமைகள் பேரவையிடம் வந்துள்ளோம். (அழுகிறார்)


சர்வதேச ரீதியான விசாரணை தேவை. இலங்கை நீதிமன்றங்களில் எனக்கு நம்பிக்கை இல்லை. இதற்கு மேல் என்னால் பேச முடியவில்லை. என்னை மன்னியுங்கள்.

இவ்வாறு கூறியபடி கண்ணீருடன் உரையை நிறுத்தினார் மனோகரன்'' என்று சர்வதேச ஊடகமொன்று பலமாகப் பதிவிட்டிருக்கின்றது.

இந்தக் கண்ணீருக்கு கட்டுப்பட்டவர்களின் அழுத்தங்களின் விளைவும், பொதுநலவாய நாடுகளது தலைவர்களின் மாநாட்டுக்கு முன்னர் நல்லபெயரை எடுக்கவேண்டும் என்ற அவாவும் இந்தப் 12 சந்தேகக் கொலையாளிகளினதும் கைதுக்கு காரணமாக இருந்திருக்கும்.

ஆனாலும் இந்தக் கைதுகளும், தீர்ப்பளிப்புக்களும் இலங்கையில் செல்லுபடியாகும் என்று எதிர்பார்க்கமுடியாது. அதை நம்பவும் முடியாது. ஏற்கனவே இதுபோன்று இராணுவத்தினருக்கு எதிராக அளிக்கப்பட்ட தீர்ப்புக்களுக்கும், கைதுகளுக்கும் இறுதியில் என்ன நடந்தது என்பது யாருக்கும் தெரியாதது அல்ல. பித்தெனுவெவ படுகொலை தொடர்பில் மேல் நீதிமன்றால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் உயர் நீதிமன்றால் நிரபராதிரிகள் என விடுவிக்கப்பட்ட வரலாறு இலங்கையில் மட்டுமே நடந்திருக்கிறது. சரியான முடிவு வரும் நம்பிக்கைக்கு போறை நம்புவது என்ற கேள்வியை தூரத் தூக்கிப் போட முடியவில்லை.

ஆனால், இதுவரை ஒன்றும் நடக்கவில்லை. நாங்கள் இலங்கையில் இருந்து கட்டாயமாக வெளியேற வேண்டிய சூழ்நிலை உருவானது. மனதின் வலி, அழுத்தங்கள் எங்களை மேலும் வாட்டுகின்றன. இதனால்தான் நீதி கேட்டு மனித உரிமைகள் பேரவையிடம் வந்துள்ளோம். (அழுகிறார்)
சர்வதேச ரீதியான விசாரணை தேவை. இலங்கை நீதி மன்றங்களில் எனக்கு நம்பிக்கை இல்லை. இதற்கு மேல் என்னால் பேச முடியவில்லை. என்னை மன்னியுங்கள்.



# சொந்த நிலத்தில் சாகக் கூடக் குடுத்து வக்கேல்ல

வாய் நிறைய வெற்றிலை, நரைத்துபோன தலைமுடி வெள்ளை வேட்டி சட்டை, பழுத்த அனுபவம், காத்திருப்பின் வலி முகத்தில் கோடுகளாகப் பதிவிட்ட சுருக்கங்கள் முடிந்துவிடாத காத்திருப்புடன் அந்த இரு வயோதிபர்களும் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு முன்னால் குந்தியிருக்கிறார்கள்.

இடையிடையே சோகம் கலந்த விரக்தியான சிரிப்புடன் அவர்களது உரையாடல் தொடர்கின்றது. ஒன்றன்பின் ஒன்றாக விரைந்த மின் பஸ்களைக் கண்ட ஒரு முதியவர் ''எங்கட ஆக்கள்தான் போறாங்கள்'' என்று கூறிக் கொண்டு. எழும்ப முடியாமல் எழும்பினார். ''நீ போறியோ'' என்று மற்றைய முதியவர் கேட்டார் எந்தப் பதிலும் இல்லை. அவ்வளவு அவசர அவசரமாக அந்த முதியவர் சென்று மறைந்தார். அவர் சென்ற பின்னே தன்னந் தனியாக இருந்த முதியவருடைய கண்கள் அங்கும் இங்கும் பார்க்கின்றன. இடையிடையே அந்தக் கமராக் கண்கள் என்னையும் கவனித்தது. சிறிது நேரத்தில் நான் அவர் அருகில் சென்று ''ஐயா!'' என்று விளித்தேன். அதற்காகவே காத்திருந்ததுபோன்று ஆரம்பித்தார், ''இண்டைக்கு மயிலிட்டிக்குப்போக விடுராங்களாம் எண்டு பேப்பரில போட்டிருந்தது. அதுதான் ஒருக்கா என்ர மக்களுக்கு எங்கட இடங்கள காட்டுவம் எண்டு வந்தனான். மக்கள் வாறன் எண்டாங்கள், அதுதான் பாக்கிறன்'' என்றார் முதியவர்.

''உவங்கள் சும்மா உப்பிடி விடேக்கதானே மோன போகலாம். ஆமிக்காரர் எங்கள அங்க இருக்க விடவே போறாங்கள்?'' என்றபடி மறுபடியும் கண்களால் தேடத்தொடங்கினார்.


மினி பஸ்கள் அடுத்தடுத்து வந்து கொண்டிருந்தன. எல்லா பஸ்களிலும் மக்கள் திரண்டிருந்தனர். அங்கிருந்த ஒருத்தர் கத்தினார், ''எங்கட ஆக்களுக்குள்ள ஒற்றுமை இல்ல. எல்லாரும் திக்கு திக்கா நிக்கிறாங்கள் ஒண்டா நிண்டா கெதியாப் போகலாம்''. தூரத்தி ் இருந்து பதில் கத்தல் பலமாக வந்தது. ''முப்பது வருசமா ஒண்டா இருந்து என்னத்த கிழிச்சனாங்கள்?''

இப்படிப் பல குரல்கள், கூச்சல்கள், கத்தல்கள், சிரிப்பு என எல்லோரும் சந்தோசத்துடன் அங்கும் இங்குமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். ஊருக்குள்ளே போகப்போகிறோம் என்ற பூரிப்பு அவர்கள் முகங்களை அகல விரித்திருந்தது.

பெரிய பானை, அகப்பை, அரிசி வாழைப்பழம், தேங்காய், எனப் பல பொருள்களுடன் 'படி' வான்கள் பலவும் நின்றிருந்தன. மயிலிட்டியில் உள்ள ஒவ்வொருவருடைய குல தெய்வங்களுக்கு பொங்கிப் படைப்பதற்கான ஏக்கத்துடன் நின்றிருந்தன.

இந்த ஆரவாரங்களுக்கு மத்தியில் முதியவர் இன்னும் காத்திருக்கிறார். அந்த நேரத்தில் எனக்குக் கதை சொல்லவும் அவர் மறக்கவில்லை.

''முந்தி மாதத்துக்கு ரெண்டு இல்லாட்டா மூன்று கப்பல் காங்கேசன்துறைக்கு வரும். நாங்கள் அந்தக் கப்பல்கள எதிர் பாத்துக்கொண்டு இருப்பம். கப்பல் வந்தா எங்களுக்கு பலு புழுகம். நான் மூட்ட தூக்கிற வேலதான் செய்தனான். அரிசியள், மா, சீனியள் இப்படி கனக்க வரும் கப்பலில. எங்கட சனம் அப்ப சாப்பிட்ட சாமான்களில எல்லாம் என்ர வலி இருக்கும். ஏனெண்டா என்ர தோள் சுமந்த சாமனுகளத்தான சனம் அப்பச் சாப்பிட்டது.''



இப்ப இருக்கிற கலைமகள் பள்ளிகூடம் அப்ப ஒரு அறையோட ஒரேயொரு மாஸ்ரரோட இருந்திச்சு. மயிலிட்டீக்க இருந்த பெரிய கோயில் ஒண்டுதான். பெரிய கோபுரத்தோட இருந்தது. மற்றதுகள் புதுமையான சின்ன சின்ன கோயில்கள். என்ர ஆறு பிள்ளயளும் மயிலிட்டிலதான் பிறந்ததுகள்.

என்ர 56 வயசில அங்கயிருந்து வெளிக்கிட்டனாங்கள். அண்டைக்கு என்ர கடசி மகனுக்கு 12 வயதிருக்கும்.

இத்தினை வருசத்துக்குப் பிறகு ஒரே ஒருநாள் போய் பாத்துட்டு வா எண்டா எப்பிடி ஏலும். நான்

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பின நாயகன்

உலக உலாவில்
உலவிய என் கண்கள்
காதல் கொண்டது
கறுப்பின நாயகனே
உன்னிடத்தில்
கலகங்கள் பல கடந்தும்
கலங்காத சூரியனுக்கு
மரியாதை தருகின்ற
மனிதர்களில் நானும்
ஒருவன்
அன்புள்ள தந்தையோ...!
அயர்ந்து தூங்கி விடாதே
உன்னுள்ள ஆளுமையை
தொழுகின்ற
இதயமொன்று
தொழுகிறது
உன்னுடலுக்கு நலம்
வேண்டி...!
எழுந்து வா விதையே
விழுதெறிந்த
விருட்சமே- என்
விரல் பிடித்து நடப்பதற்கு
வீரமிருக்கிறது இந்த
விடலைக்கு
நரம்புகளில் ஓடுகின்ற
குருதி
நாள் தோறும் ஓடட்டும்
தடையின்றி....
நுரையீரல் நோயென்று
தரை சேர எண்ணாதே
நிரையாக நின் மக்கள்
ஊட்டுகின்ற
நித்திய சுவாசம்
நிச்சயமாய்க் காக்கும்
நீ- எழுந்து வா...!
இயற்கையை நண்பனாக்கி
வரலாற்றை
வழிகாட்டியாக்கி
வாழ்க்கையை
தத்துவாசிரியனாக்கி
இயம்பிய எந்தைக்கு
இனியும் நீதான் ஊன்று
கோல்...
தணியாத
தலைவனே - இந்த
மண்டலத்தின்
நெல்சன் மண்டேலாவே
மனிதாபிமானியே...
மனிதனின் மனச்சாட்சியே
மகோன்னதமே
மகிழ்ந்திருக்க
வேண்டுகிறேன்
எழுந்திரு
இங்கேயெம் இதயங்கள்
வலிக்கிறது
சுகம் பெற யாகங்கள்
செய்கிறது
அக உணர்வுகள்...
ஐயனே நீ...
நீடூழி வாழ்க...!



கவிஞர்.
த.பருத்தி:தாசன்

# மண்டேலா என்னும் மாமனிதர்

*ராஜராஜன்*

நெல்சன் மண்டேலா என்ற அந்தக் கருங்குயில் எம்மை விட்டுப் பிரிந்து எங்கோ கண் காணாத தொலைவுக்குப் பறந்து சென்று விடும் என்ற அச்சம் கவலை தருகிறது: இனிமேல் அந்தக்குயிலின் இதயத்திலிருந்து வெளிவரும் சுதந்திர கீதத்தை நாம் கேட்க முடியாதோ?

மண்டேலா என்ற மாமனிதர் தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் தலைவராகவும், விடிவெள்ளியாகவும் மட்டும் திகழவில்லை. இந்த உலகில் வாழுகின்ற கோடானுகோடி அல்லற்படுகின்ற மக்களின் மீட்பராகவும் அவர் கருதப்பட்டார்.

அகிம்சை வழியிலான அவரது சிந்தனையும், செயற்பாடுகளும் அவரை, இந்தியாவுக்கு சுத்ந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த மகாத்மா காந்தியுடன் ஒப்பிட வைத்தன.

இந்த நவீன உலகிலும் இன ஒதுக்கல் என்ற கொடிய முள் விருட்சம் பரந்து நின்ற தென்னாபிரிக்காவில் 1918 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18 ஆம் திகதி தெம்பு இனத் தலைவரின் மகனாக மண்டேலா பிறந்தார். இவரது வாழ்க்கை ஆரம்பம் முதலே கொடிய முட்புதர்கள் நிறைந்ததாக அமைந்திருந்தது. தமது சொந்த மண்ணில் பெரும்பான்மையினராகக் காணப்பட்ட கறுப்பின மக்கள் வந்தேறு குடிகளான சிறுபான்மை வெள்ளையர்களால் மிருகங்களை விடவும் கேவலமாக நடத்தப்படுவதைக் கண்டு சிறு பராயத்திலேயே மண்டேலா துடிதுடித்துப் போனார். வெள்ளையரின் ஆதிக்கத்தை அடியோடு தகர்த்து தமது மக்களுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்ற வெறி அவரது அடி மனதில் கிளர்ந்தெழுந்தது. இதனால் பல்கலைக்கழக மாணவராக இருந்த போதே தமது போராட்டத்தை ஆரம்பித்தார். இதனால் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். சோர்வுறாத மண்டேலா வேறொரு பல்கலைக்கழகத்தில் இணைந்து சட்டத்துறையில் பட்டம் பெற்றார்.

அந்த வேளையிலே தென்னாபிரிக்காவில் வெள்ளையரின் இன ஒதுக்கல் கொள்கை உச்சக் கட்டத்தில் இருந்தது. நாட்டின் சனத்தொகையில் கறுப்பின மக்கள் 80 சத வீதத்தினராக இருந்த போதிலும், சிறுபான்மை வெள்ளையர்கள் அவர்களைக் கொத்தடிமைகளாக நடத்தினர். வெள்ளையர்கள் வசிக்கும் பகுதிகளில் கறுப்பின மக்கள் நடந்து செல்வதற்குக்கூட தடை விதிக்கப்பட்டது. மேலும் மொத்த நிலப்பரப்பில் 13 விழுக்காடு அளவான நிலமே கறுப்பினத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. பொறுமையை இழந்த இந்த மக்கள் அமைதியான வகையில் போராட்டங்களை முன்னெடுத்தனர். ஆனால் வெள்ளையின ஆட்சியாளர்கள் எவ்வித முன்னறிவித்தலும் இல்லாது போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது கொடூரமான தாக்குதலை மேற்கொண்டனர். இதில் பலர் கொல்லப்பட்டனர். ஆயிரக் கணக்கானோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். மண்டேலா அங்கம் வகித்த ஆபிரிக்க தேசிய காங்கிரஸும் தடை செய்யப்பட்டது. இதனால் ஆயுத வழியிலான போராட்டமே தமது மக்களின் விடுதலைக்கு உதவுமென நம்பிய நெல்சன் மண்டேலா தமது நெருங்கிய நண்பர்கள் சிலருடன் இணைந்து நாட்டைவிட்டு வெளியேறினார்.

1962 ஆம் ஆண்டு அவர் நாடு திரும்பிய பின்னர் கைது செய்யப்பட்டார். 1964ஆம் ஆண்டு ஆயுள் சிறைத் தண்டனையும் அவருக்கு விதிக்கப்பட்டது. 27 ஆண்டுகள் இருள் சூழ்ந்த தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார். போதிய வெளிச்சம் கிடைக்காததால் இவரது கண்கள் பாதிக்கப்பட்டன.

இந்த நிலையில் 1973 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் இனிமேல் போராட்டத்தில் ஈடுபட மாட்டேன் என மண்டேலா உறுதியளித்தால் அவரைச் சிறையிலிருந்து விடுதலை செய்வதாக வெள்ளையின ஆட்சியாளர்கள் ஆசை வார்த்தைகள் கூறியபோதிலும் தமது மக்களின் விடுதலையின் மீது அவர் கொண்டிருந்த வேட்கை காரணமாக இவற்றை நிராகரித்தார்.

இறுதியில் உலக நாடுகள் தென்னாபிரிக்காவை ஒதுக்கி வைத்துவிட்டு அதிகளவில் நெருக்குதல் கொடுத்த காரணத்தினால் 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி மண்டேலா சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். அவரது விடுதலையை முழு உலகமும் கொண்டாடியது. குறிப்பாக பல்வேறு நாடுகளிலும் ஒடுக்கப்பட்ட நிலையில் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த மக்கள் தாம் சிறையிலிருந்து விடுதலை பெற்றதைப் போன்று மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர்.


பின்னர் 1994 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மண்டேலா அமோக வெற்றி பெற்றார். அவர் நினைத்திருந்தால் தமக்குக் கொடுமைகள் பலவற்றை மேற்கொண்ட வெள்ளையர்களைத் தண்டித்திருக்கலாம். ஆனால் இந்த உத்தமர் அதனை மேற்கொள்வதற்கு ஒரு போதுமே நினைக்கவில்லை. மாறாக இன ஒதுக்கல் சட்டங்களை உடனடியாக நீக்கினார். பழைய கொடுமையான, கசப்பான விடயங்களை மறந்து தென்னாபிரிக்க மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து புதியதொரு சுபீட்சமான நாடொன்றை உருவாக்குவதற்குப் பாடுபடுவோம் என அனைவருக்கும் அறைகூவல் விடுத்தார்.

மண்டேலாவின் இத்தகைய உயர்ந்த பண்பு உலகளவில் அவரை உயர்த்தி வைத்தது. சமாதானத்தின் காவலனாக அவர் போற்றப்பட்டார். 1993 ஆம் ஆண்டு இவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டு மண்டேலா தாமாகவே அதிபர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். ஆனால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான அவரது குரல் தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருந்தது.

எமது மண்ணிலே இடம்பெற்ற விடுதலைப் போராட்டத்தை மண்டேலா முழு அளவில் ஆதரித்தார். சிறுபான்மை தமிழ் மக்கள் மீது அவருக்கு என்றுமே அனுதாபம் இருந்தது. தமது நாட்டு மக்கள் அனுபவித்த துன்பங்களையே இங்குள்ள தமிழ் மக்களும் அனுபவிக்கின்றார்கள் என்பதைப் புரிந்து கொண்டதால் அவர் எம்மை ஆதரித்தார்.

கறுப்பின மக்களில் உலகளாவிய ரீதியில் மண்டேலா போன்று வேறு எவருக்கும் கௌரவம் வழங்கப்படவில்லை எனத் துணிந்து கூறலாம். தமது கொள்கைகளாலும், செயல்களாலும் உயர்ந்து நின்ற அந்தப் பெரு விருட்சம் இன்று சாய்ந்து விட்டது. ஆனால் ஒடுக்கப்பட்ட மக்கள் இந்த உலகில் இருக்கும் வரை அவரது நினைவுகள் என்றுமே மறையாது நீடித்து நிற்கும் என்பதில் ஐயமே இல்லை.

இன்னொரு மண்டேலாவின் உதயத்துக்காக நாம் அனைவரும் காத்திருப்போம். அந்த உன்னதமான மனிதர் என்றுமே எம்மை விட்டுச் செல்ல மாட்டார். எப்போதுமே எம்முடன் இருப்பார்.



கறுப்பின மக்களில் உலகளாவிய ரீதியில் மண்டேலா போன்று வேறு எவருக்கும் கௌரவம் வழங்கப்படவில்லை எனத் துணிந்து கூறலாம். தமது கொள்கைகளாலும், செயல்களாலும் உயர்ந்து நின்ற அந்தப் பெரு விருட்சம் இன்று சாய்ந்து விட்டது. ஆனால் ஒடுக்கப்பட்ட மக்கள் இந்த உலகில் இருக்கும் வரை அவரது நினைவுகள் என்றுமே மறையாது நீடித்து நிற்கும் என்பதில் ஐயமே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒரே ஒருநாள் பார்க்கவும் தடை

டிலீப்அமுதன்

யாழ். மாவட்டத்தின் வலிகாமம் வடக்கில் காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு அருகாக இருக்கிறது மயிலிட்டிக் கிராமம். 1990களுக்கு முன்னர் யாழ். குடாநாட்டின் மீன்பிடியில் கணிசமான உற்பத்தியை வழங்கிய மிக வளம்மிக்க பகுதி. இரு தசாப்த காலங்களாக அங்கிருந்த மக்கள் வெளியேற்றப்பட்டு விரட்டப்பட்டிருக்கிறார்கள்.

வருடங்களின் பின்னர் தங்கள் சொந்த மண்ணின் வாசனையை ஒரேஒருநாளாவது நுகர்வதற்காக ஜுலை 5ஆம் திகதி மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் முன்பாகக் கூடிக் காத்திருந்தார்கள். அன்று கரும்புலிகள் தினம்.

## ஒருநாள் அனுமதி

மயிலிட்டியிலுள்ள இந்து ஆலயங்களில் வழிபாடுகள் நடத்துவதற்கு ஒரு நாள் மாத்திரம் பாதுகாப்பு அமைச்சு அனுமதியளித்திருந்தது என அறிவிக்கப்பட்டிருந்ததால் அவர்கள் காத்திருந்தார்கள். வழமை போன்று அரச அறிவிப்புக்கள் எல்லாமும் தன்னால்தான் நடந்ததாக உரிமை கோரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இதற்கும் [illegible]போக உரிமை கொண்டாடியிருந்தார். ஆனால் கூடியிருந்த மக்களிடையே அவர் இல்லை.

மயிலிட்டி மக்கள் 1990ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15ஆம் திகதி தங்கள் சொந்த மண்ணிலிருந்து இடம் பெயர்ந்தனர். மூன்று மணி நேரத்தில் வீடு திரும்பலாம் என்ற நினைப்பில் புறப்பட்டவர்கள் 23 வருடங்கள் கடந்தும் இன்னமும் தங்கள் மண்ணைப் பார்க்கக்கூட முடியாமல் ஏங்கித் தவிக்கின்றனர்.

மயிலிட்டியிலுள்ள இந்து ஆலயங்களில் பூசை வழிபாடு செய்வதற்கு ஒரு நாள் மாத்திரம் பாதுகாப்பு அமைச்சு வழங்கியிருந்த அனுமதியை அந்த மக்கள் தமது மண்ணைப் பார்ப்பதற்குக் கிடைத்த அரிய சந்தர்பமாக எடுத்துக் கொண்டு மாவிட்டபுரத்துக்குப் படையெடுத்தனர்.

## ஊரைப் பார்க்கும் துடிப்பு

இந்த ஒரேஒரு நாள் தங்கள் ஊரின் மண்ணை மிதிப்பதற்காக கடல் கடந்ததேசங்களிலிருந்தெல்லாம் கூட மக்கள் வந்திருந்தனர். இலங்கையின் வேறு மாவட்டங்களில் தங்கியிருந்த மக்களும் இந்தச் சந்தர்பத்தை சரிவரப் பயன்படுத்தி தங்கள் ஊரை எப்படியாவது ஒரு முறை பார்த்து விட வேண்டும் என்று துடித்தனர்.

''2010ஆம் ஆண்டு 2011ஆம் ஆண்டு மயிலிட்டியில கோயிலைப் பார்க்க போக விடேக்க நான் போகேல்ல. எப்பிடியும் சண்டை முடிஞ்சு போட்டுது எங்கட இடத்தை விடுவாங்கள்தானே என்று இருந்திட்டன். இப்ப அங்க போறத நினைச்சா கவலையாருக்கு. எங்கட இடத்தை ஒருக்காப் பார்த்தாலும் அதை விட்டுட்டு வர மனசு வராது. இவங்கள் எங்கட காணியள நிரந்தரமாக பறிக்கப் போறாங்கள். இனி நான் ஊரைப் பார்ப்பனோ தெரியாது. அதுதான் இந்த முறை வந்தனான்'' என்றார் ஐயாப் பிள்ளை பரிதாபமாக.

79 வயதான ஐயாப் பிள்ளை மயிலிட்டியைச் சொந்த இடமாகக் கொண்டவர். தனது 56 ஆவது வயதில் 6 பிள்ளைகளுடன் ஊரை விட்டு வெளியேறியவர். ஊரில் சொந்தக் கல் வீட்டில் வாழ்ந்தவர். தற்போது தொட்டியாலடியிலுள்ள கண்ணகி குடியிருப்பு முகாமில் ஒரு மனிதர் வாழத் தகுதியற்ற ஒரு தகரக் கொட்டகையில் வாழ்கின்றார். ஐயாப்பிள்ளை ஒரு சோற்றுப் பதம் தான். இத்தகைய சோகக் கதைகளை அங்கிருந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் கொண்டிருக்கின்றனர். 20 வயதுக்குக் குறைந்தவர்கள் எல்லோருக்கும் தங்கள் தாய் தந்தை பாட்டன் பூட்டன் வாழ்ந்த மண்ணைப் பார்க்கும் ஆவல். கற்பனையில் மட்டுமே அவர்களுக்கு தங்கள் சொந்த மண்ணைத் தெரிந்திருந்தது. அதனை ஒரு தடவை கண்ணில் ஒற்றிப்போகத்தான் அவர்கள் அன்று வந்திருந்தார்கள்.

வெவ்வேறு இடங்களிலிருந்து வந்து சேர்ந்த மினிபஸ்கள் எல்லாம், உயர்பாதுகாப்பு வலயத்தினுள் செல்வதற்கான அனுமதி வரும் வரையில் மாவிட்டபுரத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

## நினைவுகளின் மீட்சி

மாவிட்டபுரம் முன்பாகக் கூடியிருந்தவர்களிடையே குசலம் விசாரிப்புகளும் நலப் பரிமாற்றங்களும் தாராளமாக நடந்துகொண்டிருந்தன. பல வருடங்களின் பின்னர் அவர்கள் அன்று சந்தித்துக் கொண்டிருந்தார்கள். தங்கள் பிள்ளைகளை, பூட்டப் பிள்ளைகளை அடுத்த தலைமுறைக்கு அறிமுகம் செய்து வைத்துக் கொண்டனர். தாங்களும் அறிமுகமாகிக் கொண்டனர்.

மூன்று கோயில்களிலும் பொங்கல் வைப்பதற்காகவும், ஊருக்கே அன்ன தானம் வழங்குவதற்காகவும் தேவையான பொருள்களுடன் அவர்கள் வந்திருந்தனர். கோயிலில் ஒரு நாள் பூசை வைத்தாலும் ஊர் திருவிழாவாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒலி பெருக்கிகள்கூடத் தயாராக எடுத்து வரப் பட்டிருந்தன.

ஊருக்குள்ளே சென்று திரும்பி வருவதற்கு பின்னேரம் ஆகுமென்றபடியால், மாவிட்டபுரத்திலுள்ள சாப்பாட்டுக் கடையில் சோடாக்கள், தண்ணீர்ப் போத்தல்கள், பிஸ்கட் பைகள் என்று எல்லோருமே கொள்வனவு செய்து அடுக்கியிருந்தனர். காலை 7.30 மணிக்கு மாவிட்டபுரத்தில் கூடிய மக்கள் நேரம் 8.30 மணியைத் தாண்டியிருந்த போதுகூட கலகலப்பாகத் தங்கள் ஊர்ப் புதினங்களை பகிர்ந்து கொண்டிருந்தனர்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலிருந்து நூறு மீற்றர் தூரத்தில் உயர் பாதுகாப்பு வலய நுழைவாயிலுக்கான சோதனைச் சாவடி உள்ளது. அதனைத் தாண்டி மக்கள் செல்ல இராணுவத்தினர் விடுவதற்கான எந்தச் சமிக்ஞைகளும் இல்லை. எனவே, இந்த மயிலிட்டி செல்லும் ஏற்பாடுகளை மேற்கொண்டதாக உரிமை கொண்டாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதி என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட அங்கயற்கண்ணியும் ஒரு சில பொதுமக்கள் சோதனைச் சாவடிக்குச் சென்று இராணுவத்தினருடன் பேசினர்.

## மறுக்கப்பட்ட அனுமதி

அப்போதுதான் இராணுவத்தினர் பெரிய குண்டைத்தூக்கிப் போட்டனர். 200 பேரை மாத்திரமே மயிலிட்டுக்குள் அனுமதிக்கலாம் என்று அவர்கள் தெளிவாகச் சொல்லினர். அங்கோ ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் எதிர்பார்ப்புக்களுடன் கூடியிருந்தனர்.

பேசச் சென்றவர்களுக்குக் கடும் அதிர்ச்சி. இராணுவத்தினருடன் தர்கத்தில் ஈடுபட்டனர். கோபப்பட்டனர். சொந்த மண்ணைப் பார்க்கக்கூட முடியாத கையறுதனத்தை கோபமாக வெளிப்படுத்தினர்.

உடனடியாகவே அங்கயற்கண்ணி அங்கிருந்த மக்கள் எல்லோரையும் மாவிட்டபுரத்துக்குச் செல்லுமாறு பணித்தார். தான் இராணுவத்தினருடனும், அமைச்சருடனும் பேசி முடிவைச் சொல்வதாகச் சொல்லி மக்களை 'நைஸாக' கழற்றி விட்டார்.

மாவிட்டபுரத்தில் கூடி நின்ற பெரும் கூட்டம் இராணுவத்தின் இறுக்கமான கட்டளையைக் கேட்டதும் கொதித்துக் கொந்தளித்தது. அவர்கள் எவ்வளவோ ஏக்கங்களை

(20 ஆம் பக்கம் பார்க்க)



200 பேரை மாத்திரமே மயிலிட்டுக்குள் அனுமதிக்கலாம் என்று அவர்கள் தெளிவாகச் சொல்லினர். அங்கோ ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் எதிர்பார்ப்புக்களுடன் கூடியிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித குலமும் தமிழ்த் தேசியமும்

## தேசிய இனங்களும் நாடுகளும்



பழநெடுமாறன் நீண்ட காலமாகத் தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுப்பவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளர். விடுதலைப் புலிகள் இயக்கம் வன்னியில் போராட்டங்களை நடத்தியபோது தமிழகத்திலிருந்து வந்து தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துச் சென்றவர். இன்று வரைக்கும் ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக தமிழகத்தில் இருந்தபடி தளர்வற்று தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருபவர். தமிழ்த் தேசியத்தை மனித குல வரலாற்றுடன் தொடர்புபடுத்தி அவர் எழுதும் புதிய தொடர் இது. பல நூல்களை, ஆய்வுக் கட்டுரைகளைப் படித்த பின்னர் அவர் இந்தத் தொடரை எழுதுகிறார். "தமிழினம் ஒரு தொல்லினம் மட்டுமல்ல செழுமையான பண்பாட்டுப் பரப்பை உருவாக்கி அதன் மீது ஒரு சீரிய நாகரிகத்தையும் உருவாக்கி உலகனைத்தும் தனது இருப்பை நிலைநிறுத்தி இருக்கும் ஓர் இனம் என்பதால் தமிழ்த் தேசியத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இன்று தேசிய இனங்களின் வாழ்வும் சுயநிர்ணய உரிமையும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. இந்த நிலையில் தமிழினத்தின் தொன்மை குறித்தும், அது தேசிய இனமாக இயங்கி வந்திருப்பது குறித்தும் இந்தத் தொடர் விளக்குகிறது.



மத்திய காலத்தில் தோன்றிய தேசிய இன உணர்வு என்பது மிக முக்கியமான அரசியல் வளர்ச்சித்தத்துவமாகும். மனித குலத்தை வழி நடத்தும் முக்கியமான சக்தியாக அது இன்று திகழ்கிறது. 20ஆம் நூற்றாண்டில் அதன் வளர்ச்சி உச்ச கட்டத்தை அடைந்தது. தேசிய இன உணர்வு என்பது சிறந்த தத்துவமாகும். ஆனால் நடைமுறையில் அதனுடைய உன்னதமான நோக்கங்கள் பின் தள்ளப்பட்டன.

முதல் உலகப் போர் மூண்டது என்பது மிகைப்படுத்தப்பட்ட தேசிய இன உணர்வு நிலையே ஆகும். உலக வல்லரசாகத் திகழ வேண்டும் என ஜெர்மனி கொண்ட பேராசையின் விளைவாகவே முதல் உலகப் போர் மூண்டது. முதல் உலகப் போருக்குப் பிறகு கையெழுத்திடப்பட்ட ஆகிய உடன்பாடுகளின் மூலம் வல்லரசுகளுக்கிடையே நிலவிய இராஜதந்திர உறவுகளுக்குத் தேசிய இன உணர்வே அடிப்படை என்ற உண்மை புலப்பட்டது.

அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த உட்ரோவில்சன் உலகிலுள்ள சகல தேசிய இன நாடுகளுக்கும் அவை பெரியவையாக இருந்தாலும் சிறியவையாக இருந்தாலும் சுயநிர்ணய உரிமை உண்டு என்ற கருத்தை வலியுறுத்தினார்.

உலக வரலாற்றில் புதிய நாடுகள் பிறப்பதும் மறைவதும் ஒன்றுடன் ஒன்று இணைவதும் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிவதும் தவிர்க்க முடியாத நிகழ்ச்சிகள் ஆகிவிட்டன. தேசிய இன உணர்வு என்பது தான் இவை எல்லாவற்றுக்கும் அடிப்படையான காரணம் என்பது முறுக்க முடியாததுதான்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு 1945 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையில் தொடக்கக் காலத்தில் 48 நாடுகளே அங்கம் வகித்தன. ஆனால் இன்று 187 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்த எண்ணிக்கை உயர்ந்ததற்குக் காரணம் என்ன? நடுக்கடலில் புதிய புதிய நாடுகள் திடீரென முறைத்து எழுந்துவிடவில்லை. வல்லரசுகளிடம் அடிமைப்பட்டுக் கிடந்த நாடுகளும் ஒரு பெரிய தேசிய இனத்தின் கீழ்க் கட்டுண்டு கிடந்த சிறு தேசிய இனங்களும் தனித் தனியே பிரிந்தன. ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு நாடுகளில் பிரிந்து கிடந்த பிறகு தங்களுக்குள் ஒன்றுபட்டுத் தங்களுக்கான தனிநாட்டை உருவாக்கிக் கொண்டனர். இதுபோன்ற பல்வேறு காரணங்களினால் புதிய நாடுகள் உருவாகி ஐக்கிய நாடுகள் பேரவையின் உறுப்பினர் எண்ணிக்கை உயர்ந்தது. வரலாற்று பூர்வமான இந்த உண்மையை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இந்த உண்மையை உணராமல் இன்னமும் பழைய பத்தாம் பசலித்தனமான எண்ணங்களைக் கொண்டிருப்பவர்கள் வரலாற்றினால் ஒதுக்கித் தள்ளப்படுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

தனி நாடு கண்ட சிறு தேசிய இனங்கள்- பிரிந்த பின் இணைந்த நாடுகள்- இணைந்த பின் பிரிந்த நாடுகள் ஆகியவற்றின் வரலாற்றைச் சுருக்கமாகக் காண்போம்.

### தனிநாடு கண்ட சிறுபான்மை தேசிய இனங்கள்

ஒரு பெரிய நாட்டின் அங்கமாக விளங்கிய சிறுபான்மைத் தேசிய இனத்தினர் தங்களின் தனித்தன்மையையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கப் பிரிந்து சென்று தனி நாடு அமைத்துக் கொண்டதற்குப் பல எடுத்துக் காட்டுக்கள் உண்டு.

★ 1825ஆம் ஆண்டு பிரேசில் நாட்டின் ஒரு பகுதியாக இருந்த உருகுவே பிரிந்து தனிநாடு ஆனது.

★ 1905ஆம் ஆண்டில் சுவீடனில் இருந்து நோர்வே பிரிந்தது.

★ 1919ஆம் ஆண்டில் ஆஸ்திரியாவிலிருந்து அங்கேரி பிரிந்து தனிநாடானாது.

★ 1930ஆம் ஆண்டு நெதர்லாந்து நாட்டிலிருந்து பெல்ஜியம் பிரிந்து தனிநாடானாது.

★ 1971ஆம் ஆண்டு பாகிஸ்தானிடமிருந்து வங்களாதேசம் பிரிந்தது.

★ 1983 ஆம் ஆண்டு சைப்ரஸ் நாட்டின் வடபகுதியில் வாழ்ந்த துருக்கிய இனத்தவர் துருக்கி நாட்டின் உதவியோடு தனி நாடாகப் பிரிந்து துருக்கிய சைப்ரஸ் உருவானது.

★ 1993இல் எதியோப்பியாவில் இருந்து எரித்திரியா பிரிந்து தனி நாடு ஆனது.

★ 2002ஆம் ஆண்டில் இந்தோனேசியாவில் இருந்து கிழக்கு தைமூர் பிரிந்து தனிநாடானது.

### பிரிந்து பின் இணைந்த நாடுகள்

வரலாற்று ரீதியான காரணங்களினால் ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்த மக்கள் வெவ்வேறு நாடுகளில் வாழ்வதும் பின்னர் தம்முள் இணைந்து ஒரே நாடாக உருவாவதும் நிகழ்ந்துள்ளன.

*(வளரும்)*

## குப்பை பயல்களே குலத்தோடு நாசமாவீர்...

தட்டிக் கேட்டுப் பொட்டு வைக்கும்
அம்மான்கள் இல்லாததால்
கொட்டமடிக்கிறது தினம் தினம்
காமுகர்கள் கூட்டம்
வஞ்சகம் அறியாப் குஞ்சுகளைக்
குறிவைத்துக் குதறும் கலாசாரம்
எங்கிருந்து வந்தது?
பற்றைக்குள் சிறுமி
பாழும் கிணற்றுள் ஒரு பைங்கிளி
வழித்துணையாம் முனியப்பரின்
வல்லை வெளியில்
வீசியெறியப் பட்டாள் ஒரு வஞ்சிக்கொடி
இப்படி எத்தனை வக்கிரங்கள் இறைவா?
அருள் நிறைந்த தலங்களாம்
ஆலய முன்றல்கள் கூட
உங்கள் பாலியல் புகலிடங்களா?
எம்பிரான் நாக தம்பிரான்
முன்றல்ப் பற்றைக்குள்
இப்படியொரு பாதகமா?
சீ....வெட்கம்....வேதனை
குற்றுயிராய்க் கிடக்கும்
குருத்தைக்கூட
விட்டு வைக்காமல்
தவணை முறையிலா புணர்ந்து
கொண்டீர்?
அப்பா, பிதாவே, ஆண்டவரே,
இரட்சகரே
ஆயிரம் முறைநீர் சிலுவை
சுமந்தாலும்
மனந்திருந்தார் இம் மாபாவிகள்!
தட்டிக் கேட்டுப் பொட்டு வைக்க
மீண்டும் ஒருமுறை பிறந்து வாரீர்
அம்மான்களே!
நக்குகின்ற நாய்களுக்கு
செக்கென்ன
சிவலிங்கமென்ன?
குப்பைப் பயல்களே திருந்திக்
கொள்ளுங்கள்
இல்லையேல்
குலத்தோடு நாசமாவீர்
இது சத்தியமல்ல
"சபதம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தட்டிக் கேட்கும் உணர்வை என்கவுண்டர் செய்யும் சினிமா

குமரேசன் அசாத்

ஆள்கடத்தல் உள்ளிட்ட சமூகவிரோதச் செயல்கள் மூலம் பணம் சம்பாதிப்பதில் தப்பில்லை என்று நகைச்சுவையோடு சொல்லும் 'சூது கவ்வும்' திரைப்படத்தின் பிற்பகுதியில் ஒரு பொலிஸ் அதிகாரி வருவார். அவர் ஒரு 'என்கவுண்டர் ஸ்பெஷலிஸ்ட்' என்றும், சிக்குகிறவர்களைத் தாக்குவதில் ஈவிரக்கமற்றவர் என்றும் சித்தரிக்கப்படுவார்.

கடைசியில் அவருக்கு என்ன நிலைமை ஏற்படுகிறது என்பது அந்தப் படத்தின் உச்சகட்ட சிரிப்பாக இருக்கும். படத்தின் கதாநாயகர்கள் கொள்ளையர்கள் என்பதால் அவர்களைப் பிடிக்க முயலும் பொலிஸ் அதிகாரி அந்தப் படத்தில் வில்லனாகிவிடுவார், அவருக்கு ஏற்படுகிற தோல்வி ரசனைக்குரியாதாகிவிடும்.

கதாநாயகனே பொலிஸ் அதிகாரி என்றால் அவன் செய்கிற 'என்கவுண்டர்' கொலைகளும் வன்முறைகளும் கைதட்டி விசிலடித்து வரவேற்கப்பட வேண்டிய சாகசங்களாக சித்தரிக்கப்பட்டிருக்கும். 'காக்க காக்க' படத்தை மறந்துவிட முடியுமா?

### வதம் செய்யும் கதாநாயகர்கள்

தெலுங்கிலிருந்து தமிழுக்கு ஒலிமாற்றம் செய்யப்பட்ட 'இதுதாண்டா போலிஸ்' என்கிற படம்தான் இப்படியாகப்பட்ட படங்கள் தமிழில் வேகம் பிடிக்கத் தூண்டுதலாக இருந்தது. அநேகமாக எல்லா நட்சத்திர நடிகர்களும் 'என்கவுண்டர்' நடத்துகிற பொலிஸ் அதிகாரிகளாக நடித்துவிட்டார்கள். அவர்கள் கடைசியில் சுட்டுத்தள்ள வசதியாக வில்லன்களைப் படுமோசமான சட்டவிரோதிகளாக இயக்குநர்கள் காட்டியிருப்பார்கள். பெரும்பாலான படங்களில் அந்த வில்லன்கள் கறுப்புத் தோல்காரர்களாக, சீவாத தலைமுடிக்காரர்களாக, எப்போதும் கொடூரமாகவே பார்த்துக்கொண்டிருக்கிற வியர்வை வழியும் முகத்துக்காரர்களாக ஒப்பனை செய்யப்பட்டிருப்பார்கள். கமல் நடித்த 'வேட்டையாடு விளையாடு' படத்தில் வக்கிரம் பிடித்த இளம்வில்லன்கள் இருவருக்கும் இளமாறன், அமுதன் என்று இனிய தமிழ்ப்பெயர் சூட்டியிருப்பார்கள்.

இடைவேளைக்குப் பிறகு வில்லன்களால் நிச்சயமாகக் கதாநாயகர்களின் காதலிகளோ மனைவியரோ தங்கையரோ பிள்ளைகளோ பெற்றோர்களோ கடத்தப்பட்டுவிடுவார்கள். சில படங்களில் அவ்வாறு கடத்தப்பட்டவர்கள் கோரமான முறையில் கொல்லப்பட்டிருப்பார்கள். கண்கள் சிவக்க, பற்கள் நறநறக்க, தரையிலிருந்து முகத்தை வானம் நோக்கி உயர்த்தி, வெஞ்சினத்தோடு பழிவாங்கப் புறப்படுவான் பொலிஸ் கதாநாயகன். ஆக, தமிழ் சினிமா பொலிஸ் நாயகர்களுக்குப் பொதுமக்களைக் காப்பாற்றுகிற சட்டப்படியான கடமையைவிட, சொந்த இழப்புக்குக் கணக்குத் தீர்ப்பதுதான் முக்கியம்.

நாயக நடிகைகள் காவல்துறை அதிகாரியாக வந்து தாதாமார்களை வதம் செய்கிற படங்கள் மிகமிகக் குறைவு. முன்பு ஒரே ஒரு 'வைஜயந்தி ஐபிஎஸ்' வந்தது. அதுவும் தெலுங்கிலிருந்து தமிழுக்கு ஒலிமாற்றம் செய்யப்பட்ட படம்தான்.

ரசிகர்களாகிய பொதுமக்கள் இதையெல்லாம் ஏனென்று கேட்பதில்லை. அதைப் போலவே உண்மை வாழ்க்கையில் கேள்விப்படுகிற பொலிஸாரின் மோதல், துப்பாக்கிச் சூட்டு நடவடிக்கைகள் பற்றியும் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை. இடதுசாரி இயக்கங்களும், காவல்நிலைய சித்திரவதைகளில் யாரேனும் இறந்து போகிறார் என்றால் அவர் யார் என்பதைப் பொறுத்து வேறு சில அரசியல் கட்சிகளும், பொதுவாக சில மனித உரிமை அமைப்புகளும்தான் கண்டனம் தெரிவிக்கின்றன. உண்மையறியும் குழுக்கள் அமைக்கப்பட்டு அவை வெளிப்படுத்தும் தகவல்கள் பெரும்பாலும் பொலிஸ் அறிக்கைக்கு நேர்மாறாக இருக்கின்றன.

### பாதிப்பு மக்களுக்கே

காவல்துறையின் இப்படிப்பட்ட திட்டமிட்ட மோதல் நடவடிக்கைகளாலும், அவற்றைப் புகழ்கிற திரைப்படங்களாலும் உண்மையாகவே பாதிக்கப்படுகிறவர்கள் யார்? மேலோட்டமாகப் பார்த்தால், ஊரறிந்த ரவுடிகளும், கொலையையே தொழிலாகக் கொண்ட அடியாள் கும்பல்களும்தானே போட்டுத்தள்ளப்படுகிறார்கள் என்ற எண்ணம் ஏற்படுகிறது. மோதலின் போது இடையில் சிக்கிக்கொள்ளக்கூடிய ஓரிரு அப்பாவிகளைத் தவிர மற்றபடி குற்றவாளிகள் அல்லாத வேறு யாரும் கொல்லப்படுவதில்லையே என்ற எண்ணமும் ஏற்படுகிறது. உண்மையில் அந்த எண்ணம் ஏற்படுத்தப்படுகிறது.

சிலரது அரசியல் செல்வாக்கு, அதிகார மேலிடத் தொடர்பு, சரியான ஆதாரம் கிடைக்காத நிலைமை, சாட்சிகள் எவரையும் அச்சுறுத்தி அடக்கிவிடக்கூடிய வன்மம்... இப்படிப்பட்ட சூழல்களில் குற்றவாளிகளை நீதிமன்றத்தில் முறைப்படி ஒப்படைத்து, சட்டப்படி விசாரணைக்கு உட்படுத்தி, தண்டனை பெற்றுத்தர முடிவதில்லை. அப்போது இப்படி சட்டத்திற்கும் ஊருக்கும் வெளியே அவர்களின் கதையை முடிப்பதில் என்ன தவறு என்ற கருத்தும் பல்வேறு வழிகளில் மக்கள் மனங்களில் ஏற்றப்படுகிறது. அவ்வாறு கருத்தேற்றம் செய்யும் கைங்கரியத்தைச் செய்வதில் பொலிஸ் நாயகத் திரைப்படங்கள் பங்காற்றுகின்றன.

அரசு சட்டம் ஒழுங்கைக் காப்பதில் கறாராக இருக்கிறது என்ற எண்ணத்தை ஏற்படுத்து வதற் காகக் கூட 'என்கவுண்டர்' களுக்கு அனுமதி தரப்படுவது உண்டு. அரசியல் மட்டத்திலோ, துறைசார்ந்த அதிகார மட்டத்திலோ சிலபல சமூகவிரோதிகள் அவ்வப்போது இதனைப் பயன்படுத்திக் கொள்வதும் நடக்கிறது. அவர்கள் எல்லை மீறிச் சென்று வரம் கொடுத் தவர்கள் தலையிலேயே கை வைக்க முயல்கிறபோது, அவர்களை நீதிமன் றத்தில் நிறுத்தினால் பலரகசியங்கள் உடைபடக்கூடும் என்பதால் இப்படிப் பட்ட 'என்கவுண்டர்'கள் அரங்கேற்றப்படுகின்றன என்றும் மனித உரிமை இயக்கத்தினர் சொல்கிறார்கள். ஒரு சில திரைப்படங்களிலும் இது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

### நீர்த்துப் போகும் உணர்வு

அட! வெறும் பொழுதுபோக்குக்காக எடுக்கப்படும் திரைப்படங்களைப் பார்த்தோமா, பொழுதைப் போக்கி விட்டு வந்தோமா என்றில்லாமல் இந்த அளவுக்கு ஆராய வேண்டுமா என்று வழக்கம்போல் சிலர் கேட்கவே செய்கிறார்கள். எந்தத் திரைப்படம் பற்றி எப்படிப்பட்ட விமர்சனம் வைத்தாலும் இப்படிக் கேட்கிறவர்கள் அவர்கள். கலை - இலக்கியத்தின் சமூகத் தாக்கம் குறித்த புரிதல் இல்லாததால் இப்படிக் கேட்கிறார்களே யன்றி அவர்களை வன்முறை ஆதரவாளர் கள் என்று குறைசொல் வதற்கில்லை. ஆனால், இப்படிப்பட்ட எண்ணங்கள் வளர்க்கப்படுவதன் விளைவை வேறொரு கண்ணோட்டத்தில் பார்க்கிறபோது வேறொரு கவலை ஏற்படுகிறது.

பொலிஸ் அத்துமீறல்கள் நியாயமானவைதான் என்ற கருத்து வலுவாக ஊன்றப்படுவதால், அவர்கள் செய்யக்கூடிய எந்தவொரு தவறான செயலையும் தட்டிக்கேட்க வேண்டும் என்ற மன நிலை மக்களிடம் மேலோங்குவதில்லை. மக்களுக்காகப் போராடுகிறவர்கள், மக்கள் போராளிகள் போலியான குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்யப்படுகிறபோது பொலிஸ் நடவடிக்கையில் நியாயமில்லாமல் இருக்காது என்ற நினைப்பு வருகிறது.

இந்த மனப்போக்கு பரவலாவதால், மனித உரிமைகளுக்கான எந்தவொரு போராட்டம் என்றாலும் சில அரசியல் இயக்கங்களும் சில மனித உரிமை அமைப்புகளுமே அந்தப் போராட்டங்களுக்கென ஒதுக்கப்பட்டவையாக எப்போதும் களம் காண்கின்றனவேயன்றி – அந்த இயக்கங்கள் சார்ந்தவர்கள் அவற் றில் பங்கேற்கிறார்களேயன்றி – வெகுமக்கள் கலந்துகொள்வதில்லை. இது ஜனநாயகவளர்ச்சிக்குப் பெரும் கேடல்லவா? ஏதாவது ஒரு பொலிஸ் 'லொக்கப்' சாவு பற்றிய செய்தி வருகிறபோது, இறந்தவரின் குடும்பத்தினர், இடதுசாரி - ஜனநாயக சக்திகள், சில அமைப்புகள் தவிர்த்துப் பெரும் மக்கள் திரள் அந்தச் சாவுச் செய்தியைக் கண்டுகொள்வதில்லை. அவன் ஏதாவது தப்பு செய்திருப்பான். அவமானம் தாங்காமல் கயிற்றில் தொங்கியிருப்பான்... என்று ஒரு பகுதி மக்கள் இலகுவாக ஒதுக்கிவிடுகிறார்கள்.

பொலிஸாரின் அத்துமீறல்கள் பற்றிக் கேள்வி கேட்கத் துணியாத இந்த ஒதுங்கல்போக்கு, வேறு எந்தத் துறையின் வரம்பு மீறல்களையும் தட்டிக்கேட்காத சமூக மனநிலையாக மாறுகிறது. அரசின் மக்கள்விரோதக் கொள்கைகளுக்கு எதிராகப் போராட முன்வராத செயலின்மையைக் கெட்டிப்படுத்துகிறது.

இப்படியெல்லாம் மக்கள் திசைதிருப்பப்பட வேண்டும், மக்களின் கேள்வி கேட்கும் திறன் மழுங்கடிக்கப்பட வேண்டும், மக்களின் தட்டிக்கேட்கும் வல்லமை பொசுக்கப்பட வேண்டும் என்பதுதான் இன்றைய உள்நாட்டு – உலகமய சுரண்டல் தாதாக்களின் விருப்பம் அல்லது ஆக்ஞை. அந்த விருப்பம் அல்லது ஆக்ஞையை அரசு எந்திரங்களோடு சேர்ந்து நிறைவேற்றுகிற சேவையை தமிழில் வெளிவரும் பொலிஸ் நாயகத் திரைப்படங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறபோது அதை வெறும் பொழுதுபோக்கென்று விட்டுவிடலாமா?



## முட்டாள் யார்?

ஜம்புலிங்கத்தின் மகன் படிக்கும் பாடசாலையில் பெற்றோர்கள் சந்திப்பு. மகன் கெஞ்சிக் கேட்டதால் தனது பாரியாரை விட்டுவிட்டு ஜம்புலிங்கம் மட்டும் கூட்டத்துக்குப் போனார். ஜம்புவின் மகனது வகுப்பாசிரியர் வந்தார். ஒவ்வொருவரிடமும் அவர்கள் எந்தப் பிள்ளையின் தாய் தகப்பன் என்பதை விசாரித்தறிந்து கொண்டார். ஜம்புவின் முறை வந்ததும் அவருக்கு ஒரே ஆச்சரியம். ஒருமுறையும் இல்லாத திருமுறையாக ஜம்புலிங்கம் பாடசாலைப் பக்கம் வந்திருக்கிறாரே என்ற ஆச்சரியம். எனவே அவர் ஜம்புவை வைத்து அன்றைய கூட்டத்தை களை கட்ட வைக்கலாம் என்று முடிவு செய்துகொண்டார். உடனே, "இங்குள்ள முட்டாள்கள் எல்லாம் எழுந்து நில்லுங்கள்" என்றார். பெற்றோர்களுக்கு அதிர்ச்சி. ஆசிரியர் என்ன இப்படிச் சொல்கிறாரே என்று ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தார்கள். யாரும் எழுந்து நிற்கவில்லை. சிறிது நேரம் ஆனதும் ஜம்புலிங்கம் மெல்ல எழுந்தார். ஆசிரியருக்குக் கொள்ளை மகிழ்ச்சி. "மிஸ்டர் ஜம்பு! நீங்கள் முட்டாள் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? சொல்லுங்கள்!" என்றார். ஜம்பு சொன்னாரே பாருங்கள் ஒரு பதில், "இல்லை! கேள்வியைக் கேட்டுவிட்டு நீங்கள் மட்டும் தனியாக எழுந்து நிற்கிறீர்களே! அதுதான் பாவம் என்று நானும் துணைக்கு எழுந்து நின்றேன்."

ஜம்புவின் தடாலடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1982 இல் வீட்டுத் தலை வாசல் வாங்கிலில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்ததாக ஞாபகம். எங்கள் வீட்டு முன் வீதியால் ஒரு ஏழெட்டுப் பேர் பெற்றோமக்ஸ் கொழுத்திக்கொண்டுபோயிருந்தார்கள். கலகலப்பாக கதைத்தபடி போனார்கள். ஒருவர் எங்கள் விட்டில் கிடுகு கட்ட வரும் கந்தசாமி அண்ணை போல குரல் சாயல் தென்பட்டது.

அடுத்தநாள் கிடுகு கட்டவரும்போது அம்மம்மா கேட்டார்.

"இராத்திரி என்ன விசேசம் கந்தசாமி"

"ஒண்டுமில்லை குஞ்சியாத்தை"

கிடுகு கட்டில் மேலிருந்து கந்தசாமி அண்ணை இறுக்கிக் கயிற்றால் கட்டினார்.

"அப்ப இராத்திரி சத்தமாய் றோட்டால போனியள்"

"உனக்கு விளங்கியிட்டுது, என்ன!"

'உன்ரை குரல் மாதிரி கிடந்தது"

காலடியில் மட்டுமல்ல எம் முன்னோர்கள்குரலைவைத்தும்ஆள்களை இனம் கண்டு கொள்வதில் வல்லவர்கள்.

கந்தசாமி அண்ணை அம்மம்மாவுக்குக் கிட்ட வந்தார். அம்மம்மா வெற்றிலைத் தட்டை அவர் பக்கம் தள்ளி விட்டார். அவர் வெற்றிலையை எடுத்து இரண்டாகக் கிழித்து பாக்கினை அதனுள் வைத்து சிறிது சக்கிவிட்டு வாயில் போட்டுக் கொண்டார்.

நான் நினைக்கிறேன். எனது இளம் பராயத்தில் எமது வீட்டுக்கு வருபவர்களுக்கு தேனீர், பால் தேனீர் கொடுக்கப்பட்டதாக ஞாபகம் இல்லை. யாரேனும் வீட்டுக்கு வந்தால் அம்மம்மா சொல்வார்..

"தங்கச்சி பாயை எடுத்துப் போடு"

நல்ல பனையோலை பாய் இரண்டு பக்கமும் சுருண்டு இருக்க விருந்தினர் நடுவே அமர்ந்திருக்கும் அழகு தனியாக இருக்கும். கதிரை இருந்தாலும் பாய்தான் போடுவார்கள்.

"தண்ணிச் செம்பை கொண்டா மோனை"

விருந்தினர் தண்ணீரை மிக அண்ணாந்து தாகம் தீர குடித்துக் கொள்வார்.

'தம்பி கொய்யா, கொம்மா சுகமாக இருக்கினமே"

'ஓமோம் இருக்கினம்!"

"கமம் விதைச்சுதே, கொய்யா சும்மா இராரே!"

"ஓம்! பெரியப்பு 30 பரப்பு விதைச்சனாங்கள்."

"அப்ப சாப்பாட்டுக்குக் காணும்."

உரையாடல் தொடரும். இடையில்

"பிள்ளை வெத்திலை தட்டத்தை கொண்டா"

விருந்தினர் வாய் நிறைய வெற்றிலை போடுவார். பின் சிறிது உரையாடி விட்டு சொல்லிக் கொண்டு புறப்பட்டுப் போவார். பின் நாள்களில்தான் மூக்குப் பேணியில் தேனீர் கொடுப்பதும்– அதன் பிறகு கிளாஸ், சில்வர், கப் அன்ட் சோகா வந்து சேர்ந்தன. இப்போது யார் வீட்டில் பனம்பாயும் வெற்றிலைத் தட்டமும் இருக்கின்றது. தற்போது வீட்டுக்கு வருபரிடம் "சீனி போட்டோ போடாமலோ" என்று கேட்கும் நிலை வந்துவிட்டது.

"கொஞ்சம் சீனி குறைச்சு"

"தராட்டாலும் பரவாயில்லை" சீனி மனித இருப்புக்கு அணுகுண்டை விட பெரும் எதிரியாக மாறிவிட்டது.

கந்தசாமி அண்ணை வெற்றிலையை வெளியே போய் துப்பிவிட்டு அம்மாவிடம் வந்து "இராத்திரி இவள் தங்கச்சி சந்திராவுக்கு சோறு குடுப்பிச்சனாங்கள்"

"அட! ஆ...! மெய்யே? யார் மாப்பிள்ளை"

"அந்தப் பொடியன் குலத்தாரின்ற மரக்காலையிலை நிக்கிற பொடியன்"

"ஆர் ஒழுங்கு பண்ணினது?"

"குலத்தார்தான்"

"நல்லபொடியனே? விசாரிச்சனியே?"

"விசாரிச்சனானான் நல்ல பெடியன்.

"அவள் மாட்டன் எண்டிட்டாள்"

"ஆ....! பிறகு!"

"பெரியப்பு வந்து பேசித்தான் பேசாமல் இருந்தவள்."

# 'கொண்டாட்டம்'

## மூன்று நாள்கள் நடைபெறும்



கால் ஒண்டுதான் கொஞ்சம் கட்டை"

"அட! ஏன்ராப்பா?"

"என்ன குஞ்சியத்தை செய்யிறது இவளும் தாரமிழந்தவள்தானே! ஒரு பிள்ளையும்தானே!"

"அது சரி!"

"அதுதான் பார்த்திட்டு இராத்திரி பொடியனை கூட்டிக் கொண்டு வந்து சோறு குடுப்பிச்சனாங்கள்"

"நல்லதுதானே!"

"ஓமப்பு சீவியம் போக வேணுமில்லே!"

"மாப்பிளைக்கு நல்ல புளுகு. குஞ்சியத்தை ஆயிரம் ரூபா காசு உடனே கையில எடுத்துக் குடுத்திட்டார்"

"வடிவா சாப்பிட்டாரோ"

"பிள்ளை, ஏழெட்டு கறியெல்லே காச்சினது"

எந்தவித ஏற்பாடு இல்லாமல் இந்த நிகழ்வு முடிந்துவிட்டது. அடுத்தநாள் காலையில் இருவரும் சைக்கிளில் பளைச் சந்தைக்குப் போனதைக் கண்டேன். புதிய உறவினை ஒரு பானை சோற்றுடன் இலகுவாக உருவாக்கி விடுவதில் எம்மவர்கள் கில்லாடிகள்.

இந்த மரபு தற்போது எங்கும் நிகழ்வதாக எனக்குத் தோன்றவில்லை.

போருக்கு முன்பு வன்னியில் இலகுவாக மஞ்சள் கயிற்றுடன் திருமணம் செய்யும் மரபு ஒன்று உருவாக்க முயற்சி ஒன்று செய்யப்பட்டது. முடிந்து விட்டது.

திருமணத்தில் தாலி கட்டும் மரபு வந்த காலத்தை சரியாக வரையறை செய்ய முடியவில்லை. கண்ணகி கோவலன் கதையில் சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் திருமணத்தில் தாலி கட்டப்பட்டதாக எந்த இடத்திலும் வரவில்லை.

எனவே பிற்பட்ட காலத்தில்தான் இந்த மரபு தோன்றியிருக்க வேண்டும். திராவிடம் இதனை ஆகிய மரபில் இருந்தே கற்றிருக்க முடியும்.

தாலி எம்மவர்களால் கொடி என்றே அழைக்கப்பட்டு வருவதை நாம் அறிவோம்.

கொடி என்றதும் ஒரு கதை ஞாபகம் வருகின்றது.

பவளப் பெரியம்மாவின் ஈஸ்வரி அக்கா சைக்கிள் ஓடப் பழகிக் கொண்டிருந்தார். 1980 ஆக இருக்கலாம். ஒரு மாலை நேரம் மம்மல் பொழுதாக இருந்தது.

தவராசன் சித்தப்பாவுக்கு ஈஸ்வரி அக்காவில் ஒரு கண்– முறை மச்சாள் என்பதாலாக இருக்கும். ஈஸ்வரி அக்கா .. படித்துக் கொண்டிருந்தார். தவராசன் சித்தப்பா படிப்பை விட்டு விட்டார். இதனால் அவர் திட்டம் பலிக்கவில்லை. லேசான கோபம்.

எனவே ஈஸ்வரி அக்கா சைக்கிளில் பழகிக் கொண்டு வரும் பாதையில் ஒரு காட்டுக் கொடியை வலித்து பாதைக்கு குறுக்கே கட்டி விட்டார்.

"என்ரை அம்மா"

ஈஸ்வரி அக்கா ஈனஸுரத்தில் முனகினாள். கால்பிரண்டுவிட்டுவிட்டது. பிறகு பெரிய சண்டை நடந்ததாக ஞாபகம். இதனை யாரோ எமது வில்லுப்பாட்டு மேதை செல்லத்துரை அப்பாவிடம்–

"தவராசன் ஈஸ்வரிக்கு கொடி கட்டிப் போட்டானாம்" "அதுக்கென் சொந்த மச்சான்..... நான் நினைச்சனான் உது நடக்கும் மெண்டு. கந்தசாமிக்கு ஒரு குமர் கரை சேர்ந்திட்டுது" "அதில்லை செல்லத்துரையப்பா, றோட்டுக்கு குறுக்கை மான் கொடி கட்டிப் போட்டான். பெட்டை விழுந்து, கால் பிரண்டு போட்டுது" அட வடுவா! அடிச்சுக் கால் முறிக்க வேணும்"

---

# தாய் நிலம்



22

–சடா கோபன்

பட்டம் விடுவோம்
பட்டம் விடுவோம்
பாலா ஓடிவா..!
பாடிப்பாடிப் பட்டம் விடுவோம்
பாலா ஓடிவா..!

காணி தோட்டம் வெளிகளெங்கும்
பாலா ஓடி வா..!
கள்ளன் பொலிஸ்ும் ஆடிமகிழலாம்
பாலா ஓடி வா..!

'' நிறுத்து பாட்டை நிறுத்து..!
நிமலன் நீ
நிறுத்து பாட்டை நிறுத்து..!
காணி பொலிஸ் விட்டு
பாட உனக்கு தெரியும் இல்லை
உபாலி ஐயா வரும்
சொல்லித் தரும் கேட்டுப்பாடு..''

மற்றவகுப்பெல்லாம் பாடுறாங்கள்
சேர்..

கட்டுப்பாடு எனக்கு மட்டும் ஏன்..!
'' அவங்கள் எல்லாம்
வேண்டாம் பாடுறது..
நீங்க மட்டும்தான்
வேணும்பாடுறது..''

அப்ப சேர்
நான் இப்படிப் பாடவா...!

பார் படம்
பாடம் படி

அழகைப் போல
அண்ணன் தம்பி
உதவாதென்று பாடம்படி..!

அடிதடிக்கு போகாட்டிலும்
கைத்தடியை
கைவிடாதே..!
பார் படம்
பாடம் படி..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்திநெரிவுகள்...!



தையிட்டி அ.இராசதுரை

ஈசன் முதலாளியாரின் கடைக்குக் கொப்பிக்கணக்கில் சாப்பாட்டுச் சாமான்கள் வாங்கிவரவென்று காலையில் போன தமது சம்சாரம் ருக்மணி ரீச்சரிடம்... ஈசன் முதலாளியார் ஈசியாகவே சொல்லி வரக்காட்டிய அந்த.... மகாபாரதத்தையுமே... ஒரு செக்கன் பொழுதில் தூக்கி எறிந்துவிடக் கூடிய அந்த மகாபாரமான மகா சங்கதியை ஒருவித நெருக்கிட்டுப் போன மனநிலையோடு நந்தகோபால்.... மாஸ்ரர் மனம் கேளாத் தன்மையில் மீண்டும் மீண்டும் தமக்குள் அலசி ஆய்வு செய்து பார்த்துப் பார்த்து இன்னுமாய் வயோதிபத்தின் அழுத்தத்தை படுவேகமாய்க் கூட்டியும் விடுகின்றார்...?

நாட்டுப் பிரச்சினையென்ற இந்தப் பொல்லாத பெரு நெருப்பினால்... இன் றைக்கு இந்த நாடும் வீடும்.... இந்தளவு தூரத்துக்கு டமேஜ்சாகி இந்த தமிழ்ச் சாதியும் தங்கடை...தங்கடை... தங்கமான மண்ணுகளையும் விட்டுக்கெட்டு சொத்துச் சுகங்களையுமிழந்து ஊரூராய் அகதிகளாய் அலைஞ்சலைஞ்சு மாண்டு மடிஞ்சு போற இந்த அவ காலத்திலையும்தான்...

பணையால் விழுந்தவனை ஒரு மாடல்ல ஒரே நேரத்தில் ஒன்பது பத்து மாடுகளேறி உழக்கித் தள்ளிவிட்ட பொல்லாத கதை காரியமாய் ஈசன் முதலாளியைப் போல, பெரிய க்குபேர முதலாளிமாருக்குமிந்த புத்திகெட்டுப் போன புத்தியளும் வாராவந்தியாய் வந்துதான் உலகழிவாய்ப் போகவும் வேணுமோ....? எரியிற வீட்டில் சுருட்டுப் பற்றிப் புகை புகையாய் ஊதித்தள்ளி எல்லாம் முடிவில் அந்தப் புகையாகியே அமைந்து போய்விடும். இந்த நிலையற்ற மானிடப் பண்டங்களுக்கு அந்த ஈசனார் படைத்து விட்ட இந்த ஈசனையோ ஒரு பைன் (Fine) சுப்பர் எக்சாம்பிளாய் வைத்து ஒரு மீளாத் துயர யதார்த்த மகாகாவியமே படைத்து விட்டாற்போல... நந்தகோபால் மாஸ்டர்.. இந்தக் கெட்டழிந்து போகுமிந்த தறிகெட்டுப்போன மானிடங்களை நொந்து வெந்து வேகிப் போன நேரமாய்...

''இந்தாங்கோ சாப்பிடுங்கோ..'' குரல் கேட்டு வேறு சிந்தனையில் மூழ்கிப்போய் திடுக்கிட்டுவிட்ட நந்தகோபால் மாஸ்ரர் சாப்பாட்டுத் தட்டுடன் நின்றுகொண்டிருக்கும் ருக்மணி ரீச்சரை ஏற இறங்கப் பார்த்துவிட்டு இன்னும் கூட வாய்த் திடுக்கிட்டுப்போய் இப்பவே இந்த நிமிடமே அடிசாயப் போகும் பெரிய பனை மரமாய் மனதுக்குள் தள்ளம்பாறி இன்னும் கூடவாய்த் தடதடத்துப் போய் விடுகின்றார்....??

''இதென் னடாப்பா....ருக்.....? காலத்தாலையில் கடையடித் தொடக்கத்தோடையே... இப்படிச் சடுதியா கிழடு தட்டிப்போனீரே...?'' இதுவரைக்கும் அம்பு போலிருந்துகொண்ட தமது மனையாட்டி காலத்தாலயில் ஈசன் கடையடி நிகழ்வோடு வெறும் தும்பு போலாகியே விட்டாளென்ற நந்தகோபால் மாஸ்ரரின் மனப் பேரிடி அச்சமானது இன்னுமின்னுவாய்க் கூடிப் போய்விட... இந்தப் பொல்லாத வயோதிபத்திலும் ஒரு உந்து சக்தியாய்த் தம்மைக் கொண்டிழுத்து பாதுகாப்பரண் போலிருந்த தமது மனைவி... நினைக்க முழிக்க சடுதியாகத்தான்... தம்மையும்... முந்தியடித்துக்கொண்டே போய்த்தா்ன் சேர்ந்துதான் விட்டால்... இந்த ஈசன் முதலாளியார் பாடு இன்னும் பரவாயில்லைத்தானென்று...

இன்னுமின்னுமாய்த்தான்... சலிப்புச் சலிப்பாய் கொண்டாடி முடிக்க வேண்டுமாப் போலிருக்க...ஆசை மனைவியின் அன்புப் பரிமாற்றமான காங்கேசன் பேக்கறி பிறிமா மா சுப்பர் பாணும் முதல் நாளையில் மனைவியின் கைராசிப் பருப்புக் கறியும் மாஸ்ரரின் தின்பனவற்றிற்காக காவல் கிடந்து கெதியாய் போய்ச் சேர்ந்திடும் அவதியில் காய்ந்து போய் கொண்டிருக்க... தம்மை என்றைக்கும் காய்ந்து போக விடாமலுக்குக் காத்து வைக்கும் இந்த உயிர் தந்திடும் உண்டிக்கே வணக்கத்திற்குரிய ஆறுதல் சொல்லிவிட்டாற் போல... மாஸ்ரரின் புலன் முழுவதும் சாப்பாட்டில் குந்திவிடுகின்றது...!

...பூப்போன்ற மெதுமையான பாண் துண்டில் ஓர் ஆமான துண்டைக் கிள்ளியெடுத்து மனைவியின் ராசிக்கறியில் மெல்லவாகத் தொட்டு புறியமுடன் ஆவென்று திறந்தபடியே காத்திருக்கும் வாய்க்கும் கிட்டவாகத்தான் கொண்டும் போய் விட்ட மாஸ்டர், திடீரென்று குறுக்கிட்டுவிட்ட வேறு தியானத்தில்.. ஆவென்று ஏம்பலிக்கும் வாய்க்கும் கொடுக்காமல் சுமந்து வந்த தட்டிலும் போட்டுவிடாமல் இப்பொழுது கையில் வைத்திருக்கும் இந்தப் பாண் துண்டுதான் மாஸ்டரைச் சாப்பிடப் போகின்றதோ... இல்லையிந்த மாஸ்டர் தான் இந்தப் பாண் துண்டைத் தமது வாய்க்குள் போடப்போகின்றாரோ... இதில் எதுவென்ற மாயை நிலை போன்ற காட்சியில் கும்மியடித்த நேரமாய்...

''லொக்கு மாத்தயா..கோமத..க்காம ஹொந்தாய்..'' என்ற ஆமிக்காரனின் துவக்கு வெடிச்சத்தம் போன்ற திடீர்க்குரல் கேட்டு வேறு சிந்தனையில்.. திடுக்கிட்டுப் போய்.. கையில் வைத்திருந்து ஓராட்டிக் கொண்டிருந்த பாண் துண்டையும் நிலத்தில் கைதவறிப் போட்டும் விடுகின்றார்..? பக்கத்து சென்றிக்காரனான அரவிந்த தாங்கள் எப்போதும் கொண்டுதிரியும் பயக்கெடுதியையும் முற்றாகவே மறந்தே போய்விட்டவனாய்.. அந்த நேரம் மாஸ்டர் பட்டு முடித்த பாட்டைத்தான் பார்த்து தமிழ் நகைச்சுவைப் படம் பார்த்தது போல் சிரித்துத் தள்ளிவிடுகின்றான்..?

ஈசன் மூனா சும்மாவும் சுமந்துகொண்டும் கொடுத்து வாங்கும் கோல்ட்லீவ் சிகரெட்டின் புகை மாஸ்ரரின் அந்தப் பெரிய பிருந்தாவனம் வீட்டிற்குள் எதேச்சையாகப் போய்க் கொண்டிருக்க... அரவிந்தில் வாசம் செய்யும் ஈசன் மூனாவின் வாசனையும் மூனாவின் கோல்ட்லீவ் புகையோடு பிருந்தாவனத்துக்குள் கைகோர்த்துக் கூடிப்போய் மாஸ்ரரையும் தொட்டுத் தடவி பையா போட்டு டுயேற் பாடி துரியோதனன் இராச்சியம் பார்த்துவிட்ட ச(த)ரித்திரம் எழுதிப் போய்விடுகின்றது....

...வழக்கம் போல் மாஸ்ரர் வீட்டுத் தண்ணீர்க் குழாயில் தான் பார்த்து முடிக்கும் தண்ணீர் வேலையை சட்டுப்பொட்டென்று முடித்துக் கொண்ட அரவிந்த் இன்னொரு கோல்ட்லீவ் சிகரெட்டை மூட்டியபடியே...நேரடி மோதலொான்றிற்காக நிலையெடுத்து விட்டவன் போல்...மாஸ்ரரின் அட்டமருகாய் வந்து மாஸ்ரரில் முட்டித் தொடுவது போல்...நின்று கொண்டிருந்தான்....அந்த நேரம் பார்த்துத்தான் மாஸ்ரர் கைதவறவிட்டுவிட்ட அந்தப் பாண் துண்டில் கண்போட்டு வைத்திருந்த காகமொன்று அதனை இறாஞ்சிப்போக வந்து மாஸ்ரர் குளறிவிட்ட குளறுதலோடு...பாண் வேண்டாம் மாஸ்ரரைப் பிடியென்ற கணக்காய் ஓடித்தப்பி விடுகின்றது....

''...எது..எதைக் கப்ஷர் பண்ணப்போய்.... என்ற கணக்காய் ஒரு கள்ளக் கணக்கை செய்து பார்த்துக் கொண்ட அரவிந்தின் ஆமிமூளை...ஒரெப்பனும்தான் ரைமை... மிஸ்பண்ணவிடாமல் துப்பாக்கியின் விசையைத் தட்டிவிட்டாற் போல....

''....லெங்குவா...நீங்கா...கோல்ட்லீவ் மொதலாளி... நீங்கா...கெதற வூடு...இப்ப...குடுங்கா... இக்மெண்ட்... தெக்கம...காத்தடி...ஓடு போங்கா....பெரிய தொரை...ஓடர் போ... சொன்னது....'' ...என்றெல்லாம்... அந்த... கேஜ் கூடிய ஈசன் மூனாவென்ற...அதியுயர் மின்சாரலைனிலிருந்து...கள்ளவயர் தொடுத்து...கள்ளக் கரண்டில்...கோல்ட்லீவ் மூனாவிற்காக...வெளிச்சமும்...எரியவைத்தும் விட்ட... கெட்டிக்கார ஆமிபோல ஆவியாய் அந்தரத்தில் கால்கள் நிலத்தில் முட்டாதவனாய் நின்று கொண்டிருந்தான்... ...இந்த ஈசனார்...சொல்லிக் கொடுத்துவிட்ட இந்தக் கைதடிப் பாடத்தை காத்தடியாய்.... ஒப்புத்துவிட்ட இந்த... காத்தாகியே... போடா...'' என்று மாஸ்ரர் மனதுக்குள் திட்டிக்கொட்டிவிட்ட நேரமாய்...

கிட்டடியாகவுள்ள அடுத்த சென்றிப் பக்கமாய்... திடும்பொடுமென்று...காற்றும் மழை போல...குண்டுச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுக்களும் இருந்துவிட்டுப் பன்பலாய்க் கேட்கத் தொடங்கவே...கூடக் கொண்டு திரியும் பயத்தைக் கொண்டாடி முடிக்க அரவிந்த் அந்தப் பக்கமாய்க்...காற்றாய்ப் பறந்தே விடுகின்றான்...

ஈசன் மூனா ருக்மணி ரீச்சரிடம் சொல்லி வரக்காட்டிய கதையும் கோல்ட்லீவ் மூனாவின் பின்னணிக் குரலாய் அரவிந்த் சொல்லிக்காட்டிய கதையின் தாக்க நோக்கங்களும் நடந்து முடிந்து சரியாக ஒரு பத்து நாள்கள் கூடச் சொல்லவில்லை... நந்தகோபால் மாஸ்ரர் பமிலியோடு இன்னும்தான் கயிறிழுத்தல் போட்டியோடு நேரத்தை செலவழிக்காமல் சட்டுப்பொட்டென்று ஆக வேண்டிய கருமத்தையும் முடித்து வைத்து 'வீட்டுத் திறப்பையும்' அப்பிப்போட வேண்டுமென்ற எம்டன் ஐடியாவோடு...ஒரு சூறாவளிக்காற்றாய் சொல்லாமல் கொள்ளாமல் ஈசன் மூனா நந்தகோபால் மாஸ்ரர் வீட்டு வாசற்படியில் வந்தேறி விடுகின்றார்... ...

நினையாப் பிரகாரமாய் ஈசனின் ஈசியான வரவைக்கண்டு திடுக்கிட்டு போன நந்தகோபால் மாஸ்ரர் ''...நீயும்தான்...காத்தாய்ப் போடா...?'' என்று திட்டித் தீர்த்துச் சபித்தும் கொண்டு இன்னொரு மகாபாரத யுத்தத்தின் அவசர வரவிற்கும் இன்னொரு தேரோட்டும் கீதைக் கண்ணனின் அவசர வரவிற்கும்....அதி அவசர அழைப்பு விட்டு... சுப்ரபாதமாய் மெய்யுருகி நின்றும்,விடுகின்றார்...! அப்பொழுதுதான் ஈசன், மூனா... மிகவும் ஈசியாகவே கோதாவிற்குள் புகுந்து, விளையாடத் தொடங்கி விட்டாற்போல... இது வளர்க்கும் எந்த மெசேஜ்சுமில்லாமல் பெற்றவர்களை உதறி எறிந்துவிட்டு, இல்லாப் பிள்ளை போலி நக்கும் அந்த வெளிநாட்டுக் கீதைக் கண்ணனையும் எட்டியும் பார்க்காமல் பின்னால் வீட்டை கைப்பற்றும் ஒரே கபட சிந்தனையோடிருக்கும் இனசனத்தையும் தாக்கி குஸ்த்தி, போட்டு தள்ளிவிட்டு.... எந்த. உருத்துரிமையுமில்லாத தான் தனது கடையில் சாமான்கள் வாங்கும் ஓர் அறிமுகத்தை மட்டும் கொண்டு.... ஒரு மனம் கேளாத மனிதாபிமானமாய், உங்களுக்கு இந்த மகா புண்ணிய உதவியைச் செய்யவென்று, வெளிக்கிட்டுவந்த, விதத்தை அந்த ஈசனொராளுக்கு மட்டும் தான் தெரியுமென்றெல்லாம். தமக்குத்தாமே... மாலை மரியாதையெல்லாம், சுப்பராய், கெப்பராய் அப்பராய் செய்தும் முடித்தும் கொண்டவர்.... நாளைய முதியோர் தினத்தன்று இருவரையும் கைதடி முதியோர் இல்லத்தில் கௌரவமாய்க் கொண்டு போய் விடப்போகும்... அந்த அகௌரவக் கதை [illegible]மல் சொல்லியும் [illegible]டு...

*எது நடந்ததோ அது*
*நன்றாகவே நடந்தது*
*எது நடக்கிறதோ அது*
*நன்றாகவே நடக்கிறது*
*எது நடக்க இருக்கிறதோ அதுவும்*
*நன்றாகவே நடக்கும்..*

என்றெல்லாம் வெளியில் கீதாசாரமாகவும்... உள்ளுக்குள்... கண்ணிவெடியாகவும் கைதடி ஸ்ரோறியை ரிப்ரொப்பாய் முடித்தும் விட்டு கைப்பற்றிக்கொண்டவன் பெரியவன்தான் கணக்காய், மிடுக்காய், துடுக்காய், ஈசன் மூனா வாகனத்தடிக்குப் போய் மிதந்த நேரமாய்... கிழக்கேயிருந்து... அம்மிறி திம்மிறியாய் பன்பலான ஆள்கள் கூட்டத்தோடு காற்றாய் வந்துவிட்ட டெலிக்காவொன்று... மூனாவின் வாகனத்தோடு மருவி வந்து... மூனாவின் வாகனத்தையே தூக்கி வீசித்தள்ளி விடுவது போல் பெரிய சத்தத்தில்... பிறேக்கடித்து நின்று விடுகின்றது...?

....எந்தவொரு மண்ணாங்கட்டியும்... புரியாமல் சன் மூனா அறுந்தாண் பனையாய் நின்றுகொண்டிருக்க...காட்டில் வாழும் அந்தப் பொல்லாத மிருகங்களில் த்திறில்லான ற்ராய்க்...எதுவுமோ...என்ற அகோர பயக்கலக்கடியில் சென்றிக்காரன் எதை முதலில் கையில் தூக்க வேண்டுமென்பதைக் கூட...அறவே மறந்து போனவனாய்...கடும் திகைப்பில் அப்படியே அம்மிப் போனவனாய்... மிரண்டு போனவனாய்... கதிரை... மேசை...வாங்கில்... ஸ்ரூலெல்லாம்... இழுத்தெறிந்து...சாப்பாட்டுக் கோப்பை, தண்ணீர்க்கான், வெற்றுச் சிகரெட் பைக்கற், முகம்பார்க்கும் கண்ணாடி, சிகரெட் லைற்றர்...எல்லாம் கையில் தூக்கித் தூக்கிப் போட்டு பெரும் அமலோதியான அந்தரங்கள், அவதிகள், பட்டுத் தொலைத்துக் களைத்திளைத்துப் போய்விட்ட நேரமாய்... ...எல்லோருக்கும் அருளிச் செய்வது போல...பகைவனுக்கு மருள்வாய் போல..சுற்றம் சூழ வீட்டிற்குள் அவதி அவதியாய் ஓடிப்போன 'கீதைக் கண்ணன்...' அப்பா, அம்மா பாதங்களில் விழுந்து கதறி சுப்ரபாதனாய்க் காட்சியளித்தான்... மீண்டும் கீதைக் கண்ணன் தேரோட்டி வந்துவிட்டான்...! மீண்டும் மகாபாரத யுத்தமானது நடந்தேவிட்டது...! மீண்டுமொரு துரியோதனின் படுவீழ்ச்சியாய்! நந்தகோபால் மாஸ்ரர் இதனை இனிதே கொண்டாடி முடிக்கின்றார்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 07.07.2013 ஞாயிற்றுக்கிழமை

# வெற்றி பெறலாம் வாங்க!

உங்கள் வாழ்க்கையை மாற்றப்போகும் தொடர்....

58

வீடுதான் நீங்கள் முற்றிலும் ஓய்வாக, தளர்வாக இருக்கும் இடம். இங்குதான் நீங்கள் வசிக்கப் போகிறீர்கள். நண்பர்களுடன், உறவினர்களுடன் கூடி மகிழப் போகிறீர்கள். அதனால் உங்கள் வாழ்க்கைத் திட்டத்தில் வீடு என்பது மிக முக்கியமானதாக இருக்கும். குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ஓர் அறை என வீடு விசாலமாக இருக்க வேண்டும் என நினைப்போம். நாம் தனித்து இருப்பதற்கும் இடம் வேண்டும் என்பதால் தனி அறை என்பது நியாயமானது தான். நீங்கள் ஒரே வீட்டில் பல வருடங்கள் வசித்து வரலாம். அல்லது தற்போதுதான் குடிபோயிருக்கலாம். நீங்கள் வீட்டில், பிளாட்டில், படகில் ஒற்றை அறையில் என எங்கு வேண்டுமானாலும் வசிக்கலாம். ஆனால் அது வசதியானதாக இருக்க வேண்டும். உங்கள் இருப்பிடம் என்ற உணர்வைத் தர வேண்டும். வீட்டில் இதுபோன்று பல வசதிகளைச் செய்ய வேண்டும். அதேசமயம் அதிகம் செலவழிக்காமலும், நம் குறிக்கோளில் இருந்து மாறாமலும் இருக்க வேண்டும். இது சவாலானதுதான்.

● ராகவன் அல்பி

## வாழ்க்கையை மேலும் மகிழ்ச்சிகரமாக்கும் 10 சிறிய விடயங்கள்

**தாமதமாக எழுதல் :** வாரத்துக்கு ஒரு நாளாவது நன்கு தூங்கித் தாமதமாக எழலாம். வழக்கமாக நீங்கள் செய்யும் அன்றாட வேலைகளை ஒரு நாளாவது மாற்றிக் கொள்ளலாம். வழக்கமான செயல்பாடுகளை மாற்றிக் கொள்ளுதல், நேரத்துக்கு அடிமை ஆகாமல், உங்கள் வாழ்க்கையை உங்கள் கட்டுப்பாட்டில் வைக்கும்.

**புதுத் துண்டு :** உங்களின் பழைய துண்டுகளைத் தூக்கி எறிந்து விட்டுப் புத்தம் புதிய துண்டை எடுத்துத் துவட்டுங்கள். அன்றைய நாளே நன்றானதாக இருக்கும்.





**ஒன்லைன் ஷொப்பிங் :** 'ஒன்லைன் ஷொப்பிங்' செய்வதால் நேரம், எரிபொருள், நெரிசல் மிகுந்த கணங்கள் என அத்தனையும் மிச்சமாகும். பொருளைக் கொடுப்பதற்கு 'டெலிவரி' கட்டணம் வாங்கினால் கூட, அது போய்வரும் செலவைவிடக் குறைவாகவே இருக்கும். அதற்காகும் நேரத்தை வேறு வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**ஒரேஞ் சாறு :** வாரத்தில் ஒரு நாள் தூய ஒரேஞ் பழச்சாறை சிறப்பு காலை உணவாகக் கொள்ளலாம். அன்று கோப்பியைத் தவிர்த்து விடலாம். ஒரேஞ் சாறைத் தயார் செய்து குடிப்பது, சாறை இன்னும் சுவையானதாக்கும்.

**இனிய இசை :** சி.டி., எம்.பி.3 போன்றவற்றை நாம் அடிக்கடி, எளிதாக வாங்கலாம். இசையை அதிக நேரம் கேட்பது நல்லது. காலையில் இசை கேட்டால் அன்றைய நாள் நல்ல தொடக்கத்துடன் அமையும்.

**கார் பயணம் :** வாரத்தில் ஒரு நாள் கார் அல்லது மோட்டார் சைக்கிளுக்குப் பெற்றோல் தாங்கி முழுவதும் பெட்ரோல் நிரப்பிக் கொண்டு ஊர் சுற்றலாம். இது அன்றைய நாளைக் குதூகல மாக்கும்.

**மூலிகை வளர்த்தல் :** ஜன்னல் வழியாக வரும் குளிர்காற்று இதமானதாக இருக்கும். அந்த ஜன்னல் ஓரங்களில் மூலிகைச் செடிகளை வளர்க்கலாம். மூலிகைச் செடிகளை வளர்ப்பது என்பது எளிதானது. அதைச் சமையலுக்ும் பயன்படுத்தி உணவை மருத்துவ குணம் நிறைந்ததாக ஆக்கலாம்.

**கடிதம் எழுதுதல் :** மின்னஞ்சல்கள் என்பது இப்போது வழக்கமான விடயமாக மாறிவிட்டது. நாம் கிட்டத்தட்ட கடிதம் எழுதுவது என்பதையே மறந்து விட்டோம். அதனால் ஒரு பேப்பரை எடுத்து இனிமையான வரிகள் கொண்டு கடிதம் எழுதுங்கள். அது ஒரு வித்தியாசமான அனுபவமாக இருக்கும்.

**நீண்ட குளியல் :** நீரில் நறுமணம் கலந்து அறையில் மெழுகு வர்த்தி ஏற்றி வைத்துக்கொண்டு, ஒரு மணி நேரம் குளியறைத் தண்ணீரிலேயே இருங்கள். அந்த நேரத்தில் செல்பேசியை அணைத்து விடுங்கள். குளியலறையில் இன்னும் இடமிருந்தால் உங்கள் வாழ்க்கைத் துணைவரையும் கூடச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

**இரவு சீக்கிரம் தூங்கப் போதல் :** ஒரு நாளைக்காவது சீக்கிரம் படுக்கைக்கு வந்து, இனிமையான கனவுகளைக் கண்டு கொண்டே தூங்கலாம். பிரச்சினைகள் ஏதும் இருந்தால், அதை மூட்டைகட்டி வெளியே வைத்துவிட்டுக் கட்டிலுக்குப் போங்கள்.

# இறை பணி எ(ஏ)து?

கூடல் கடந்து வந்த
பாதங்களை ஆறவிட
சமுத்திரங்கள் கடந்துவந்த
சிறகுகள் ஓய்வெடுக்க
சிறு குடில்கள் ஏதுமில்லை

கோபுரங்களை வானுயர
புறாக்கள் எச்சமிட்டு கூடுகட்ட
ஆலயங்கள்
அமைத்ததனால்
பயன் ஏதுமில்லை

பட்டினியால் தாய் தவிக்க
பாலின்றி பாலகன்
பரிதவிக்க
அடுத்த பொழுதில்
உயிரிருக்க
உணவென்று ஏதுமில்லை

அன்னதானம் தினமும் இட்டு
பால் அபிஷேகம் செய்து
பரமனுக்கு பழம் கொடுத்து
பயன் ஏதுமில்லை

ஒட்டிய உடல் மறைக்க
ஒட்டுத்துணி ஒன்றுமில்லை
கட்டிய துண்டுச்
சேலையிலும்
சாயங்கள் ஏதுமில்லை

பட்டுத்துணி சாத்தி
வட்டக்குடை பிடித்து
வாகனத்தில் வலம் வந்தும்
பயன் ஏதுமில்லை

தெய்வத்தின் குழந்தைகள்
துன்பித்த வேளையிலே
உன் இறைபணியை
ஏற்குமா பிறவுயிரை
உன்னுயிராய் நேசி
என்றுரைத்த இறைவன்?

இந்துவாய் நானிருந்து
இதையெடுத்துரைத்தால்
நாஸ்திகன் நீ என்பர்
ஆகமம் புரியாதோர்.

அ. அஜந்தன்,
கந்தர்மடம்.





உதயனின் 'சூரியகாந்தியில்' உங்களது படைப்புகளும் பிரசுரமாக வேண்டுமா? சிறுகதை, கவிதை, கட்டுரை , விமர்சனம், துணுக்குகள் என்பவற்றை உடனே எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசுரமாகும்.

உங்கள் படைப்புகளை
அனுப்ப வேண்டிய முகவரி ;

சூரியகாந்தி - உதயன்
[illegible] கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள சினிமாவில் கொடி கட்டிப் பறந்த இரு தமிழ்க் கலைஞர்கள்



ரம்யன்

சிங்கள சினிமாத் துறையின் ஆரம்பகாலம் தொட்டு அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்களில் தமிழ்க் கலைஞர்களின் பங்களிப்பு கணிசமான அளவில் இருந்துள்ளது.
திரைவானில் ஜொலித்தவர்கள் போக பின்னணியில் இருந்து பணிபுரிந்துள்ளவர்களும் ஏராளம். அவர்களில் பலரையும் இன்றைய தலைமுறையினர் மறந்து போய்விட்டார்கள். அல்லது ஏணி போன்று அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு பின்னர் அவர்களைக் கண்டுகொள்ளாமல் போனவர்களும் உண்டு.
சிங்களத் திரைவானில் மட்டுமன்றி திரை இசையிலும் கொடி கட்டிப் பறந்தவர் ருக்மணிதேவி என்று அறிமுகமாகியிருந்தவரான ராசம்மா டேனியல் ஆவார். இவர் கொழும்பு செட்டி வம்சாவளியில் வந்த தமிழ் பெண்மணி. இவரது தந்தையார் ஜே.டி.டேனியல் மலையகத்தில் நுவரெலியாவில் தோட்டமொன்றில் பணியாற்றினார். அவர் சீரும் சிறப்போடும் இருந்த காலத்தில்தான் அப்போதைய தமிழ் சினிமாவின் முடிசூடா மன்னனாக திகழ்ந்த தியாகராஜ பாகவதரை இங்கு அழைத்துவந்து பல்வேறு மேடைகளில் பாட வைத்திருந்தார். 1923-ஜனவரி-15 ஆம் திகதி நம்பொடவில் ருக்மணி தேவி பிறந்தார்.
ஆரம்பகால சிங்களப் படங்கள் அனைத்திலுமே கதாநாயகியாக நடித்தும், பாடல்களைப் பாடியும் ஒளி வீசித் திகழ்ந்தவர் ருக்மணி தேவி. இலங்கையில் தயாரான இரண்டொரு தமிழ்ப் படங்களிலும் அவர் நடித்திருந்தார்.
ராசம்மாவின் தாயார் ஹெலன் றோஸ் டேனியல் வெள்ளவத்தை சென். கிறயார் கல்லூரியில் ஆசிரியையாக இருந்தார். பின்னர் பம்பலப்பிட்டி மெதடிஸ்த கல்லூரியிலும் பணி புரிந்தார். அவரைப் பற்றி வோல்டர் விஜயநாயக்க என்பவர் தெரிவிக்கையில் பின்வருமாறு கூறுவார்.
''ருக்மணிதேவி எங்கள் எல்லாருக்கும் தெரிந்த ஈடு இணையற்ற கலைஞர். மிகச் சிறந்த நடிகை, பாடகி. அது போலவே சிங்கள திரை வானில் ஜொலித்த முதல் பெண்மணியும் ஆவார்''
1978 ஒக்டோபர் 28 ஆம் திகதி மாத்தறையில் இசை நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு விட்டு திரும்பி வருகையில் ஜாஎல துடெல்ல என்ற இடத்தில் அவர் பிரயாணம் செய்த வாகனம் எண்ணெய் பௌசருடன் மோதி விபத்துக்குள்ளான போது உயிரிழந்தார்.



ருக்மணிதேவி

அசை போட ஒரு விடயம் 86

## இசைக் கலைஞர் முத்துசாமி மாஸ்டர்

இவரைப் போலவே சிங்களத் திரைப் படங்கள் மற்றும் சிங்களப் பாடல்களுக்கு இசை அமைத்து புகழ் பெற்றிருந்தவர் கலாசூரி ஆர்.முத்துசாமி மாஸ்டர் ஆவார். அவரது நினைவு தினம் கடந்த மாதம் 27 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. அவரைப் பற்றி ரமேஷ் உவைஸ் என்பவர் எழுதியிருக்கும் சிறுகுறிப்பு வருமாறு.



முத்துசாமி

முத்துசுவாமி மாஸ்டர் என்று அன்போடு அழைக்கப்பட்ட அவர் சிங்கள சினிமாவுக்கு அரும்பெரும் சேவை புரிந்துள்ளார். 1947 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட கடவுளுபொரந்துவ என்ற படத்தின் பின்னணி இசைக்கு பொறுப்பாக இருந்துள்ள அவர் தொடர்ந்து பல படங்களுக்கு இசை அமைத்துள்ளார்.
ராமையா ஆசாரி முத்துசாமி 1926 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி தென் இந்தியாவில் பிரபல இசை மேதை ராமையா பாகவதரின் மகனாகப் பிறந்தார். கடவுனுபொரந்துவ படத்தின் இசை அமைப்பின் பணிப்பாளராக இருந்த ஆர்.நாராயண ஐயர் படத்தின் பாடல்கள் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட போது தமது இசைக்குழுவில் முத்துசாமிக்கும் இடம் கொடுத்திருந்தார். முத்துசாமி சிறுவயதிலிருந்தே வயலின் வாசிப்பதில் வித்துவம் பெற்றவராக இருந்துள்ளார். பின்னர் ஐயரின் உதவியாளராகப் பணிபுரிந்த முத்துசாமியை திரைப்படத் தயாரிப்பாளர் எஸ்.எம்.நாயகம் இனங்கண்டு இலங்கைக்கு அழைத்து வந்தார். இங்கே இசைத்துறையில் நல்ல பெயரை சம்பாதித்துக் கொண்ட முத்துசாமி 1952 இல் இலங்கை வானொலியில் தமிழ் இசைப்பிரிவில் சேர்ந்து பணியாற்றினார். பின்னர் கந்தானையில் இயங்கி வந்த நாயகத்தின் சுந்தர முருகன் ஸ்ரூடியோவில் இணைந்தார். சிங்கள சினிமாவின் முன்னோடிகளில் ஒருவரான கேகுணரட்ணம் இவரின் திறமைகளைக் கண்டு 'பிரேமதரங்கய' என்ற படத்துக்கான பின்னணி இசைமுழுதையுமே கையாளும்படி பணித்தார். பின்னர் புதுமலேலி, அகங்கார ஸ்திரீ, மாத்தலாங் மற்றும் பல படங்களுக்கு இசை அமைத்து புகழ் படைத்தார். முத்துசாமியின் இசையமைப்பில் பலர் புகழ்பெற்ற சிங்கள, தமிழ் பாடல்கள் பாடியுள்ளார்கள். ஐம்பதுகளின் நடுப்பகுதியில் முத்துசாமிக்கு கௌரவ இலங்கை பிரஜாவுரிமை அப்போதைய பிரதமர் சேர்.ஜோன் கொத்தலாவலயால் வழங்கப்பெற்றது.
முத்துசாமி மாஸ்டர் வாய்ப்பாட்டிலும் சிறந்து விளங்கியுள்ளார். அவர் பாடிய பாட்டுக்கள் உடனடி 'ஹிட்'களாகி பிரபலமடைந்தன. மதுரயாமே, கிலுனு சோக்க கங்கே, போன்ற பாடல்கள் அவர் பாடியனவே. அவை இன்றும் சிங்கள ரசிகர்களால் ரசித்து போற்றப்படுகின்றன.
1958இல் அவர் மீண்டும் இலங்கை வானொலியில் சேர்ந்தார். 1981இல் ஓய்வு பெறும் வரை அங்கு பணி புரிந்தார். 1961 இல் நீலியபெரேரா என்ற பெண்ணை மணந்து கொண்டார். அவர்களுக்கு மோகன் ராஜ், சித்ராங்கி, பிரசன்னவதனி மற்றும் கீர்த்திகா என 4 பிள்ளைகள் உண்டு.
அவரது மகன் மோகன்ராஜ் இப்பொழுது கொழும்பில் இசைக்குழுவொன்றை நடத்தி வருகின்றார். சிங்கள இசைத் துறைக்கு முத்துசாமி மாஸ்டர் ஏற்றுள்ள பணிகள் பல சந்ததியினரால் நிறைவு கூரப்படும் என்று கூறலாம்.

## மாலைக் கருக்கல்

மண்ணுலகை தீவதஞ்
செய்துவிட்ட களிப்பில்
நெருப்புப் பழமாய்
வதனம் தகிக்க மேற்றிசையில்
களைப்பாறி காணாமல்
போகத் தயாராகும் கதிரவன்

இன்றைய தீவதஞ்செய்த
செய்திகள் திரட்டவும்
நாளை தாக்குதலுக்கு
உளவு பார்க்கவுமாக
எதிர்வீட்டு காதலியைப்போல்
இரகசியமாய்த் தலைநீட்டி
வெண்ணொளி பொழியும்
மழலை நிலா

வீதி எங்கணும்
மஞ்சள் குங்குமம் தெளித்து
இரவின் வருகைக்காகக்
காத்துக் கிடக்கும்
அந்தியிளவானம்

புது மனைவியின்
ஸ்பரிசங்களைப் போல
தலை உச்சியையும்
காது மடல்களையும்
தடவிச் செல்லும்
இளமாலைத் தென்றல்


வெயிலைப் பருகிய
போதையில் கடந்து செல்லும்
காற்றோடு மல்லுக் கட்டித்
தள்ளாடும் மரங்களின் கூட்டம்

சூடிக்கொள்ள யாருமின்றி
விண்வெளித் தோட்டத்தில்
அங்கொன்றும்
இங்கொன்றுமாய்
மலரத் தொடங்கும்
நட்சத்திரப் பூக்கள்

நாணெறிந்த மௌனத்
துகள்களை முகத்தில் வாங்கி
கவிதையாகத் திருப்பித் தந்து
அண்டவெளி எங்கும்
கவியத்தொடங்கும் இரவு

இவைகள் எதிலுமே
மனம் லயிக்காது காசு
வேட்டையில் காலம்
கழிக்கின்ற மானுடமாக்கள்

இரவும் பகலும் கலவி
கொள்ளும் எழில்நிறை
மாலைக் கருகல்கள்
வாசிக்கப்படாத கவிதை போல்
வந்து வந்து போகின்றன
தினந்தோறும்



வேல்..வன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வீதியில் உருளும் இரவுகள்

## வல்வெட்டித்துறையிலிருந்து வெள்ளவத்தைக்கு

சத்திரத்துச் சந்தியின் மங்கல் வெளிச்சத்தில், இன்னமும் உணர்த்தப்படாத பல உண்மைகளோடு உட்கார்ந்திருக்கும், திருவள்ளுவருக்கு ஒரு சலாம் வைத்துவிட்டு இடப்புறமாக தெற்கே திரும்பி நடக்கின்றீர்கள். அடுத்த ஐம்பது சுவடுகளுக்குள்ளாக நாபிக்கமலத்தை தொட்டு வரும் துர்நெடியொன்றை முன்னனுமதியின்றி மூக்குத் துவாரங்கள் சுவாசித்த சில நொடிகள் தடையில், உங்களை எதிர்கொள்ளும் 'ரீசேர்ட்' வாலிபனின் ''அண்ணை கொழும்புக்கா?'' எனும் வினாவுக்கு ஆகக் குறைந்தது, தலையாட்டல் மூலமாக வேனும் பதிலளித்தேயாக வேண்டும் தாங்கள்.

கைகளில் கொழுவப்பட்டிருக்கும் பயணப் பொதிகளைக்கூட தாங்களாக வாங்கிக் கொள்ளவும், சில வேளை பறித்துக் கொள்ளவும் உரிமை எடுத்துக் கொள்ளும், அந்த இளைஞர்களுக்கான உங்கள் மூலமான வருமதி குறைந்தது ஐம்பதும், கூடியது நூறுமேயாகும். பயணச்சீட்டொன்றை 'புக்' பெறுவதற்கு வசதியில்லாத (?) நடுத்தரப் பயணி ஒருவரின் கொழும்பு நோக்கிய பாதையின் 'முழுவியளமான' இவர்கள், பண்ணைச் சுற்றினை பொறுத்தவரையில் முன்னிரவொன்றுக்கு முன், சில நூறுகள் பார்ப்பதற்கான காலோடிகள். கொழும்பை அறதியாகவும், இடைத் தூரங்களை குறு இலக்காகவும் கொண்ட பயணிகளின் எண்ணிக்கைப் பெருக்கத்தினையும், வாகன நெருக்கடிகளையும், ஊழியர்களின் அலப்பறைகளையும் கருத்திற் கொண்டே, நகரத்தின் இருட்டு மூலமான பண்ணையில் கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, பல மற்றும் சில ஏய்ப்புப் பிழைப்புக்களுக்கும் வாய்ப்பாகிப் போகின்றது.

### அக்கரைகளில் இருந்து

யாழ்.குடாநாட்டின் அக்கரைகளான வல்வெட்டித்துறை, தெல்லிப்பழை, சித்தன்கேணி போன்ற இடங்களில் கைவிசேடப் பயணியை ஏற்றும் பேருந்துகளும் கூட நிரப்பப்படாத ஒரு சீற்றுக்காக பண்ணை வர வேண்டியிருப்பது, பயணத்தினதும் பஸ் முதலாளிக்கு சென்றடையாத ஆயிரம் ரூபாவினதும் கட்டாயங்களில் ஒன்று. 'அரைச் சொகுசு சேவை' என்ற பேரிலான பேச்சு வழக்கிலான 'நொன் ஏசி' உத்திகளை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தடைசெய்த பின்னரும்-வெகுகூலாக 'சரிக்கப்படக்கூடிய இருக்கைகள்' எனும் தகுதிக்காக இருநூறு தொடங்கி, நானூறு ரூபாய்கள் வரை சாதாரண பயணக் கட்டணத்துக்கு மேலதிகமாக வசூலிப்பும், பயணங்களும் இன்றுவரையும் தொடர்ந்து தான் கொண்டிருக்கின்றன. அதன் சூட்சுமம், அப்பாவிப் பயணியானாலும், மெத்தப் படித்த பயணியானாலும் கண்டு பிடித்துவிட முடியாதது.

### 'அட்ஜஸ்ரபிள் சீற்'

சொகுசு சேவைகளுக்கான பதிவினையும் சேர்த்தான 1300 ரூபாவுக்கு கீழான அடுத்த பயணமானது, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட விதிகளின் கீழ், சாதாரண பயணக் கட்டணமாக 600 ரூபா அல்லது 700 ரூபாவுக்கு ஒழுங்கு செய்யப்பட வேண்டும். ஆனால், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்வினைப் பயனாக, வரமாகப் பெற்ற டீசல் விலையேற்றங்களினால், 'ஏசியை' எடுத்தெறிந்த பேருந்துகள்-'அட்ஜஸ்ரபிள் சீற்' எனும் தலைப்பின் கீழ் நடத்தும் பட்டிமன்றங்களில், இன்னமும் தீர்ப்புக் காணப்படவேயில்லை. பயணிகளின் பிடரியின் பின்னால் தெரியும் 'ஒளிவட்டங்களைப்' பொறுத்து, 750 தொடக்கம் 1000 ரூபா வரை ஏற்ற இறக்கங்களோடு மாற்றி மாற்றி அறவிடப்படும், இம்முறையற்ற பயண ஒழுங்குக்கான முறைப்பாடுகள் எதனையும் பதிவு செய்ய முன்வராத சாபம், இந்தப் பயணங்களில் தம்மை செருகிக் கொள்ளும் எல்லோருக்கும் பொதுவானது.

பிரதம தபால் நிலைய முன்றலில் இருக்கும் வீதிச் சுற்றுவட்டத்தை பேருந்துகள் கடப்பதற்கு முன்னரே, பயணச் சீட்டிலிருந்து நடத்துனரால் கிழித்துச் சேகரிக்கப்படும், 'காற்துண்டில்' மட்டுமே பயணத்துக்காக அறவிடப்படும் தொகை எழுதியிருக்கும் என்பதுதான் குறித்த கம்ப சூத்திரம். எட்டு மணிக்கு எடுக்கப்பட வேண்டிய பேருந்து ஒன்பதாகி, பத்து நிமிடங்கள் கடந்தும், உறுமும் இயந்திரத்துடன் ஓரடி கூட அசையாமல் நிற்கும் கடுகடுப்பிலும் கூட, சாதாரணமாக ஒவ்வொரு பயணிகள் அருகிலும் வந்து, பயணச்சீட்டினை வாங்கி கிழித்துவிட்டு மீதியைத் தருகின்ற அக்கறைக்கான காரணத்தினை ஆழப் புரிந்து கொண்டு, எங்கோ குப்பைகளோடு சேர்க்கப்பட்ட பழைய பயணச்சீட்டினை தேடித் துழாவியெடுத்து-அதிலே வசூலிக்கப்பட்ட தொகை எழுதியிருக்கப்படாததை கண்டு-கண்கள் சிவந்து, உதடுகள் துடிப்பவன் எவனாயினும், அவனும் பச்சைத் தமிழனே!

### கூட்டணிப் பிழைப்பு

ஆள்பிடிப்பவர்-புக்கி-பஸ் நடத்துநர் ஆகிய மூவருக்குமான கூட்டணிக்கும் சேர்த்து, பயணியொருவரின் பயணச்சீட்டுக்கான பணத்தின் மீது அவர்களுக்கான தரகுப் பணமும் சேர்த்து கட்டப்படுகின்றது. நேரடியாக பஸ் நடத்துநரை அணுகுபவர் எனும் பகுதிக்குரியவர்கள் மட்டுமே கட்டுப்படியாகக் கூடிய தொகையொன்றுக்கு தனது பயணத்தினை தொடங்க முடியும். ''பஸ் வெளிக்கிட முன்னம், மிச்சக் காசைக் கேட்டு வாங்கிக் கொள்ளுங்கோ அண்ணை, இடையில எங்களிட்டக் கேட்டு குறைப்படாதையுங்கோ'' பணிவன்புடன் வண்டி ஓட்டுநரால் கூறப்படும் எச்சரிக்கைகள்-புக்கிங் தொகையில் பங்கு கிடைக்காத ஏக்கத்தையும், நடத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நர்களுடன் கொண்டுள்ள நல்லுறவினையும் கட்டியங் கூறுகின்றன. பெரும்பாலும் மீதிப் பணங்கள்- பேருந்துக்கு வெளியில் வைத்து- புறப்படும் நேரம் வரை இழு, இழுவென்று தாமதிக்கப்பட்டே வழங்கப்படுகின்றன. முன்னூறு ரூபா மீதிப் பணத்தை பெற்றுக் கொள்ளும், பேரம் பேசும் சக்தியுடைய பயணியொருவரின், பக்கத்து ஆசனத்தில் ஆயிரம் ரூபா கொடுத்து அமர்ந்திருக்கும் அம்பிகளின் விசாரணைகளிலிருந்து தப்புவதற்கான வியூகம் இது!

பஸ்ஸுக்குள் வலது கால் எடுத்து வைப்பதற்கு முன்னரே, ஆசன இலக்கம்-பயணச்சீட்டின் தொகை என்பவற்றைத் தீர விசாரித்து தெளிவுடன் நடந்து கொள்பவரேயாயினும், சீட்டெழுதுபவருக்கு பதிற் சொல்லாடி பயணத் தொகையினை எழுநூறாகக் குறைக்கும் திறமையுடையவரேயாயினும், குறைக்கின்ற ஒவ்வொரு நூறு ரூபாவுக்கும் மூன்று சோடி ஆசனங்கள் பின்னோக்கி நகர்த்தப்படுவார். உதாரணமாக 900 ரூபாவுக்கு ஆசன இலக்கம் '19' என்றால், 700 ரூபாவுக்கு ஏறக்கூடியவரின் ஆசன இலக்கம் '34' க்கு வேகமாக வீழ்த்தப்படும்.

''பலூன் பஸ்ஸில எங்கை இருந்தாலும் ஒண்டு தானண்ணை'' எனும் ஆசுவாசப்படுத்தலுடன் அமைதியாகுவதைத் தவிர பெரும்பாலும் வேறு வழியிருக்காது.

''ஒநாள் வரவேணும்'' எனும் பதாகையின் கீழ், மெதுவாக இரையும் இயந்திரத்துடன் காத்திருக்கும் வண்டிகள். நிறைய 'உச்' கொட்டல்களின் பின்னணியில் 9.30 இற்குப் பின்னால் ஊரத் தொடங்குகின்றன. இறுதியாக 10.30 இற்கும் புறப்பட்ட பயணமொன்றின் கதையை அண்மையில் நண்பனொருவனிடம் கேட்க முடிந்தது.

''குழந்தைகள், வயோதிபர்கள் விடயத்தில் ஆசன ஒதுக்கீட்டில், இயைபுடன் இயங்குகின்றார்களில்லை'', ''வேகத்தடைகளைக் கவனித்து வண்டி ஓட்டுவதில்லை'', ''சிலயன்னல் கண்ணாடிகளைப் பூட்ட மூடிவதில்லை'', ''ஒரு மணிக்கு மேல், ஏ.சியை நிறுத்தியே வைத்து விடுகின்றார்கள்'', ''காதைப் பிளக்கும் சத்தத்தில் பாட்டுக் கேட்க வைக்கின்றார்கள்'' போன்ற மைனர் குற்றச்சாட்டுக்களோடு, பல மக்ஸிமம் குற்றச்சாட்டுக்களையும் விரல் நீட்டுகின்றனர் பயணிகள் தரப்பினர்.

''அனுராதபுரத்தில் ஏறி, புத்தளத்தில் இறங்குபவர்களை இடையில் ஏத்துறீங்கள்- பெறுமதியான பயணப் பொதிகளை வைத்தபடி எப்படி தூக்குவது'' என்ற குற்றச்சாட்டுக்கு விடை காண முன்னரே, இருக்கைகளின் மேல் தட்டில் வைக்கப்பட்டிருந்த மடிக் கணினியை பறி கொடுத்திருக்கின்றார், கொழும்புப் பல்கலைக்கழக மாணவனொருவர் சிலாபம் காவற்றுறையில் புகார் கொடுக்கவென்று தனது முழுநாளொன்றைச் செலவழித்ததாகக் கூறி மனங்கலங்கும் அவரது கோபத்தின் மறுபுறத்தில் பஸ் நடத்துநர்களின் பேராசை முகம் மறைத்து நிற்கின்றது.

''இரண்டு மணிக்குச் சாப்பிடுவதன் பெயர்- இரவுச் சாப்பாடா? என்று குமுறும் பசித்த வயிறுகளின் கேள்விகளை, தமக்குச் சாதமளிக்கும் உணவக உரிமையாளரின் செல்வாக்கினை சேகரிப்பதற்காக, வேறெங்கும் நில்லாது விரையும் ஓட்டுநர்கள் செவிமடுக்கத் தயாரில்லை. 'வக்கிரிகொலாவ', 'நொச்சியாகம' போன்ற இடங்களில் காத்திருக்கும் உணவுக் கொள்ளை மையங்களில், ஓட்டுநர்- நடத்துநர் 'கிட்டத்தட்ட' ஓசியில் ஏப்பம் விடும் உணவுக்கான பணத்தையும் பயணிகளிடம் சேர்த்து அறவிடும் வாடிக்கை தொடர்கிறது. ''ரீயும் பனிஸ் ஒன்றும் எண்பது ரூபாவா?'' என்று இலங்கையின் பொருளாதாரக் கொள்கையினை கேள்விக்குள்ளாக்கும் வர்த்தகத்தின் மறைப்பிடப்பட்ட மேசையொன்றில் வைக்கப்படும் 'இறைச்சிக் கொத்து', 'இறால் கறி', 'அரை வேக்காட்டு ஆம்லெட்' எதற்குமே பணம் செலுத்தும் தேவை ஓட்டுநர்- நடத்துநருக்கு இருப்பதேயில்லை. 'தங்களது ருசிக்காக எங்களது பசியை' அடுத்த நாள் விடிகாலை வரை காக்க வைக்கின்றார்கள் எனும் குற்றம், நெற்றிக் கண்ணினால் கூட பொசுக்கப்பட முடியாதது.



## 'கவனிப்பு முறிவு'

உணவக உரிமையாளர்களுக்கும்- பஸ் ஓட்டுநர்களுக்கும் இடையிலான 'கவனிப்பு முறிவு' களின் அடுத்த நாள்களில் வேறு உணவகங்களில் பஸ் நிறுத்தப்படும் சந்தர்ப்பங்களின் போதான, முறுகல் நிலை- பஸ் கண்ணாடிகளையும் பயணிகளையும் கல்லெறிந்து காயப்படுத்தும் தீவிரவாதத்துக்கும் அடி கோலுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் உடல் ஊறுகளுக்கும், பொலிஸ் விசாரணைக்காக தாமதிக்கும் மணித்தியாலங்களுமாகப் பாதிக்கப்படுதென்னவோ பெரும்பான்மையினப் பயணிகள்தான். சிறிய தேங்காயொன்றின் அளவிலான, 'சிங்களக் கருங்கல்லினால்', பக்கப் புறக் கண்ணாடியொன்று 'கொலை வெறியுடன்' முற்றாக நொருக்கப்பட்ட 'ஏசி' பஸ்ஸொன்றின் ஓட்டுநரும், நடத்துநரும் 'ட்றபிக்' பொலிஸாரின் வருகைக்கா நொச்சியாகம காட்டுப்புறத்தில் இரண்டு மணிநேரத்துக்கு அண்மித்து தரித்து நின்ற 'திக் திக்' நிமிடங்களை கலவரத்துடன் நினைவுகூர்கின்றார், இளைப்பாறிய தபாலதிபர் ஒருவர். தெய்வாதீனமாக எவருக்கும் காயமேற்படாத மேற்படி நிகழ்வுக்கான உடனடிக் காரணம் அந்த பஸ்ஸின் 36 பயணிகளில் இரவுணவுக்காக இறங்கக் கூடிய ஆகக் கூடிய இருபது பேரிடமிருந்து பிடுங்கப்படக் கூடிய இலாபம் இன்னொரு கடைக்கும் கைமாறியதுதான். தமிழனுக்கு வந்தால் அது (இரத்தம்)'தக்காளிச் சட்னி'யல்லவா?

''நாங்களும்மனிசர்தானேஅண்ணை'' என் பீடிகையுடன் தொடங்கும் பேருந்தின் ஊழியர்களின் தரப்பிலும் நியாயம், அநியாயத்துக்கு கொட்டிக் கிடப்பது கொஞ்சம் உண்மைதான்?

## காவல்துறையின் கௌரவப் பிச்சை

''ஓராள் குடுக்கிற காசு கூட இல்லை, என்ர ஒரு றிப் சம்பளக் காசு'' எனும்பொருளாதார மிகைக்குறைவும், ''நாற்பது பேரும் நித்திரையில் ஏன் கோழையா கூடப் படுத்தாலும் நான் முழிக்கிறதுக்கு பாட்டு சத்தமா போட்டிருந்தால் தான் ஏனும்'' என்கின்ற உறக்கத் தியாகத்திலும் ''என்னதான் எல்லாமே சரியா வைச்சிருந்தாலும், ஆளுக்கு இருநூறு குடுத்தால்தான் எடுக்க விடுவான்'' என்று இலங்கைக் காவல் துறையின் கௌரவப் பிச்சையை திரை கிழிக்கின்ற கொடையிலும் அவர்களுக்கே உரித்தான கழிவிரக்கப் பேச்சினால் தம்மை நியாயப்படுத்தவே செய்கின்றனர். வெகு சில சந்தர்ப்பங்களில் மட்டும் ''சனத்துக்கு ஒருநாள் பயணம் தானே, எங்களுக்கு இது தானேயண்ணை, தொழில்- முன்னப் பின்ன குறை- நிறை வரத்தான் செய்யும்'' என்ற பொத்தாம் பொது வாதம். பயணிகளின் பாதுகாப்பற்ற பயணத்துக்கும் அசௌகரியங்களுக்கும் எவ்வகையிலும் அது ஈடாகிட முடியாது.

''கட்டவன் வரை தமிழர்களாகவும் கட்டுவனுக்கு மேல் அந்நியர்களாகவும் எரிகிற வீட்டில் பிடுங்கும் வரை இலாபம் பார்த்த'' விமானக் கம்பனிகள் இன்றைக்கு ஈயோட்டுபவர்களாகவும் தடவைக்கு நான்கு பேரையே ஏற்றியிறக்குபவர்களாகவும் 'மலிந்து' போன மாற்றம் மட்டுமே என்றைக்கும் மாற்றமில்லாதது நண்பர்களே! சேநாடுகளின் தண்டவாளப் பணிகள், வேகமாய் தெரிக்கின்றன. யாழ்.தேவி வராது. ஆனால் வரும்.

# சித்தப்பா வருவார் சிறிசுகளே மிகக் கவனம்!

சின்னஞ் சிறிசுகளே எங்கள் செல்வக் குழந்தைகளே!
சிந்தை நெகிழ்ந்து சொல்லும் இச் சேதியைக் கேளுங்களே!
வண்ணத் தமிழ் மண்ணில் மலர்ந்திடும் மொட்டுக்களே!
வாடா மலர்களாய் நீர் வாழுவழி கேளுங்கள்!
காலம் மாறியிப்போ கடுங்காலம் என ஆச்சு
கலியுகம் தான் ஐயோ! கொடும் யுகமாய் போச்சு
ஞாலமெங்குமில்லா அலங்கோலம் எம் மண்ணில்
நியாயம் நீதியில்லாக் கொடுங்கோலம் எம் மண்ணில்

சித்தப்பா என வருவார் சிரித்து நல்லாய்ப் பேசிடுவார்
செல்லமாய் அணைத்தும்மை மெல்ல மெல்லச் சிதைத்திடுவார்
பெத்தப்பா போலொருவர் பெரிதாய்க் கதையளப்பார்
பெரும் அன்பு காட்டுவதாய் வம்பு செய்து போயிடுவார்
தாமாய்க் கதை கொடுப்பர் தனியாக உமை அழைப்பார்
தகாத வழி நடந்துவிட்டுத் தப்பியவர் போயிடுவார்
மாமா எனச் சொல்வார் மருமகளே! என அழைப்பார்
ஏமாந்தால் ஏய்த்துமது உயிரையே எடுத்திடுவார்

அறுபது வயது 'அங்கிள்' ஆறுமே நிரம்பாதந்த
அரும்பினை அழித்தகதை அறிவீரோ! ஐயோ! அந்தோ!
அறுபதும் கழிந்துவிட்ட அரக்கனாம் ஓர் கிறுக்கன்
அகவையோ நான்குமில்லா அப்பாவி மொட்டாமந்த
பச்சை மண்ணதனைப் பாலியற் கொடுமை செய்த
பாதகன் பாவிபோல பலரிங்கு இன்றுமுண்டு

இச்சையைத் தீர்க்க சிறுமொட்டுக்கள் தேட இங்கே
இளசுகளில்லை இப்போ கிழடுகள் கவனமிங்கே!
உதயனைப் பார்த்திடுவீர் உண்மைகளறிந்திடுவீர்
ஊரிலே தினம் நடக்கும் கொடுமைகள் புரிந்திடுவீர்
இதயமே வெடிக்குதையோ! இளையவர் நிலையை எண்ண
இகத்தினில் எங்குமில்லாக் கொடுமையோ கொடுமை! ஐயோ!

யாழ் மண் எமது என்றோம் ஞாலத்தில் நிமிர்ந்து நின்றோம்
பழைமை, பண்பாடு என்று பறைசாற்றி வாழ்ந்து நின்றோம்
யாழ் மண் இன்று இங்கே பாழ்மண் ஆகிப்போக
பண்பாடு எங்கே இங்கே! பரமனே யார்க்குரைப்போம்!




மிருசுவில் தமிழ்தாசன்
மீசாலை கிழக்கு, மீசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
07 07 2013

# அன்னக்கொடி - விமர்சனம்



பாசத்துக்குரிய பாரதிராஜாவின் பரிதாபத்துக்குரிய படைப்பு

ஆதங்கன்

இயக்குநர் பாரதிராஜாவின் அன்னக்கொடி திரைப்படம் வெளியாவதற்கு முன்னரே சர்ச்சைகள் முந்திக் கொண்டுவெளிவரத் தொடங்கி விட்டன. இந்தப் படத்துக்கு முதலில் 'அன்னக் கொடியும் கொடி வீரனும்' என்றுதான் பாரதிராஜா பெயரிட்டிருந்தார். முதலில் பார்த்தீபனே நாயகன் என அறிவித்த பாரதிராஜா படப் பூஜையின் போது தன்னோடு நேரடி சமரில் இறங்கியிருந்த அமீரை நாயகன் என அறிவித்து அனைவரின் புருவங்களையும் ஆச்சரியத்தில் உயர வைத்திருந்தார். எதற்காகப் பார்த்தீபனை ஓரங்கட்டினார்? ஏன் அமீரை நாயகனாக்கினார்? எவருக்கும் புரியவில்லை.

அத்தோடு பாரதிராஜாவின் அன்னக் கொடிக் குழப்பம் அடங்கி விடவில்லை. மீண்டும் நாயகன் மாற்றப்பட்டான். அமீர் தூக்கி எறியப் பட்டார். படத்தின் பெயரும் 'அன்னக் கொடி' என சுருங்கியது.

அதன் பின்னர் சத்தங்கள் ஓய்ந்திருந்தன. இவ்வளவு சர்ச்சைகளோடும், பாரதிராஜாவின் கனவுகளோடும் உருவாகிய அன்னக்கொடி எப்படி வந்திருக்கிறது என்ற ஆர்வம் எல்லோருக்கும் எழுவது இயல்பே. பாட்டும் கூத்தும் என தலையெடுத்த தமிழனுக்கு, அந்தப் பாட்டுக்கும் இசைக்கும் அதனோடு இயைந்த காட்சிகளுக்கும் புதிய அர்த்தம் கொடுத்தவர்கள் இளையராஜாவும் பாரதிராஜாவும்.

அதே பாரதிராஜா இளையராஜாவை விட்டுப் பிரிந்து வந்து வேதம் புதிது படைத்தபோதும், கிழக்குச் சீமையில் தனி ஆவர்த்தனம் வாசித்த போதும்.. ஆர்ப்பரித்து வரவேற்கிறார்கள் ரசிகர்கள் சாதிக் கொடுமையை வைத்து கிராமத்தில் நடந்த காதல் துயரம் ஒன்றே பாரதிராஜாவின் அன்னக்கொடி படத்தின் கதை.

இதை அவர் எந்த சமரசமும் இல்லாமல் தன் பாணியில் எடுத்திருந்தால், இன்னொரு அழகிய படைப்பாக வந்திருக்கும். சாதீயம் தலை விரித்தாடும் இந்த நேரத்தில், அது சமூகத்துக்கான ஒரு மருந்தாகக் கூட இருந்திருக்கும்.

தமிழ் சினிமாவைப் புரட்டிப் போட்ட படைப்பாளி, ஸ்டுடியோக்களுக்குள் இருந்த சினிமாவை கிராமங்களுக்கு அழைத்துச் சென்றவர், மண்ணின் கலைகளை - உணர்வுகளை செலுலாய்டில் செதுக்கியவர் என எத்தனையோ பெருமைகளுக்குச் சொந்தக்காரரான பாரதிராஜா 5 ஆண்டுகள் கழித்து உருவாக்கியிருக்கும் படம் என்ற முத்திரையோடு வந்திருக்கிறது 'அன்னக்கொடி'.



சாராயம் காய்ச்சி விற்பவளின் மகளான அன்னக்கொடிக்கும் (கார்த்திகா) செருப்புத் தைக்கும் தொழிலாளி மகன் கொடிவீரனுக்கும் (லட்சுமணன்) ஆடு மேய்க்கப் போன இடத்தில் காதல் பூக்கிறது.

ஆனால் வட்டிக்குப் பணம் கொடுத்து ஊரையே வளைத்து வைத்திருக்கிற சடையனின் (மனோஜ்) காமப் பார்வைக்குள் சிக்குகிறாள் அன்னக்கொடி. அந்த நேரத்தில் அன்னக்கொடியை பெண்கேட்டு அப்பனோடு வருகிறான் கொடிவீரன். தாழ்ந்த சாதிக்காரன் எப்படி பெண் கேட்கலாம் என அவர்களை அடித்து உதைத்து சாணியைக் கரைத்து ஊற்றி அசிங்கப்படுத்தி அனுப்புகிறாள் அன்னக்கொடியின் தாய். விஷயமறிந்த சடையன் தன் அடிமையான பொலிஸுக்கு சொல்லி கொடிவீரனை சிறையில் தள்ளுகிறான்.

ஒரு நாள் அன்னக்கொடியின் தாய் செத்துப் போக, அவள் வாங்கிய கடனுக்கு ஈடாக அன்னக்கொடியை தன்வசமாக்கிக் கொள்கிறான் சடையன். சடையனுக்கு மனைவியாக அன்னக்கொடி வாழ்ந்தாளா? கொடி வீரன் காதல் என்ன ஆனது? என்பதையெல்லாம் குருதி கொப்பளிக்க சொல்லி முடிக்கிறார் பாரதிராஜா.

பாரதிராஜாவின் கிராமத்துக் கதைகள் பெரும்பாலும் சோடைபோகாதவை. விலக்காக முதல் சொதப்பல் 'ஈரநிலம்' அந்தப் பட்டியலில் இப்போது 'அன்னக்கொடி'யும் சேர்ந்துள்ளது.

ஆரம்பத்திலிருந்தே ஏதோ ஒரு குறையுடனேயே காட்சிகள் நகர்கின்றன. பாரதிராஜாவின் படங்களுக்கே உரிய உணர்வுப்பூர்வமான காட்சிகளோ, அழகியலோ, வசனங்களோ, நுட்பமான நளினங்களோ இந்தப் படத்தில் ஒரு காட்சியில்கூட இல்லை. அதேபோல ஏற்கெனவே பாரதிராஜாவின் படங்களில் பார்த்த நிறைய காட்சிகளை இந்தப் படத்தில் மீண்டும் பார்க்க முடிகிறது. அன்னக்கொடியின் தாய் இறந்து போனது தெரிந்ததும், காதலியைப் பார்க்க வேகமாக வருகிறான் கொடிவீரன். அப்போது கல்யாணமாகி கணவனுடன் மாட்டு வண்டியில் போய்க்கொண்டிருப்பாள் அன்னக்கொடி. இதை வேதம் புதிதிலேயே கொஞ்சம் வேறு மாதிரி காட்டியிருப்பார்.

வசனங்களில் ஆபாசம், அருவருப்புக்கும் பஞ்சமில்லை.

சடையனுக்கு தந்தையாக வரும் மனோஜ்குமார் தன் மருமகளையே மடக்கப் பார்க்கும் காட்சிகளும் வசனங்களும் இது பாரதிராஜாவின் படமா என்ற சந்தேகத்தைக் கிளப்புகின்றன.

ஊரில் உள்ள பெரும்பாலான பெண்

P ò ÷ I ◘ » , µÅ U ◘ P G Ú | õ P ரீக

மாக நடமாட, இளம் பெண்களான கார்த்திகாவும், ''லோக்கல் வெடக் கோழி' மீனாளும் மட்டும் ரவிக்கையில்லாமல் அலைவது ஏன் என்பது பாரதிராஜாவுக்கே வெளிச்சம்.

ஒரு காட்சியில் கிட்டத்தட்ட முக்காலுக் கும் கொஞ்சம் அதிகமான நிர் வாணத்தோடு கார்த்திகாவை ஓடவைத்திருக்கிறார் பாரதிராஜா. அவ்வளவு ரணகளத்திலும் ஒரு கிளுகிளுப்பு தேவைப்பட்டிருக்கிறது! மகனுக்கு நல்ல வாய்ப்பை உண்டாக்கித் தர ஒரு தந்தை விரும்புவது நியாயம்தான். ஆனால் அதற்காக இப்படியா? மனோஜ் இல்லாத காட்சியென்று எதையும் எடுக்கவே அவர் விரும்பவில்லை போலிருக்கிறது. எல்லா காட்சிகளிலும் நீக்கமற நிறைந்திருக்கிறார் மனோஜ்.

நடிகர்களின் பங்களிப்பு என்று சொல்லப் பெரிதாக ஒன்றுமில்லை. லட்சுமணன் கொஞ்சம் முயன்றால் ஒரு நல்ல நடிகராக வர வாய்ப்பிருக்கிறது. முதல் படம் என்றாலும், முக பாவங்களைத் தெளிவாகக் காட்ட வருகிறது அவருக்கு. கார்த்திகாவை ஆடு மேய்க்கும் பெண்ணாக ஒப்புக் கொள்ள கஷ்டமாக இருக்கிறது. அவரது தோற்றம் அப்படி.

மனோஜ்குமார், மீனாள், ரமா பிரபா, கொடிவீரன் தந்தையாக வருபவர், பொலிஸ்காரர் ஆகியோர் கொடுத்த வேலையைச் செய்திருக்கிறார்கள்.

நல்ல காட்சிகள், நல்ல வசனங்கள், நல்ல பாடல், நல்ல இசை என்று எதையுமே குறிப்பிட முடியாத பரிதாபத்துக்குரிய படமாக 'அன்னக் கொடி' வந்திருக்கிறது.

அன்னக்கொடிக்கும் [கார்த்திகா] செருப்புத் தைக்கும் தொழிலாளி மகன் கொடிவீரனுக்கும் [லட்சுமணன்] ஆடு மேய்க்கப் போன இடத்தில் காதல் பூக்கிறது. அன்னக் கொடியின் தாய் செத்துப் போக, அவள் வாங்கிய கடனுக்கு ஈடாக அன்னக்கொடியை தன் வசமாக்கிக் கொள்கிறான் சடையன். சடையனுக்கு மனைவியாக அன்னக்கொடி வாழ்ந்தாளா? கொடிவீரன் காதல் என்ன ஆனது? என்பதையெல்லாம் குருதி கொப்பளிக்க சொல்லி முடிக்கிறார் பாரதிராஜா.



## மறுபிறவி....

ஒன்றரை வருடமாய் ஒவ்வொரு
நாளும் பேருந்துப் பயணம்
அழகான பெண்கள்
அம்சமான ஆண்கள்
வயதான அப்பாக்கள்
வயோதிப அம்மாக்கள் - என
ஆயிரக் கணக்கானோர்
அனுதினமும் வருவார்கள்
அத்தனை பேரிற்குள்ளும்
அவன் முகம் மட்டும்
எனக்குள் அழகாய்ப் பதிந்தது
எப்படி?
அவனைப் போலவே
அவனாடைகள் கூட
அழகாய்த்தான் இருக்கும்
புன்னகை சிந்தமாட்டான் - என்னுள்ளம்
புரிந்ததாய் ஒரு பார்வை பார்ப்பான்
அந்தப் பார்வைக்காகவே - என்
பள்ளிக்கான பயணம்
பலநாளாய் தொடர்கிறது
பேருந்திலேயே!
அன்று...
இயலாத அம்மாவுக்கு இடமளித்துவிட்டு
எழுந்து நின்றேன்
என்னருகே நின்றவன்
என்னுடன் வம்பிழுத்தான் - இதைப்
பார்த்துவிட்டு
முன்னே நின்றவன் முழுவீச்சோடு
பின்னே வந்தான்
வம்பிழுத்தவனின் பிடரியைப் பிடித்து
பின்னே தள்ளிவிட்டு
என்னருகே வந்து நின்றான்
என்னுள்ளம் சிலிர்த்தது
என்னுறவென்ற நினைவோடு - அவனை
ஏறெடுத்துப் பார்த்தேன் - என்
கண்கள் பனித்தது
மண்ணோடு மண்ணாக மாண்டுபோன -
என்
அண்ணனை இன்னொருமுறை
இனங்கண்ட
சந்தோசம் எனக்குள் - எனைப் பார்த்து
சின்னதாய் சிரித்துவிட்டு
மெல்லமாய் சொன்னான்
மாத்தளனில் மரணித்த என் தங்கை
உங்களைப் போல என்று!
அதிசயித்துப் போனேன்!
மரணித்த அண்ணன்
மறுபடி வந்த மகிழ்வோடு நானும்
மரித்துவிட்ட தங்கை
மறுபடி பிறந்த நெகிழ்வோடு அவனும்
அன்றே அறிமுகமானோம்
அண்ணனும் தங்கையுமாய்

ஜானுகா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பில்கேட்ஸ்

## உலகப் பணக்காரன் உருவான கதை

06

'டிராப்-ஓ-டேட்டா' நிறுவனத்தின் மூலம் எக்கச்சக்கமாகச் சம்பாதித்து விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்த பில்கேட்ஸையும், போல் ஆலனையும் நடுத்தெருவுக்குத் துரத்தியது அமெரிக்க அரசின் உத்தரவு!

''இனி என்ன செய்யலாம்?'' என்று யோசித்தபோது பழைய 'லேக்சைட் ப்ரெக்ராமர்ஸ் க்ரூப்'புடன் இணைந்து கொண்டு, சின்னச் சின்ன மென்பொருள்களை எழுதிக் கொ[illegible]த்துக் கைச்செலவுக்குக் காசு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இந்த நிலையில் உள்ளூரில் உள்ள ஒரு பெரிய நிறுவனம் இந்தக் குழுவை அழைத்து, தங்கள் நிறுவனத்துக்கு மென்பொருள் எழுதிக் கருமாறும் அதற்குக் கணிசமான தொகை தருவதாகவும் ஒப்புக் கொண்டது.

பில்கேட்ஸைக் காட்டிலும் இரண்டு வயது பெரியவரான போல் ஆலன் தான் அந்தக் குழுவின் தலைவர். வேலையைப் பெற்றுக்கொண்ட பிறகு ''எந்தெந்த வேலையை யார் கவனிப்பது? யாருக்கு எவ்வளவு சம்பளம்?'' என்பதை எல்லாம் முடிவு செய்வதும் போல் ஆலன்தான்!

அதுவரையில் நியாயமாக நடந்து கொ[illegible] போல் ஆலன், உள்ளூர் நிறுவனத்திலிருந்து பெரிய தொகைக்கு ஓடர் கிடைத்ததும், பில்கேட்ஸ் உள்ளிட்ட நண்பர்களைத் தவிர்த்து விட்டு, தான் மட்டும் தனி ஆளாக அந்த வேலையைச் செய்யத் தொடங்கினார்!

விடயமறிந்த பில்கேட்ஸ் உடனே கோபத்துடன், ''எங்களை எல்லாம் இந்த [illegible]வலையில் சேர்த்துக் கொள்ளாதது ஏன்?'' என்று கேட்டார்.

''இந்தக் குழுவுக்கு நான்தான் தலைவன். யாருக்கு எந்த வேலையை எப்போது கொடுக்க வேண்டுமென்பது எனக்குத் தெரியும். இந்த வேலையை எவருக்கும் பிரித்துக் கொடுக்காமல், தனி ஓர் ஆளாகச் செய்து முடிக்க விரும்புகிறேன். என்னுடைய இந்த முடிவு உனக்குப் பிடிக்கவில்லை என்றால் இந்தக் குழுவிலிருந்து நீ வெளியேறிக் கொள்ளலாம்'' என்று பதில் சொல்லி விட்டுத் தன் வேலையைத் தொடர்ந்தார் போல் ஆலன்.

இந்தப் பதிலை எதிர்பாராத பில்கேட்ஸ் அதிர்ச்சியுடன் வெளியேறினார். பில்லுக்கு ஏற்படும் கணினி சந்தேகங்களை அவ்வப்போது தீர்த்து வைப்பதே இந்த ஆலன்தான். அப்படியிருக்க இந்த ஆலனை விட்டுப் பில்கேட்ஸ் எங்கே போக முடியும்? பில்கேட்ஸைப் பொறுத்தவரை, ''தனக்குக் கிடைக்க வேண்டிய சம்பளம் கிடைக்காமல் போய் விட்டதே'' என்ற வருத்தமெல்லாம் கிடையாது. ''மென்பொருள் எழுதுகிற வேலையை இன்னும் முழுமையாகக் கற்றுக்கொள்ளாதபோது, அந்த வேலையை மேலும் கற்றுக் கொள்கிற முயற்சி தடைப்படுகிறதே என்பதுதான் அவரது வருத்தம்.

ஆலனும் கூட பணத்துக்காக இதைச் செய்யாமல் ''தனி நபராகச் செய்து முடிக்க வேண்டும்'' என்ற ஆவலில் தான் பில்கேட்ஸைக் கூட்டணியில் சேர்த்துக் கொள்ள மறுத்தார்.

''தனி ஓர் ஆளாக அந்த மென்பொருளை எழுதிவிட முடியும்'' என்று நம்பித்தான் அந்த வேலையைச் சுறுசுறுப்பாகத் தொடங்கினார். ஆனால் சில நாள்களுக்குள்ளாகவே மூச்சு முட்டியது. பெரிய வேலை என்பதால் பெரும் மலைப்பாக இருந்தது. தனி ஆளாகத் தவித்த ஆலன், கூட்டணிக்கு யாரையாவது அழைக்கலாம்? என்று முடிவெடுத்தபோது அவரது ஞாபகத்தில் வந்தவர் பில்கேட்ஸ்தான்.

வலிய வந்த பில்கேட்ஸை விரட்டிய பிறகு, ஆலனே வலியச் சென்று பில்கேட்ஸை அழைக்கும் நிலை வந்தது. அப்படியே அழைத்தாலும் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு பில்கேட்ஸ் மீண்டும் வருவாரா? இதையெல்லாம் ஆலன் யோசிக்கத் தயாராக இல்லை. காரணம், இப்போது அந்த வேலையை முடிக்கக் கட்டாயம் பில்லின் உதவி தேவை. எனவே அவர் வர மறுத்தாலும் தூக்கிக் கொண்டு வந்து விட வேண்டியதுதான்? என்ற முடிவோடு கேட்ஸைத் தேடிப் புறப்பட்டார்.

ஆலன் அழைத்தபோது அதை மறுக்காமல் ஏற்றுக் கொண்ட பில்கேட்ஸ் அதேசமயம் ஒரு நிபந்தனையையும் விதித்தார். அதாவது ''லேக்சைட் ப்ரொக்ராமர்ஸ் குழு''வுக்கு நான்தான் தலைவனாக இருப்பேன். கிடைத்த வேலையை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுப்பதும், அதில் யாருக்கு எவ்வளவு சம்பளம் என்பதையும் நான்தான் தீர்மானிப்பேன். இதற்கு ஒப்புக் கொண்டால் நாம் இணைந்து பணியாற்றலாம்; இல்லையென்றால் நீ நடையைக் கட்டலாம்'' என்று கேட்ஸ் சொன்னபோது ஆலனால் அதை மீற முடியவில்லை.

குறிப்பிட்ட திகதியில் அந்த மென்பொருள் வேலையை முடிக்க வேண்டும் என்றால் பில்லின் உதவியில்லாமல் முடியாது. எனவே, பில்லின் நிபந்தனையை ஏற்பதைத் தவிர வேறுவழியில்லை ஆலனுக்கு.

ஆலன் அதற்கு ஒப்புக் கொண்டதும் பழையதை எல்லாம் மறந்து விட்டு நண்பர்கள் இருவரும் தீவிரமாக அந்த வேலையில் இறங்கினார்கள். ஒருவருக்கொருவர் பேசி விவாதித்துச் சிறப்பாக அதைச் செய்து முடித்து, நிறுவனக் காரர்களின் பாராட்டை பெற்றார்கள்!

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு முழுக்க முழுக்கப் பில்கேட்ஸின் தலைமையை ஏற்றுக் கொள்வதில் ஆலனுக்கு எந்த வித ஈகோவும் இருக்கவில்லை. அதன் பிறகு அந்தக் குழு பில்கேட்ஸின் முழுமையான கட்டுப்பாட்டில் செயற்பட்டது.

ஒவ்வொருவரின் திறமைக்கேற்ப வேலையைப் பகிர்ந்தளித்து, அதற்கான நியாயமான சம்பளத்தையும் பிரித்துக் கொடுத்து விடுவார்! கேட்ஸின் இந்த அணுகுமுறையால் அந்தக் குழு அவருக்குக் கட்டுப்பட்டு நடந்தது. பில்கேட்ஸும், ஆலனும் மீண்டும் இணை பிரியாத தோழர்களாகி விட்டனர்.





ஆலனுடன் பில்கேட்ஸ்




## முன்னொரு நாள் முல்லைப் பூவாய்...

அது ஓர் கண்ணீர்த் தொட்டி
கொட்டியாய்க் கடந்து - என்
பொட்டும் தாலியும்
சாதித்து விட்டதென எண்ணி- என்
ஒட்டியான உதடுகள்- ஓர்
உரசல் போட்டன....

ஒப்பாரக் கொப்பிலே- ஒரு
மெய் தின்னும் மிருகம்
முதல்நாள் இரவின்
முகூர்த்தப் பலியை
நிறைவேற்றிவிட்டு
இன்றைய நாளில்
எனக்காய் காத்திருக்கின்றது.

ஓடினேன் ஈழத்தை நோக்கி
ஓங்கி ஓர் அடி...
ஒடிந்து போனேன்
வெறும் [illegible]
என்காலி [illegible]
என் மெட்டி அவனின் மெட்டியில்
என் மெய் அவன் கையில்...
அவன் மெய் ஓரம் எங்கும்
துப்பாக்கி வாசனை - என்னை
[illegible] கைகளால் இழுத்து
சாயமில்லாச் சாமத்தில் தோய்த்து
காயவைத்து.... காயவைத்து...
மாய வலி தந்தான்
அந்த அர்த்தமான- என்
அழுத்த இரவுகள்- என்னை
எள்ளி நகையாடின

முல்லைக் கொடிகள் அழுதன
அடம்பன் கொடிகள் அடங்க
மறுத்தன
கண்டல் மரங்கள் கண்களை
மூடிக்கொண்டன.

முல்லை மண்ணில்- என்
[illegible]- என்
[illegible]- அவனின்
எச்சில்கள் பொழிந்து கிடந்தன.

கஞ்சல் காயப் போன- என்
உடல்மேடுகள்
நெரிக்கப்பட்டுக் கிடந்தன...
அழுதேன்...
அரலி விதைகளிடம்
அரவணைப்புக் கேட்டேன்
காலைப் பூக்களிடம் நிரந்தரம்
கேட்டேன்
கல்லறையிடம்- என்
கவலைப்பாட்டை
கற்றைக் கேட்டேன்
எருக்கலம் இலையிடம்- என்
மெய் மறக்கும்படி கேட்டேன்
மறுத்துவிட்டன...
மன்னிக்க மறுத்தன...
காதுகளைப் பொத்திக்
கொண்டன...
கண்களை மூடிக் கத்திக்
கொண்டன....
அழ மண்ணே.... என- என்
அழத்தைத் துறந்து விட்டேன்...

பி.ஜதீஸ்குமார், கள்ளப்பாடு, முல்லைத்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

07.07.2013 முதல் 13.07.2013 வரை

கணிப்பவர் - வித்தியா

**மேடம்** - நிறைவேற்ற வேண்டிய பணிகளில் தகுந்த கவனமும் கூடுதல் உழைப்பும் உரிய நன்மை பெற உதவும். உறவினர்கள் நல் அபிப்பிராயம் கொள்வர். புத்திரர், உங்களின் சொல்கேட்டு நடப்பார்கள். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் குடும்ப ஒற்றுமை காத்திடுவர். தொழில் வியாபாரத்தில் அனுகூலத் தன்மைகளை அக்கறையுடன் பாதுகாப்பது நல்லது. பணியாளர்கள், கவனக்குறைவால் நிர்வாகத்தின் கண்டிப்பை பெறுகிற சூழ்நிலையைத் தவிர்க்கவும். மாணவர்கள் பெற்றோரின் பணவசதிக் கேற்ப விரும்பிய பொருள் கேட்டு வாங்குவர்.

**இடபம்** - மனதில் நிம்மதியும் பெருமிதமும் நிறைந்திருக்கும். மதிநுட்பத்துடன் செயற்பட்டு முக்கியமான செயல்களை நிறைவேற்றுவீர்கள். பணவரவு அதிகம் பெற புதிய வாய்ப்புகள் உருவாகும். அயல்வீட்டாரிடம், உங்கள் மீதான மதிப்பு அதிகரிக்கும். இல்லறத்துணையின் உடல் நல ஆரோக்கியம் பலம் பெறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். அபிவிருத்திபணி மேற்கொள்வீர்கள். பணியாளர்களுக்கு நற்பெயரும் ஊக்கத்தொகையும் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் பெற அதிக பயிற்சி முறை உதவும்.

**மிதுனம்** - நண்பரிடம் நல்ல கருத்துகளை உரிய தருணங்களில் சொல்வதால் மட்டுமே, மனக்கிலேசம் வராத சூழ்நிலை இருக்கும். புத்திரர் படிப்பு, செயல்திறனில் முன்னேற்றம் பெற, உத்வேகமும் தகுந்த வழி காட்டுதலும் அவசியம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனத்துடன் கூடுதல் உழைப்பால், நற்பயன் பெறலாம். பணியாளர்கள் தொழில் நுட்ப அறிவை வளர்த்துக் கொள்வதால், பணி இலக்கை குறித்த காலத்தில் நிறைவேற்றலாம். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதை குறைப்பதால், படிப்பில் ஞாபக சக்தி வளரும்.

**கடகம்** - தன்னுடன் பழகுபவர்களின் ஆடம்பர செயல்களை பார்த்து தானும் அதுபோல, ஆடம்பர பழக்க வழக்கங்களை பின்பற்றுகிற எண்ணம் கொள்வீர்கள். இதனால், அதிக பணச்செலவும், மனதில் நிம்மதி குறைவும் ஏற்படலாம். கவனம் தேவை. இல்லறத்துணை குடும்பத் தேவைகளை, சிக்கன பணச்செலவில் நிறைவேற்றுவார். தொழில், வியாபாரத்தில் மாற்று உபாயம் பின்பற்றி உற்பத்தி, விற்பனையை சராசரி அளவுக்குக் கொண்டு வருவீர்கள். பணியாளர்கள் பொறுப்புணர்வுடன் பணிபுரிந்து நற்பெயரைக் காப்பர். மாணவர்கள் லட்சிய மனதுடன் படித்து அதிக தேர்ச்சிபெறுவர்.

**சிங்கம்** - மனதில் அதிக தன்னம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த நன்மைகளும், பணவரவும் திருப்திகரமாகக் கிடைக்கும். பணக்கடனில் பெரும்பகுதியைச் செலுத்துவீர்கள். இல்லறத்துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்து, குடும்ப நலனைப் பாதுகாப்பர். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகைப்பயன் பெறுவர். மாணவர்கள், படிப்பதில் கூடுதல் அக்கறையும், விளையாட்டு பயிற்சியில் பாதுகாப்பு நடைமுறையும் பின்பற்றுவது அவசியம்.

**கன்னி** - நிதானித்துப் பேசுவதால் மட்டுமே, நண்பர் உறவினர்களிடம் நற்பெயரைப் பாதுகாக்கலாம். அதிக பயன்தராத பொருள் வாங்குவதை தவிர்ப்பதால், பணசேமிப்பு அதிகரிக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேற்றுவதால், சிரமங்களுக்கானத் தீர்வு கிடைத்து மனம் இலகுவாகும். இல்லறத்துணை, உங்களின் கருத்துகளை ஏற்று நடந்து குடும்ப நலம் பேணுவர். தொழிலில் முன்னேற்றம் பெற தேவையான, அரசு தொடர்பான உதவி எளிதில் பெறுவீர்கள். பணியாளர்கள் சக பணியாளர்களிடம் சுமுக நட்பு பாராட்டுவர். மாணவர்கள், ஆசிரியரிடம் நன்மதிப்பு பெறும் வகையில், கல்வியில் ஆர்வம் கொள்வர்.

**துலாம்** - பொது இடங்களில், நண்பரால் உருவாகிற சிரமத்திற்கு, நீங்கள் கண்டிப்புக்கு உள்ளாக நேரிடலாம். கவனம் தேவை. போக்குவரத்தில் கவனத்தைப் பின்பற்றுவது நல்லது. இல்லறத்துணையில் மனதில் நம்பகக் குறைவு வராத அளவில் நடந்து கொள்வதால், குடும்ப ஒற்றுமை சீராக இருக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனமும், சீர்திருத்த நடைமுறையும் தேவைப்படும். பணியாளர்கள் திட்டமிட்ட இலக்குகளை நிறைவேற்ற பணித்திறன் வளர்ப்பது அவசியம். மாணவர்கள் புதியவரை நண்பராக ஏற்பதில் தகுந்த கவனம் தேவை.

**விருச்சிகம்** - உடல்நல ஆரோக்கியம் பேணுவதில் உரிய கவனம் கொள்வதால் மட்டுமே, திட்டமிட்ட பணி குறித்த காலத்தில் நிறைவேறும். ஆன்மிக நம்பிக்கை உள்ளவர்களின் அன்பு, ஆசி கிடைத்து மனதில் உத்வேகம் பெறுவீர்கள். எதிரியால் வருகிற தொந்தரவு இஷ்டதெய்வ அருள் பலத்தால் விலகும். இல்லறத்துணை, குடும்பத்தின் சூழ்நிலைகளை கவனத்தில் கொண்டு, உதவும் வகையில் நடந்து கொள்வர். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்ட திட்டங்களை தவறாமல் பின்பற்றவும். மாணவர்கள் நன்றாகப் படித்து ஆசிரியர், பெற்றோரின் நன்மதிப்பைப் பெறுவர்.

**தனுசு** - உத்வேகமுடன் மேற்கொள்வீர்கள். தகுந்த நன்மையும், உபரி பணவரவும் கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருளை, அதிக தரம் உள்ளதாக வாங்கித் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். உத்தியோகத்தர் சிறப்பாகப் பணிபுரிந்து நிர்வாகத்திடம் பாராட்டு, வெகுமதி பெறுவர். மாணவர்கள் படிப்புடன் இதர தகுதிகளை வளர்த்துக் கொள்ள உரிய பயிற்சி மேற்கொள்வர்.

**மகரம்** - உறவினர், நண்பர்களிடம் பண்பு, பரிவுடன் பேசுவதால் நற்பெயரைப் பாதுகாக்கலாம். சொத்து தொடர்பான ஆவணங்களை பிறர் பொறுப்பில் தரக் கூடாது. இல்லறத்துணையிடம் கருத்து வேறுபாடு வராதபடி பேசுவது நல்லது. வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம். தொழில், வியாபாரத்தில் வருகிற இடையூறு சரி செய்வதால் உற்பத்தி, விற்பனை சீராகும். உத்தியோகத்தர், பணியாளர்களை ஊக்கப்படுத்துவதால், பணி இலக்கு நிறைவேறும்.

**கும்பம்** - மனதில் இனம் புரியாத வகையில் சஞ்சலம் உருவாகும். தெய்வ அனுகூலத்தினால், கடந்த காலத்தில் சிரமம் விலகியதை எண்ணி நம்பிக்கை கொள்வீர்கள். இல்லறத்துணை சில விடயங்களை தவறாகப் புரிந்து கொண்டு கருத்து வேறுபாடு கொள்வர். உங்களின் அன்பு, பொறுமை ஒற்றுமை உருவாக உதவும். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பால், சீரான பணவரவு பெறலாம். குடும்பப் பெண்கள், உறவினர் வீட்டு விவகாரங்களில் கருத்துச் சொல்ல வேண்டாம். மாணவர்கள், அதிக விலையுள்ள பொருள்களைக் கவனமுடன் பயன்படுத்தவும்.

**மீனம்** - குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். இல்லறத்துணை குடும்ப நலன் சிறக்க கூடுதல் பொறுப்புணர்வுடன் பணிபுரிவார். தொழில், வியாபாரத்தில் சராசரி உற்பத்தி, விற்பனை இருக்கும். அரசியல்வாதிகளுக்கு எதிர்ப்பு விலகி பொறுப்பான பதவி பெற நல்யோகம் உண்டு. பெண்கள், கணவர் வழி சார்ந்த உறவினர்களை உபசரித்து நற்பெயர் பெறுவர். மாணவர்கள், பாதுகாப்பு குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மான வீரர்கள்

சாமம் பேயுலவும் சவக்காலை என்ற
பழிச்சொல் போய் மறையலானது
வீரர் துயிலுகின்ற இல்லம் என்ற சொல்
வாய் நிறையலானது கார்த்திகை மாதத்திலேன்
கனத்த மழை ஏனிந்த பச்சை விரிப்பு

நிலமேன் நெக்குருகிக் கிடக்கிறது
காற்றேன் ஓவென்றிருக்கிறது
சூரியன் ஏன் சுட்டெரிப்பதில்லை

அயர்ந்துறங்கும் ஆலகண்டருக்கு இம்மாத அஞ்சலியிது
ஓவென்றிசையும் இந்த மாத காற்றே!
வேகம் குறைத்து வீசு வேத குமாரர்கள் தூங்குகின்றனர்
துயில் கலைத்து தொலைக்காதே
கல்லெறிதல் போல பெய்யும் மழையே
பூவெறிதல் போல மெல்லப் பொழிக
தொட்டெழுப்பித் தொலைக்காதே

நிலமே மழைநீரைக் குடிக்காதே
உள்ளே சில்லிட்டுப் போகும் அவர் தேகம்
அதிர நடப்பவரே கவனம்- என் அண்ணன்களின்
தூக்கம் கலையக்கூடும்
கார்த்திகை இருபத்தேழு! எம் காவற் தெய்வங்களுக்கான
காணிக்கைத் திருநாள் ஊர்கூடி விதைத்த வயல்
தேடி வந்திருக்கும் சிறகெடுத்த பறவைகளின் உறவங்கு
திரண்டெடுக்கும் தனிக்குரலில் ஒரு தாய்ப்பறவை கதறியழும்
"மகனே பால் தந்த பாவி பூக்கொண்டு வந்துள்ளேன்
கால் கொண்டுதைந்து நிலம் கிழித்து வாமகனே வெளியே
என் கையணைப்பில் உன்னை நொடிப் பொழுதாயினும்
ஆரத்தழுவ அனுமதிப்பாய் என் மகனே"

உயிர் பிழிந்து கசியும் உதிரம்
திக்குற்றுப் போகும் திரண்டிருக்கும் உறவுகள்
சொல்லியழும் குரலில் கல்லும் கசிந்துருகும்
கேட்கும் செவியெல்லாம் கிறுகிறுத்துப் போகும்
உள்ளே நரம்பெல்லாம் தீமூண்டு நடுங்கும்
ஆறாத் துயர் வெள்ளம் அணையுடைத்துப் பாயும்
அப்போதுதான் கல்லறையின் கதவுகள் திறப்பதாய்
ஒரு காட்சி உள்ளே விரியும்

உள்ளே முகம் விரியும்
விழிகள் திறந்து பேசத் துடிப்பதாய் வாயசையும்
மெல்லச் சிரிப்பொலியும் கேட்கும்
"அம்மா எனக்கா சாவுவரும்
உள்ளே உயிர்கொண்டே உறங்குகின்றேன்
தமிழீழம் வரும் வரை எனக்குச் சாவில்லை
அதன் பின்பும் எனக்கு அழிவில்லை"

என்றோர் அசரீரி எல்லாச் செவிகளிலும் கேட்கும்
கோயில் மணிகள் அசைய குழிவிழிகள் மூடிவிடும்
கல்லறைக் கதவுகளில் பூட்டிவிடும்
நெய் விளக்குகள் நிமிர்ந்து சுடர் பிடித்தெரியும்
திருப்பலிப்பாடல் தொடங்கும்

"மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை
முடிசூடும் தமிழ் மீது உறுதி
விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி"

பாடல் தொடங்கவே நெஞ்சு பாரம் சுமக்கும்
விழிநீர் சொரிய சொரிய பாடும்போது
நெஞ்சுக்குள்ளே கிளறும் உணர்வில் நெருப்பு மூளும்
இது வீர வழிபாடு பழைய மரபொன்றின் புதிய வடிவம்

வல்லமையை எமக்கு வழங்குங்கள் என்று
கல்லறை முன்பே கைகூப்பி வணங்கும் திருநாள்
ஊர் திரண்டு ஒப்பாரி வைக்கவில்லை
உருக்கொண்டாடி உறுதியெடுத்துக் கொள்கின்றோம்
உழவும் விதைப்பும் நாளை நமக்கெனவாகும்
அறுவடைக்கானது

ஊர் முற்றமெங்கும் ஒளி வெள்ளம்
சுடரேற்றித் தொழுகின்றோம்
பாட்டோடு சேர்ந்து பரவசம் உறவுகளே!
கேட்கிறதா கோயில் மணி
கேட்கிறதா நெஞ்சுருகும் பாடல்
தெரிகிறதா சுடரும் நெய்விளக்கு

ஜெ.சோழவண்ணன்
வாதரவத்தை, புத்தூர்



# உண்மையான பக்தி

சா.ரமேஸ்குமார்

பகவத்கீதையில் பக்தியோகம் என்ற தனியான பிரிவு கிருஷ்ண பரமாத்மாவால் உபதேசிக்கப்பட்டுள்ளது. உத்தவ கீதையிலும் பக்தர்களின் லட்சணங்கள் பற்றி ஹரி என்ற முனிவரால் கூறப்பட்டுள்ளது. பக்தியை புகழாத ஞானிகளும் இல்லை. சித்தர்களும் இல்லை. அந்தளவுக்கு பக்தி நம்மை இறைவனுடன் ஒன்றிக்க வைக்கின்றது.

சாத்வீகமான பக்தியென்பதும் அதை கடந்த பக்தியென்பதும் அகங்காரமற்ற, சுயநலமற்ற, தூய்மையான அன்பில் மட்டும்தான் தங்கியுள்ளது. இறைவனை நினைத்து உருகுவது அல்ல பக்தி. இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களிடமும் அந்த பரம்பொருளைக் கண்டு சேவை செய்வதே புனிதமான பக்தி.

தூய்மையான பக்தனுக்கு முடியாத ஒன்று என எதுவும் இருக்க முடியாது. கை, கால்கள் வியர்வை சிந்தப் பணி புரிய வேண்டும். அறிவு பூர்வமாக சிந்தித்து ஆத்ம அன்பினால் இறைவனைப் பற்றிக் கொண்டு எமக்கான பக்தியை பிறருக்கானதாக மாற்ற வேண்டும். இவ்வாறு செயற்படுகையில் எவருக்கும் தோல்வியில்லை. எல்லா ஏழைகளின் துக்கமும், வறுமையும், கண்ணீரும் துடைக்கப்படுகின்றது. நம்முடைய 'நான்' என்ற உணர்வும் காற்றில் அடிபட்டுப் போகும் சருகுபோல் நம்மை விட்டு விலகுகின்றது. இதுவே இந்து தர்மத்தின் அடித்தளம்.

இன்றைய தலைமுறையினர் தங்களுடைய கலாசாரத்தை மறந்து நவநாகரிக ஆடம்பரத்துக்குள் புகுந்து தங்கள் மனதை சுடுகாடாக மாற்றி வைத்திருக்கிறார்கள். அந்தச் சுடுகாட்டில் மதுவும், மாதுவும், புகைத்தலும், துர்க்குணங்களும்தான் பேய்களாகச் சுற்றித் திரிகின்றனவே தவிர அங்கு வேறொன்றும் இல்லை. அன்பு, பக்தி, புனிதம் என்பவற்றை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டிய மதகுருமார்களே போகத்தின் பின்னால் சுற்றித் திரிகிறார்கள். கீழானவற்றை பின் பற்றுகிறார்கள். எனில் இளம் தலைமுறை எப்படி உய்வடையும்? கீதையில் பரமாத்மா இப்படி முன்மொழிகின்றார். ''அப்பழுக்கற்ற மனதை ஒன்றித்தே நிலையாக நிறுத்திய உண்மையான பக்தன் எப்போதும் என்னருகிலே வசிக்கின்றான்'' ஆத்ம பக்தி என்பது இந்தப் பிரபஞ்சத்தின் எதிர்ப்புகளையும் தாண்டி ஆட்சி செய்யும் வல்லமை பொருந்தியது என்கிறார் பரமாத்மா. ஒரு பெரிய உருவம் படைத்த யானையை ஒரு சிறிய அங்குசத்தால் எப்படிப் பாகன் அடிபணிய வைக்கிறானோ அதே போல் சர்வவல்லமை பொருந்திய இறைவனையும் தூய்மையான அன்பினாலும், புனிதத்தாலும், பரிபூரண சரணாகதியாலும் ஒரு பக்தனால் தன் சுயேச்சைப்படி ஆட்டி வைக்க முடியும். இதைத்தான் சித்தர்களும், யோகிகளும் சித்து, அற்புதம் என்ற பெயரில் செப்புகின்றார்கள். அந்தளவுக்கு பக்தனுடைய ஆத்ம அன்பு பிரேமையாக மாற்றமடைந்து நீலவானம் போல் பரந்து எல்லையற்றதாக இருக்க வேண்டும்.

பக்தி என்ற சிம்மாசனத்தில் இளைய தலைமுறையினர் உட்காருவதற்கு மனமென்னும் சக்கரத்தை அகற்றி விட்டு ஆத்மா முழுதும் அன்பு மழையால் நனைத்துக் கொண்டு இறைவனை நோக்கி நகருங்கள். எமது வீடு, சமுதாயம், நாடு, தேசம், உலகம் அனைத்தும் பிரமிப்பாகவும், உன்னதமாகவும் வெகு சீக்கிரத்தில் முன்னேறும். இதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

பக்தி என்ற சிம்மாசனத்தில் இளைய தலைமுறையினர் உட்காருவதற்கு மனமென்னும் சக்கரத்தை அகற்றி விட்டு ஆத்மா முழுதும் அன்பு மழையால் நனைத்துக் கொண்டு இறைவனை நோக்கி நகருங்கள்.



## ஜம்பலின் துடிப்புகள்

### பால் கறக்கும் தாத்தா...



ஜம்புலிங்கத்துக்கு தன்னை எப்போதும் மற்றவர்கள் உயர்வாக நினைக்கவேண்டும் என்று விருப்பம்.அதனால் எவ்வளவு தூரம் புளுகமுடியுமோ அந்தளவுக்கு தன்னைப்பற்றி புளுகிவிடுவார்.

ஒருமுறை அவரின் ஜப்பானிய, அமெரிக்க நண்பர்கள் வீட்டுக்கு வந்திருந்தார்கள். முதலில் சாதாரணமாக ஆரம்பத்த உரையாடல் பின்னர் தத்தம் நாடுகளின் வைத்தியமுறை பற்றிய விவரிப்புக்குச் சென்றது.

ஜப்பானிய நண்பர் சொன்னார், ''அண்டைக்கு எங்கட தாத்தாவின்ர கை முறிஞ்சு போட்டுது. உடன டொக்டரிட்ட கொண்டுபோனம். அங்க அவருக்கு ஒரு எலக்ரொனிக் கை பொருத்தினாங்கள். இப்ப அந்தக்கையால தாத்தா ஒரு காரையே தூக்குவார்.''

அமெரிக்க நண்பரும் விடவில்லை. அவர் சொன்னார், ''எங்கட பாட்டிக்கும் விபத்தில மண்டை வெடிச்சு மூளை வெளியில வந்திட்டு. ஹொஸ்பிட்டலுக்கு கொண்டு போன அஞ்சாவது நிமிசத்தில அவான்ர மூளையை வெளியில எடுத்திட்டு மெமரி சிப்ட் ஒண்டு வைச்சினம். இப்ப அவா கொம்பயூட்டரை விட வேகமாக எல்லாத்தையும் கணிப்பா''

ஜம்புலிங்த்தால் இவ்வளவற்றையும் கேட்டுக் கொண்டு எப்படிப் பொறுத்திருக்க முடியும்? பொங்கியெழுந்தார். உடனேயே அவரும்,

''லொறி ஒண்டுக்க நசிபட்டு எங்கட தாத்தாவின்ர இடுப்புக்கு கீழ சிதைஞ்சுபோட்டுது. எங்கட ஊர்ப் பரியாரியிட்ட கொண்டு போனம். அவர் டக்கெண்டு ஒரு ஆட்டை வெட்டி அதின்ர இடுப்புக்கு கீழ உள்ள பகுதியை தாத்தாவுக்கு வைச்சு பொருத்தினார். இப்ப எங்கட தாத்தாவில காலமையும், பின்னேரமும் அஞ்சு லீற்றர் பால் கறக்கிறம்'' என்று சொல்ல, அமெரிக்கரும், ஜப்பானியரும் வாயடைத்துப் போயினர்.

### கண் மூடிய மர்மம்...



ஒருநாள் முகம் பார்க்கும் கண்ணாடிக்கு முன்பாக ஜம்புலிங்கம் நீண்டநேரமாகக் கண்ணை மூடிக்கொண்டே நின்றிருந்தார். மனைவிக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு கட்டத்தில் அவர், ''எதற்காக நாள் முழுக்க இப்படிக் கண்ணாடிக்கு முன்னாலேயே நின்று கொண்டிருக்கிறீர்கள்?'' என்று வாய்விட்டே கேட்டார். அப்போதும் ஜம்புலிங்கம் கண்ணைத் திறக்காமலேயே ''அடியே! இது கூடவா உனக்குத் தெரியவில்லை. நான் நித்திரை கொள்ளும் போது எப்படி இருப்பேன் என்பதைத்தான் இப்படி கண்ணாடிக்கு முன்னால் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்பலம் தனக்குத் தெரியாது



ஒரு காட்டில் நிறைய விலங்குகள் வசித்து வந்தன. அனைத்து விலங்குகளும் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்து வந்தன. அங்கே வசித்த மயில் மட்டும் எப்போதும் மற்ற பறவைகள் மற்றும் விலங்குகளை பார்த்து பொறாமை பட்டுக்கொண்டே இருந்தது.



உதாரணத்திற்கு யானையை பார்த்து பெரியதாய் இருக்கிறது என்றும், மானை பார்த்து வேகமாக ஓடுகிறது என்றும் பொறாமைப்படும்.



இப்படியிருக்க ஒரு மழை காலத்தில் அந்த மயில் அழகாக ஆடத்துவங்கியது. அப்போது பாட ஆரம்பித்த மயில் தன் மோசமான குரலை எண்ணி அழத்துவங்கியது. அப்போது அங்கு வந்த மைனா மயிலை



சமாதானப் படுத்தி அருகில் சென்றது. மயில் தனது வருத்தத்தை மைனாவிடம் கூற, மைனா மயிலிடம், நீ மிகவும் அழகாய் இருக்கிறாய், அதை நினைத்து நீ சந்தோஷப் பட்டிருக்கிறாயா என்றது, மயில் சிறிது நேரம் மௌனமாய் இருந்துவிட்டு இல்லை என்று பதில் கூறியது.



இதனை கேட்டு சிரித்த மைனா உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் எதாவது ஒரு சிறப்பும் வலிமையையும் இருக்கும், அது என்ன என்பதை உணர்ந்து அதனை மேம்படுத்தவேண்டுமே அன்றி எது நம்மிடம் இல்லையோ அதை நினைத்து வருத்தப்படவோ பொறாமைப்படவோ கூடாது என அறிவுரை கூறியது. தன் தவறை உணர்ந்த மயில் மைனவிற்கு நன்றி தெரிவித்தது.


பென்சிலால் எழுதினால் இலகுவாக அழிக்க முடிகிறது. தவறாக எழுதிவிட்டாலும் இலகுவாக ரப்பரினால் அழித்துவிடுகிறோம். இது எவ்வாறு சாத்தியமாகிறது.

பென்சில்களில் கிராபைட் எனும் மென்மையாக்கப்பட்ட கரித்துண்டு அதிகமாக காணப்படுகிறது. அதில் ''லெட்'' எனும் காரீயத்தின் அளவு மிகக் குறைவு.

கல்லில் எழுத்துக்களைச் செதுக்கும் போது கல்லுக்குள் உளி ஊடுருவிச் செல்கிறது. அதனால் எழுத்துக்கள் கல்லில் பதிகிறது. இருப்பினும் பென்சிலால் பேப்பரில் எழுதும் போது அதன் கருத்துக்கள் காகிதத்தாளை ஊடுருவி உள்ளே செல்வதில்லை. காகிதமானது தாவரப் பொருளால் உருவாக்கப்பட்டது. அந்த நார் பொருளின் மீதே பென்சில் துகள்கள் ஒட்டிக்கொள்கின்றன. ரப்பரினால் அவற்றை அழிக்கும் போது நுட்பமான அந்தக் கிராபைட் துகள்கள் காகிதத்தில் இருந்து பிரிக்கப்பட்டு, மென்மையான ரப்பரின் மீது ஒட்டிக் கொள்கிறது. இதனால் அழித்த பின்னர் ரப்பரின் மீது கிராபைட் ஒட்டிக்கொண்டிருப்பதை காணலாம்.

சி. சிந்து,
சுதுமலை தெற்கு.







[illegible], தரம்-6 E
யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரி



[illegible], தரம்-9 f
யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரி

## மருத்துவம் பற்றிய சில தகவல்கள்

| | |
|---|---|
| மருத்துவத்தின் தந்தை | - கிப்போ கிறட்டீஸ் |
| குருதியின் வகைகள் | - A, B, AB, O |
| பொது வழங்கி குருதி வகை | - O |
| பொது வாங்கி குருதி வகை | - AB |
| பித்தத்தைச் சுரக்கும் உறுப்பு | - ஈரல் |
| அறுவைச் சிகிச்சையின் போது உடல் விறைப்பதற்கு பயன்படுத்துவது | - ஈதர் |
| எலி கடிப்பதால் உண்டாகும் நோய் | - பிளேக் |
| மனிதனின் மிக நீண்ட எலும்பு | - தொடை எலும்பு |
| உயிரற்ற கலங்களால் ஆக்கப்பட்ட பகுதி | - நகம், மயிர் |
| மிகவும் வன்மையான பகுதி | - பல் மிளிரி |
| விற்றமினை அறிமுகம் செய்தவர் | - பங் விற்றமின் |
| மனித உமிழ் நீரிலுள்ள நொதியம் | - தயலின், அமிலேசு |
| மிகப் பெரிய உறுப்பு | - கல்லீரல் |
| மிகப் பெரிய சுரப்பி | - ஈரல் |

சு. ஆர்த்திகா, தரம் 9டி,
யா/வேம்படி மகளிர்
உயர்தரப் பாடசாலை.

## விடை தெரியுமா? 218

### உங்களுக்கும் பரிசுகள்

1. யாழ்ப்பாணத்தை அடையாளப்படுத்தும் மரம் எது?
2. உலக வரலாற்றில் பழைமை வாய்ந்த மரம் எது?
3. தமிழில் முதலில் தோன்றிய இலக்கண நூல் எது?
4. பறக்கும் போதே தூங்கும் பறவை எது?
5. போரில் விமானத்தை முதல் முதலில் பயன்படுத்திய நாடு எது?

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் ''சிறுவர்கதிர்'', உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடைகள் 216

1. பைக்கால்
2. கல்லீரல்
3. மயில்
4. மியான்மர்
5. லுணுவில


### வெற்றி பெற்றவர் விவரம் (216)

*த.தனிஸ், தரம்-3, நல்லூர் சென்பெனடிக்ற் றோ.க.த.க.
*ஜெ.டினோஜ், தரம்-10, நல்லூர் இந்து தமிழ் பாடசாலை.
*த.பிரவீன், தரம்-1,
*ச.தர்ஷனா, இந்து மகளிர் கல்லூரி

### விடை தெரியுமா?

தெரிந்தால் 13.07.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசு கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

## கழுதைப் புலி



மேற்கு ஆசியா, கிழக்கு ஆப்பிரிக்கா ஆகிய இடங்களின் கழுதைப் புலிகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. கழுதைப் புலிகளில் 3 வகைகள் உண்டு. பழுப்பு நிற கழுதைப் புலி, புள்ளிக் கழுதைப் புலி, கோடு கழுதைப் புலி ஆகியவையாகும். மூவகைக் கழுதைப் புலிகளில் புள்ளி கழுதைப் புலி உண்டாக்கும் பல ஒலிகளில் மனித சிரிப்பொலி போன்ற ஒலியும் ஒன்றாகும்.
கழுதைப் புலிகள் சிங்கம், பெரிய விலங்குகள் உண்டுவிட்டு போட்ட எஞ்சிய உணவையே உண்ணுகின்றன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவீனமாகக் கருதப்பட்ட பலங்கள்

எழுமதி



பொதுவாக பெண்ணியம் பற்றிய ஆய்வு நூல்களும், பொதுவான அபிப்பிராயங்களும் பெண்களுக்கு இரண்டாம் இடத்தையே ஒதுக்கியுள்ளன. ஆண்கள் வேலை செய்பவர்களாகவும், பெண்கள் வெறுமனே சமைப்பதும், படுக்கையைப் பகிர் வதும்தான் என்ற ரீதியிலும் தொடர்ந்து சித்திரிக்கப்பட்டு வந்துள்ளன. ஆனால் இந்த நிலைப்பாடு இன்று மாறத் தொடங்கியுள்ளது. கணிசமான அளவு முன்னேற்றம் கண்டுள்ளது.

இன்று பெண் கள் விமானம் ஓட்டுகின்றனர். விண்வெளிக்குச் செல்லுகின்றனர். களத்தில் ஆண்களுக்குச் சரிக்குச் சமனாக நின்று சமராடு கின்றனர். பெரிய தொழில் நிறுவனங்களை நிர்வகிக்கின்றனர். கல்லூரி முதல்வர்களாகவும், வைத்திய நிபுணர்களாகவும், கட்டட பொறியிலாளர்களாகவும் திகழ்கின்றனர். மேலும் வயலில் ஆண்களுடன் சேர்ந்து வேலையைப் பங்கு போட்டுச் செய்கின்றனர்.

உடலமைப்பு ரீதியாகவும், உடற்றொழில் ரீதியாகவும் ஒரே வயதுடைய ஆண்பெண் இருபாலாரையும் ஒப்பிட்டுப்பார்க்கும் இடத்தில் உயரம், நிறை, பலம் ஆகியவற்றில், ஆண்கள் பெண்களைவிட கூடியவர்களாகவே உள்ளனர். மேலும் பெண்ணின் வாழ்க்கையில் பிரத்தியேகமாக ஏற்படுகின்ற உடற்றொழிலியல் மாற்றங்களான மாதவிடாய் வருதல், மகப்பேறு அடைதல் ஆகிய விடயங்களையும் பெண்களின் பலவீனங்களாகப் பார்க்கின்றனர். மேற்குறிப்பிட்ட இரண்டு காரணங்களையும் மனதில் நிறுத்திப் பெண்களை இரண்டாம் இடத்தில் நிறுத்தியுள்ளனர். ஆனால் இக்காரணங்கள் அனைத்தும் பெண்களின் பலவீனம் அல்ல. அவை பலம் என்று வாதிடும் காலம் வந்துவிட்டது. இதற்குப் பல ஆய்வுகளும் உறுதுணையாக நிற்கின்றன.

ஹெலன் பிஸர் என்ற பிரசித்தி பெற்ற அமெரிக்க மனித வர்க்கவியல் நிபுணர் பரிணாம வளர்ச்சியின் தொடர்ச்சியாகப் பெண் 21ஆம் நூற்றாண்டின் தலைவியாக வருவாளென்று எதிர்வு கூறுகின்றார். மேலும் அவர் தனது ஆய்வு நூலில் உளவியல் ரீதியாக ஆண்களிலும் பார்க்கப் பெண்கள் பல மடங்கு பலம் வாய்ந்தவர்கள் என்றும் அவர்கள் தலைமைப் பதவியை வகிக்கத் தகுதிபெற்றவர்கள் என்றும் கூறுகின்றார். பெண்களின் தலை சிறிதாக இருப்பதனால் மூளையும் ஒப்பீட்டளவில் ஆண்களின் மூளையைவிட சிறிதாக உள்ளது. ஆனால் மூளையினுள் காணப்படுகின்ற நியூரோன்கள் எனப்படும் நரம்புக்கலங்களின் எண்ணிக்கை பெண்களில் கூடுதலாக உள்ளது. மேலும் ஆண்களின் குருதியில் ஈமோகுளோபினின் அளவு கூடுதலாகவும் பெண்களின் குருதியில் இமினோகுளோபினின் அளவு கூடுதலாகவும் உள்ளது. இதனைப் பெண்கள் வீட்டிலும் வெளியிலும் தங்களின் பணியை எதுவித ஓசையுமின்றி செய்து முடிப்பதினை வைத்தே கண்டு கொள்ளலாம்.

1995ஆம் ஆண்டு அமெரிக்க இராணுவத்தில் ஒரு பரீட்சார்த்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் முன்பு பயிற்சி எதிலும் ஈடுபடாத 41 பெண்கள் (இதில் மாணவிகள், வழக்கறிஞர்கள், வியாபார நிலைய ஊழியர்கள், ஆறுமாதகாலத்திற்கு முன்பு, மகப்பேறு அடைந்த தாய்மார்கள் போன்றோர் அடங்குகின்றனர்) யாவரும் ஐந்திலிருந்து ஆறு மாதகாலப் பயிற்சியில் 34 கிலோ கிராம் பாரத்தினை தோளில் சுமந்தபடி 3 கிலோமீற்றர் தூரம் ஓடுவதற்கும், 45 கிலோகிராம் எடையைச் சுமந்தபடி நிலத்தில் இருந்து எழும்புவதற்கும் கற்றுக் கொண்டனர்.

ஆனால் அவர்களைப் போன்ற தரத்தில் உள்ள ஆண்களினால் அப்படி முன்னேற முடியவில்லை என்பதும் ஆய்வில் கண்டறியப்பட்டது. மேலும் 1964 தொடக்கம் 1995 வரையான காலப் பகுதியில் மரதன் ஓட்டத்தில் பெண்களின் சாதனை விகித உயர்வு 32 வீதமாகவும், ஆண்களின் விகித உயர்வு 4.5 வீதமாகவும் காணப்பட்டது. இதுவும் பெண்களின் பரிணாம வளர்ச்சியின் மாற்றத்தினை எடுத்துக் காட்டும் ஒரு சான்றாகும்.

இவ்வாறு ஆய்வுகளும் பரீட்சார்த்த செயற்பாடுகளும், பெண்களின் பலத்தினை வெளிக்கொண்டு வந்திருக்கும் இந்த வேளையில் பெண்களும் பல பரிணாம வளர்ச்சிகளைத் தம் செயற்பாடுகளுடாக வெளிப்படுத்தி வந்தாலும் இன்றும்கூட எம் சமூகத்தில் பெண்களைப் பலவீனமானவர்களாகவும், இரண்டாந்தர நிலையிலுள்ளவர்களாகவும் பார்க்கின்ற நிலை காணப்படுகின்றது. இந்த நிலை மாற வேண்டுமாயின் முதலில் பெண்கள் தம் பலத்தினை அறிந்து வைத்திருக்க வேண்டும். அடுத்ததாக என்னென்ன விடயங்களை வைத்துப் பெண்களைப் பலவீனமாக எடை போடுகின்றனர் என்று அறிந்து அவை, ஏன் பலவீனமான விடயங்களாகக் கருதப்பட்டு வந்தன என்பதையும் நோக்க வேண்டும். மேலும் இந்த விடயங்கள் யாவும், இன்று பலமானவையாகச் செயற்படுகின்றன என்ற விஞ்ஞானா ரீதியான ஆய்வு உண்மையையும் அறிந்திருக்க வேண்டும்.

முதலாவதாக மதக் கோட்பாடுகள் பெரும்பாலும் பெண்ணை ஆணுக்குக் கீழ்ப்பட்டவள் என்றும் ஆணுக்கு அடிமையானவள் என்றும் சித்தரிக்கின்றன. சிவன், பிரம்மா, விஸ்ணு, முருகன், யேசு, அல்லா, புத்தர் எனக் கூறப்படும் தெய்வங்கள், மதத்தலைவர்கள், மதப்போதகர்கள் அனைவருமே ஆண்கள். ஆண்கள் தலையெடுத்த சமூக அமைப்பில் முதன்மையான தெய்வத்தையும், ஆண்களாகவே படைக்க முடிந்தது. இதனால் பெண்களின் மனதிலும் நினைவிலும் கருத்தியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் நாம் தரம் குறைந்தவர்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்த முடிந்தது.

இன்றும் மக்களிடையே பெரும் ஆதிக்கத்தைப் பெற்றுள்ள புராண இதிகாசக் கதைகளும் பெண்களை ஆண்களின் அடிமைகளாகவே படைக்கின்றன. உதாரணமாக பஞ்சபாண்டவர்கள் திரௌபதியைத் தம் மனைவியாகக் கொண்டிருந்தனர். ஆனால் அவளுக்கு அவர்களில் ஒருவரை மட்டும் கணவனாக ஏற்றுக் கொள்ளும் உரிமை கிடையாது. குழந்தைப் பருவத்தில் ஆணும் பெண்ணும், சரிசமமாக வளர்கின்றனர், வளர்க்கப்படுகின்றனர். ஆனால் பெண்கள் பூப்பெய்துகின்றபோது உடல், உள ரீதியாக பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை வருவதனால் சமூகம் அவளின் செய்ற்பாடுகளை, சுதந்திரத்தினை மட்டுப்படுத்துகின்றது. இதன் ஓர் அங்கமாகவே அந்தக் காலத்தில் பெண் பூப்பெய்தினால் வீட்டை விட்டு சுதந்திரமாக நடமாட முடியாமல் தடுக்கப் பட்டிருக்கிறாள். அதன் உச்சக்கட்டமாக மாதவிடாய்க் காலத்தின்போது அவள் வாழும் வீட்டில் இருந்துகூட தூரத் தள்ளிவைக்கப்படுகின்றாள். எதுவித பணியுமின்றி வீட்டின் ஒரு மூலையில் கைதிபோல் அடைக்கப்பட்டிருக்கிறாள். இதற்கு குற்றம், துடக்கு என்ற சாட்டுக்களும், இரத்தப் போக்கு இருப்பதனால் ஓய்வு தேவை என்ற காரணமும் காட்டப்படுகின்றது. ஆனால் இன்று பெண்கள் மாதவிடாயின்போது நாளாந்தம் செய்து கொண்டு வந்த சகல பணிகளையும் இடைநிறுத்தாது, செய்கின்ற நிலையினைக் காண்கிறோம்.

அடுத்ததாக மகப்பேற்றினை எடுத்துக் கொள்வோம். இங்கு பெண்ணானவள் ஒரு புதிய உயிரை பத்துமாதங்கள் தன்னகத்தே சுமந்து பிரசவ வேதனையைத் தாங்கி அவ்வுயிரை வெளிக் கொணர்ந்து உலகிற்குத் தருகின்றாள். பின் இக்குழந்தையின் வளர்ப்புக்காக சிறுகாலம் தன் கடமையில் இருந்து ஓய்வு எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இக்காலத்தில்தான் ஆண் கடமையில் முன்சென்று உயருகின்றான். ஓர் உயிரைப் பிரசவிப்பது என்பது பெரிய கடமை. இதனை ஒரு பலவீனமாகப் பார்க்காது, பலமாகப் பார்க்க வேண்டும்.

பெண் பூப்பெய்தினால் வீட்டை விட்டு சுதந்திரமாக நடமாட முடியாமல் தடுக்கப்பட்டிருக்கிறாள். அதன் உச்சக்கட்டமாக மாதவிடாய்க் காலத்தின்போது அவள் வாழும் வீட்டில் இருந்துகூட தூரத் தள்ளிவைக்கப் படுகின்றாள். எதுவித பணியுமின்றி வீட்டின் ஒரு மூலையில் கைதிபோல் அடைக்கப்பட்டிருக்கிறாள்.

பெண்ணில் ஏற்படுகின்ற சில தவிர்க்க முடியாத உடற் தொழில் மாற்றங்களினால் அவள் கடமையில் பின்தங்கும்போது அதனைப் பலவீனமாகப் பார்க்கும் நிலைதான் அன்று இருந்துள்ளது. இன்று இதனைப் பலமாகப்பார்க்கும் காலம் தொடங்கி விட்டது. இதற்குப் பெண்கள் அனைவரும் தம்மிடம் உள்ள பிற்போக்குச் சிந்தனைகளைக் களைந்து தம் ஆற்றல் திறனையும் முற்போக்குச் சிந்தனையையும் வளர்க்க வேண்டும். அத்துடன் அறிவியல் ரீதியாகவும் சிந்தித்துச் செயற்பட வேண்டும். இவ்வாறு செயற்படும்போது பெண்கள் ஆண்களுக்குச் சரிசமனான பலமுள்ளவர்களாகத் திகழ்வார்கள் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

# உன்னால் முடியும்...

பெண்ணியம் என்பது ஆண்களுக்கு எதிரான கோட்பாடல்ல. அது ஆண்களுக்குச் சமமாகச் சகல துறைகளிலும் சுதந்திரமாக பெண்கள் இயங்குவதை நோக்கமாகக் கொண்டது. அம்மாச்சி என்று அழைக்கப்படும் அமிர்தானந்தமயி அம்மையார் பெண்கள் பற்றி வழங்கிய கருத்துக்களில் சிலவற்றை இங்கு தருகிறேன். அமிர்தானந்தமயி அம்மா சில இடங்களில் ஆண்கள் பெண்களுக்கு ஏற்படுத்திய சில கட்டுப்பாடுகளால் அவர்களை சற்று கடுமையாகக் கூறுகிறார். ஆயினும் சுதந்திரம் என்பதைப் பெண்கள் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது என்பதையும் அவர் எடுத்துக் கூறத் தயங்கவில்லை. அவரது கருத்துக்கள் இங்கே பதிவாகின்றது.

உலக அமைதிக்காக 2002 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 6 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதிவரை ஆன்மிக பெண் தலைவர்களின் மாநாடு ஜெனிவாவில் நடைபெற்றது. இதில் நூற்றி இருபத்தைந்து நாடுகளிலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர். இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டுக்கான சமாதானத்துக்குரிய காந்தி கிங் விருது மாதா அமிர்தானந்தமயிக்கு வழங்கப்பட்டது. விருதை பெற்றுக்கொண்டு அவர் 'பெண்ணே உன்னால் முடியும்' என்ற தலைப்பில் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள்.

உறங்கிக் கொண்டிருக்கும் பெண் சக்தி விழித்தெழ வேண்டும். இந்தக் கால கட்டத்தின் மிகவும் முக்கியமான தேவைகளில் இது ஒன்றாகும். மதமும், ஆசாரங்களும் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டு, குறுகிய மனப்பான்மையால் உருவாக்கப்பட்ட சட்ட திட்டங்கள் என்ற நியதிகளுக்குக் கட்டுப்பட்டு வாழும் நாடுகளில் உள்ள பெண்கள், புதுமையான சிந்தனைகளைப் பெற வேண்டும். கல்வியறிவின் மூலமும், உலகியல் ரீதியான வளர்ச்சியின் மூலமும் பெண்ணும், அவளைச் சுற்றியுள்ள சமூகமும் விழிப்படையும், பண்பாடு வளரும் என்று நாம் கருதினோம். ஆனால், இந்த நம்பிக்கை தவறானது என்பதைக் காலம் தெளிவாக்கியுள்ளது. பெண்ணை விழிப்புறச் செய்வது யார்? அவள் விழிப்படையத் தடையாக நிற்பது எது? உண்மையில் பெண்ணையும், அவளது பிறவிக் குணமான தாய்மை உணர்வையும் தடுத்து நிறுத்த எந்தச் சக்தியாலும் முடியாது. பெண்ணைப் பெண்ணே விழிப்புறச் செய்யவேண்டும். அதற்குத் தடையாக நிற்பது அவளுடைய மனமாகும்.

கடந்தகால சமூகம் படைத்த சட்ட திட்டங்களும், குருட்டு நம்பிக்கைகளும் இன்றும் பெண்ணுக்கு எதிராக நிலை பெற்றுள்ளன. சுரண்டுவதற்கும், அடக்கி ஆள்வதற்கும் ஆண்கள் உருவாக்கிய காட்டு மிராண்டித்தனமான சம்பிரதாயங்களும் தொடர்கின்றன. இவை எல்லாம் சேர்ந்து உருவாக்கிய சிலந்தி வலைக்குள் சிக்கிக் கிடக்கிறது பெண்ணின் மனம். அவளுடைய மனமே அவளை வசியம் செய்து வைத்திருக்கிறது. இந்த வளையத்திலிருந்து வெளிவர அவள் தனக்குத்தானே உதவ வேண்டும்.

பெரிய மரங்களைக்கூட வேரோடு பெயர்த்து எடுக்கும் சக்தியுள்ள யானையைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். குட்டியாக இருக்கும்போது மிகவும் பலமுள்ள வடம் அல்லது சங்கிலியால் மரத்தில் கட்டி வைப்பார்கள். வடத்தை அறுத்துக் கொண்டோ, மரத்தை வேரோடு சாய்த்தோ கட்டிலிருந்து விடுபடும் சக்தி குட்டியானைக்கு இல்லை. காட்டில் சுதந்திரமாகத் திரிந்து பழகிய குட்டியானை, கட்டிலிருந்து விடுபட தன்னால் இயன்றவரை முயற்சி செய்யும். கட்டிலிருந்து விடுபடத் தேவையான அளவு பலம் தனக்கில்லை என்று அறியும்போது, அது தனது முயற்சிகளை எல்லாம் கைவிட்டு விடும். அவ்வாறு பழகிவிட்ட குட்டி யானை வளர்ந்து பெரியதாகும் போது, அதை சிறிய மரத்தில், அதிக வலுவில்லாத கயிற்றினால் கூடக் கட்டி வைப்பார்கள். அந்த யானை நினைத்தால் மிக எளிதில் மரத்தை வேரோடு சாய்த்து விட்டோ, கயிற்றை அறுத்துக்கொண்டோ கட்டிலிருந்து விடுபட முடியும். ஆனால் குட்டியாக இருந்தபோது அதற்கு ஏற்பட்ட பழைய அனுபவமானது, அதன் மனதைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறது. மனதில் ஏற்பட்டுவிட்ட முன்பதிவால், அது விடுதலை பெற முயற்சி செய்வதில்லை. பெண்களின் விஷயத்தில் இதுதான் நடந்து வருகிறது. அவளது ஆத்ம சக்தி விழிப்படைவதை அனுமதிக்க நாம் மறுக்கிறோம். அந்த மகாசக்தியை அணை கட்டித் தடுத்து நிறுத்துகிறது இன்றைய சமூகம். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே ஒருநாள் பார்க்கவும் தடை



''எங்கள அங்க விடாம தடுத்து வைச்சிருக்கிறியள். நீங்கள் நிக்கிறது எங்கட இடத்தில. எங்கட இடத்தில நிண்டு கொண்டு எங்களையே எங்கட கோயிலுக்குப் போய் கும்பிடுறதுக்கு ஆயிரம் கதை கதைக்கிறியள்'' இராணுவத்தினரைப் பார்த்து வயிற்றெரிச்சலுடன் வாய்க்கு வந்த படி திட்டித் தீர்த்தனர் மக்கள். தங்களை இவ்வளவு தூரம் வர வைத்து நம்ப வைச்சு கழுத்தறுத்த ஈ.பி.டி.பிக்கும் அமைச்சருக்கும் எலெக்சன் வரும்போது பதில் சொல்லிக் கொள்வதாகவும் மக்கள் உரகக் கத்தினர்.

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனதில் வைத்துக் கொண்டு வந்திருந்தார்கள். அவர்களுக்கு இராணுவத்தினரின் அறிவிப்பு வெந்த புண்ணில் வேல் பாச்சியதைப் போன்று வேதனையைக் கொடுத்தது.

''விடுறது எண்டா எல்லாரையும் விடவேணும். இல்லையெண்டால் ஒருத்தரும் போக வேண்டாம். உள்ளுக்க போறதெண்டா ஒண்டா போவம் அல்லாட்டி ஒண்டாவே திரும்பிப் போவம்'' மக்கள் ஒருமித்து ஒற்றுமையுடன் வார்த்தைகளைச் சீறவிட்டனர்.

### சமாளிப்புகளின் தோல்வி

அங்கயற்கண்ணி இராணுவத்துடன் காலில் விழாத குறையாக பேச்சு நடத்திக் கொண்டிருந்தார். மக்கள் மாவிட்டபுரத்தில் நின்றிருந்தனர். நேரம் 9.30 ஐத் தாண்டியது. வெயில் ஏற ஏற மக்களிடமும் சூடு ஏறத் தொடங்கியது.





இராணுவத்திடம் இருந்து திரும்பி வந்த அங்யற்கண்ணி "உங்கட கோயிலுக்கு போக நீங்க விரும்பினீங்கள். நான் அமைச்சரோட கதைச்சு செய்தனான். அமைச்சர் ஜெனரலோட (மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்) கதைக்கேக்க அவர் 200 பேருக்கு என்று கேட்டிட்டார்.

பொசன் நாளன்று போறத்துக்குத்தான் கேட்டது. பிறகு அதுக்கு வரேலாமல் போய்ட்டுது. உண்மையில கேர்ணல் வந்து 200 பேர் என்றுதான் சொன்னவர். நான் 600 பேருக்கு கேட்டனான். தான் முயற்சி செய்யிறன் என்று சொன்னவர். அந்த நேரத்தில ஜெனரல் வெளியில. அவர் இப்பவந்திட்டார்என்று தெரியுது. என்ர போனை ஆன்ஸர் பண்ணிறார் இல்லை. ஆயிரம் பேர் என்று கேட்க அவை விடுகினம் இல்லை'' என்று அங்கயற்கண்ணி தங்கள் சொதப்பல்களை மூடி மறைக்க முயன்றுகொண்டிருந்தார்.

தங்கலாள இவ்வளவு மக்களை ஒரு குறிப்பிட்டஇடத்துக்ககட்டுப்பாட்டுக்க வைச்சிருக்க ஏலாது என்றும் மக்கள் கட்டுப்பாட்டுக்க இருக்கமாட்டினம் என்றும் அவையள் அங்கால, இங்கால ஓடுவினம் என்றும் இராணுவம் சொல்வதாக அங்கயற்கண்ணி பிரசங்கித்தார். கொதித்துப் போயிருந்த மக்கள் கூட்டத்துக்கு அங்கயற்கண்ணியின் கன்னிப் பேச்சு கடுப்பைக் கிளப்பியது.

இராணுவத்தையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் திட்டித் தீர்க்கத் தொடங்கினர். மட்டக்களப்பிலிருந்து மயிலிட்டிக்குச் செல்ல வந்த ஒருவர் பதில் கேள்விகளை அங்கயற்கண்ணியின் மீது பறக்க விட்டார்.

''எனக்கு இஞ்ச குழப்பம் காட்ட வாறக்களையும் தெரியும். குழப்புறாக்களையும் தெரியும். எல்லாம் எனக்கு அத்துப்படி. நீங்கள் கொஞ்சம் கவனமாயிருக்கவேணும். என்னோடயே சண்டித்தனமா? ஒழுங்கமைப்புச் செய்தது வேறயாக்கள். ஆமிக் கொமாண்டர் சொல்லுறான். என்ர ஜெனரல் சொன்னா நான் மறு வார்த்தை கதைக்க மாட்டன். ஆனா நீ சொன்ன சொல்லை இஞ்ச நிக்கிற ஒருத்தரும் கேக்கேல என்று சொல்லுறான். அவ்வளத்தோட விடுங்கோ கதையை'' என்பதுதான் அவரது கேள்விக்கு அங்கயற்கண்ணியின் பதில்.

### உரிமையில்லை

மக்களுக்கு அவரது பதிலால் கோபம் தலைக்கேறியது. ''எங்கட கோயிலுக்குப் போறதுக்கு எங்களுக்கு உரிமையில்லையோ. நாங்கள் எங்கட கோயிலுக்குப் போறாத யார் தடுக்கிறது? நான் முன்னுக்குப் போறன். வாறாக்கள் வாங்கோ'' என்று 40 வயது மதிக்கத்தக்க பெண்மணி ஆத்திரத்துடன் புறப்பட ஆயத்தமானார்.

அங்கு நின்ற ஏனையோர் அவரைத் தடுத்து நிறுத்தினர். அசம்பாவிதங்கள் வேண்டாம் என்றனர். ''எங்கள அங்க விடாம தடுத்து வைச்சிருக்கிறியள். நீங்கள் நிக்கிறது எங்கட இடத்தில. எங்கட இடத்தில நிண்டு கொண்டு எங்களையே எங்கட கோயிலுக்குப் போய் கும்பிடுறதுக்கு ஆயிரம் கதை கதைக்கிறியள்'' இராணுவத்தினரைப் பார்த்து வயிற்றெரிச்சலுடன் வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்தனர் மக்கள். தங்களை இவ்வளவு தூரம் வர வைத்து நம்ப வைச்சு கழுத்தறுத்த ஈ.பி.டி.பிக்கும் அமைச்சருக்கும் எலெக்சன் வரும்போது பதில் சொல்லிக் கொள்வதாகவும் மக்கள் உரக்கக் கத்தினர்.

'' அப்பு, ஆச்சியர் ஆண்ட பூமி இப் பூமி தானடா. அப்புகாமியை ஆள இங்கு நீ விட்டதேனடா?'' என்ற அவர்களின் பாடல் வரிகள் கரும்புலிகள் தினத்தன்று மயிலிட்டி மக்களுக்காகத் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

# சொந்த நிலத்தில் சாகக்கூட....

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓடித்திரிஞ்ச இடங்களென்ன, வாழ்ந்த வாழ்க்கை என்ன, எல்லாத்தையும் ஒரே நாளில பாத்து முடிக்க ஏலுமே!

அப்ப எங்கட பள்ளிக்கூடத்த பேய் பள்ளிக்கூடம் எண்டெல்லே சொல்லுறது. அதுதான் இப்ப கலைமகள் பள்ளிக்கூடம் எண்டு சொல்லுறாங்கள். அந்தப் பள்ளிக்கூடத்துக்கு முன்னால கிடந்த பெரிய கிறவுண்டிலதான் நான் ஓடித்திரிவன். இது என்ர பள்ளிக்கூட வாழ்க்கை. அதுக்கு பிறகு கலியாணம் கட்டிதான் உவங்கள் ஆறுபேரும் பிறந்தாங்கள். அதில ரெண்டு பேர் ஊரிலயே முடிஞ்சு போட்டாங்கள்.

இப்ப எனக்கு 79 வயசாச்சு. இனி உங்க போகலாம் எண்டு எனக்கு நம்பிக்கை இல்ல. என்ர சீவன் முகாமிலதான் போகும்போல கிடக்கு. என்ர ஊரில நான் சாகக் குடுத்து வக்கேல்ல.

இப்ப போய் ஊரைப் பாத்தா திரும்பி வர மனம் வராது. அத நினைக்கத்தான் கவலையா இருக்கு. எல்லாருக்கும் ஊருக்கு போற தெண்டா சந்தோசம். ஆனா எங்களுக்குத்தான் ஊரைப் பாத்தாக் கவலை. என்ன செய்ய? எங்களுக்கு விதி அதுதான்!

அவரது கண்கள் ப[illegible]றன. பார்வை வெறித்துப் [illegible]றது. திடீரென ''ஐயாப்பிள்ளை வரேல்லையோ'' என்ற குரல் வருகிறது. உடனே ''ஓம்மோம் வாரன்'' என்றபடி சிரமப்பட்டு இழுத்தபடியே புறப்பட்டார் ஐயாப்பிள்ளை.

அரசியல் இலாபங்களுக்காக இப்படி மக்களை அலையவிடும் அரசியல்வாதிகளை நம்பி வாக்குப்போட்ட மக்கள் என்ன பாவம் செய்தார்கள்?

உள்ளே போகப் போகிறோம் என்கிற ஆர்வ மேலீட்டால் எல்லோரும் ஒன்றாகத் திரண்டனர். ஏதோ கதைத்தனர், வாக்கு வாதப்பட்டனர், கோபப்பட்டனர். அந்த முதியவரை நான் அதற்குப் பின்னர் காணவில்லை.

ஒரு மணி நேரத்தின் பின் அவர் வெறித்துப்போன விரக்[illegible] தேன். அப்போது ஒரு பெண் ''உள்ள விடமாட்டாங்களாம். ஒராளுக்கு ஒரு ஆமிக்காரன் கணக்கா நிக்கிறான். போகேலாது போலத்தான் கிடக்கு'' என்றார். சிறிது நேரம் அமைதியாக இருந்தால் விடுவாங்கள் என்று எதிர் பார்த்தார்கள். ஆனால் நடக்கவில்லை.

தொய்ந்துபோன முகங்களுடன் அவர்கள் தங்கள் வாகனங்களில் ஏறி அமர்ந்திருந்தார்கள். ஆனால் வாகனங்கள் தங்கள் உறுமலை ஆரம்பிக்கவில்லை. கடைசி நேரத்தில் இறங்கி வாங்கோ என்று பச்சைச்சட்டை போட்ட எவனாவது வந்து கத்தமாட்டானா என்ற ஆவலில் அந்தக் காத்திருப்பு மேலும் சில மணித் துளிகள் தொடர்கிறது. ஆனால் ஏமாற்றம் மட்டுமே அவர்களுக்கு மிச்சமாகக் கிடைக்க வாகனங்கள் மெல்ல முனங்க ஆரம்பிக்கின்றன.

அரசியல் இலாபங்களுக்காக இப்படி மக்களை அலையவிடும் அரசியல்வாதிகளை நம்பி வாக்குப்போட்ட மக்கள் என்ன பாவம் செய்தார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையில் எதிர்க்கட்சிகள் உடைக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் ஒரு பெரும்பான்மை உருவாக்கப்பட்டு ஒரு சர்வாதிகாரம் ஜனநாயகத்தின் பேரால் அரங்கேறிவிட்டது. இது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களையும் பெரும் ஆபத்துக்குள் தள்ளும் என்பதை உணர அவர்களுக்கு வெகுகாலம் பிடிக்கப் போவதில்லை.

# இலங்கையில் ஜனநாயக சர்வாதிகாரம்

சந்திரசேகர ஆஷாத்

ஜனநாயகம் என்பது மக்களுக்காக மக்களால் தெரிவு செய்யப்படும் மக்களின் ஆட்சி என்றே வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளது. நிலமானிய சமூகக் கட்டமைப்பைக் கொண்ட மன்னராட்சி வீழ்த்தப்பட்டு நவீன கைத்தொழில் முதலாளி வர்க்கம் தனது அரசியலதிகாரத்தை நிலைநாட்டவே ஜனநாயக ஆட்சி முறை உருவாக்கப்பட்டது. எனினும் இந்த அரசியல் அதிகாரம் ஒரு பொதுத் தேர்தல் மூலம் மக்களின் வாக்களிப்பிலேயே உருவாக்கப்படும். எனினும் அந்த அரசியல் அதிகாரம் நாட்டின் அரசமைப்புக்கு உட்பட்டே செயற்பட முடியும். தேவையான சந்தர்ப்பங்களில் தமது அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் அரசமைப்பை மாற்றவோ அரசிலமைப்புச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வரவோ முடியும்.

இலங்கை சுதந்திரம் பெற்றபோது பிரிட்டிஷ் தரப்பினரும் இலங்கையின் அறிவுஜீவிகளும் இணைந்து ஒரு அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கினர். அதன் அடிப்படையில் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் எந்தவொரு சட்டமும் பிரிட்டிஷ் மகாராணியின் பிரதிநிதியான மகாதேசாதிபதியால் அங்கீகரிக்கப்பட்டாலே செல்லுபடியாகும். அதுமட்டுமன்றி இலங்கை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை பிரிட்டிஷ் பிறிவிகவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்ய முடியும். அதுமட்டுமன்றி அதன் 29 ஆவது சரத்து மூலம் இலங்கையின் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

1972ஆம் ஆண்டில் அந்த அரசமைப்புச் சட்டம் தூக்கி எறியப்பட்டு நாடாளுமன்றம், நீதித்துறை, பாதுகாப்பு என்பன தொடர்பான பிரிட்டிஷ் ஆதிக்கம் முற்றாக நீக்கப்பட்டு புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டது. சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் 29ஆவது சரத்தும் கலாவதியாகிப் போய்விட்டது. மகாதேசாதிபதி முறை நீக்கப்பட்டு நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி முறை உருவாக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டு அரசமைப்பின் மூலம் நாடாளுமன்றம் முழுமையான அதிகாரம் கொண்ட ஓர் அமைப்பாக மாற்றப்பட்டது.

ஆனால் ஜே.ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி 1978ஆம் ஆண்டு நிறைவேற்றிய புதிய அரசமைப்பின்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை உருவாக்கப்பட்டது. ஜனாதிபதி மக்களின் வாக்குகள் மூலம் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டாலும் அவர் ஒரு சர்வாதிகாரியாகச் செயற்படக் கூடிய வகையில் புதிய அரசமைப்பு வகுக்கப்பட்டது. அப்போதுதான் ஜனநாயகத்தின் பேரால் ஒரு தனிநபர் சர்வாதிகாரம் உருவாவதற்கு கதவுகள் அகலத் திறக்கப்பட்டன. அதே அரசமைப்பு மேலும் மேலும் பதினெட்டு முறை திருத்தப்பட்டு தற்சமயம் ஜனாதிபதியை எவருமே தட்டிக் கேட்க முடியாத சர்வாதிகாரியாக மாற்றி விட்டிருக்கிறது.

சர்வ வல்லமையுள்ள ஜனாதிபதி என்ற வகையில் நாடாளுமன்றத்தையே அவர் விருப்பப்படி ஆட்டிப்படைக்கும் அளவுக்கு ஜனநாயகப் போர்வையில் ஒரு சர்வாதிகாரம் கோலோச்சுகிறது. 13 ஆவது அரசமைப்புச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வருவதான சர்ச்சைகள் இலங்கையில் உச்சகட்டத்தில் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பறிப்பது தொடர்பான கருத்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. இம்மாற்றங்கள் தொடர்பாக ஐ.தே.கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன. அதேவேளையில் அரசில் இணைந்துள்ள அமைச்சர்களான ராஜித சேனரத்தின, ரவூப் ஹக்கீம், டியூ குணசேகர, திஸ்ஸ விதாரண வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் 13ஆவது அரசமைப்பில் மாற்றம் கொண்டு வருவதைக் கடுமையாக எதிர்த்து வருகின்றனர். இவர்களின் இந்த எதிர்ப்பு நேர்மையானதும் விசுவாசமானதுமாக இருந்தால் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் மாற்றம் கொண்டு வர மூன்றில் இரண்டுபெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் பெற முடியாது எனக் கூறப்படுகிறது. இதே கருத்தைச் சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகரா புளட் தலைவர் சித்தார்த்தனிடம் தெரிவித்துள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.



இப்படியான ஒரு நிலையில்தான் ஆளுந்தரப்புக் கட்சி உறுப்பினர்களிடம் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது ஜனநாயக சர்வாதிகார முகத்தைத் தெளிவாக வெளிக்காட்டியுள்ளார். அரசின் கொள்கைகளையும் தீர்மானங்களையும் ஏற்றுக் கொண்டு அரசில் இருப்பவர்கள் இருக்கலாம். அதில் முரண்பாடுகள் உள்ளவர்கள் உள்ளிருந்து சதி வேலை செய்யாமல் விரும்பிய நேரத்தில் வெளியேறலாம். உள்ளிருந்து அரசுக்கு எதிராகச் சதி செய்த பலரை நான் வெளியேற்றியிருக்கிறேன். சதி செய்பவர்களை மன்னிக்கப் போவதில்லை''

இது, சில நாள்களின் முன்பு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற ஆளுங்கட்சிக் கூட்டத்தில் ஒலித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சர்வதிகாரக் குரல். அதுமட்டுமன்றி கருத்து வேறுபாடு உள்ளவர்களுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையும் கூட. ஒரு கூட்டமைப்பு என்பது பலகட்சிகளைக் கொண்ட ஓர் அமைப்பு. வெவ்வேறு கொள்கைகளைக் கொண்ட கட்சிகள் ஒரு பொதுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு பொது நோக்கத்துக்காக ஒன்றிணைவதே ஒரு கூட்டமைப்பாகும். எல்லாக் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளும் சில கொள்கைகளின் அடிப்படையில் ஒன்று சேர்ந்தாலும் தங்கள் சொந்தக் கொள்கைகளைக் கைவிடுவதில்லை. எனவே கூட்டமைப்பில் பெரும்பான்மையாக உள்ள கட்சியின் எல்லாக் கொள்கைகளுக்கும் அடி பணிந்து போக வேண்டும் என்பதில்லை. இந்தப் பிரச்சினையில் எவரும் தாங்கள் விரும்பியபடி வாக்களிக்கலாம் என ஏற்கனவே தெரிவித்த மஹிந்த ராஜபக்ஷ இப்போ தன்னுடன் ஒத்து வராதவர்கள் வெளியே போகலாம் என மிரட்டியுள்ளார். இங்கு நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் ஒன்றுண்டு. அதாவது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தவிர்ந்த ஏனைய கட்சிகள் ஒரு பொதுக் கொள்கையின் அடிப்படையில் இணைந்தவையல்ல. சிலர் பதவிகளுக்காக ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்துக் கொண்டு அரசுடன் இணைந்தவர்கள். அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசை உடைத்துக் கொண்டு வெளியேறி அமைச்சர் பதவிகளைப் பெற்ற கட்சி, முஸ்லிம் காங்கிரஸ் சில நெருக்கடிகள் காரணமாக அரசில் இணைந்தவர்கள். இடதுசாரிகளான திஸ்ஸ விதாரணவோ, டியூ குணசேகராவோ, வாசுதேவ நாணயக்காரவோ ஏற்கனவே தங்கள் கொள்கைகளைச் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கரைத்துக் கொண்டவர்கள். இவர்கள் அனைவரும் ஒரே ஒரு பொதுக் கொள்கையின் அடிப்படையில் அரசுடன் இணைந்துள்ளனர். அதுதான் அமைச்சுப் பதவிகள்.

இப்படியான ஒரு கூட்டமைப்பு ஐக்கியமும் போராட்டமும் என்ற அடிப்படையில் சரியான ஒரு நிலைப்பாட்டுக்கான உட்கட்சிப் போராட்டத்தை நடத்துமென்றோ அனுமதிக்குமென்றோ எதிர்பார்க்க முடியுமா? இறுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகாரக் கரங்களின் முன் அடிபணிந்து போகமாட்டார்கள் என இவர்களை நம்ப முடியுமா?

அதற்கான அறிகுறிகள் மெல்ல மெல்லத் தென்பட ஆரம்பித்துள்ளன. 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வந்தால் அதை எதிர்க்கப் போவதாகவும் அதன் காரணமாகப் பதவி விலகவும் தயார் எனவும் சவால்விட்ட அமைச்சர் ராஜித சேனரத்தின தற்சமயம் 19 ஆவது திருத்தச் சட்டத்தைத் தான் எதிர்க்கப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார். 19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேறினால் மாகாண சபையின் பொலிஸ், காணி அதிகாரங்களை மூன்றில் இரண்டு பெரும்பான்மை இன்றியே ஒரு நாடாளுமன்றத் தீர்மானத்தின் மூலம் பறித்துவிட முடியும்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் தான் எப்போதும் அரசை விட்டு விலகப் போவதில்லை எனவும் அரசைப் பலவீனப்படுத்தும் காரியங்களில் ஈடுபடப் போவதில்லை எனவும் தெரிவித்து விட்டார்.

வாசுதேவ நாணயக்கார தான் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவை ஏற்கத் தயார் எனத் தெரிவித்துவிட்டார்.

ஜனாதிபதியின் ஜனநாயக சர்வதிகாரம் விடுத்த எச்சரிக்கை ஓரிரு நாள்களுக்குள்ளேயே வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது.

ஜேர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லர் தேர்தல் மூலமே தெரிவு செய்யப்பட்டார். ஆனால் தான் நினைத்தவற்றை முடிக்குமளவுக்கு அவனிடம் பெரும்பான்மை இல்லை. எனவே நாடாளுமன்றத்துக்குத் தனது ஆள்களைக் கொண்டே தீ வைத்துவிட்டு பெரும் மக்கள் ஆதரவைப் பெற்றிருந்த சமூக ஜனநாயகக் கட்சியினரைக் கைது செய்து தூக்கிலிட்டும் சிறையிலடைத்து விட்டும் தானே சர்வாதிகாரியானார்.

இலங்கையில் எதிர்க்கட்சிகள் உடைக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் ஒரு பெரும்பான்மை உருவாக்கப்பட்டு ஒரு சர்வாதிகாரம் ஜனநாயகத்தின் பேரால் அரங்கேறிவிட்டது. இது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களையும் பெரும் ஆபத்துக்குள் தள்ளும் என்பதை உணர அவர்களுக்கு வெகுகாலம் பிடிக்கப் போவதில்லை. அப்போது ஜனநாயகத்தின் பேரால் இடம்பெறும் கொடிய சர்வாதிகாரம் சிங்கள மக்களாலும் உணரப்பட்டுவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலிக்கோர் கவிதை.....

என்னைச் சுற்றிலும்
இறுக்கமான கம்பிக்கூடு
முள்முடி தரிக்காமலேயே
சிரசிலிருந்து உதிரம் சொட்டுகிறது
குண்டாந்தடிகளின் குதறல்களினால்
சீழ் கட்டிய என் சரீரம்
நெருங்குகிறது தன்னிறுதி நாளை

மனிதக்குருதி எந்நேரமும்
காய்ந்துகிடக்கும் பாதணிகளும்
மானுட எல்லை கடந்த
குரூர விழிகளும் கொண்டவர்களாய்
அலைந்து திரியும் காவலர்கள்

இந்துமா கடலில் சஞ்சரிக்கும்
இத்தீவின் எங்கோவோர் மூலையில்
என் தாயின் கருப்பையில்
காணத்தவறிய இருளை
நாள்முழுதும் காணும் பேறுபெற்ற
ஓர் சித்திரவதைச் சிறைகூடத்தில்
கிடக்கிறேன் என்பது மட்டும்
இப்போதைக்கு எனக்குத் தெரிந்த
ஒரே உண்மை

என்னுயிர் சகி...
நாம் ஒரே அன்புடையோமாய்
நேரெதிர் சந்திக்க நேர்ந்த
அழகான அந்த முதல் நாளை
எப்போதாவது எண்ணிப் பார்க்கையில்
மக்கிப்போன மனவெளியிலிருந்து
உற்பவித்து எழுகிறது
நான் எழுதும் கவிதைகள்

உணர்ச்சிப் பிரவாகத்தில்
முக்குளித்த ஓர் நிலா நாளில்
உன்னிடமிருந்து பெற்றுக்கொண்ட
இதழொற்றின் ஞாபகச் சிதறல்களை
இன்றைக்கான என் காயங்களிற்கு
ஒத்தடம் ஆக்குகையில்
மாபெரும் தீக்கல்லில்
என்னிதயம் வறுபடும் வாடை
மணநுகர்ச்சிக் கலங்களை
இரக்கமின்றி ஆக்கிரமிக்கின்றது

அன்றைய பொழுதுகளில்
சுட்டெரிக்கும் சூரிய நிமிடங்களை
ஓரவிழிப் பார்வையென்னும்
ஒரேயொரு பனித்துளியினால்
உறைநிலைக்கு உட்படுத்தியவளன்றோ நீ.


கலங்காதிரு கண்மணியே...
விருட்சங்கள் தமது வேர்களை
ஆழப் புதைத்து நீர் தேடுவது
ஆயுளின் கணங்களை நீளப்படுத்தத்தானே?
நம்பிக்கைத் துளிகள் சில
இன்னும் ஈரமாகத்தான் இருக்கின்றன

வந்துவிடுவேன்
கட்டறுந்த உன் கருங்கூந்தலின்
கடைசி முடி ஒன்றும்
வெள்ளிக் கம்பியாய் மின்னுவதற்குள்
நிச்சயம் வந்துவிடுவேன்

வேல்.லவன்.



## சொற்சிலம்பம் - போட்டி இல: 273



அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. புதினம்
4. ஒரு தானிய வகை
6. ஒன்றின் பௌதிக அளவைக் குறிப்பது
8. தட்டுப் போன்ற மெல்லிய உலோகப் படை
10. தாமரை
11. செல்வம்
12. மாலை
13. வசனம்
15. குத்து விழுவது இப்படி
16. விரைவு சேவை
17. எருது
18. மேகம்
20. அரற்றல்
21. பாவம் செய்தவன்

### மேலிருந்து கீழ்

1. தலைமுறை
2. வஞ்சகம்
3. ஆணின் பெயரின் முன்னால் சேர்க்கும் மரியாதைச் சொல்
4. வைராக்கியம்
5. அப்பா, அம்மா, மகன், மகள் ஒரு சேர்ந்த...
7. இராசி
9. உப்புப் போட்டு காய வைத்த மீன்
12. சேறு
14. எல்லாம்
15. சிறிய கவிதை வடிவம்
16. தடி
17. திட்டு
18. முற்கால ஆயுதம் ஒன்று.
19. உலகம்

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.
★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 271 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) சிவப்பு (4) கழுகு (7) மிகை (8) ராஜா (10) தலை (11) புணர்தல் (13) கிரகம் (16) கல் (17) அதிபன் (19) மசி (20) துணை (21) கன (22) சயனம் (23) சர்வ (24) கும் (25) பிதாமகர்

**மேலிருந்து கீழ்**

(1) சிமிக்கி (2) வகை (3) புராணம் (5) முதல் (6) குலை (9) ஜார் (11) புகல் (12) தந்தி (14) ரகசியம் (15) மன்னவர் (17) அணை (18) பகர்க (19) மசகு (20) தும்பி (23) சம

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 273**
நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர். (17.07.2013 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.273இல்வெற்றி பெறுவோர்களது விபரம் 21.07.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 271 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களின் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
பா.கேதீஸ்வரி,
இல.67, கிருஷ்ணநகர், முழங்காவில்.

**2 ஆம் பரிசு**
தி.சுகிர்தா,
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
திருமதி ப.சிவகுமாரன்,
அராலி ஒழுங்கை, வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை.

**4 ஆம் பரிசு**
செ.அருள்வரதராசன்,
பெரிய தம்பிரான் கோவில் வீதி, துன்னாலை மேற்கு, பருத்தித்துறை.

**5 ஆம் பரிசு**
சி.பாலசுந்தரம்,
கல்லளை, சண்டிலிப்பாய்.

**பாராட்டுப் பெறுவோர்**

பொ.சுப்பிரமணியம்,
இல.1032, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

சு.வேகாவனம்,
வித்தியானந்தாக் கல்லூரி, முள்ளியவளை.

குணசேகரன் சக்திக்,
வேரவில், பூநகரி.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எகிப்தில் மீண்டும் இராணுவப் புரட்சி

## மக்கள் கிளர்ச்சியின் எதிரொலி

■ ரெங்கன்

எகிப்து நாட்டில் சில தினங்களுக்கு முன் அந்த நாட்டின் இராணுவம் விடுத்திருந்த எச்சரிக்கையை அது அதிரடியாக நிறைவேற்றியுள்ளது.

மக்கள் குறைகளைத் தீர்த்து வைக்க இராணுவம் 48 மணிநேரத்தில் தலையிட வேண்டி வரலாம் என்ற வகையில் பதவியிலிருந்த மோர்சி அரசுக்கு இராணுவம் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதன்படி கடந்த வியாழன் மாலை அதிபர் மாளிகையை இராணுவம் முற்றுகையிட்டு ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. அதிபர் மோர்சியும் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வந்துள்ளது. எகிப்தின் உச்ச நீதிமன்ற நீதிபதி மகர்எல் பெஹய்ரி தற்காலிக அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இஸ்லாமிய சார்பு கட்சிகளின் ஆதரவு பெற்றவரான காவலில் வைக்கப்பட்டுள்ள முகம்மது மோர்சி புதிய அரசில் ஓர் பங்காளித் தரப்பாகச் செயற்படுவாரா என்பது தெரியவில்லை. இராணுவம் உடனடியாக என்ன செய்யப்போகிறது என்பதும் புரியவில்லை. விரைவில் தேர்தல் ஒன்று நடத்தப்படலாம் என்று அரசுக்கு எதிராக போராடி வந்தவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

2011 ஆம் ஆண்டு எகிப்தில் ஏற்பட்ட மக்கள் கிளர்ச்சியின் வாயிலாக அப்போதைய சர்வாதிகாரி ஹொஸ்னி முபாரக்கின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு மக்களின் சமூக அரசு மலர்விக்கப்பட்டது. அதன் மூலம் புதிய அதிபராக மொஹம்மது மோர்ஸி தெரிவு செய்யப்பட்டார்.

இப்பொழுது மீண்டும் எகிப்தில் மக்கள் புரட்சி வெடித்திருக்கிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை எகிப்தின் முக்கிய நகரங்களில் எல்லாம் லட்சக் கணக்கில் மக்கள் வீதிகளில் இறங்கி அதிபர் மோர்ஸியை பதவியிலிருந்து இறங்கும்படி ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

மக்கள் ஆர்ப்பாட்டம் மிக மோசமான நிலைக்குச் சென்றுவிட்டதால் இராணுவம் தலையிடும் நிலை உருவாகியிருப்பதாக அஞ்சப்பட்டது. கெய்ரோ நகரில் மிக தீவிர ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மோர்ஸிக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்கள் பல நாள்களாக அங்கேயே தங்கி இருந்தார்கள்.

### இராணுவம் விடுத்திருந்த எச்சரிக்கை

இந்த நிலையில்தான் எகிப்தின் பலமிக்க இராணுவம் 48 மணி நேரத்துக்குள் மக்கள் குறைகளைத் தீர்த்து வைக்க தாம் தலையிட நேரும் என்று இராணுவத்தின் தளபதி அப்டெல் பாட்டா அல் சிஸி அரசுக்கும் எதிர்த் தரப்பினருக்கும் இறுதி எச்சரிக்கை ஒன்றை விடுத்திருந்தார்.

இராணுவத் தளபதியின் இந்த எச்சரிக்கையானது இராணுவ புரட்சியொன்றுக்கான அறிவிப்பாக இருக்கலாம் அல்லது இராணுவ கட்டுப்பாட்டில் அதிபர் தேர்தல் ஒன்று நடத்தப்படுவதாகவும் இருக்கலாம் என்று கருதப்பட்டது.

கடந்த சில மாதங்களாக மோர்சியின் ஆதரவாளர்களும் எதிர்ப்பாளர்களும் பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்தமை மட்டுமன்றி அவ்வப்போது இவர்களுக்கு இடையில் பயங்கர மோதல்களும் நடைபெற்று வந்துள்ளன.

இப்பொழுது இராணுவம் விடுத்துள்ள அறிவித்தலைப் பார்க்கையில் 60 வருடகால சர்வாதிகாரத்துக்குப் பின்னர் இராணுவம் சுமார் 16 மாதங்களுக்கு மேல் ஆட்சியை தன் வசம் வைத்திருந்த காலத்தை நினைவூட்டியது.

இராணுவம் விடுத்திருந்த அறிக்கையில் எந்த விதமான தலையீட்டை அது செய்யப் போகிறது என்பது தெளிவாக இருக்கவில்லை. மோர்சி பதவி விலக வேண்டும் என்று அது விரும்புகிறதா அல்லது அவர் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள முன் வரவேண்டும் என்று விரும்புகிறதா என்பது தெளிவாக இருக்கவில்லை. ஆனால் இராணுவத் தளபதி நாட்டின் பிரச்சினை இப்படியே இழுபட்டுக் கொண்டே போகுமானால் அதற்கு பரிகாரமாக முன் யோசனை ஒன்றை செயற்படுத்தவிருப்பதாக தெரிவித்தார். அது பற்றி பலரும் பல விதமாக வியாக்கியானம் செய்து வந்தார்கள். அவர் கூறியிருந்ததாவது:

வழங்கப்பட்டுள்ள கால அவகாசத்துக்குள் மக்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் போனால் இராணுவம் அதன் தேசிய மற்றும் வரலாற்று ரீதியான பொறுப்புக்களை முன் வைத்தும் எகிப்திய பெரு மக்களின் கோரிக்கைகளை உத்தேசித்தும் எதிர்காலத்துக்கான வீதி படம் ஒன்றை ( முன் யோசனை) அறிவிக்க வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்படலாம். இதில் எல்லாத் தரப்பினரும் பங்கு கொள்வதை மேற்பார்வை செய்ய வேண்டியும் ஏற்படலாம்– என்றார்.

கடந்த திங்கட்கிழமை மோர்சிக்கும் தளபதி சிஸிக்குமிடையில் நடந்த சந்திப்பொன்றையடுத்து இராணுவம் பேஸ்புக்கில் விடுத்த அறிக்கையில் ஆட்சியை இராணுவம் கைப்பற்றப் போகிறது என்ற கருத்தை மறுத்திருந்தது. இராணுவம் எகிப்திய பெரு மக்களின் விருப்பத்தோடு தான் மாற்றம் அல்லது சீர்திருத்தத்தை நோக்கி செயற்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### இராணுவ எச்சரிக்கை அதிபரால் நிராகரிப்பு

இராணுவம் விடுத்திருந்த இறுதி எச்சரிக்கையை அதிபர் மொஹம்மது மோர்ஸி நிராகரித்திருந்தார். அதிபர்தரப்பில் விடுக்கப்பட்ட ஓர் அறிக்கையில் அரசு தொடர்ந்து செயற்பட்டு தனது சொந்த வழியில் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்க பாடுபடும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. நாட்டில் பிரிவினைகளை ஆழமாக்கி சமூக அமைதியைக் கெடுக்கும் எந்தவித அறிவிப்புக்களையும் அரசு கண்டிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சியின் மூலம் ஹொஸ்னி முபாரக்கின் ஆட்சி கவிழ்கப்பட்டதை நினைவூட்டியிருந்த அதிபர் செயலக அறிக்கையில் ஜனவரி 25 ஆம் திகதிய மக்கள் புரட்சியின் மகோன்னதமான சாதனைகளில் ஒன்றுதான் சமூக ஜனநாயக எகிப்திய அரசின் உதயம் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### எதிர்ப்பாளர்கள் வரவேற்பு

உலக நடப்புகள் ஒரு பார்வை

இராணுவத்தின் அறிவிப்பை மோர்ஸி எதிர்ப்பாளர்கள் வரவேற்றிருந்தார்கள்.

ஞாயிறன்று நடைபெற்ற மிகப்பெரிய ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் இருந்துள்ள தமறெட் அமைப்பு இராணுவ அறிவிப்பு மக்களுக்கு ஆதரவளிப்பதாக உள்ளது என்று வரவேற்றிருந்தது. அதன் பேச்சாளர் மகமூத் பாதர் தெரிவிக்கையில் ''இதன் கருத்து அதிபர் தேர்தல் விரைவில் நடைபெறலாம்'' என்பதே என்றார்.

இராணுவ அறிவித்தல் வெளியான உடனேயே ஆயிரக்கணக்கான அரச எதிர்ப்பாளர்கள் கெய்ரோ, அலெக்சான்டிரியா மற்றும் இடங்களில் வீதிகளில் இறங்கி மகிழ்ச்சியைக் கொண்டாடினார்கள்.

தமறெட் விடுத்த ஓர் அறிக்கையிலும் செவ்வாய்க்கிழமை வரை பதவி விலகுவதற்கு அதிபருக்கு அவகாசம் அறிவிக்கப்பட்டிருந்தது. இல்லையெனில் தமது[illegible]கள் சட்ட மறுப்பு தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அறிவித்திருந்தது.

### மண்டேலாவுக்கு ஒபாமாவின் கௌரவம்

தற்பொழுது கடுமையான உடல்நிலை பாதிப்புக்குள்ளாகி மருத்துவமனையில் தீவிர சிகிச்சையில் இருக்கும் தென்னாபிரிக்க விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா ஒரு காலத்தில் சிறைத் தண்டனை அனுபவித்த சிறைச்சாலையில் அந்த குறிப்பிட்ட அறைக்குச் சென்று தரிசித்த அதிபர் பராக் ஒபாமா தாம் அங்கு பணிந்து நின்றதாகக் கூறினார்.

இன ஒதுக்கலுக்கு எதிராகப் போர் நடத்தி தென்னாபிரிக்காவில் றொப்பென் தீவுகளில் அடைக்கப்பட்டிருந்த மண்டேலா உட்பட விடுதலை வீரர்களை ஒபாமா புகழ்ந்து பேசினார். இன ஒதுக்கல் வெள்ளையர் ஆட்சிக்கு விட்டுக்கொடுக்க மறுத்து போராடி அந்தத் தீவில் கொடுமைக்குள்ளான வீரர்களை பாராட்டினார். மருத்துவமனையில் சென்று பார்க்க முடியாது போனாலும் மண்டேலாவின் பெருமைகளை எடுத்துப் பேசினார். அவரைப் பின்பற்றி வாழும்படி இளைஞர்களைக் கேட்டார்.

ஒபாமா தமது மனைவி மிச்செல் பிள்ளைகள் சாஷா மற்றும் மாலியா ஆகியவர்களுடன், மண்டேலாவும் ஏனையவர்களும் மணிக்கணக்கில் இருண்ட சுண்ணாம்புக்கல் அரங்கங்களில் இடுப்பொடிய பணியாற்றியுள்ள இடங்களையும் போய்ப் பார்த்தார். மண்டேலா தமது 27 வருட கால சிறை வாழ்வில் மூன்றில் இரண்டு பங்கை கழித்திருந்த சிறைச்சாலையின் சிறிய ஈரம் படிந்த அறையின் யன்னல் வழியாக உள்ளே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு அங்கிருந்த குறிப்புப் புத்தகத்தில் பின்வருமாறு எழுதினார்.

''அத்தனை துணிச்சலோடு கொடுமையை எதிர்த்து விட்டுக் கொடுக்க மறுத்து அநீதியை எதிர்கொண்ட அந்த மனிதர்கள் இருந்த இடத்தில் நானும் எனது குடும்பமும் செருக்கொழிந்து பணிவுற்றவர்களாக நின்றோம். றொப்பென்தீவு வீரர்களுக்கு உலகம் கடமைப்பட்டிருக்கின்றது. மனித ஆன்மாவின் பலத்துக்கு முன் எந்த வித கைவிலங்குகளோ, சிறை அறைகளோ ஈடுகொடுத்து நிற்க முடியாது என்பதை அவர்கள் நினைவுபடுத்துகிறார்கள்''

பின்னர் கேப்டவுனில் பல்கலைக்கழகத்தில் உரையாற்றுகையில் மண்டேலாவை முக்கியமாக வைத்து உரைநிகழ்த்தினார். ஒபாமா 1970ஆம் ஆண்டு இன ஒதுக்கலுக்கெதிரான இயக்கத்தில் கலிபோர்னியாவில் தாம் பணியாற்றியதை நினைவு கூர்ந்து ஒபாமா தென்னாபிரிக்காவை முன்வைத்தே தான் அன்று அரசியலில் முதல் அடியை எடுத்து வைத்தார் என்றார்.

### அடுத்த பில்லியன் ஆண்டுகளில் பூமியில் உயிர்கள் இருக்காது

இன்னும் ஒரு பில்லியன் ஆண்டு காலத்தில் பூமியில் உயிர் இனங்களே இருக்காது– எல்லாம் அழிந்து போய்விடும் என்று ஓர் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூமியின் காற்று மண்டலத்தில் கார்பனீர் ஒக்சைட்டு அதிகரிப்பினால் அல்ல, காபனீர் ஒக்சைட்டு குறைவடைவதினால் தான் இந்த நிலைமை ஏற்படும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளார்கள். ஸ்கொட்லாந்தின் செ்ன். அன்ரூஸ் பல்கலைக்கழகத்தின் விண் நுண்ணுயிராளரான ஜெக் மாலே என்பவர் நடத்தியுள்ள ஆய்வில் அடுத்து வரும் பில்லியன் ஆண்டுகளில் (லட்சம் கோடி) நீர் ஆவியாதல் அதிகரிப்பும் மழைநீருடன் இரசாயனங்களின் எதிர்வினைகளும் பூமியின் காற்று மண்டலத்திலிருந்து அதிகம் அதிகமாக காபனீர் ஒக்சைட்டு இழுத்தெடுத்து விடும் என்று தெரிய வந்துள்ளது.

காபனீர் ஒக்சைட்டின் அளவுமட்டம் குறைவடைவதால் பூமியில் தாவரங்கள், விலங்குகள், மறையத் தொடங்கும். எமது தாய் பூமியானது நோய்க்கிருமிகளின் வாழ்விடமாகிவிடும் என்கிறார் அவர்.

இவ்விதமான மாற்றங்களுக்கு பிரதான விசையாக சூரியன் இருக்கப் போகின்றது. அடுத்து வரும் பில்லியன் ஆண்டுகளில் அது வயதடையும் போது இப்போதிருப்பதை விட மேலும் பிரகாசமடையும். பூமியின் மீதான அதன் வெப்பம் இன்னும் தீவிரமடையும். அதனால் பூமி மேலும் வெப்பமடையும். அது பெருங் கடல்கள் நீராவியாக மாறும் அளவுக்கு மோசமடையும்.

இம்மாதிரியான ஓர் நிலைமை ஏற்படும்போது பூமியானது உயிர்கள் வாழ்வதற்கு உதவாத ஒரு கிரகமாகிவிடும். உயிர் வாழ்க்கைக்கு தண்ணீர் அவசியம். எனவே ஆங்காங்கே சிறு சிறு இடங்களில் தண்ணீர் காணப்படலாம். அல்லது குளிர் மிகுந்த இடங்களில் குகைகளில் மலை உச்சிகளில் அல்லது நிலத்துக் கடியில் ஓரளவு காணப்படலாம் என்கிறார் அவர்.

உயர் வெப்ப நிலைகள் அல்ட்ரா வயலட் கதிரியக்கம் போன்றவை மிக உச்சத்தை எட்டிவிடும் என்பதால் அம்மாதிரி நிலைமைகளில் பூமியில் வாழக்கூடிய உயிரினங்கள் மட்டுமே உயிர்வாழும் என்கிறார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் படங்களில் காணப்படுபவை எல்லாம் உலகில் உள்ள மிக மிகச் சிறந்த சொகுசு ஹோட்டல்களின் அறைகள். ஒவ்வொரு அறையிலும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட வசதிகள் உண்டு. உலகின் மிகப் பெரிய பிரபலங்கள் இந்த அறைகளைப் பயன்படுத்தி இருக்கிறார்கள்.
இந்த அறைகளில் ஒரு இரவு தங்குவதற்கு குறைந்தது 6 லட்சத்து 27ஆயிரமும் ஆகக் கூடுதலாக 43 லட்சத்து 50 ஆயிரமும் வேண்டும்.









காந்தியை தாங்கிய பாதணி, தன்னை ஏந்தப் போகும் கைகளுக்காகக் காத்துக் கிடக்கிறது.

# பெற்றோரைப் பார்க்க வைக்கச் சட்டம்

லொலா வங், 28 வயதான விற்பனைப் பிரதிநிதி. சீனாவின் சங்காய் நகரில் பணியாற்றுகிறார். 6 மணித்தியாலங்கள் பயணித்து கிழக்குச் சீனாவில் இருக்கும் சங்டொங் மாகாணத்துக்கு வருடத்தில் இரண்டு தடவைகள் மறக்காமல் கட்டாயமாகப் போகிறார். லுனர் புதுவருட நாளிலும் ஒக்டோபரில் வரும் தேசிய விடுமுறை நாளிலும் அவரது பயணங்கள் தவறுவதே இல்லை.

"இன்னும் அதிக தடவைகள் என் பெற்றோரைச் சென்று பார்க்க வேண்டும் என்றுதான் விரும்புகின்றேன். ஆனால் நிதி நிறுவனங்களில் நான் வேலை செய்வதால் அதிக நேரத்தை அதில் செலவிடவேண்டியிருக்கிறது. என்னுடைய தனிப்பட்ட நேரத்தைக் கூட வேலைக்காகச் செலவிடவேண்டியவனாக இருக்கின்றேன்" என்கிறார் வங். அவரது பெற்றோருக்கு அவர் ஒரே பெண் பிள்ளை.

வங் மட்டுமில்லை, சீனாவின் ஒரு குழந்தைத் திட்டத்தால் அங்கு அனேகமாக எல்லோருக்குமே ஒரு குழந்தைதான். எனவே வங் எதிர்கொள்ளும் சோகம் அங்குள்ள அனேகருக்குப் பொதுவானதுதான். அதனை விளைவாக பெற்றோரைப் பிள்ளைகள் சரிவரக் கவனிக்கிறார்கள் இல்லை என்கிற பிரச்சினை இப்போது எழுந்துள்ளது.

## புதிய சட்டம்

இதனால், சீன அரசாங்கம் முதியவர்கள் குறித்த தனது சட்ட திட்டங்களை கடந்த டிசெம்பரில் திருத்தி அமைத்தது. கடந்த வாரத்தில் புதிய சட்டம் நடைமுறைக்கு வந்தது. அதன் அடிப்படையில் 60 வயதுக்கு மேற்பட்ட பெற்றோரைக் கொண்டிருக்கும் பிள்ளைகள் அடிக்கடி தமது பெற்றோரைச் சென்று நேரில் பார்க்க வேண்டும் என்று அரசு வலியுறுத்தியுள்ளது.

சீனாவில் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட ஒரு ஆய்வின்படி 185 மில்லியன் மக்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். 2015ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 221 மில்லியனாகப் பெருகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. 2050 ஆம் ஆண்டளவில் இது இன்னும் இரண்டு மடங்காகி 450 மில்லியன்களை எட்டும் என்கிறார்கள் ஆய்வாளர்கள். அதாவது சீனாவின் மூன்றிலொரு பகுதியினர் அப்போது வயோதிபர்களாக இருப்பார்கள்.

அதிகரித்துவரும் வயோதிபர்களின் எண்ணிக்கைக்கு மத்தியில் பிள்ளைகள் அவர்களைக் கவனிக்காமல் கைவிடுகிறார்கள் என்று உள்ளூர் ஊடகங்கள் எழுப்பிய குற்றச்சாட்டுக்களை அடுத்தே அரசு புதிய சட்டத்தைக் கொண்டு வந்தது.



தமது பெற்றோரைப் பிள்ளைகள் அடிக்கடி நேரில் பார்த்து அவர்களுக்கான பொருளாதார மற்றும் ஆன்மிக உதவிகளை வழங்க வேண்டும் என்றும் புதிய சட்டம் கூறுகின்றது. ஆனால் "அடிக்கடி" என்ற சொல்லின் ஊடாக எத்தனை தடவைகள் என்பதை அரசு தெளிவுபடுத்தவில்லை என்று கோபப்படுகிறார்கள் இளம் சீனர்கள்.

சீனர்கள் ஒரே பிள்ளையைப் பெறுவதற்கே அரசு அனுமதிக்கிறது என்ற நிலையில் பெற்றோரைப் பராமரிப்பது தமக்குக் பெரும் சிரமம் என்கிறார்கள் இளம் சீனர்கள். அதிலும் குறிப்பாக ஷங்காய் மற்றும் பெய்ஜிங் போன்ற பெரு நகரங்களுக்கு வேலைக்காக வரும் சீனர்கள், தூர இடங்களில் இருக்கும் தமது பெற்றோரைப் போய்ப் பார்ப்பது மிகச் சிரமமானது.

இவர்கள் இப்படிச் சாக்குப் போக்குகளைச் சொல்லித் தமது பெற்றோரை பரிதவிக்க விட்டதனால்தான் அரசு புதிய சட்டத்தைக் கொண்டு வந்தது நியாயப்படுத்துகிறார் வங். பெற்றோரை வந்து பார்க்காத பிள்ளைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்று புதிய சட்டம் கூறுகின்றது. ஆனால் அதற்கான தண்டனை என்ன என்பதைச் சட்டம் வரையறுக்கவில்லை.

## மீறினால் நடவடிக்கை

அப்படிச் சட்டம் சொன்னாலும் பெரும்பாலான பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமாட்டார்கள் என்று நம்புகிறார் அமெரிக்காவில் மேற்படிப்பு படித்து வரும் 50 வயதான ஷெங் சவாங். ஆனால், செவ்வாய்க்கிழமை ஜியாங்சூ நகரத்திலுள்ள நீதிமன்றில் தனது மகளுக்கு எதிராக ஒரு தாய் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார். அதனை விசாரித்த நீதிமன்றம் அந்த மகள் மாதாந்தம் குறைந்தது இரண்டு தடவைகளா வது தனது தாய் வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்றும் அவருக்கான பொருளாதார உதவிகளை வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

தமிழர்கள் மத்தியிலும் அண்மைக்காலமாக வயோதிபர் இல்லங்களும் மடங்களும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இங்கும் அத்தகைய ஒரு நிலை வருவதற்கு முன்னர் விழுமியங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்படுவது அவசியம்.

ரேணுபிரேம்

## நீங்க கேட்கலாம்

? வடக்கு மாகாண சபைக்கு மாவைதான் முதலமைச்சராமே! உண்மையா?

*மயூரன், கொல்லங்கலட்டி*

முதலமைச்சர் கனவுகளுடன் இருந்தவர்கள் எல்லோருக்கும் அது சரிவராது என்று தெரிந்தபோது, கைகாட்டிய மனிதர்தான் மாவை. அவர் முதலமைச்சர் ஆவாரா இல்லையா என்பதற்கு முன்பாக, எனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுணம் பிழைத்தால் சரி என்ற ரீதியில், முதலமைச்சர் கனவில் இருந்தவர்கள் எல்லோரையும், தான் முதல்வராக வந்துவிடக்கூடும் என்ற மிரட்டலால் ஒன்று திரட்டிய அந்த 'மனிதன்' யார் என்று கண்டுபிடித்து மக்கள் முன் கொண்டு வர வேண்டும். அந்தாளால் ஆவது தமிழர்களை ஓரணி யில் கொண்டு வரமுடியுமா என்று பார்ப்பதற்குத்தான்.

? அரசியலுக்கு வந்ததும் ஏன் எல்லோரும் இரண்டு வேலைகளைக் கட்டாயமாகச் செய்கிறார்கள்? ஒன்று அரச வேலை எடுத்துக் கொடுப்பது, மற்றையது சொத்து, பணம் சேர்ப்பது.

*எழிலரசி, கோண்டாவில்*

ஆப்பிரிக்காவின் வஸாங் (Wazang) பகுதியில் உள்ள மஞ்சள் நிற தினைக் குருவிகளுக்கு மழைக்காலம் முடிந்ததும் உண்பதற்கு தினை கிடைக்காது. அப்போது அவை எறும்புப் புற்றுகளின் அருகில் சென்றமர்ந்து இனிமையாகப் பாடுமாம். அதைக் கேட்ட எறும்புகள் தங்கள் புற்றில் சேமித்து வைத்திருக்கும் தினைகளை வெளியே கொண்டு வந்து வெயிலில் உலர்த்தும். அவற்றில் தேவையான அளவை அத்தினைக் குருவிகள் உண்பதற்கு அந்த எறும்புகள் அனுமதிக்கின்றன. ஏனெனில், அது சமயம் அந்தக் குருவிகள் உண்ணுவதற்கு உணவு கிடைக்காது என்பது அந்த எறும்புகளுக்குத் தெரியும். எறும்புகளின் இந்த உதவிக்கான நன்றிக் கடனை அறுவடைக் காலத்துக்கு முன்பாக தினைக்குருவிகள் தீர்க்கின்றன. எப்படியென்றால், வயலில் தினைகள் முற்றியவுடன் அதன் மேல் அமர்ந்து அக்குருவிகள் தினைகளை உதிர்க்க வைக்கின்றன. அவற்றை எறும்புகள் எடுத்துக் கொண்டு போய் தங்கள் புற்றுகளில் மீண்டும் சேமித்துக் கொள்கின்றன.
இதேபோன்று தான் சில அரசியல்வாதிகள் கொள்ளையடிப்பதற்காகவேதான் அவர்களை மக்களும் வெற்றிபெறச் செய்கிறார்கள். தங்களை வெற்றிபெறச் செய்ததற்காகவே அவர்களும் சிலருக்கு வேலை வாங்கிக்கொடுக்கிறார்கள். இல்லையேல் தெருவோர வியாபாரத்தில் இருந்தவர்களதும் தோளில் ஒரு துவக்கும் கட்டைக்காற்சட்டையுமாகத் திரிந்தவர்களதும் குடும்பங்களுக்கு கோடிகளில் எப்படி சொத்துக்கள் வந்தன?

? நான் பேசும் போதெல்லாம் என் நண்பன் "கிரந்தம் பேசாதே" என்கிறான். கிரந்தம் என்றால் என்ன?

*[illegible], வண்ணார்பண்ணை*

சமஸ்கிரத எழுத்துக்களைத் தமிழ் முதலான மொழிகளில் எழுதுவதற் காக உருவாக்கப்பட்டதுதான் கிரந்தம் என்கிற எழுத்து முறை. தமிழ் நாட்டை பல்லவர்கள் ஆண்ட காலத்திலே இந்த எழுத்துமுறை அதிகளவில் பயன்பாட்டில் இருந்துள்ளது. அவர்களால் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் பலவற்றிலும் கிரந்த எழுத்துக்களைக் காணலாம். ஈழத்திலே நாங்கள் பரவலாகப் பயன்படுத்தி வரும் எழுத்துக்களான ஸ, ஷ, ஜ, ஹ, ஸ்ரீ போன்றன எல்லாம் கிரந்த எழுத்துக்கள் தான். எனினும் இவை தவிர்ந்த கிரந்த எழுத்துக்கள் நமக்குத் தெரியாது. அதனால் கிரந்தத்தில் எழுதப்பட்டவற்றை உடனடியாக – பயிற்சி ஏதுமின்றி – படிப்பது சிரமம். அதாவது புரியாது. நீரும் உமது நண்பனிடம் இப்படி ஏதாவது புரியாமல் பேசியிருப்பீர் அதனால்தான் அவர் கிரந்தம் பேசுகிறீர் என்றிருப்பார். பரவாயில்லைவிடுங்கள்! நீங்கள் பேசுவதைப் புரிந்துகொள்ளும் அறிவு அவருக்கு இல்லை என்று நினைத்து உங்களைத் தேற்றிக் கொள்ளுங்கள்.




*கிரந்தத்தில் உள்ள மெய் எழுத்துக்கள் இவை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலைப்பொழுதில் சருமம் விழித்தெழ



புதிய கிளீன் அன் கிளியர் மோனிங் எனஜி ஃபேஸ் வோஷ்

இதிலுள்ள குமிழ்மணிகளில் அடங்கியுள்ள இயற்கை பழச்சாரங்கள் சருமத்துக்கு சக்தியளித்து, தினந்தோறும் காலைப்பொழுதில் முகத்துக்கு புதுப்பொலிவைத் தரும்.

## 3 வகை பழச்சாரங்களுடன்




பளபளபாக்கும் பெரி பழச்சாரத்தில் அடங்கியுள்ள இயற்கையான உயிர் வளியேற்ற எதிர்ப்பொருள் மற்றும் சலிசிலிக் அமிலம் இறந்த சரும கலங்களை அகற்றி, சூரிய கதிர் தாக்கத்தினால் உண்டாகும் எதிர்மறை விளைவுகளை கட்டுப்படுத்தி, சருமத்துக்கு பளபளப்பையும், பிரகாசத்தையும் பெற்றுத்தரும்.




புத்துணர்வூட்டும் லெமன் பழச்சாரத்தில் விட்டமின் சி கூடுதல் செறிவுடன் காணப்படுகிறது. இது சருமத்தின் மங்கலான பகுதிகளை பிரகாசமாக்கி, மேலதிக எண்ணெயை அகற்றி, துவாரங்களை இறுக்கமாக்கி, சருமத்துக்கு புத்துணர்வையும், புதுப்பொலிவையும் பெற்றுத்தரும்.




தூய்மையாக்கும் பச்சை அப்பிள் பழச்சாரத்தில் உயிர் வளியேற்ற எதிர்ப்பொருள் மூலக்கூறுகள் அடங்கியுள்ளன. இவை சரும கலங்கள், திசுக்கள் பாதிப்படைவதை தடுக்கும். இதிலுள்ள இலாத்தின், கொலாஜன் சருமத்தை தூய்மையாக்கி, இளமைப் பொலிவைப் பெற்றுத்தரும்.

ரூ.165 இலிருந்து

Response Marketing

Clean & Clear

Clean & Clear Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாட்லியின் 175 ஆவது ஆண்டு நிறைவையொட்டி

# பாடசாலை மாணவர்கள் இடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி யின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, யாழ். மாவட் டப் பாடசாலை மாணவர்களி டையே கட்டுரை, கவிதை, ஆங்கில எழுத்து உச்சரிக்கும் போட்டிகள் நடத்தப் பட்டன.

இப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள், பாடசாலை களின் விவரம் வரு மாறு:-

**கட்டுரை- கீழ்ப்பிரிவு**

சி.றஜீவன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), நி.தர்மினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), மு.சுபிர்ணா (கட்டைவேலி ஞானா சாரியார் கல்லூரி),

**மேற்பிரிவு**

கு.சரண்யா (கட்டைவேலி ஞானாசாரி யார்),வே.கிருஷ்ணா (அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி), யே.இமெல்டா (யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னி யர் மடம்)

**கவிதை- கீழ்ப்பிரிவு**

பா.பிரவீனா (பருத்தித்துறை வடம ராட்சி இந்து மகளிர் கல்லூரி), சு.கிருத்திகா (தும் பளை சிவப்பிரகாச ம.வி.) சூ.விதுஷன் (பருத்தித்துறை வேலாயுதம் ம.வி)

**கவிதை- மேற்பிரிவு**

செ.இமாஜினி (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரி), க.துஷாந்தி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), இ. துசா மினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி)

**ஆங்கில எழுத்துக்கள் உச்சரித் தல் குழுமம்**

யாழ். வேம்படி மகளிர் கல் லூரி நெல் லியடி ம.ம.வி, கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) (ஒ-8)



வவுனியா வடக்கு பிரதேச செயலக சமுர்த்தி அலுவலக ஏற்பாட்டில் புளியங்குளம் தெற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரும் பொதுமக்களும் இணைந்துதேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு தனிநாயகம் அடிகளார் வித்தியாலயம் மற்றும் பழையவாடி கிராமங்களில் சிரமதானத்தில் ஈடுபட்டனர். அதில் ஒரு காட்சி. (ஒ-402)






இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிப்போர்,
வரை. ஸ்டபர்ட் மோட்டார் (தனியார்) நிறுவனம்
பிரதான காரியாலயம் : 718/7, மருதானை வீதி, கொழும்பு 10, தொ: 011-7607200
மோட்டார் சைக்கிள் காட்சியறை : 161, கொழும்பு வீதி, ரத்தனபிட்டிய, தொ: 011-7607450
மட்டக்களப்பு கிளை : இல.425, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே: 065-7607200
மற்றும் நாடளாவிய ஹொன்டா விற்பனையாளர் வலையமைப்புகளூடாக
(C/10073)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகை கக்கிய முந்நூறு வாகனங்கள் கறுப்புப் பட்டியலில்



கொழும்பு, ஜூலை 6

சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அதிகளவில் புகையைக் கக்கியவாறு வீதிகளில் பயணித்த வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் எஸ்.எச்.ஹரிச்சந்திர தெரிவித்தார்.

இந்த சுற்றிவளைப்புகள் கொழும்பு, காலி, மாத்தறை, குருநாகல், கண்டி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களிலேயே மேற்கொள்ளப்பட்டன.

21 நாள்களுக்குள் அந்த வாகனங்களைச் சீர்செய்து அந்தந்த பிரதேசங்களின் மோட்டார் வாகனப் பரிசோதகர்களிடம் மீள முன்னிலைப்படுத்துமாறு வாகன சாரதிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இவற்றுள் 300 வரையிலான வாகனங்கள் குறிக்கப்பட்ட காலவரையினுள் புதுப்பிக்கப்பட்டிராததன் காரணமாக அந்த வாகனங்கள் கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய அந்த வாகனங்களின் உரிமையாளர்களால் விற்பதற்கோ உடைமை மாற்றம் செய்வதற்கோ இடமில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இத்தகைய வாகனங்களினால் ஏற்படுத்தப்படும் சுற்றாடல் பாதிப்பைக் குறைத்துவிடுவதற்கு வாயு வெளிப்பாட்டு செயற்றிட்டத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் சுற்றாடல் அதிகார சபையின் உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைவுடன் வீதிகளில் பயணிக்கும் அனைத்து மோட்டார் வாகனங்களையும் பரிசோதிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அவர் கூறினார். வீதிகளில் அதிகளவில் புகையைக் கக்கிச் செல்லும் வாகனங்களை கண்டால் 011 3100152 என்ற அவசர அழைப்பு இலக்கத்துக்கு அறிவிக்குமாறு அவர் பொதுமக்களிடம் கேட்டுள்ளார். (ச-22)



யாழ்.மாநகர சபை முன்பள்ளிச் சிறுவர்களின் விளையாட்டு விழா கடந்த புதன்கிழமை நடைபெற்ற வேளை அவர்களின் உடற்பயிற்சிக் காட்சி. (ஒ-7)

## மஹாபொல 'ஒன்லைன்' சீட்டு மீள ஆரம்பிக்கத் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 6

மஹாபொல 'ஒன்லைன்' லொத்தர் சீட்டை மீளவும் ஆரம்பிப்பதற்கு கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தீர்மானித்துள்ளது.

மஹாபொல புலமைப் பரிசில் எண்ணிக்கையை அதிகரித்தல், மாதாந்த புலமைப் பரிசில் கொடுப்பனவை அதிகரித்தல் மற்றும் மஹாபொல புலமைப் பரிசில் நிதியத்தை அதிகரித்தல் ஆகிய குறிக்கோள்களை முன்னிட்டு இது மீள ஆரம்பிக்கப்படவுள்ளது.

மஹாபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நிதியத்துக்காக 1981 ஆம் ஆண்டில் மஹாபொல லொத்தர் சீட்டு ஆரம்பிக்கப்பட்டது. அது 1988 இல் நிறுத்தப்பட்டது.

2003 ஆம் ஆண்டில் 'ஒன்லைன்' லொத்தர் சீட்டாக அது மீளவும் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2007 ஆம் ஆண்டில் அதை மீளவும் நிறுத்திவிட நேர்ந்துள்ளது.

மஹாபொல புலமைப் பரிசில் நிதியத்தின் கீழ் 1981 இல் இருந்து இது காலவரையிலும் 2,17,000 மஹாபொல புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன என்று கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

மஹாபொல 'ஒன்லைன்' லொத்தர் சீட்டை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸன் பெர்னாண்டோ அமைச்சரவையின் அனுமதியை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

## மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சறுக்கி வீழ்ந்து காயம்

தென்மராட்சி, ஜூலை 6

வளவினுள் அமைக்கப்பட்ட குழாய்க் கிணற்றிலிருந்து வெளியேற்றப்பட்ட நீர் வீதியில் தேங்கி நின்றதால் மோட்டார் சைக்கிளில் சென்றவர் சறுக்கி விழுந்து காயமடைந் தார்.

இந்தச் சம்பவம் வியாழன் இரவு 7 மணிக்கு கல்வயல் பழைய பாடசாலை வீதியில் இடம்பெற் றது.

குழாய்க் கிணற்றிலிருந்து வெளியேற்றப்பட்ட நீருடன் வெளியேறிய மக்கிச் சேறு வீதியில் உறைந்திருந்ததால் சேறு மோட்டார் சைக்கிள் மட்காட்டுக்குள் புகுந்து இறுகியதால் தூக்கி வீசப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

கால், கை ஆகியவற்றில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (வ-9)




மிட்சுபிஷி ரோஸா
BE 449F (1996) பஸ்வண்டி
விற்பனைக்கு

4D34 டர்போ எஞ்சின், அண்டகெரியேஜ் முழுமையான பொடியுடன் கூடிய பஸ் வண்டி விற்பனைக்கு உண்டு. மிகவும் நல்ல நிலையில் உள்ள வண்டி. மிகக் குறைந்த தூரமே ஓடியுள்ளது.

மேலும் எல்லாவிதமான ஜப்பான் வாகன உதிரிப்பாகங்களுக்கும் உடன் நாடுங்கள்

யூரோநிப்பொன் க்றூப் ஒப் கம்பனி

வாத்துவ-038 22 95586/7, தம்புள்ள-066 22 83996/8, மாத்தறை -041 2223333, வத்தளை-0117 389988

தொடர்புகளுக்கு (C/10078)

றொனி : 0773 844750
ருவன் : 0773 844753


## வாரத்தில் இரு தினங்களே இயங்கும் விவசாயத் திணைக்கள அலுவலகங்கள்

### தேவைகளை நிறைவேற்ற முடியாமல் திணறும் மக்கள்

அச்சுவேலி, ஜூலை 6

யாழ்.மாவட்டத்தில் உள்ள விவசாயப் போதனாசிரியர்களின் அலுவலகங்கள் வாரத்தில் இரண்டு தினங்கள் தவிர ஏனைய தினங்களில் மூடப்பட்ட நிலையில் விவசாயிகள் , பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு அலைந்து திரிய வேண்டி இருப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

பெரும்பாக கமநல சேவை நிலையங்களில் உள்ள விவசாயப் போதனாசிரியர் அலுவலகங்களில் பணியில் இருந்த அலுவலக உதவியாளர்கள் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் பணிப்புக்கு அமைய மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் பண்ணைக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

> விவசாய போதானசிரியர்கள் வாரந்தோறும் திங்கள், புதன் இரண்டு தினங்களும் அலுவலகத்தில் தங்கி யிருந்து கடமை புரியும் அதே நேரம் ஏனைய வேலை நாள்களில் கள பணிக்கு சென்றுவிடுகின் றனர்.

விவசாய போதானசிரியர்கள் வாரந்தோறும் திங்கள், புதன் இரண்டு தினங்களும் அலுவலகத்தில் தங்கியிருந்து கடமை புரியும் அதே நேரம் ஏனைய வேலை நாள்களில் கள பணிக்கு சென்றுவிடுகின்றனர். அலுவலகப் பணியாளர்கள் முன்பு முழு நாளும் அலுவலகத்தில் இருந்து பொதுமக்கள் மற்றும் விவசாயிகளுக்கான தேவைகளை நிறைவு செய்து வந்தனர்.

தற்பொழுது அலுவலக உதவியாளர்கள் விவசாயத் திணைக்கள பண்ணைக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளதால் விவசாய போதனாசிரியர்கள் அலுவலகத்தில் தங்கியிருக்கும் இரண்டு தினங்கள் தவிர ஏனைய வேலை தினங்களில் அலுவலகங்கள் மூடப்பட்ட நிலையில் உள்ளன.

விவசாயப் போதனாசிரியர்கள் கடமையில் இருக்கும் தினங்களில் அலுவலகத்தைத் துப்புரவு செய்வது மற்றும் பயிர்களுக்கு நீர் ஊற்றுவது தொடர்பான முக்கிய பணிகளையும் போதனாசிரியர்களே மேற்கொண்டு வருவதாக கூறப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 14 விவசாயப் போதனாசிரியர் அலுவலகங்களிலும் ஒரே நிலையிலேயே கடமை ஒழுங்கு மேற்கொள்ளப்படுவதாகவும் இதனால் விவசாயிகள் தமது பயிர்ச்செய்கை தொடர்பான உடனடிப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமல் இடர்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







## யாழ்ப்பாண மாவட்டத்திற்கான வெற்றிடங்கள்

ஐடியல் பினான்ஸ் லிமிட்ட் (IFL) என்பது, இலங்கையின் மோட்டார் வாகனக் கைத்தொழிற்துறையில் நடைமுறையோடு கூடிவரும் முதற்தரமான நிறுவனமாகும். அத்துடன், அதன் உபாயமார்க்க வெளிநாட்டு முதலீட்டு பங்குதாரராக, நாட்டில் வியாப்பித்து வரும் பதிவுசெய்யப்பட்ட பினான்ஸ் கம்பனி (RFC) விளங்குகின்றது.

பதிவுசெய்யப்பட்ட பினான்ஸ் கம்பனி (RFC) துறையின் வளர்ச்சியை வெளிநாட்டு உரிமைப் பங்கு மற்றும் நீண்ட கால கடன், மூதலீட்டின் ஊடாக அடைவதற்கான வியாபாரத் திட்டத்தை ஐடியல் பினான்ஸ் லிமிட்ட் (IFL) இன் உபாயமார்க்கத் திட்டமிடல், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட முன் கணிப்பு மற்றும் நடைமுறையோடு இணைந்த வியாபாரத் திட்டம் என்பவற்றின் ஊடாக போட்டித்தன்மை ஊக்குவிப்பின் மூலம் அடைவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

### ஐடியல் குழுவின் ஒரு அங்கத்தவராக எங்கள் பயணத்தில் கைகோர்க்கவும்

- நிறைவேற்றுத்தரம் - சந்தைப்படுத்தல்
- நிறைவேற்றுத்தரம் - வாடிக்கையாளர் சேவை
- நிறைவேற்றுத்தரம் -அடகுக்கடன்

ஐடியல் விண்ணப்பதாரி கம்பனியின் குத்தகை மற்றும் தவணை முறைக் கொள்முதல் மற்றும் அல்லது வைப்பு அசைவாக்கம் என்பவற்றை முன்னிலைப்படுத்தி அனைத்து வகையான நிதிப் பண்டங்களையும் சந்தைப்படுத்தக்கூடியவராக இருக்க வேண்டும்.

### நாங்கள் (ஆண்/ பெண்) விண்ணப்பதாரிகளை கீழ்வரும் தகைமையுடன் எதிர்பார்க்கின்றோம்.

### உங்கள் தகைமை:

- ஒரே தடவையில் க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் முழுமையான சித்தி..
- சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளை வாசிக்கும் மற்றும் எழுதும் திறன்.
- சிறந்த ஆளுமைப் பண்புகள்
- கணினி அறிவு
- வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தை வைத்திருத்தல்/ ஸ்கூட்டர் /மோட்டார் வண்டியை செலுத்தக்கூடியவராக இருத்தல்
- இத்துறை சார்பான முன் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

விண்ணப்பதாரி முழுமையான சுயவிபரக் கோவையை இரண்டு உறவுமுறையல்லாத மத்தியஸ்தர்களின் பெயருடன் இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட தினத்தில் இருந்து 10 நாள்களுக்குள் கீழ்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

பிரதான நிறைவேற்று அலுவலர் / பணிப்பாளர்
ஐடியல் பினான்ஸ் லிமிட்ட்
இல 299, டாக். கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை (யூனியன் பிளேஸ்), கொழும்பு 02.
(தயவுசெய்து விண்ணப்பிக்கும் பதவியை இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்)

அல்லது

உங்கள் சுயவிபரக் கோவையை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் careers@idealfinance.lk
(தயவுசெய்து விண்ணப்பிக்கம் பதவியை மின்னஞ்சல் விடய கூட்டினுள் குறிப்பிடவும்.)

கறி முருங்கை கன்றுகளை

# மாவட்ட ரீதியில் வழங்க நடவடிக்கை



அச்சுவேலி, ஜூலை 7

கறி முருங்கை கன்றுகளை மாவட்ட ரீதியில் உற்பத்தி செய்து பயனாளிகள், விவசாயிகளுக்கு வழங்க வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம் முன்வந்துள்ளது. இந்த வகையில் மாவட்டத்துக்கு பொறுப்பான விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகளை உள்ளடக்கிய விசேட கலந்துரையாடல் வடக்கு மாகாண விவசாய திணைக் களத்தில் நடைபெற்றது.

வட மாகாணத்தில் உள்ள மாவட்டங்களுக்குத் தேவையான கறிமுருங்கை கன்றுகள் வெளிமாவட்டத்தில் இருந்து எடுத்துவரப்பட்டே பயனாளிகள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

கறிமுருங்கை விதை முளைதிறன் வீதம் அதிகமானது. அதனை வெளி மாவட்டங்களில் இருந்து எடுத்து வருவதில் கணிசமான அளவு தொகை செலவாகின்றது. நாற்றுக்களை கொள்வனவு செய்தல், அதனை பொருத்தமான முறையில் ஏற்றி இறக் குவது தொடர்பான செலவு, அதனை பொருத்தமான முறையில் களஞ்சியப்படுத்தி பாதுகாத்தல் என்பன பெரியளவில் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதோடு ஏற்றி இறக்கும்போதும் பாதுகாப்பாக களஞ்சியப் படுத்தும் போதும் கணிசமான அளவு நாற்றுக்கள் சேதமடைந்து விடுகின்றன.

வறண்ட பிரதேச கால நிலைக்குரிய கறி முருங்கை நாற்றுக்களை மாவட்ட ரீதியில் உற்பத்தி செய்வதன் மூலம் நாற்றுக்கள் சூழ்நிலைக்கு ஏற்ப இசைவாக்கம் பெற்று இயல்பு நிலையில் வளர்வதோடு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகாமல் வளரக்கூடியதாக இருக்கும்.

எனவே மாவட்ட ரீதியில் கறிமுருங்கை நாற்றுக்களை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வருட காலபோகத்தை அண்டிய காலப் பகுதியில் கறிமுருங்கை நாற்றுக்களை மாவட்ட ரீதியில் உற்பத்தி செய்து காலபோக இறுதிப் பகுதி யில் நடுகை செய்வதற்கு வசதியாக விநி யோகிக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் தனியார் துறையினர் கறிமுருங்கை நாற்றுக்களை தனித்துவத்தோடு தமது விருப்பத்துக்கு ஏற்ப உற்பத்தி செய்து ஒரு கன்று 90 ரூபாவுக்குக் குறையாத விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர். (வ-11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கோப்' அறிக்கை 23 இல் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

கொழும்பு,ஜூலை 7
நாடாளுமன்ற பொது வர்த்தக மத்திய குழுவின் அறிக்கை எதிர்வரும் 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

2011 ஆம் ஆண்டின் செயற்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் குறித்த அறிக்கையே இவ்வாறு தாக்கல் செய்யப்படவுள்ளதுஎன்று தெரியவருகின்றது.

கோப் குழுவினால் இந்தமுறை 256 நிறுவனங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் 110 நிறுவனங்கள் தொடர்பில் இறுதி அறிக்கை முடிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட அரச நிறுவனங்களுள் மின்சார சபை, தேசிய விமான சேவை, மிஹின் லங்கா விமான சேவை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, சமுர்த்தி அதிகார சபை , இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. (ச)

தாயின் இரத்தத்தை பரிசோதித்தால்

# நோயுள்ள குழந்தைகளை கருவிலே கண்டறியலாம்



குழந்தைக்குரியநோயினை கருவிலேயே கண்டறிவதற்கான நவீன முறையொன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பிறக்கவுள்ள குழந்தையிடம் மன நலிவு நோய்க்கான அறிகுறி காணப்படுகின்றதா என்பதை கண்டறிவதற்கு தற்போது கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகள் சற்று பாரதூரமானவை என்று கருதப்படுகின்றது. கர்ப்பப்பையில் கரு கலைந்து போகக் கூடிய அபாயம் காணப்படுவதாக நம்பப்படுகின்றது.

ஆனால் தற்போது கண்டறியப்பட்டுள்ள புதிய நடைமுறையில், தாயின் இரத்தத்தை பரிசோதிப்பதன் மூலம் அதனைக் கண்டறிய முடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

தாயின் இரத்தத்தில் காணப்படும் முற்றாக வளர்ந்த கருவின் டி.என்.ஏ தகவல்கள் அடங்கிய அணுக்களை இந்த முறை மூலம் பரிசோதிக்க முடியும்.

பிரிட்டன் கிங்ஸ் காலேஸ் மருத்துவமனையில் 1000 பெண்களிடம் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம், இந்த முறை 99 வீதத்துக்கு மேல் சரியான முடிவைக் காட்டும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்த இரத்தப் பரிசோதனை முறை அடுத்த 2 ஆண்டுகளுக்கு பரீட்சார்த்தமாக 20 ஆயிரம் பெண்களிடத்தில் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## திருவடி நிலை வாகை வைரவர் கடற்கரைப் பகுதிக்கு அணைக்கட்டு

சுழிபுரம், ஜூலை 7
சுழிபுரம் திருவடி நிலையில் அமைந்துள்ள வாகை வைர வர் ஆலய கடற்கரைப் பகுதி கடல் அலை தாக்கத் தால் பெரிதும் பாதிக்கப்பட் டிருந் தது. அதனைத் தடுக்கும் வகையில் கடல்நீர் ஆலய கரையைத் தாக்காத வண் ணம் தற்போது பெரிய கற்களைக் கொண்டு அணை கட்டப்பட்டுள்ளது. பெரிய கற்கள் கனரக வாகனங்கள் மூலமாக பறிக்கப்பட்டு அணைச் சுவர் கட்டப்பட்டுள்ளது. ஆல யச் சுவர் கரையோரப் பகுதியுள்ள இடம் முழுவதும் கற்கள் பரவப்பட்டு தடுப்பு மதில் கட்டப்படும் பணியை வி.சரவணமுத்து தலைமை யிலான குழுவினர் நிறைவு செய்துள்ளனர். நீண்ட தூர அணைக்கட்டு முன்னர் சுழிபுரம் கிராம சபையினரால் கட்டப்பட்டு சுனாமி தாக்கத்தால் முற் றாக அழிந்து போனதும் குறிப்பிடத்தக்கதாகும். இத னைத் தொடர்ந்தே இக்கட்டு மான வேலைகள் நடை பெற்றுள்ளன.(ந-28)

# துர்நாற்றத்திலிருந்து விடுதலை தரும் காலுறை உருவாக்கம்

தற்போது பாவனையில் இருக்கும் அனேகமாக காலுறைகள் அதிக வெப்பத்தை வெளிவிடுவதோடு அதனால் ஏற்படும் வியர்வை வெளியேற்றத்தின் காரணமாக துர்நாற்றத்தை ஏற்படுத்துபவையாகவும் காணப்படுகின்றன.

ஆனால் தற்போது புதிய தொழில்நுட்பத்தினை உட்புகுத்தி எப்போதும் குளிர்மையைத் தருவதுடன் துர்நாற்றத்திலிருந்து விடுதலை தரும் காலுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்தக் காலுறையானது மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்பட்ட பொலியஸ்டர், Carbonized Coffee எனும் மூலப்பொருள்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





ஒவ்வொரு வினாடியும் பெறுமதி மிக்கவை. ஒரு நொடி தாமதத்தினால் வாழ்க்கையில் ஒரு நல்ல வாய்ப்பு கைநழுவிப் போகலாம். எனவே நான் எப்பொழுதும் ஒரு துளிப் பொழுதையேனும் வீணாக்குவதில்லை.

அத்தோடு சரியான தீர்மானங்களை, சரியான நேரத்தில் எடுத்ததினால் இன்று நான் இந்த உன்னதமான உயர்ந்த நிலையில் இருக்கின்றேன்.



Achiever நடைமுறைக் கணக்கு

Achiever நடைமுறைக் கணக்கானது இளம் நிறைவேற்று அதிகாரிகளுக்கும், தொழில் முயற்சியாளர்களுக்கும் தமது நிதியியல் தேவைகளை சிறந்த முறையில் நிர்வகிப்பதற்கு ஏற்றவாறு விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

சாதாரண நடைமுறைக் கணக்குகள் போல் அல்லாது Achiever நடைமுறைக் கணக்கிலுள்ள பணத்தை சேமிப்பு அல்லது மணி மார்க்கட் கணக்கிற்கு தன்னியக்கமாக மாற்றுவதன் மூலம் வட்டியையும் பெறலாம்.

18 - 35 வயதிற்கு இடைப்பட்டவராகவும், மாதாந்தம் ரூபா.50,000 க்கு மேல் வருமானம் உழைப்பவராகவும் இருந்தால் Achiever நடைமுறைக் கணக்கை ஆரம்பிக்கலாம்.

கணக்கை ஆரம்பிக்கும் உங்களுக்கு ATM மற்றும் ஷொப்பிங் டெபிட் கார்ட் இலவசம், Online Banking, Mobile Banking கிரடிட் கார்ட் மற்றும் மேலும் பல சிறப்புச் சலுகைகளையும் பெறலாம்.

Achiever
COMMERCIAL BANK

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
(C/10069)
+ 94 112 353 333 www.combank.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு

☎0215671111
advt@uthayan.com



அவள் விரும்பும் ஆண்மகனாக!
வீரியத்துடன் கூடிய உற்சாகத்தை மீண்டும் பெற
சிறந்த முடிவுகளைப் பெற தொடர்ந்து 3 மாதங்கள் பாவிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.
100% ஆயுர்வேதம்.
எவ்வித இரசாயனப் பொருட்களோ ஊக்க மருந்துகளோ அற்றது.
இலங்கை ஆயுர்வேத திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டது.
Approval No: 02/01/BP/13/430
வர்த்தக விசாரணைக்கு அழையுங்கள் 0777 337511 கொழும்பு.
Contact us. M/s. SRIRAM HERBALS No.31/1, Seetharampalya, Mahadevapura Bangalore-560048, India
(C/10075) Tel: +91 80 41157746 Visit: www.sriramherbals.com / www.sriramherbals.org

# நெடுந்தீவு வர்த்தக நிலையங்களில் முத்திரையிடப்பட்ட அளவை கருவிகள்



நெடுந்தீவு பிரதேசத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட வர்த்தக நிறுவனங்களில் உள்ள நிறுத்தல் அளவை கருவிகள் இந்த வருடத்துக்கான முத்திரையி டப்பட்டதாக யாழ். செயலக நிறுத்தல் அளத்தல் பொறுப்பதிகாரி ப.கிருஷ்ணதாசன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் வைத்து குறித்த நிறுத்தல் அளத்தல் கருவிகளுக்கு முத்திரையிடப்பட்டது.

இதேவேளை நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிலையங்களின் நிறுத்தல் அளத்தல் கருவிகளுக்கும் அன்றைய தினம் முத்திரையிடப்பட்டது. (வ-17)

# ஆடு திருட முற்பட்ட ஒருவர் மாட்டினார்



தென்மராட்சி, ஜூலை 7

வீட்டுக்கு முன்பாக நின்ற ஆட்டைக் கடந்த முற்பட்ட மூவரில் ஒருவரைப் பொது மக்கள் பிடித்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைந்தனர்.


இருவர் ஆட்டைக் கைவிட்டு தப்பியோடினர். அவர்களின் சைக்கிள் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை வரணி வடக்கில் இடம்பெற்றது.

மேய்ச்சலுக்கு அவிழ்த்து விடப்பட்ட ஆடு வளவுக்கு வெளியே தண்ணீர் குடிப்பதற்காக வந்துள்ளது. அதற்கு தண்ணீர் வைப்பதற்காக வந்த பெண் ஆட்டை இருவர் தூக்கிச் செல்வதை அவதானித்து அயலவர்களுக்குத் தகவல் கொடுக்க இவர்களைப் பின் தொடர்ந்து பலர் சென்றுள்ளனர்.

பற்றைகள் ஊடாகச் சென்ற பொதுமக்கள் பெட்டியுடன் நின்ற சைக்கிள் காரனை நெருங்கிய போது ஆட்டைக் கைவிட்டு இருவரும் தப்பியோடினர். பெட்டியுடன் காத்திருந்த நபரை பொது மக்கள் மடக்கிப் பிடித்தனர். அந்தப் பகுதியில் மற்றையோரைத் தேடிய போது புதிய சைக்கிள் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடித்து மீட்டுள்ளனர். பொது மக்களால் பிடிக்கப்பட்ட நபர் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (வ-9)

☎0215671111
advt@uthayan.com



SLT புறோட்பேண்ட் மூலம் இல்லத்தவர் அனைவருக்கும் இணையம்
SLT புறோட்பேண்ட் மற்றும் Wi-Fi ரவுட்டர் மூலம் இப்பொழுது இல்லத்தவர் அனைவரும் நிலையான, தடங்கலற்ற, அதிவேக இணையத்தை ஒரே நேரத்தில் அனுபவிக்கலாம். இல்லத்தில் எங்கிருந்தும், எந்தவொரு Wi-Fi வசதியுள்ள உபகரணத்தினாலும் இணையத்தில் நுழைய முடியும்.
Wi-Fi ரவுட்டர் ஒன்றை ரூ.1,990/-* இற்கு பெற்றுக்கொள்ளலாம். இதில் அரச வரிகளும் உள்ளடக்கப்படும். ரவுட்டர் மற்றும் 16 Mbps** அதிவேக புறோட்பேண்ட் இணைப்பைப் பெற்றுக்கொள்ள அருகிலுள்ள SLT பிரதேச டெலிகொம் காரியாலயம் அல்லது டெலிஷொப்பிற்கு வாருங்கள்.
துரித அழைப்பு 1212 www.slt.lk
BROADBAND
Megaline
PHOENIX O&M
(C/10071)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org